"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 435, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகா, குந்தா ஊராட்சிக்குட்பட்ட தாய் சோலையிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 117, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள மகளிர் உயர்நிலைப் பள்ளிகளை (நாட்ராம்பள்ளி, தெஜல் நாயக்கன்பட்டி) தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 77, திரு. டி.கே. இராஜா.

[2006 ஜனவரி 27

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி சாமான்கள் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 230, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் 2–வது தொகுதி, மாநகராட்சி 2–வது கோட்டம் சின்ன அம்மாபாளையம் அரசுத் துவக்கப் பள்ளியில் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 333, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியில் அரசு மகளிர் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 72, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம் நல்லம்பள்ளி ஒன்றியங்களில் உள்ள அரசுத் துவக்கப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்திட வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொகுப்பூதிய ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 139, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் உள்ள காலியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 389, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையில் இடைநிலைப் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணி வரன்முறை செய்து முழு ஊதியத்துடன் பணி நிரந்தரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,563,96,25,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,50,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம் ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இலலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுணணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*முற்பகல் 10–50*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,563,96,25,000/–, மூலதனக் கணக்கில் ரூ. 82,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ. 3,02,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"





என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## கோரிக்கை எண் 43 – சிறுதொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43 – சிறுதொழில்கள் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறுதொழில்கள் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 24,62,25,000/–, மூலதனக் கணக்கில் ரூ. 2,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

[2006 ஜனவரி 27

## கோரிக்கை எண் 44 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.416,75,54,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி – பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி – பண்பாடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி – பண்பாடு பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,78,71,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 66,02,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,22,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.27,50,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## கோரிக்கை எண் 47 – போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47 – போக்குவரத்துத் துறை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,54,72,02,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.





## கோரிக்கை எண் 48 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48 – இளைஞர் நலன் மற்றும விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.16,73,29,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## கோரிக்கை எண் 49 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,828,28,79,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### கோரிக்கை எண் 50 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.152,98,27,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

முற்பகல் 10–55

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2006) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2006). மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 9/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

V24,31 P06 P0891.1

---

@ 27-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ்... வெளியிடப்பட்டுள்ளது.

227252
சென்னை-600 009

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 27

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 9/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2006 ஜனவரி 27]

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2006), மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 27-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2006) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2006), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2006)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை. எந்தச் சட்டமுன்வடிவாக இருந்தாலும், பணச் செலவினை ஏற்படுத்தும் சட்டமுன்வடிவாக இருந்தால் அதுகுறித்த நிதி விளக்கக் குறிப்பினை அதோடு சேர்த்து வைக்கவேண்டும். இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், செலவு ஏற்படுகிறது என்பதைத் தெளிவாக ஒப்புக்கொள்கிறார்கள். நோக்கக் காரண விளக்க உரையிலே செலவு ஏற்படுகிறது என்பதை ஒப்புக்கொண்டு, அதற்காகப் பங்களிப்புத் தொகையை 11 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அரசு தொகு நிதியிலிருந்துதான் இனிமேல் சம்பளம் தரப்படுகிறது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசுத் தொகு நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பட்டு நமக்கு செலவு ஏற்படுகின்ற சட்டமுன்வடிவு எதுவாக இருந்தாலும் அதற்குரிய நிதி விளக்கக் குறிப்பினை இந்தச் சட்டமுன்வடிவோடு இணைத்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எதையும் இணைக்கவில்லை. இணைக்காமல் வைக்கப்படுகிற சட்டமுன்வடிவு சரியானதுதானா, முறையானதுதானா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி இத்துறையில் பணிபுரியும் அரசு அலுவலர்களின் சம்பளம், அகவிலைப்படி, பயணப்படி போன்ற செலவுகள் முதலில் அரசு நிதியிலிருந்து மேற்கொண்டு, பின்னர், மொத்த செலவில் திருக்கோயில்களின் நிகர வருமானத்திலிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும். அதன்படி இந்து சமய அறநிலையத் துறையில் மேற்பார்வை, தணிக்கை முதலிய பணிகளை ஆற்றும் ஆணையர் உட்பட அனைத்து அரசு அலுவலர்களின் சம்பளம், அகவிலைப்படி, பயணப்படி முதலியவற்றை

@ 27-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

முதலில் அரசு வழங்குகிறது. பின்பு, இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டப் பிரிவுகள் 92/1, 92/2 ஆகிய பிரிவுகளின்கீழ் இத்தொகை அனைத்துத் திருக்கோயில்களின் நிகர வருமானத்திலிருந்து, திருக்கோயில்கள் வருமான அளவிற்கேற்ப முறையே, 4 முதல் 11 சதவீதம் வரை ஒரு பங்குத் தொகையை வசூலித்து இந்தச் செலவை இத்துறை ஈடு செய்கிறது. ஆனால், திருக்கோயில்களில் பணிபுரியும் செயல் அலுவலர்களின் சம்பளம், அகவிலைப் படி போன்றவற்றை முதலில் அரசு வழங்கிய பின்னர், அநதத் தொகை முழுவதையும் அவரவர்கள் பணியாற்றும் திருக்கோயில்களின் வருமானத்திலிருந்தே நேரடியாக வசூலித்து அரசுக்குத் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். சட்டப் பிரிவு 12(2)(b) இதற்கு வகை செய்கிறது. திருக்கோயில்களில் பணிபுரியும் செயல் அலுவலர்களின் சம்பளம் முழுவதையும் அந்தத் திருக்கோயில்களே ஏற்க வேண்டி வருவதால், குறைந்த வருமானம் உள்ள திருக்கோயில்களின் வருமானத்தில் பெரும் பகுதி செயல் அலுவலர்களின் சம்பளத்திற்கே போய்விடுகிறது. இத்திருக்கோயில்கள், பூசை, விழா போன்றவற்றிற்குப் போதிய வருமானம் இல்லாது சிரமப்படும் நிலையில் உள்ளன. (குறுக்கீடுகள்) அதுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதுதான் சொல்கிறேன். அதுதான் செலவழித்த பிறகு...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, செலவு ஏற்படுகிறது. புதியதாகச் செலவு ஏற்படுகிறது. அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அதிகமாகச் செலவு அரசுத் தொகு நிதியிலிருந்து செல்கிறது. அரசுத் தொகு நிதியிலிருந்து புதியதாகச் செலவு ஏற்படுகின்ற நேரத்தில் அதனுடைய நிதி விளக்கக் குறிப்பு, எவ்வளவு செலவு - மீளப்பெறலாம், அதில் ஒன்றும் கஷ்டமில்லை. பல வகைகளிலே மீளபபெறலாம். அங்கேயிருந்து வரலாம். மீளப்பெறுவதற்காக 11 சதவீதத்திலிருந்து பங்களிப்புத் தொகையை 12 சதவீதம் அதிகரித்திருக்கிறார்கள். நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அது இருக்கட்டும். அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். ஆனால், அரசுத் தொகு நிதியிலிருந்து செலவு ஏற்படுகின்ற நேரத்தில் நிதி விளக்கக் குறிப்பு இருக்க வேண்டும் என்று பேரவை விதிகள் தெளிவாகச் சொல்கின்றன. பேரவை விதி 126-ன்படி கண்டிப்பாக நிதி விளக்கக் குறிப்பு ஒன்றினை வைக்க வேண்டும். ஆனால், நிதி விளக்கக் குறிப்பு வைக்காமலேயே இப்படியொரு சட்டமுன்வடிவு வருவது சரிதானா? முறைதானா? செலவு ஏற்படுகிறது. அதை ஏற்றுக்கொள்கிறோம். செலவு ஏற்படவில்லையென்று நான் சொல்லவேயில்லை. நோக்கக் காரண விளக்க உரையிலே, செலவு அதிகமாக ஏற்படும்; ஏனென்றால் கோயில்களிலிருந்து நேரடியாகக்



கொடுப்பதானால் பல கோயில்களுக்குப் போதிய வருமானமில்லை; நடுத்தர கோயில்களாலேகூட முடியாது; எனவே, அரசுத் தொகு நிதியிலிருந்து நாம் கொடுத்துவிட வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அது சரி. ஆனால், விளக்குகின்ற நேரத்தில், அரசுத் தொகு நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றபோது ஏற்படுகின்ற செலவு என்ன என்பதை முன்பாக, தெளிவாக, ஒரு நிதி விளக்கக் குறிப்பாக அதிலே வைக்கப்பட வேண்டும். ஆனால், நிதி விளக்கக் குறிப்பே இல்லாமல், செலவு ஏற்படுகிறது. அந்தச் செலவை ஈடுகட்டுகின்ற வகையில் ஆணையருக்கு அளிக்கப்படுகின்ற பங்களிப்புத் தொகையாக 11 சதவீதத்திலிருபபதை 12 சதவீதமாக நாங்கள் உயர்த்தப் போகிறோம் என்று சொல்லியிருப்பது முறையல்ல. அதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். இவ்வளவு செலவு ஏற்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது. அந்தச் செலவை ஈடுகட்ட வேண்டும். எனவே, பஙகளிப்புத் தொகையை 11 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்துகிறோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். குறிப்பிடப்படவில்லை. எனவே, அது முறைதானா? இந்தச் சட்டமுன்வடிவு முறையாக, இங்கே சரியாகததான் வைக்கப்பட்டிருக்கிறதா என்பதைத்தான நான் கேட்டேன். அதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். இப்போது கொடுத்த விளக்கம் பழைய நிலை என்ன என்பதை விளக்குகிறார். அவ்வளவுதானே தவிர, வேறு ஒன்றும் புதியதாக எந்த விளக்கமும் அவர் தரவில்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் திருக்கோயில் நிர்வாகம் சீரும் சிறப்புமாக இருந்து வருகிறது. திருக்கோயில் பக்தர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டு, அவற்றின் சொத்துக்களும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்ற காரணத்தினால், திருக்கோயில்களின் வருமானம் அதிகரித்துள்ளது. முதல்நிலை திருக்கோயில்கள் நிகர மொத்த முதலீடு 1-7-2001 அன்று 731 கோடியாக இருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த அரசு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், நீங்கள் நிதித் துறை சார்பாக அறிக்கை வர வேண்டும் என்று சொல்லி கேட்கிறீர்கள். அதுதானே? (குறுக்கீடுகள்) நிதித் துறை சார்பாக ஓர் அறிக்கை வர வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதுதானே? (குறுக்கீடுகள்) நிதித் துறை சார்பாக இதில் ஓர் அறிக்கை வைக்கப்பட வேண்டுமென்று கேட்கிறீர்கள்.

[2006 ஜனவரி 27

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Financial Memorandum வைக்கப்பட வேண்டும். நோக்கக் காரணங்களில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நோக்கக் காரணங்களில் (குறுக்கீடுகள்) கொடுக்கப்பட்டிருப்பதே போதுமானது. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசட்டும். பேசிய பிறகு விளக்கம் சொல்வார்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் திருக்கோயில் நிருவாகத்திற்காக அரசு செய்த செலவுத் தொகை முழுமையாக ஈடு செய்யப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** கடந்த காலங்களில் திருக்கோயில் நிர்வாக...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். There is no additional expenditure from the consolidated fund of the State. What is contemplated is a change in the mode of recovery. Mode of recovery எப்படித் திரும்பப் பெறுவது, அதில்தான் ஒரு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, மாநிலத்தின் consolidated fund–லிருந்து எந்தக் கூடுதலான செலவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** கூடுதல் செலவு இல்லை என்று சொன்னால் எதற்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. கேட்டார், விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஹேமச்சந்திரன் பேசி முடித்துவிடட்டும், பிறகு விளக்கம் சொல்லுங்கள்.



2006 ஜனவரி 27]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே ஒரு கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது ஏறகெனவே consolidated fund–லிருந்து செலவு செய்யப்படுகிற பணத்திற்கு கோயில் நிர்வாக நிதியிலிருந்து திருப்பி அரசுக்குப் பணம் கட்டப்பட வேண்டும் என்ற ஒரு திருத்தத்தை, அது 11 சதவிகிதம் என்று இருந்ததை 12 சதவிகிதம் ஆக உயர்த்தி ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோயில்களைப் பாதிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது State Re–organisation Act-ன்படி. திருவிதாங்கூர் கொச்சி இராஜ்ஜியத்தில் ஒரு பகுதியாக இருந்த குமரி மாவட்டத்தையும், செங்கோட்டை தாலுகாவையும் தமிழகத்தோடு சேர்க்கிற நேரத்தில் திருவிதாங்கூர் கொச்சி தேவஸம் போர்டினால் பராமரிக்கப்பட்ட கோயில்களைப் பராமரிப்பதற்கு திருவிதாங்கூர் கொச்சி Government, கேரளா Government–லிருந்து 51 இலட்சம் ரூபாய் வருடந்தோறும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோயில்களுடைய பராமரிப்புக்காகக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டு அதுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கே இருக்கிற கோயில் சிப்பந்திகளைப் பொறுத்தளவிலே தமிழகத்தினுடைய மற்ற மாவட்டங்களிலுள்ள கோயில் சிப்பந்திகளுக்கு இருக்கக்கூடிய சம்பளம் இல்லை. இப்போது சமீபத்தில் ஒரு உயர்வு கொடுக்கப்பட்டதற்குப் பிறகும் அந்த parity என்பது keep up பண்ணப்படவில்லை. அங்கே இருக்கிற கோயில் நிர்வாகத்தோடு பேசப்படுகிற நேரத்தில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், எங்களுக்கு இந்த 51 இலட்சம் ரூபாயும், அதறகுப் பிறகு கோயில்களிலிருந்து கிடைக்கப்படுகிற வருமானத்தையும் வைத்துதான் கோயில் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க முடியும். அல்லாமல் அரசு எங்களுக்கு இதற்காக வேண்டி பிரத்யேகமாக பணம் தரவில்லை. இதன் காரணமாக அங்கே இருக்கிற அதாவது, பூ கட்டுகிற தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளி, அதேபோன்று, sweeping வேலைகளில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளி, தலித் என்ற பெயரைச் சொல்லி நியமனம் பண்ணப்படுகிற இந்த ஊழியர்களுக்கு எல்லாம் இன்றைக்கு வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான அளவுக்குள்ள ஊதியம், அதாவது தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களில் கொடுக்கப்படுகிற

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2006 ஜனவரி 27

அளவுக்கு இல்லை. இந்தப் பின்னணியில் இந்தச் சட்டம் அங்கே அமல்படுத்தப்படுவதாக இருந்தால் அந்தக் கோயில்களுடைய வருமானத்திலிருந்து 12 சதவிகிதம் அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலை வந்தால் அந்தக் கோயில்களைப் பராமரிப்பதற்குச் சிரமமாக இருக்கும் என்று ... (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது சம்பந்தம் இல்லாதது. இது சட்டமுன்வடிவுக்குச் சம்பந்தமில்லாதது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் அதோடு நிறுத்துங்கள். முதலில் சொன்னதோடு நிறுத்துங்கள். திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) நீங்கள் முதலில் சொன்னதோடு நிறுத்துங்கள். (குறுக்கீடு) போதும். திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மற்றதையெல்லாம் பேசுவதற்கு இதில் வாய்ப்பில்லை. (குறுக்கீடு) சட்டமுன்வடிவுக்குச் சம்பந்தம் இல்லாத எதையும் சொல்லக் கூடாது. தாங்கள் சட்டமுன்வடிவுக்குத் தொடர்பு இல்லாமல் சொன்ன அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், முடித்துவிட்டீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார். இப்போது அரசு சார்பில் நான் சொல்ல வேண்டியதை சொல்ல விரும்புகிறேன். தற்போது அரசாங்கம் 489 கன்னியாகுமரி தேவஸ்தான திருக்கோயில்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 17.3 இலட்சம் ரூபாய் கொடுத்து வருகிறது. இதை தற்போது Final Supplementary Estimates–ல் அறிவிக்கப்பட்டதுபோல் இன்றிலிருந்து அது ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் என்று உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*முற்பகல் 11–10*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜனவரி 27]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிச்சயமாக இன்றைக்கு மழை வரும். (சிரிப்பு) திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக கோயில் ஊழியர்களுக்கு உரிய சலுகைகளை அளிப்பதற்கான முயற்சியாக இது கொண்டு வரப்படுகிறது. இதிலே குறிப்பாக வருமானத்தைப் பெருக்குவதற்குரிய நோக்கம் என்ற முறையில் இந்து அறநிலையத் துறை நிர்வாகத்தின் மூலமாக இந்த நிதியை மீளப்பெற வேண்டுமென்றுதான் இதிலே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படி அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறபோது இந்த நிர்வாகம் வேறுவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய முயற்சிகள வரும். ஆகவே, நான் தொடர்ந்து இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருப்பது, உங்களுடைய அந்த நோக்கத்தைப் பற்றியோ, சலுகைகள் அறிவிப்பதிலேயோ எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சிவபுண்ணியம், என்ன இது? சட்டமுன்வடிவிற்குத் தொடர்பில்லாமல் ஏதேதோ கூறுகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தச் சட்டமுன்வடிவிற்கு மாறாக அவருடைய கருத்து இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இது சம்பந்தமே இல்லாதது. திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சட்டமுன்வடிவிற்குத் தொடர்பில்லாதது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. (குறுக்கீடு) நான் முரண்பாடாகச் சொல்லவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையில்...

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயம், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, நான் பிரச்சினைக்குள், முரண்பாடான தகவல்களுக்குள் போகவில்லை. நான் வேண்டுகோளாக, கோரிக்கையாகத்தான் அதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது சட்டமுன்வடிவிற்குத் தொடர்பில்லாதது. திரு. ஜி.கே. மணி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொல்வது சட்டமுன்வடிவோடு சம்பந்தம் இல்லாதது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சட்டமுன்வடிவிற்குத் தொடர்பில்லாதது. (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். (குறுக்கீடு) மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இருக்கிற திருக்கோயில்களுக்கு அந்த நிர்வாக அலுவலர்கள் முதலான பணியாளர்களுக்கு அரசுத் தொகு நிதியிலிருந்து ஊதியம் வழங்கிவிட்டு மீண்டும் கோவில் வருவாயிலிருந்து பெறக்கூடிய அந்த மீட்புத் தொகையை, மீட்சித் தொகையை ஒரு விழுக்காடு உயர்த்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். சில கோயில்களில் வருவாய் குறைவாக இருக்கிறது. கூடுதலாக வரக்கூடிய கோயில்களிலேயிருந்து பெறுவதிலே தவறில்லை. அதிலே மாறுபட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





கருத்து இல்லை. ஆனால், வருவாய் குறைவாக இருக்கிற கோயில்களில் ஒரு சதவீதம் உயர்த்திக் கொடுத்தால் அங்கே நிர்வாகச் செலவுக்கு, பராமரிப்புச் செலவுக்குக்கூட இயலாமல் போய் விடுமே, அதை எப்படி மீட்பு செய்யப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டமுன்வடிவின்படி, செயல் அலுவலர்களின் சம்பளம், திருக்கோயில்களிலிருந்து நேரடியாக வசூலிப்பதற்குப் பதிலாக அனைத்துத் திருக்கோயில்களிலிருந்தும் சட்டப் பிரிவு 92-ன்கீழ் திரும்பப் பெறப்படும். அதற்காகத்தான் 11 சதவீதம் என்பது 12 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. அரசுக்குக் கூடுதலாக நிதி இழப்பு ஏதும் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னார்கள். ஆண்டுதோறும் 5,000 ரூபாய்க்கு மேல் 20,000 ரூபாய்க்கு உட்பட்டுள்ள திருக்கோயில்களுக்கு, முன்பு வசூல் செய்ததைப் போல 4 பங்குத் தொகை. ஆண்டு வருமானம் 20,000 ரூபாய்க்கு மேற்பட்டும், 60,000 ரூபாய்க்கு உட்பட்டும் உள்ள திருக்கோயில்களுக்கு 5 சதவீதம் முன்பு வசூலித்ததைப் போல்தான். 60,000 ரூபாய்க்கு மேற்பட்டு 2 இலட்சத்திற்குக் குறைவாக உள்ள திருக்கோயில்களுக்கு 6 சதவீதம் தொகை, அதேபடிதான். இப்போது, அதிக வருவாயுள்ள திருக்கோயில்களிலேயிருந்துதான் ஒரு பங்கை எடுத்து, சிறிய கோயில்களுக்கு, அந்த அலுவலகங்களில் பணியாற்றக்கூடிய அலுவலர்களுக்குச் சம்பளம் தொய்வின்றிக் கிடைப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வருகிறது என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**முகப்புரை**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble for the expression 'Fifty–sixth', substitute the expression 'Fifty–seventh'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2006). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2006)" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவு மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு மற்றும் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு ஆக இந்த நான்கையும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றாக எடுத்து கருத்துகளைச் சொல்லலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாக விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவுகளை முன்மொழிதல். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்களும் கருத்து சொல்வார்கள் அல்லவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பேசுங்கள் நீங்கள். நீங்கள் பேசுங்கள். தனித் தனியாக வாய்ப்புக் கொடுக்கிறேன். அமைச்சர் ஒரே அமைச்சர் என்பதனாலே சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில நாட்களில் மாண்புமிகு அமைச்சர்கள் ஒரே நாளிலே 3, 4 demand move பண்ணுவார்கள். அப்போது, 3, 4 demand–களில் பேசுகிறீர்கள் அல்லவா? அதேபோல பேசலாம் இல்லையா? இதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? (குறுக்கீடு)

" 21-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் ஒன்றும் மறுப்புச் சொல்லவில்லை. சட்ட அமைச்சர் அவர்கள், அவர் மறுப்புச் சொல்லவில்லை. வாய்ப்புத்தான் கேட்கிறார்.

## (உ) திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2006). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2006)" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

## (ஊ) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2006). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2006)""" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

" 21-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

""" 21-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2006 ஜனவரி 27

**(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2006). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2006)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற சட்டமுன்வடிவுகள் நான்கின்மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கலாம். திரு. புகழேந்தியை அழைக்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி மற்றும் அதைச் சார்ந்த கல்விகளில் பொது நுழைவுத் தேர்வு முறை இரத்து செய்யப்படுவதும் மற்றும் மாநிலக் கல்வி வாரியம் அல்லாத Non-State Board படிப்பினைச் சார்ந்த மாணவர்கள், மாநிலக் கல்வி வாரியப் பாடத் திட்டத்தின் அடிப்படையில் பொது நுழைவுத் தேர்வினை எழுதுதல் வேண்டும் என்கின்ற நிலைபாட்டினை வகுத்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவினை நுழைவுத் தேர்வு இரத்து என்ற நிலையில், இந்தச் சட்டமுன்வடிவினை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம்.

அதே நேரத்தில், இந்தச் சட்டத்தை, குறைபாடுகள் இல்லாமல் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்கள், விளக்கங்கள் இவற்றின் உள்ளே பார்க்கின்றபோது, மாணவர்களுடைய கஷ்டம், இரண்டு தேர்வுகளை எழுதுகின்ற நிலை, கிராமப்புற மாணவர்கள் வர முடியாதது, பெற்றோர்களுக்கு இருக்கிற சுமை, பிளஸ் 2 தேர்வே

* 21-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2006 ஜனவரி 27] [திரு. இ. புகழேந்தி]

தொழிற்கல்விக்குப் போதுமான அளவிற்கு இருக்கிறது என்ற நிலைகள் எல்லாம் கூறப்பட்டும், மைய மேல்நிலைப் பள்ளி கல்வி மாணவர்களுடைய நிலைப்பாட்டினைச் சொல்கின்றபோது, அவர்களுக்கு ஒரு நுழைவுத் தேர்வு என்கின்ற நிலையை இந்தச் சட்டத்திலே காண முடிகிறது.

எனக்கிருக்கிற ஐயநிலை எல்லாம், என்ன குறிப்பிடுகிறார்கள் என்றால், பொது நுழைவுத் தேர்வின் மொத்த நோக்கமே, பள்ளி இறுதிக் கல்விக்கான பல்வேறு படிப்பு முறைகளைச் சமநிலைப்படுத்துவது ஆகும். இதைச் சமநிலைப்படுத்துவது எங்ஙனம்? சமநிலைப் படுத்துவது என்றால், அவர்களுடைய திறனைச் சமன்படுத்துவது, அவர்கள் எந்தவகையிலே தொழிற் கல்விகளுக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்ற நிலையை ஒழுங்குமுறையாக வகுப்பது. எனக்கு இதிலே இருக்கிற ஐயம், இதுகுறித்து கடந்த ஆண்டு உயர் நீதிமன்றத்திலே வழக்குகள் வந்தபொழுது, ஏற்கெனவே நுழைவுத் தேர்வு எழுதி, பிறகு நுழைவுத் தேர்வு இரத்து என்று சொல்லி, பிறகு நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்புகளில் தலைமை நீதிபதி ஒன்றைக் குறிப்பிடுகிறார். இந்தச் சமநிலையை எப்படி கொண்டு வரப்போகின்றீர்கள் என்கின்றபொழுது, ஒரு கமிட்டி, ஒரு குழுவை உருவாக்கி, அந்தக் குழுவின் மூலமாக தீர்மானம் செய்து, அதன் அடிப்படையிலேதான் இந்த நுழைவுத் தேர்வு இரத்திற்குப் பிறகு அவர்களுடைய சேர்க்கை நிலைகள் வகுக்கப்படவேண்டும் என்று தீர்ப்பானது. ஆறு மாத காலத்திற்கு மேலாக நாம் என்ன செய்து கொண்டிருந்தோம்? குழு அமைக்கப்பட்டதா அல்லது அதற்கான நிலைகள் வகுக்கப்பட்டதா? இல்லை.

முற்பகல் 11-20

இன்றைக்கு நாம் கொண்டு வந்திருக்கிற இந்த நிலையில் ஏற்கெனவேகூட சொல்லியிருக்கிறார்கள். இதே நோக்க விளக்கத்திலேகூடச் சொல்கிறார்கள், பிஞ்சுப் பருவத்தில் உள்ள மாணவர்கள் பெரும்பான்மையோர் அதிக பளுவைத் தூக்கவிடாமல், பெரும்பான்மையோர் அதிக பளுவைத் தூக்கி விடக்கூடாது என்பதற்காகவும், சிறுபான்மையோர் அதிக பளுவைத் தூக்கலாம் என்பது நியாயமாகாது. அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அதிக பளுவைத் தூக்குவது என்பது, இருக்கின்ற அந்த நிலையைக் கருத்தில் கொண்டுதான் இதற்கென தனியாக கமிட்டியும், அதன்மூலமாகத்தான் சமநிலை வகுக்கப்படவேண்டும் என்பதும்.

[திரு. இ. புகழேந்தி] [2006 ஜனவரி 27

அடுத்ததாக இன்னொன்றையும்கூட நோக்க விளக்கத்தில் சொல்லுகிறார்கள். இரண்டாவதாக தேர்வுகள் எழுதப்படுமேயானால் இரு தேர்வுகளுக்குமிடையே அதிர்ஷ்டங்களும், செயல் திறன்களும் ஊசல் ஆட்டம் ஆகும். நம்முடைய நோக்க விளக்கத்திலே சொல்கிறோம். அது ஒரு அதிர்ஷ்டம், அது ஒரு ஊசலாட்டம் என்பது தேர்வு நிலையிலேயே வரும் என்பதை நம்முடைய நோக்க விளக்கத்திலே சொல்லியிருக்கிறோம். ஆக, அப்படி இருக்கின்றபொழுது அந்த மாணவர்களுக்கு மைய மேல்நிலைப் பள்ளிக் கல்வி மாணவர்களுக்கு எண்ணிக்கைக் குறைந்ததாக இருப்பதால், சுமையை ஏற்றுவதாலோ, எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால் அதிர்ஷ்டத்திலும், ஊசலாட்டத்திலும் விட்டுவிடுவதன் காரணமாகவோ இதிலே ஒரு சமநிலை, நியாயங்கள் இருக்க வாய்ப்பில்லை. ஆகவே, குறைபாடு உள்ளதாக இந்தச் சட்டம் இருக்கிறது என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தின்மூலமாகக் கொண்டு வரப்படுகின்ற, நினைத்துக் கொண்டிருக்கிற அந்த நோக்கங்கள், இதிலேகூடச் சொல்லுகிறார்கள், 2005–2006 ஆம் கல்வி ஆண்டிலேயே பொது நுழைவுத் தேர்வு முறையை ஒழித்துவிடுவது பொருத்தமானது எனக் கருதியது. ஆனால், நீதிமன்றம் அதை அனுகூலமாகக் காணவில்லை என்கின்ற அந்த நிலையைப் பார்த்து அதற்குப் பிறகுதான் இந்தச் சட்டத்தை, சட்டமுன்வடிவைக் குறைபாடு இல்லாமல் கொண்டு வந்திருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். குறைபாடு இருக்கிற காரணத்தினால் நாளை இதை Challenge செய்ய, ஏன் நமக்கு இதிலே உண்மையிலேயே அக்கறை இருக்குமேயானால் இந்த அரசுக்கு நுழைவுத் தேர்வை எடுத்துவிட வேண்டும், எல்லாத் தரப்பு மாணவர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும், பொது மக்கள், மற்றவர்களுக்கும் இது நியாயமாக வழங்கப்படவேண்டும் என்ற எண்ணம், எல்லாத் தரப்பினரையும் வாழவைக்க வேண்டும், படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், இந்தக் குறைபாடுகள் இல்லாமல் இந்தச் சட்டத்தினைக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆகவே, குறைபாடு இருக்கிறது. இதிலேகூட உள்ளே நம்முடைய அமைச்சர் சொல்லலாம். ஏற்கெனவே சமநிலை என்ற அந்தப் பிரிவுகளில் குழுமங்கள் என்று சொல்லுவது என்பது, மையக் கல்விக்கு ஒரு குழுமம் இருக்கிறது. இந்த மேல்நிலைப் பள்ளிக் கல்வி படிப்பதற்கு ஒரு குழுமம் இருக்கிறது. அவர்கள் இந்தப் பாடத் திட்டத்திலே தேர்வு வைப்பார்களாம், பிறகு அந்தத் தேர்வை மைய மாணவர்கள் எழுதி அதன்மூலமாகச் சமநிலைக்குக் கொண்டு வருவார்களாம் என்பது



2006 ஜனவரி 27] [திரு. இ. புகழேந்தி]

ஏற்புடைய சமநிலை இல்லை என்பதை இங்கே நான் இப்பொழுதும் சொல்லுகிறேன். தெளிவாகக் குறிப்பிடுகிறேன், நாளை நீதிமன்றத்திலே இது கேட்கப்படுகிற சூழ்நிலை வருகின்றபொழுது, நீதிமன்றத்திற்குப் போகின்றபொழுது இங்கே கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் பயன் இல்லாமல் போவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. ஆகவே, இந்த அரசு உண்மையான மன நிலையோடு, அக்கறையோடு இந்த நுழைவுத் தேர்வுச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டி அந்த வகையிலே இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்த்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 11–25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளிலே சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இந்தச் சட்டமுன்வடிவை நம்முடைய அரசு பல மாதங்களுக்கு முன்னாலேயே கொண்டு வந்து, அதற்காக நாம் சில விதிகளையும் உருவாக்கி, அதைச் சட்டமன்றத்திலே வைத்து, நீங்கள் எல்லாம் ஓர் அங்கீகாரத்தைப் பெற்று—இப்படித்தான் இந்த Common Entrance Test–லே mark–ஐப் பெறுகிறவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்கிற ஒரு தெளிவான நிலையை அரசாங்கம் பல மாதங்களுக்கு முன்னாலேயே அறிவித்திருக்குமேயானால், மாணவர்களுக்கு பளு என்று நீங்கள் கருதுகிற அந்த நிலையிலிருந்து அவர்கள் விடுபட்டு கொஞ்சம் விடுதலையாகியிருப்பார்கள். ஏனென்று சொன்னால், ஜூன் மாதத்திலேயே எல்லாப் பள்ளிகளிலும் அவர்கள் பாடத் திட்டத்தைத் தொடங்கிவிட்டார்கள்.

அதிலே சில பள்ளிகளை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், இராசிபுரம் S.R.V., அதேபோல வித்யவிகாஸ், ஊத்தங்கரையில் இருக்கக்கூடிய ஒரு பள்ளி என்று பல பள்ளிகள் பாட வகுப்புகளை எடுப்பதோடு, இந்த Common Entrance Test–க்கான படிப்பையும்கூட அவர்கள் மாணவர்களுக்கு ஏற்கெனவே எடுத்து, இப்போது மாணவர்கள் எல்லாம் இன்னும் இரண்டொரு மாதத்தில் தேர்வைச் சந்திக்கக்கூடிய அளவிற்கு, Common Entrance Test–ஐ நீங்கள் வைத்தால்கூட, அதைக்கூட எழுதக்கூடிய அளவிற்குத் தயாராக

இருக்கக்கூடிய நிலைக்கு, எல்லாப் பள்ளிகளும் அவர்களைத் தயார்படுத்திவிட்டார்கள். பளுவை நாம் ஏற்கெனவே சுமத்திவிட்டோம். இருந்தாலும்கூட, இன்னும் அவர்களுக்கு அச்சம், இந்தத் தேர்வு, அந்த Common Entrance Test எடுக்கப்படுமா அல்லது மீண்டும் வைக்கப்படுமா என்று.

இன்னும் சொல்லப்போனால், Common Entrance Test–ல் நீங்கள் equal–ஆன mark–ஐ 5 மாணவர்கள் அல்லது 10 மாணவர்கள்—600 மார்க் என்று வைத்துக்கொள்வோம்—600 மார்க் எடுத்தார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு நீங்கள் எப்படி முன்னுரிமை அளித்து அவர்களை எப்படி admission–இலே சேர்க்கப்போகிறீர்கள்? இதற்கு முன்னால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில், யார் முன்னாலே பிறந்தார்களோ, date of birth யாருக்கு முன்னால் இருக்கிறதோ, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருமேயானாலும்கூட, முன்னாலே பிறந்தவனுக்கு அதிர்ஷ்டம், பின்னாலே பிறந்தவனுக்கு அதிர்ஷ்டம் இல்லாமல் போகக்கூடிய ஒரு சூழ்நிலை வருகிறது. ஆகவே, நான் ஓர் ஆலோசனையை இந்த அரசுக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ், தமிழ் என்று சொல்லிக்கொண்டிருக்கிற நாம், தமிழுக்கு முக்கியத்துவம் அளித்துக்கொண்டிருக்கிற இந்த அரசு, தமிழ்ப் பாடத்தில் யார் அதிகமான மதிப்பெண்களை எடுக்கிறார்களோ, அந்த மதிப்பெண்ணைக்கூட, அதாவது அந்த equal mark என்று வந்துவிட்ட பிறகு, தமிழிலே அதிகமான மதிப்பெண்ணை எடுத்தவர்களுக்கு அதிலே நாம் முன்னுரிமையைக் கொடுத்து, அதில் அவர்களுக்கு நீங்கள் M.B.B.S. Seat, B.E. Seat அல்லது B.Sc. (Agri.) Seat கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக தமிழுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுபபதாகப் பொருள்படும். ஆகவே, இப்படிச் சிக்கல் வருகிற நேரத்தில், equal–ஆக ஒரு 15 மாணவர்கள் மதிப்பெண்களை எடுத்துவிட்டால், தமிழில் அதிகமான mark எடுத்தவர்களுக்கு அது கொடுக்கப்படும் என்கிற நிலையையாவது நீங்கள் உருவாககுங்கள் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, C.B.S.E. மாணவர்களுக்கு Common Entrance Test–ஐ நாம் வைக்கப்போகிறோம். அப்படி வைத்தீர்கள் என்று சொன்னால், அதிலே அவர்களை எப்படி நீங்கள் சமநிலைப்படுத்தப் போகிறீர்கள்? ஏனென்றால், State Board–னுடைய மதிப்பெண்கள், அதாவது அதனுடைய தயாரிப்பு எல்லாமே வேறுபட்டவை. ஆனால்,



C.B.S.E.–இலே படிக்கக்கூடிய படிப்பு என்பது, ஏற்கெனவே அது ஒரு தனித் துறை, separate compartment. அதிலே படிக்கக்கூடிய மாணவர்களினுடைய மதிப்பெண்களையும், அதேபோல, State Board–இலே படிக்கக்கூடிய மாணவர்களினுடைய மதிப்பெண்களையும் நீங்கள் சமநிலைப்படுத்துகிறோம் என்று சொல்லி, அதிலே ஏதாவது பிரச்சினை, இடர்பாடு, difficulty வருமேயானால், நீதிமன்றத்திற்குப போகக்கூடாது என்று, அதற்காக ஒரு பிரிவையும்கூட சேர்த்திருக்கிறீர்கள். அது நல்லெண்ணத்தினுடைய அடிப்படையிலே, அப்படிப்பட்ட செய்கை செய்யப்படுமேயானால், நீதிமன்றத்தை யாரும் அணுக முடியாது என்கிற ஒரு தடையைக்கூட நீங்கள் இந்தச் சட்டத்திலே உருவாக்கியிருக்கிறீர்கள்.

அது நல்லெண்ணத்தின் அடிப்படையிலே செய்யப்பட்டதா அல்லது நல்லெண்ணம் இல்லாமல் செய்யப்பட்டதா என்பதை நீதிமன்றம்தான் நாளைக்கு முடிவு செய்ய வேண்டிய ஒரு நிலை வரும். ஆகவே, இப்போது எனக்குத் தெரிந்த வரையிலே ஒரு ஆலோசனையை நான் அரசுக்கு வைக்க விரும்புவது எல்லாம், இந்த All India Technical Education–னுடைய அமைப்பும் சரி, அதேபோல Medical Council of India–னுடைய அமைப்பும் சரி, அதாவது State Board–லே படிக்கிற மாணவர்கள் கிட்டத்தட்ட 95 சதவீதம் பேர் தமிழகத்திலே இருப்பார்கள். ஒரு 5 சதவீதம் பேர்தான் C.B.S.E. படிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். All India Technical Education–னுடைய அமைப்பு, அதேபோல Medical Council of India–னுடைய அமைப்பு போன்ற அமைப்புகளுக்கும்—அதற்குத்தான் பலத்த போட்டி இருக்கிறது இப்போது. அதிலேகூட இப்போது engineering படிப்பைப் பொறுத்தவரையிலே, போட்டியே இல்லை. நிறைய seat–கள் காலியாக இருக்கின்றன. M.B.B.S.–ஐப் பொறுத்தவரையில்தான் தமிழகத்திலே மட்டுமல்ல, பல மாநிலங்களிலே பலத்த போட்டி இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த C.B.S.E. படிப்பு படித்த மாணவர்களுக்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, கிட்டத்தட்ட இப்போது தமிழகத்திலே 1,500 seat–களை M.B.B.S.–க்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதிலே C.B.S.E. படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரு 100 Seat என்று கொடுத்தாலும்கூட, State Board–இலே படிக்கக்கூடிய மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிவிடுவார்கள். ஆகவே, நாம் State Board–லே வைக்கக்கூடிய அத்தனை seat–களையும், அதாவது தமிழகத்தில் அரசு கொடுக்கக்கூடிய Seat–களை State Board–லே படிக்கக்கூடிய மாணவர்களுக்கே ஒதுக்கிவைத்துவிட்டு, C.B.S.E. முறையில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நீங்கள் Medical Council of India–விற்குத் தனியாக எழுதி, அவர்களுக்கு என்று ஒரு quota–வை வைத்து, அந்தப்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஜனவரி 27

படிப்பு படித்தவர்கள். அதற்குத் தனியாக அந்த Common Entrance Test–ஐ எழுதிவிட்டு, அந்த quota–இலே அவர்கள் வரக்கூடிய வாய்ப்பை நீங்கள் உருவாக்கினால்தான், இந்தச் சந்தேகம் தீர்க்கப்படும். இப்படிப்பட்ட குழப்பமான நிலைக்கு நாம் ஒரு தீர்வைக் காணமுடியும். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் C.B.S.E. படித்தவர்களுக்கு நீங்கள் 100, அல்லது 150 சீட்டுகளைத் தனியாக ஒதுக்கி, Medical Council of India–விடம் தனியாக ஒரு அப்ரூவலை வாங்கிக் கொள்ளுங்கள். State Board மாணவர்களோடு அவர்களைச் சமப்படுத்துகிறோம் என்று சொல்லி இவர்களை நீங்கள் பாதிக்க விட்டுவிடாதீர்கள். இருக்கக்கூடிய அத்துணை சீட்டுகளும் State Board மாணவர்களுக்கே என்ற ஒரு நிலையை நீங்கள் உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதேகூட அதைத் தெளிவுபடுத்திட வேண்டும்.

*முற்பகல் 11–30*

இன்னும் சொல்லப்போனால், Deemed University என்று நிறைய இப்போது வந்திருக்கின்றன. Deemed University–லே உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி நம்முடைய அரசாங்கம் வைக்கக்கூடிய தேர்வு எழுதக்கூடிய மாணவர்களுக்கு அங்கே எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. அவர்கள் ஒரு சீட்டும் அங்கே வழங்கப்போவது இல்லை. அதற்கும்கூட ஏதாவது வழிவகைகளைக் கண்டு அந்த Deemed University–லேகூட ஏதாவது நாம் அவர்களிடமிருந்து சீட்டைப் பெறுவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ளலாம். ஏனென்றால், இந்த Common Entrance Test –ஐ State Board–ல் படித்து எழுதக்கூடிய மாணவர்கள் எந்த Deemed University–லேயும் உள்ளே போகவே முடியாது. இருக்கக்கூடிய Government College-களிலே மட்டும்தான் இவர்கள் பெற முடியுமேயொழிய, almost all private Medical Colleges எல்லாமே Deemed University ஆகிவிட்டன. ஏதோ ஒன்று கோவையில் மட்டும் இன்னும் pending–ல் இருக்கிறது என்று நினைக்கிறேன். கோவையில் உள்ள Medical College, அந்த P.S.G. College மட்டும்தான்; அதிலேகூட கொஞ்சம்தான் சீட். மற்றதையெல்லாம்--மீனாட்சி College வாங்கியாகிவிட்டது. அதேபோல பாலாஜி College வாங்கியாயிற்று. அதேபோல, S.R.M. College வாங்கியாகிவிட்டது. வரும்பொழுதே அவர்கள், Deemed University–லே வருகிறார்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை. வரும்போதே, இந்த ஆண்டுதான், ஒரு கல்வி நிறுவனம் ....



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும்போதே அவர்கள் எப்படி நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக வருகிறார்கள் என்று தெரியவில்லை என்று சொல்கிறார்கள். எங்களுக்கும் தெரியவில்லை. அதை அவர்கள் சார்ந்திருக்கின்ற மத்திய அரசாங்கத்தைத்தான் கேட்க வேண்டும். ஒரு மாநிலத்திலே கல்வித் துறையிலே ஒரு பல்கலைக்கழகம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம் கொடுப்பதற்கு முன்பாக மாநில அரசினுடைய தடை இன்மைச் சான்றினைப் பெற வேண்டுமென்று ஒரு விதி இருந்தாலும், அதைப் பற்றி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்காமலேயே அந்த மாநிலத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற நிகர்நிலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதியளித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலையை அந்த Medical Council of India எடுக்குமேயானால், இன்னும் சொல்லப்போனால் நம்முடைய அரசு மருத்துவக் கல்லூரிகள் அத்துணையிலுமே, Private Medical College –களில் இருப்பதைவிட பலமடங்கு, இன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நுழைவுத் தேர்வுக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேச்சை முடித்து விடுகிறேன். அவ்வளவு பெரிய infrastructure –ஐ வைத்திருக்கிறோம். அப்படியென்றால் எல்லா Medical College–களையும் நாம் Deemed University-யாக ஆக்கிவிட்டு, நாமே-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிது புதிதாகக் கல்லூரிகள் வருவதற்கும், அவை Deemed University என்று அங்கீகாரம் பெறுவதற்கும், மாநில அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக வந்திருக்கின்ற எத்தனையோ கல்லூரிகளுக்கு மாநில அரசு அனுமதி மறுத்தது. ஆனால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றத்தின் ஆணைகளைப் பெற்று கல்லூரிகளை அமைத்திருக்கிறார்கள். Deemed University என்ற அந்தஸ்தை மத்திய அரசு அளித்துள்ளது. ஆகவே, இதில் மாநில் அரசின் எந்தப் பங்கும் இல்லை. புதிதாகக் கல்லூரிகள் வருவதற்கு நீதிமன்றங்கள் காரணம்; Deemed University என்று அறிவிக்கப்படுவதற்கு மத்திய அரசுதான் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நிலைப்பாடு என்று சொன்னால், நாமும் இருக்கக்கூடிய அத்துணை மருத்துவக் கல்லூரிகளையும் Deemed University என்று ஆக்கி விட்டு, நீங்களும் அதிகமான சீட்டுகளை நிறைய உருவாக்கி மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். ஏனென்றால், இப்போதெல்லாம் தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் எல்லோரும் பெங்களூர் அதாவது கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே நாம் எப்படியாவது அதிகமான எண்ணிக்கையோடு நம்முடைய மாணவர்கள் மருத்துவப் படிப்பு படிப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக இந்த அரசு முயலவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த Common Entrance Test–க்கான விதிமுறைகளை நாம் வைத்திருக்க வேண்டும். இந்த விதிகளை உடனடியாக ஏற்பாடு செய்து, இதுதான் விதி என்று சொன்னால்தான், அதற்குத் தகுந்தமாதிரி மாணவர்கள் தங்களைத் தயார் செய்துகொண்டு, அதற்கான கல்வி நிறுவனங்களும்கூட அவர்களை அந்தக் கட்டுக்கோப்பிற்குள்ளாக அவர்களுக்கு நல்ல ccaching எல்லாம் கொடுத்து கொண்டு வர முடியும். விதி என்னவென்றே தெரியாமல், ஏனென்றால நாம் எந்தெந்த சப்ஜெக்ட்டிலே எவ்வளவு மதிப்பெண்கள் பெற்றால் அந்த cut off மார்க் எனறு வைக்கிறோம், அந்த cut off மார்க் என்ற அந்த மார்க்கை நாம் fix செய்கிறபோது எந்தெந்த சப்ஜெக்ட்டுகளிலே இருக்கக்கூடிய மதிப்பெண்களை இந்த அரசு எடுத்துக்கொள்ளப் போகிறது, அப்படி எடுத்துக்கொள்கிறபோது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் விளக்கமாக நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். Common Entrance Test கட்டாயமாக நடத்தப்பட வேண்டுமென்று கூறுவது Medical Council of India வகுத்துள்ள விதிமுறைகள். மத்திய அரசு அந்த விதிமுறையில் ஒரு திருத்தத்தைச் செய்துவிட்டு Common Entrance Test தேவையில்லையென்பதைச் சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினையே இங்கே இருக்காது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Common Entrance Test–ஐ State Board–க்கு நாம் எடுத்து விடுகிறோம். எடுத்துவிட்டாலும்கூட இப்போது State Board–லே படித்துக் கொண்டிருக்கிற மாணவர்கள் எந்தெந்த பாடத்திலே எவ்வளவு மார்க், இந்தப் பாடத்தில் எடுக்கக்கூடிய மார்க்குதான் cut off மார்க்குக்கு, அதை நாம் அடிப்படையாக வைத்துக் கொண்டு அவர்களுக்கு சீட் வழங்கப்படும் என்கிற விதியை



உடனடியாக இந்த அரசு தெளிவுபடுத்தினால்தான் மாணவர்கள் அந்த subject–லே தயாராகக்கூடிய வாய்ப்பு இருக்கும்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் இல்லாதபோது மாண்புமிகு உறுப்பினர் ஒரு பிரச்சினையை எழுப்பினார். குஜராத் மாநிலத்தில் State Board அன்றி, பிற Board–களுக்குச் சில seat–களை reserve செய்கிறார்கள். அதேபோல் தமிழ்நாட்டிலும் ஏன் செய்யக்கூடாது என்று கேட்டிருக்கிறார். இப்போது குஜராத்தில் இருக்கின்ற சூழ்நிலை முற்றிலுமாக மாறிவிட்டது. இப்போது குஜராத் அரசின் Higher Education Department–லிருந்து பெறப்பட்ட தகவல் என்னவென்றால், குஜராத் மாநிலத்திலும் இப்போது Common Entrance Test–ஐ அவர்கள் அறிமுகப்படுத்தப் போகிறார்கள்; நடத்தப்போகிறார்கள். இதற்குக் காரணம் மத்திய அரசின் ஆளுமையில் இருக்கின்ற Medical Council of India–வின் விதிமுறைகள்தான் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அரசையும் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த State Board–லேகூட படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இந்திந்த subject–களில்தான் mark–களை நாம் கணக்கெடுக்கப் போகிறோம். அதிலே தேர்வு செய்யப்படுபவர்களுக்குத்தான் கொடுக்கப் போகிறோம் என்ற ஓர் அறிவிப்பை, விதியை நாம் இதிலே frame செய்து, அந்த விதியை நீங்கள் அறிவிக்கவேண்டும். அதேபோல. . .

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் State Board மாணவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இருக்கப்போவதில்லை. State Board–ல் பிளஸ் 2 மாணவர்கள், மாணவிகள் என்ன மார்க்கைப் பெறுகிறார்களோ அதைத்தான் அளவுகோலாக வைத்துக்கொண்டு, மற்ற Board–களில் வருகின்ற மாணவ, மாணவியர்களை இவர்களோடு ஒப்புநோக்கும் அளவிற்குக் கொண்டு வரப்போகிறோம் என்றுதான் கூறுகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் கூறவில்லை. Entrance Test வைத்து நாம் ஏற்கெனவே என்ன பண்ணுகிறோம்? Maths, அதற்கு அப்புறம் Science, இந்த subject-கள் வரைக்கும்தான் நாம் எடுக்கிறோம். இந்த மாதிரி எடுப்பதனால் அந்தந்தப் பாடங்களை எடுக்கக்கூடிய மாணவர்கள்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தெந்த பாடப் பிரிவிலே தேர்ச்சி பெற்றால் அந்த மாணவர்கள் பொறியியல் கல்லூரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ சேர்க்கப்படுவார்கள் என்று கேட்கின்றார்கள். கடந்த ஆண்டு என்ன விதிமுறைகள் இருந்ததோ, மாணவர்கள் எந்தப் பாடப் பிரிவிலே தேர்ச்சிப் பெறவேண்டும் என்பதற்கு விதி இருந்ததோ, அதேதான் இந்த ஆண்டும் இருக்கும். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. பொறியியல் கல்லூரிகளில் சேரவேண்டுமென்றால் கணிதம், Physics, Chemistry, அதே மாதிரி Medical College-லே சேர வேண்டும் என்றால் Biology, Physics, Chemistry. அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பிரச்சினை இப்போது அது இல்லை. பொது நுழைவுத் தேர்வு சம்பந்தமாகச் சொல்லவேண்டிய கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள். வேறு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதையும் தெளிவுபடுத்த வேண்டும். விதியிலே அது வரவேண்டும். பொதுவாக, நாம் As per the Act, we have to frame certain rules. That rules should be approved even by this august Assembly. Therefore, what I want to say is, suppose more students are getting the very same mark, similar mark, then what standard you are going to adopt for it? Suppose, ஒவ்வொரு மாணவருக்கும் நீங்கள் cut-off வைத்து 320 மார்க் என்று வைத்து, 15 மாணவர்கள் 320 மார்க்கே வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதிலே எந்த மாணவருக்கு நீங்கள் எப்படி, பிறந்த தேதியை வைத்து முன்னுரிமை அளிக்கப்போகிறீர்களா? அந்த fraction வாராமல், அதனால்தான் நான் சொன்னேன்; தமிழ் மார்க்கைக்கூட நீங்கள் அதிலே consider பண்ணிக் கொடுத்தீர்கள்





என்றால், அதிலே ஏதாவது ஒரு சில மாணவர்கள், தமிழ் படிக்கின்ற, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரு முன்னுரிமை கிடைக்குமேயானால், அவர்கள் அதை வைத்துக்கொண்டாவது seat பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே, இந்த anomaly-யைப போக்குவதற்கான நடவடிக்கையை நீங்கள் உடனடியாக எடுத்து இதற்கான விதிகளை முதலிலே வகுத்து, அந்த விதியை தமிழகத்திற்கு அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மற்ற Bill-களிலே, திருவள்ளுவர் யூனிவர்சிட்டிமீது, இதிலேயும் பேசிவிட வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிடுங்கள், சொல்லிவிடுங்கள். அதையும் சேர்த்துச் சொல்லிவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** திருவள்ளுவர் பல்கலைக்கழகம். அதேபோல் Open University. இந்த இரண்டிற்குமே, இப்போது, ஏற்கெனவே மூன்று ஆண்டுக்காலம் துணை வேந்தராக இருந்தவர்கள் மீண்டும் அதற்கு நியமிக்கப்படக்கூடாது என்று ஏற்கெனவே அந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, இந்த இரண்டு சட்டங்களிலும். ஏனென்றால், மற்ற University-களிலே எல்லாம் மூன்று ஆண்டுகளுக்கு மேலே இருக்கலாம் என்ற விதி இருக்கிறது. ஆனால், அதிலே நடந்த சில குளறுபடிகளை எல்லாம், சில இடர்பாடுகளையெல்லாம் பார்த்துவிட்ட பிறகுதான், இதே அரசுதான் அந்த University Act-ஐ எல்லாம் கொண்டு வந்து, Open University-யாக இருந்தாலும் சரி, அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினுடைய சட்டமானாலும் சரி, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோதே மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு துணை வேந்தர் அந்த நிறுவனத்திலே தொடர்ந்து ஆறு ஆண்டுக்காலம் பணியாற்றினார் என்று சொன்னால், அவர்களுக்கு அந்த acquaintance நிரம்ப அதிகமாகி, அங்கே முறைகேடுகள், மற்றவை எல்லாம் வந்து சேர்ந்துவிடுகின்றன என்கிற காரணத்தினாலேதான், அந்தத் தடையை நீங்களாகவே முதலிலே அதிலே வைத்தீர்கள். அது நல்லதுதான். ஆனால், இப்போது மீண்டும் அதே துணை வேந்தர் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு மறுபடியும் நியமிக்கப்படலாம் என்ற ஒரு நிலையை மீண்டும் எடுத்தீர்கள் என்று சொன்னால், அது உண்மையிலேயே வருந்தத்தக்கது. மீண்டும் முறைகேட்டிற்கு வழிவகை செய்யக்கூடியது. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அதிலே ஏற்கெனவே நாம் frame பண்ணிய விதிப் பிரகாரம் நடந்திருக்கிறதா என்றால், அதுவே நடக்கவில்லை. Registrar இதுவரை, மூன்று ஆண்டுக்காலம் முடிந்த பிறகும்கூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இது சட்டமுன்வடிவிற்குச் சம்பந்தம் இல்லாதது.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஜி.கே. மணி.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே, முறைகேடு செய்தவர்கள், போய்விட்டவர்கள், மீண்டும் அந்தப் பதவிக்கு வந்து சேரக்கூடிய ஒரு நிலையை நீங்கள் உருவாக்கிவிடாதீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்குச் சம்பந்தம் இல்லாதது இது.

*முற்பகல் 11–40*

**திரு. சி. ஞானசேகரன்:** மூன்று ஆண்டுகளுக்கு அவர்களை நியமிக்கக்கூடிய நிலையை தயவுசெய்து தவிர்த்துவிடவேண்டும் என்று நான் பணிவன்போடு இந்தக் கருத்தை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கல்வி படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை குறித்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து அரசு கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய குழந்தைகள், அதிலும் குறிப்பாக நகர்ப்புறத்திலே இருக்கிற ஏழையெளிய நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள், உயர் கல்விக்குச் செல்லமுடியாத நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, ஏழைகளும் உயர் கல்வி பெறலாம் என்ற நிலைக்கு இந்தச் சட்டம் வழிவகுக்கும் என்ற காரணத்தினாலே, நான் மீண்டும் ஒரு முறை வரவேற்கிறேன். ஆனால், அதேவேளையில் கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டம் என்பது, எதிர்காலத்தில் நீதிமன்றத்தாலோ அல்லது பல்வேறு நிலைகளிலே இது தடையாக அமைந்துவிடக்கூடாது. அதற்காக இந்த அரசு முழுமுயற்சியோடு ஆக்கபூர்வமான நல்ல அம்சங்களை உள்ளடக்கி, இரத்து செய்யக்கூடிய இந்தச் சட்டம் நிலைநிறுத்தப்படவேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அரசுத் தரப்பிலே நோக்கக் காரண விளக்கத்திலே சொல்லப்பட்டிருப்பது, இங்கே மாநில வாரியக் கல்விப் படிப்பிலே இருக்கிற, அந்தப் பன்னிரண்டாவது வகுப்பு மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுதத் தேவையில்லை என்பது. அதேநேரத்தில், மைய வாரியக் கல்வித் திட்டத்தின் அடிப்படையிலே, பன்னிரண்டாவது வகுப்பு மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுதப்படவேண்டும். இது இரண்டையும் சமநிலைப்படுத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை இங்கே சொல்லியிருக்கிறீர்கள். சமநிலை என்று சொல்கிறபொழுது எந்த வகையிலே சமநிலைப்படுத்த இருக்கிறோம்? இன்று மைய வாரியப் பள்ளிப் பாடத்திலே இருக்கிற குழந்தைகள், கீழ் வகுப்பிலிருந்து பன்னிரண்டாவது வகுப்பு வரையிலே தரமான பள்ளிக்கூடத்திலே படிக்கிறார்கள். அவர்கள் மொத்த மதிப்பெண்ணிலே கூடுதலாக மதிப்பெண் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில நுழைவுத் தேர்வு, இந்த மூன்று பாடங்களை எடுத்துக்கொள்கிறேன். அந்த மூன்று பாடங்களிலேயும் கூடுதலான மதிப்பெண் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படி மையப் பாடத் திட்டத்திலே இருக்கிற அந்த மாணவர்கள் கூடுதலான மதிப்பெண்களைப் பெற்று, அவாகளுக்கே கூடுதலாக இடம் போய்விட்டால், கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய குழந்தைகள், அதிலும அரசுப் பள்ளிகளிலே படிக்கிற, தமிழ் வழியிலே படிக்கிற குழந்தைகளுக்குப பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது எனற எண்ணத்தையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, அரசு இதிலே கவனமாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது திரு. ஜி.கே. மணி அவர்கள் எழுப்பிய பிரச்சினையைத்தான், ஏற்கெனவே பேசிய திரு. ஞானசேகரன் அவர்களும் எழுப்பினார்கள். இதற்கான விதிமுறைகள் என்ன; அந்த விதிமுறைகளை ஏன் குறிப்பிடவில்லை என்றெல்லாம் இங்கே கேட்டார்கள். அதற்கு நான் விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, சட்டம் ஆன பிறகுதான் இதற்கான விதிமுறைகளை வகுக்கமுடியும். Rules can be issued only after the Bill becomes an Act. மேலும், விதிமுறைகள் சட்டமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இங்கே விவாதிக்கப்படவேண்டும் என்ற விதியில்லை. இந்தச் சட்டமுன்வடிவு சட்டம் ஆக்கப்பட்ட பிறகு விதிமுறைகளை வகுத்து இந்த அவையில் Table செய்தால் போதுமானது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோக்கங்களெல்லாம் அதிலே இடம்பெறவேண்டும் என்ற

அந்த உயர்ந்த நோக்கத்திற்காகத்தான் சொல்லுகிறோம். ஆலோசனையாகத்தான் சொல்கிறோமே தவிர, குறை சொல்வதற்காக அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்று நம்முடைய மாநில வாரியப் பள்ளித் திட்டத்திலே, ஏறக்குறைய ஐந்து இலட்சம் குழந்தைகள் இந்த ஆண்டு 12-வது வகுப்பிலே, பிளஸ் 2 வகுப்பிலே படிக்கிறார்கள். அதைப்போல, மத்திய வாரியப் பள்ளித் திட்டத்திலே ஏறக்குறைய 15,000-லிருந்து 20,000 மாணவர்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது, தமிழ்நாடு அரசுப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், மத்திய பாடப் பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும்கூட, இருக்கிற இடங்களைப் பகிர்ந்தளிப்பது, மாணவர்களினுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப இடங்களைப் பகிர்ந்தளித்துக் கொண்டால், இந்தச் சமநிலை வரும் என்ற ஆலோசனையையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தவகையிலே யாருக்கும் பாதிப்பு இருக்காது. அதையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அப்படி மொத்த மதிப்பெண்களைப் பார்க்கின்றபோது, நுழைவுத் தேர்வே இல்லாமல் மாநிலப் பள்ளித் திட்டத்திலே வாக்கூடிய அந்தக் குழந்தைகள் ஒரே தாப்பட்டியலிலே, ஒரே மதிப்பெண்களைப் பெற்று, ஒரே தரத்தைப் பெறக்கூடிய அளவிலே ஒரே rank-ல் வருவார்கள். 100 மாணவர்கள் ஒரே rank பெறுகிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அளவுகோலாக இன்று தமிழ்நாடு திட்டத்திலே இருக்கிற பள்ளிகளிலேகூட ஆங்கில வழிக் கல்வி பள்ளிகள் இருக்கின்றன மெட்ரிகுலேஷன் பள்ளிகள். அவையெல்லாம் தவிர்த்து தமிழ்வழிக் கல்வியிலே படித்த குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இது முதலாவது அளவுகோல்.

முற்பகல் 11–45

அப்படி தமிழ்வழிப் பள்ளியிலே படித்த குழந்தைகளிலும் ஒரே rank-ல் பல பேர் வந்தால் தமிழ்ப் பாடத்திலே இருக்கிற மதிப்பெண்களையும் பெற்றுக்கொள்வதற்கு இரண்டாவது அளவுகோலாக வைத்துக்கொள்ளலாம். அதற்குமேலே சில மாணவர்கள் ஒரே rank அடிப்படையில் வந்தால் மொத்த மதிப்பெண்களைக்கூட எடுத்துக்கொள்வதற்கு ஒரு அளவுகோலாக வைத்துக்கொள்ளலாம். ஆகவே, இப்படி மூன்று, நான்கு அளவுகோல்களை வைத்துக்கொண்டால் அது பொருத்தமாக இருக்கும். யாருக்கும் பாதிப்பு இருக்காது. ஏனென்று சொன்னால், மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலே படிக்கக்கூடிய குழந்தைகள் சிலர்



French மற்றும் மற்ற பாட மொழிகளிலே படிக்கின்றார்கள். ஆனால், நான் அதைக் குறை சொல்லவில்லை. அது அவர்கள் விருப்பம். இருந்தாலும்கூட தமிழ்வழியிலே படிக்கக்கூடியவர்களுக்கு முன்னுரிமை, தமிழ்ப் பாடத்திலே படிக்கக்கூடியவர்களுக்கு முன்னுரிமை, மூன்றாவது அளவுகோல் மொத்த மதிப்பெண்களைக்கூட எடுத்துக்கொள்ளுங்கள் என்ற அந்த ஆலோசனையையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கிராமப்புறத்துக் குழந்தைகள் என்று சொன்னால் அவர்களுக்கும் ஒரு அளவுகோலாக முன்னுரிமை வழங்குங்கள் என்ற ஆலோசனையையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இப்போது, 104-வது அரசியல் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அரசியலமைப்புச் சட்டம் 15-ஐத் திருத்தி ஐந்தாவதாக விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த விதியிலே சொல்லப்பட்டிருப்பது, கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் தேதி மேதகு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அது நடைமுறைக்கு வந்துவிட்டது. இப்போது கூடியவிரைவிலே ஏப்ரல், மே மாதங்களிலே மாணவர்கள் சேர்க்கை இருக்கிற நேரம். இந்த நேரத்தில் மத்திய அரசு அந்தச் சட்டத் திருத்தத்திலே சொல்லியிருக்கிற மாதிரி, மாநில அரசே மாணவர்கள் சேர்க்கைக்கான திருத்தங்களை வகுத்துக்கொள்ளலாம், கட்டணத்தையும் நிர்ணயித்துக்கொள்ளலாம் என்ற வழிவகைகள் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்துகொண்டிருக்கின்றார்கள். உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கின்ற தீர்ப்பிலே, மாநில அரசுக்கு மாணவர்கள் சேர்க்கை பற்றியோ, மாணவர்களின் கட்டண விகிதத்தைப் பற்றியோ, இட ஒதுக்கீடு பற்றியோ மாநில அரசாங்கத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் சொல்வதை மறுக்கவில்லை. உச்ச நீதிமன்றம் சொல்லியது உண்மைதான். உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகுதான், நாடாளுமன்றத்திலே சமீபத்திலே சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத் திருத்தம் 104-வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. மணி, சட்டமுன்வடிவுக்கு அது சம்பந்தமில்லை. நீங்கள் சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் தவறான தகவலைச் சொல்கின்றார்கள். மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற அந்த Constitutional amendment. *104*–வது சட்டத் திருத்தத்திலே, அந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திலே அவர்கள் சொல்லியிருப்பது இட ஒதுக்கீட்டைப் பற்றிதான். மாநில அரசாங்கம், விரும்புகின்ற அளவுக்கு அந்த இட ஒதுக்கீட்டை செய்து கொள்ளலாம் என்பதை மட்டும்தான் சொல்லியிருக்கின்றார்களே தவிர, உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கின்றபடி அந்தக் கட்டண விகிதத்தைப் பற்றியோ, அரசுக்கான இட ஒதுக்கீட்டைப் பற்றியோ, எதையும் அந்தச சட்டத் திருத்தத்திலே சொல்லவில்லை. நாங்கள் *28* ஆம் தேதியன்று டெல்லியிலே நடைபெற்ற மாநிலக் கல்வியமைச்சர்கள் கூட்டத்திலே கலந்துகொண்டபோது, அம்மாவினுடைய அரசு, ஒரு மாதிரிச் சட்டமுன்வடிவைக் கொடுத்திருந்தது. அந்தச் சட்டமுன்வடிவிலே இநதக் கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும், மாநில அரசுக்கு இட ஒதுக்கீட்டினை உறுதி செய்யப்பட வேண்டும், அதுமட்டுமல்ல, இன்றைக்கு விவாதித்துக்கொண்டிருக்கிறோமே, இந்தப் பொது நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டும், இது அத்தனையையும் நீங்கள் கொண்டு வர இருக்கின்ற, மத்திய அரசாங்கம் கொண்டுவர இருக்கின்ற அந்த Constitutional amendment–லே நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று தெளிவாகச் சொன்னோம். அப்போது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், நாங்கள் கொடுத்திருக்கின்ற அந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம், ignore it, நாங்கள் புதிதாக ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வருகின்றோம், ஒரு குழுவை நியமிக்கின்றோம், அந்தக் குழுவிலே நாம் அனைவரும் விவாதித்து ஒரு ஒருமித்த கருத்து வந்தபிறகு, புதிதாகச் சட்டமுன்வடிவைக் கொண்டுவருவோம் என்று சொன்னார்கள், உறுதியளித்தார்கள், உத்தரவாதம் கொடுத்தார்கள். ஆனால், அந்த உத்தரவாதத்தை அவர்கள் கடைசிவரை கடைப்பிடிக்கவில்லை.

*24–10–2005* அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நினைவுப்படுத்தி, நம்முடைய தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு கடிதத்தை





அன்றைக்கு அனுப்பினார்கள், மத்திய அரசாங்கத்திற்கு. அந்தக் கடிதத்திலே நீங்கள் உறுதியளித்ததுபோன்று, கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே நீங்கள் சொன்னதைப்போல, எங்களை எல்லாம் அழைத்து ஒரு ஒருமித்த கருத்தைக் கொண்டுவந்து, நீங்கள் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்; அதிலே இந்த நுழைவுத் தேர்வையும் நீங்கள் எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தோம். அதற்கும் பதில் அளிக்கவில்லை. அதற்குப் பிறகு அம்மா அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள். *12–8–2005* அன்றைக்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பு வழங்கியவுடனே, உடனடியாக *16–8–2005* அன்று ஒரு வாரத்திற்குள்ளாகவே, பாரதப் பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள். இந்த உச்ச நீதிமன்றம் கொடுத்திருக்கின்ற தீர்ப்பினுடைய பாதிப்புகளைப் போக்க வேண்டுமென்பதற்காக ஒரு சட்டத் திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்திலே நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று, அந்தக் கடிதத்திலே மாணவர்கள் சேர்க்கை, கட்டண விகிதம், இட ஒதுக்கீடு அதுமட்டுமல்லாமல், இந்தப் பொது நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்படும் என்று இத்தனை அம்சங்களையும் உள்ளடக்கி, நீங்கள் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று மிகத் தெளிவாக நாங்கள் சொல்லியிருந்தோம். ஆனால், இதில் எதையுமே செய்யவில்லை. எந்தச் சட்டத் திருத்தத்தையும் செய்யவில்லை. பொதுப்படையாக, *104*–ல் நீங்கள் சொல்லியிருக்கின்ற அந்தச் சட்டத் திருத்தம், இட ஒதுககீட்டைப் பற்றி மட்டுந்தான் சொல்லியிருக்கிறதே தவிர, மற்ற வேறெந்த அம்சங்களையும் நீங்கள் சொல்லவில்லை என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–50*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வது, பழைய நிலைமை. அதற்குப் பிறகு...(குறுக்கீடு) இல்லை, இல்லை. சொல்லிவிடுகிறேன். முதலமைச்சர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னது, பழைய நிலைமை அல்ல. இப்போது நடைபெற்றது. இன்னும் சொல்லப்போனால், அமைச்சர் சொன்னதெல்லாம் உண்மைதான். அதற்கு மேலும் ஓர் உண்மையை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாநில அரசு, ஒரு மாதிரிச் சட்டமுன்வடிவை மத்திய அரசுக்குக் கொடுத்ததாக இங்கே அமைச்சர் குறிப்பிட்டார். மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 27

கோரியதால்தான், அந்த மாதிரிச் சட்டமுன்வடிவை மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுத்தது. அதை ஆய்வு செய்தார்கள். பின்னர் ஒரு கூட்டம்போட்டு, இந்தச் சட்டம் வேண்டாம், வேறு ஒரு மாதிரிச் சட்டமுன்வடிவை நாங்கள் தயாரித்து உங்களுக்கு அனுப்புகிறோம், மீண்டும் அதற்காக ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்துகிறோம் என்றார்கள். ஆனால், அனுப்பவும் இல்லை. ஆய்வு நடத்தவும் இல்லை. அவசர அவசரமாக அவர்கள் கொண்டுவந்துவிட்டார்கள். அந்த Constitutional amendment–ல் மாநில அரசு ஏற்கெனவே ஆய்வு செய்து கொடுத்திருந்த அம்சங்களெல்லாம், இப்பொழுது நீங்கள் குறிப்பிடுகின்ற அம்சங்களெல்லாம் இடம் பெற்றிருந்தன. ஆனால், மத்திய அரசு யாருடனும் ஆலோசனை நடத்தாமல், அவசர அவசரமாகக் கொண்டு வந்த சட்டத் திருத்தத்தில், அந்த அம்சங்களெல்லாம் இடம்பெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, நாங்கள் மீண்டும் மீண்டும் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம்,– (சிரிப்பு) இல்லை, இல்லை. நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் மிகத் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நான் சொல்வதற்கு முன்னால் எல்லோரும் சிரித்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், கொண்டு வந்திருக்கிற 'நுழைவுத் தேர்வு இரத்து' என்பது நிலைநிறுத்தப்பட வேண்டும். எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மனநிறைவைத் தரக்கூடிய வகையிலே, இது பாதுகாப்பாக இருப்பதற்கு எல்லா வகையிலும், அரசு அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதில் நாங்கள் சொன்ன இந்த அம்சங்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த நுழைவுத் தேர்வு இரத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.



2006 ஜனவரி 27]

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள நுழைவுத் தேர்வு இரத்து என்பதை உறுதிப்படுத்துகிறபொழுது, கிராமப்புற மாணவர்களுக்குக் கிடைத்து வரக்கூடிய நன்மைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும், ஏற்கெனவே உள்ள இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும் என்பதையும் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், திறந்தநிலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் பற்றி வைக்கப்பட்டுள்ள சட்டமுன்வடிவில், முதலில் மூன்றாண்டுகள் அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தபிறகு, மீண்டும் மூன்றாண்டுகள் நீடிக்கிற நோக்கில், தானாகவே அது வந்துவிடக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது. முதலில் துணை வேந்தர்கள் நியமிக்கப்படுகிறபொழுது, என்னென்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவோ, அதே முறைகள் மீண்டும் பின்பற்றப்பட்டு, ஆய்வுக்குப்பின்னால் அவர்களுடைய பதவிக் காலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தம் என்பது, ஏதோ அவர்கள் தானாகவே, மீண்டும் அவர்கள் அந்தப் பதவிக்குத் தகுதியடைந்து, வந்துவிடுவார்கள் என்பதில்லை. ஏற்கெனவே ஒரு துணை வேந்தரைத் தேர்வு செய்வதற்கு என்னென்னவெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றனவோ அந்த விதிமுறைகளின்படிதான் அவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவு, அவர்கள் மீண்டும் அந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு, அவர்களைத் தகுதியுடையவர்களாக்குவதற்கே தவிர, அவர்கள் தானாகவே, உடனடியாக அந்தப் பதவிக்கு வந்துவிடுவார்கள் என்று அர்த்தம் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. ஒரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரைத் தேர்ந்தெடுப்பவர், மேதகு ஆளுநர் அவர்கள். இந்த மாநில அரசு தேர்ந்தெடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், பேசி முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறகெனவே உள்ள விதிமுறைகள் மீண்டும் பின்பற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திற்கு நன்றி. பல்கலைக்கழக ஆசிரியர்கள் தரப்பில் இந்த எதிர்பார்ப்பு உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 11–55*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்பது, கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்களுக்கு உறுதுணையாகவும், உதவியாகவும் இருக்கும் என்கின்ற காரணத்தினால், இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிச் செய்தாலும்கூட, கிராமப்புறக் கல்விக்கும், நகர்ப்புறக் கல்விக்கும் மிகுந்த வேறுபாடு, வித்தியாசம் இருக்கிறது. அந்த மாணவர்கள் நிறைய மதிப்பெண்கள் பெறுகின்ற வாய்ப்பில்லாத சூழ்நிலை கிராமப்புறங்களிலே இருக்கிறது. அப்படிப்பட்ட மாணவர்களுக்கு இந்தச் சட்டத் திருத்தத்திலே அரசின் மூலமாக ஏதாவது ஒரு குறிப்பிட்ட மதிப்பெண்ணை இந்த ப்ளஸ் 2 மார்க்குகளோடு இணைத்துக்கொண்டு, அவர்களுக்கு வழங்குகின்ற ஒரு வாய்ப்பு இருக்குமேயானால், அதைச் செய்வதற்கும் இந்தச் சட்டத் திருத்தத்தில் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்ற என்னுடைய கருத்தைத தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சியின் சார்பாக சொன்னால்தான் முடியும். அவர்கள் பேசுகிறார்கள், திரு. வைதியலிங்கம், திரு. பொன்முடி எல்லாம் பேசுகிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்பதற்காகக் சொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்படுகிறபோதே, அதே நேரத்தில் இதை ஆரம்பக் கல்வி முதல், அறிவுக் கல்வியிலிருந்தே, கீழேயிருந்தே மாணவர்களுக்கு நல்ல, தரமான கல்வியைக் கொடுப்பதற்கு அரசு முன் முயற்சிகளை



மேற்கொள்ளவேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்தை முன்வைக்கின்றோம். காரணம், இன்றைக்குத் தமிழகத்திலே இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலமாக, கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு முன்னுரிமை அடிப்படையில், அந்த விகிதாச்சார அடிப்படையில் இடம் கிடைத்தாலும், அதில் இருக்கின்ற இடர்பாடுகள் தகர்ந்து இவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அந்த வாய்ப்பு கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இருந்தபோதிலும்கூட, அரசின் சார்பாக இன்றைக்கு ஆரம்பக் கல்வி முதல்கொண்டு அல்லது கல்லூரிகளில் எல்லா வகையிலும் பார்த்தோமானால், எல்லா மேல்நிலைப் பள்ளிகள் வரையிலும் ஆசிரியர்களை நியமிப்பதிலே—பள்ளிக்கூடங்கள் நிரந்தரமாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பழனிசாமி,

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின்மேலே ஏதாவது கருத்துச் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** சட்டமுன்வடிவு கல்வியைப் பற்றிதானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கல்வி மானியக் கோரிக்கை இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** இது மானியக் கோரிக்கை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி மானியக் கோரிக்கை இல்லை. பொது நுழைவுத் தேர்வு சம்பந்தமாக அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகம் சம்பந்தமாக ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** உண்மையிலே இதை நான் வரவேற்கிறேன். நான் எடுத்த எடுப்பிலேயே வரவேற்றுவிட்டேன். அதற்கான ஆசிரியர்களையும் நாம் நியமிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இன்றைக்கு மாணவர்கள் படிக்க வேண்டியிருக்கிறது. தரமுயர்த்தப்படவேண்டும் என்றால், எப்படி உயர்த்தவேண்டும்? ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இது கல்வி மானியக் கோரிக்கை இல்லை. பொது நுழைவுத் தேர்வு சம்பந்தமாக நீங்கள் சொல்லவேண்டிய கருத்து ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இந்த சட்டமுன்வடிவின் மேலே.

**திரு. ஜி. பழனிசாமி:** அதைத்தான் சொல்கிறேன். ஆகையால், contract basis–ல் ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது, நிரந்தரமாக ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கினால்தான், அவர்கள் கல்வித் தரம் உயருவதற்கு வாய்ப்பு கிட்டும் என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுழைவுத் தேர்வை இரத்து செய்கிற இந்தச் சட்டமுன்வடிவிலும், அதைப்போல திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திலும், திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திலும் துணைவேந்தர்களின் பதவிக் காலத்தை நீட்டித்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஒரு சில கருத்துகளை நான் பதிய வைக்க விரும்புகிறேன். நுழைவுத் தேர்வைப் பொறுத்தமட்டிலே, இந்த அரசு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், நுழைவுத் தேர்வு சம்பந்தமாக திரு. புகழேந்தி பேசிவிட்டார். அடுத்த சட்டமுன்வடிவிலே ஏதாவது சொல்லுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நிறைவேறவேண்டும் என்பதிலே எங்களுக்கு அக்கறையும் உண்டு. ஆதரவும் தருகிறோம். இந்தப் பல்கலைக்கழகங்கள், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், அதைப்போல திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்கெனவே மூன்று ஆண்டு காலம் துணை வேந்தர்கள் பதவிக் காலம் இருந்தது என்பதனை (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் தன்னுடைய உரையின் இறுதியில் முடிக்கும்போது, அந்த Common Entrance Exam குறித்து அவர் கருத்தைத் தெரிவிக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறோம் என்று சொல்லி உட்கார்ந்தார்கள். ஆனால், அக்கட்சியின் உறுப்பினர் ஆதரிக்கிறோம் என்று சொல்லி ஆரம்பிக்கின்றார். ஏன் இந்த முரண்பாடு? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைபாடு உடையதாக இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றுவார்களேயானால், அது நாளைக்கு challenge செய்யப்பட்டு





நிறுத்தப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, எதிர்க்கிறோம். ஆனால், பொது நுழைவுத் தேர்வு இரத்து என்பதை வரவேற்கிறோம் என்று தொடக்கத்திலே சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இந்தச் சட்டமுன்வடிவிலே (குறுக்கீடு) திரு. புகழேந்தி (குறுக்கீடு)-

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நீங்கள் அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். Last–ல் சொல்லும்போது நீங்கள் எதிர்ப்பதாகத்தான் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, சட்ட அமைச்சர் கேட்பது, இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் உங்கள் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா?

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரிக்கிறோம். குறைபாடு இருப்பதால்,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவ்வளவுதான். அவ்வளவுதான். திரு. மீ.அ. வைதியலிங்கம், அடுத்த சட்டமுன்வடிவிலே பேசுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்த உரையாடல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இந்தப் பல்கலைக்கழகங்களுடைய துணை வேந்தர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளுக்கு மேலே இருக்கக் கூடாது என்று சட்டம் கொண்டுவந்து, மீண்டும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து இருக்கலாம் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். இதனுடைய நோக்கம் என்ன? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். நாங்கள் நியமிப்பதில்லை. இதை ஆளுநர்தான் நியமிக்கிறார் என்று சொன்னார்கள். உண்மைதான். ஆனால், மாநில

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மீ.அ. வைதியலிங்கம்] [2006 ஜனவரி 27

அரசு சிபாரிசு செய்கிறவர்களில் ஒருவரைத்தான் ஆளுநர் நியமிப்பாரே தவிர, ஆளுநரே நியமித்துவிட மாட்டார். மாநில அரசிடத்திலிருந்து கேட்பார்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகின்றார்கள். மாநில அரசு பரிந்துரை செய்கின்ற ஒருவரைத்தான் ஆளுநர் அவர்கள் துணைவேந்தராக நியமிப்பார் என்று சொல்வது முற்றிலும் தவறானது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பரிந்துரைக்கின்ற நபர்களை ஆளுநர் ஏற்றுக்கொள்வதால், அவர் அந்த எண்ணத்திலேயே பேசிக்கொண்டிருக்கிறார் போல் இருக்கிறது. மாநில அரசு பரிந்துரை செய்தால், ஆளுநர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** அந்த கமிட்டி என்பது, மாநில அரசால் கமிட்டி போடப்பட்டு அந்த கமிட்டி சிபாரிசு செய்கிறது. பல பேருடைய பெயர்களை, அது பட்டியலிட்டுத் தருகிறபோது, பட்டியலில் ஒரு பெயரை, அதிலே ஒரு பெயரை....

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கு முன்பு தெரிந்து பேச வேண்டும். அல்லது தெரிந்தவர்களிடம் கேட்டாவது பேச வேண்டும். அந்தக் குழுவை, Search Committee-ஐப் போடுகின்றபோது, மூன்று பேரையும் மாநில அரசு பரிந்துரை செய்வதில்லை. அந்த Search panel போடுவது, 1. Governor nominee, 2. Syndicate nominee, 3. Government nominee, ஆக கவர்மெண்டிலே ஒருவரும், சிண்டிகேட் மெம்பரிலிருந்து ஒருவரும், ஆளுநரால் பரிந்துரைக்கப்படுகின்ற ஒருவரும், மூன்று பேரும் சேர்ந்துதான், அந்த மூன்று பேரும் சேர்ந்து மூன்று நபர்களைத் தேர்ந்தெடுத்து, அதை ஆளுநருக்குப் பரிந்துரை செய்வார்கள். அரசாங்கம் பரிந்துரை செய்யவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைதியலிங்கம், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு வாருங்கள்.



2006 ஜனவரி 27]

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** ஆக மொத்தம் அரசாங்கத்தினுடைய ஆளுமையில்லாமல் அந்த கமிட்டி அமைக்கப்படுவதில்லை. அந்த கமிட்டி பரிந்துரை செய்வதிலிருந்துதான், ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு வாருங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நான் கேட்பது, எதற்காக இப்போது நீட்டிக்கிறீர்கள் என்பதற்குக் காரணம்--நீங்கள் திறமையானவர்கள் வருவதை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா? (மணியடிக்கப்பெற்றது) இருப்பவர்கள்தான் இருக்க வேண்டுமென்று எண்ணுகிறீர்களா?..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஏன் என்பதற்கு நோக்கக் காரணங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நோக்கக் காரணங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. நோக்கக் காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், திறமையானவர்கள் வரக் கூடாதா? இருப்பவர்களேதான் இருக்க வேண்டுமா? இப்படி பல நிகழ்வுகளிலே நிகழ்ந்திருக்கின்ற காரணத்தினால்தான், மக்கள் சந்தேகிக்கின்றார்கள். ஒருவேளை தனக்கு வேண்டியவர்கள் மட்டுமே வரவேண்டுமென்று விரும்புகிறார்களா? இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைதியலிங்கம், இது பதவியினுடைய ஆண்டு காலம். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) சரி, பொன்முடி, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சிமெண்டின் மீதான இரட்டை வரிவிதிப்பு முறையை ஒழிக்க ஒரு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த இரட்டை வரிவிதிப்பு முறையைக் கொண்டு வந்தது, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு. நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். நீங்கள்தான் இப்போது, கவனமான பரிசீலனைக்குப் பிறகு, அதை இப்போது மாற்றியிருக்கிறீர்கள். அதுவும் இந்த ஆட்சி அமைந்தவுடனேயே. அடிக்கடி நிதியமைச்சர் சொல்வதெல்லாம், 'நீங்கள்தான் உங்கள் மத்தியிலே இருந்த அமைச்சர் ஒருவர் Cartel-ஐ அமைத்துக் கொண்டு, ஒரு scientific ரீதியாக ஊழலைச் செய்து சிமெண்ட் விலையை உயர்த்திவிட்டீர்கள்' என்று சொன்னீர்கள். அப்போது, 120 ரூபாய்,

130–க்குத்தான் விற்றுக்கொண்டிருந்தது. (குறுக்கீடுகள்) இன்று சிமென்டினுடைய விலை (மணியடிக்கப்பெற்றது) நான் பேசும்போது, கருத்து இருந்தால் சொல்லட்டும். சிமென்டினுடைய விலை ரூ.170–க்கு விற்றுக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, நீங்கள் இரட்டை.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 200 ரூபாய்க்கு மேலாக சிமென்ட் விற்றது. (குறுக்கீடு) 220 ரூபாய்க்கு மேலே சிமென்ட் விற்றது. சிமென்ட்டும் தாராளமாகக் கிடைக்கவில்லையென்கின்ற காரணத்திற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பதவி ஏற்றவுடனேயே, சிமென்ட் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், அந்த இரட்டை வரிவிதிப்பு முறையைக் கொண்டு வந்தார்கள். அதனுடைய அடிப்படையில் இன்றுவரையிலும், சிமென்ட் விலை கட்டுப்பாட்டிற்குள் இருந்துகொண்டே இருக்கிறது. இன்றைக்குக்கூட தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம், 115 ரூபாய்க்கு சிமென்ட்டை விற்றுக் கொண்டிருக்கிறது. சில ஆலைகளில் இன்றைக்கு ஒரு 10 ரூபாய் கூடியிருக்கிறது. அதற்கான காரணங்கள்--18–1–2006-ல் சிமென்ட் ஆலை அதிபர்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின் பேரில் அழைத்துப் பேசினோம். அவர்கள் சொன்ன காரணம்-- மழைக் காலம், எந்தவிதமான கட்டடப் பணிகளும் இதுவரை நடைபெறவில்லை. இதிலே ஆண்டாண்டுக் காலமாக, மழைக் காலங்களில் எந்தக் கட்டடப் பணிகளும் நடைபெறவில்லை. இப்போது சற்றுக் கூடியிருக்கிறது. 10 ரூபாய் கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். அதையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இப்போதும் தொடர்ந்து. 150 ரூபாய் 160 ரூபாய்க்கு சிமென்ட் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த இரட்டை வரி விதிப்பு எதற்காக எடுக்கப்பட்டது என்று சொன்னால், அண்டை மாநிலங்களில் இப்போது 12 சதவிகிதத்திற்கு (குறுக்கீடு) விற்பனை வரி போடப்பட்டிருக்கின்றது.

*பிற்பகல் 12–05*

நம்முடைய மாநிலத்தில் மட்டும் 24 சதவிகிதம், 16 சதவிகிதம் என்று வரிவிதிப்பு இருந்தால் அரசுக்கு ஏற்கெனவே வரவேண்டிய வருமானம் இழப்பு ஏற்படும். அதுமட்டுமல்ல, இங்கே இருக்கின்ற ஆலை





அதிபர்களும், அண்டை மாநிலங்களில் அவர்கள் சிமென்ட் ஆலை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த மாதிரி ஒரு வரி இழப்பு ஏற்பட்டுவிடக்கூடாது அரசாங்கத்திற்கு என்பதைக் கருத்தில் கொண்டும், இப்பொழுது சிமென்ட் விலை கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டும், இந்த விற்பனை வரியில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இப்பொழுது இந்த வரி விதிப்பு முறையைக் குறைத்திருக்கிறோமே தவிர வேறு எந்தவிதமான எண்ணமும் எங்களுக்குக் கிடையாது.

அதுமட்டுமல்ல, 18 ஆம் தேதி ஆலை அதிபர்களுடன் பேசும்போது, Commercial Taxes Secretary, Industries Secretary இவர்களையும் அழைத்துப் பேசினோம். ஆகவே, 3 மாதங்களுக்கு ஒரு முறை இவர்களை ஆய்வு செய்ய வேண்டும். அந்த ஆய்வின்போது சிமென்ட் விலை நிச்சயமாக உயரக் கூடாது. அதேநேரத்தில் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலும், அண்டை மாநிலங்களினுடைய வரிவிதிப்பு முறையைக் கணக்கிலே கொண்டு இந்த முறையை ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதை நான் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் குறிப்பிட்டேன். கவனமாக நீங்கள் முடிவு செய்து சிமென்ட் விலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமென்று இந்த இரட்டை வரிவிதிப்பு முறையைக் கொண்டுவந்ததாக அமைச்சரே சொன்னார். இப்பொழுது கட்டுப்பாட்டில் இன்றுவரை இருக்கிறது என்றும் சொன்னார். அப்படிச் சொல்கிறபோது, இதை எடுப்பதற்கான காரணத்தை அவர் சொல்வது அண்டை மாநிலங்களிலே (குறுக்கீடு) நான் பேசி விடுகிறேன் சார். தயவுசெய்து கொஞ்சம் நான் பேசியபிறகு நீங்கள் பேசுங்கள். பதில் சொல்ல நிறைய நேரம் இருக்கிறது. நீங்கள்தான் சொல்லப்போகிறீர்கள். அண்டை மாநிலத்திலே இருக்கிற வரிக் குறைவின் காரணமாக, இதைக் குறைக்கிறோம் என்று சொல்கிறார். அப்பொழுதும் அண்டை மாநிலங்களிலே இதே 12% தான் இருந்தது. இப்பொழுது அவர்கள் குறைக்கவில்லை. ஆனால், நீங்கள் கொண்டு வந்தீர்களே, இரட்டை வரி முறை, அப்பொழுதும் அண்டை மாநிலங்களிலே இப்படித்தான் இருந்தது. அன்று விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு PPC சிமென்ட் 135 ரூபாய்க்குள்ளே விற்றால் அதற்கு 16 சதவிகிதம் வரி. உற்பத்தியாளர்கள் 10% கொடுக்க வேண்டும். டீலருக்கு 1% கொடுக்க வேண்டும். அதேமாதிரி OPC சிமென்ட் விலைக்கு உற்பத்தியாளர்கள்

24%, டீலர்கள் 5%. இதன்மூலமாக விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 145–க்கு மேலே ஒரு ரூபாய், 135, 145 இந்த இரண்டு விலைக்கு மேலே ஒரு ரூபாய் அதிகம் விற்றாலும், இந்த அளவிற்கு 24%, 5% கட்டவேண்டும். ஆனால், இப்பொழுது நீங்கள் குறைந்தபட்சம் அந்த 16% வைத்திருந்தீர்கள் பாருங்கள், அதுகூட இப்பொழுது இல்லை. 16–ஐயும் குறைத்து 14% ஆக்கிவிட்டீர்கள். இது என்னவென்று தெரியவில்லை சரி, வரியைக் குறைத்தீர்கள். வரியைக் குறைத்தால் விலை குறையவேண்டுமா, வேண்டாமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த இரட்டை வரி எதற்காகக் கொண்டுவந்தீர்கள், எதற்காக எடுக்கிறீர்கள் என்று சொல்கின்றார்கள். 2000–2001 ஆட்சியிலே 16 சதவிகிதம் வரி இருந்தபோது, அவர்களுடைய ஆட்சியிலே சிமெண்ட்டினுடைய விலை 200 ரூபாய், 220 ரூபாய் இருந்துகொண்டிருந்தது. அந்த விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக அன்றைக்கு இந்த இரட்டை வரி முறையைக் கொண்டு வந்ததன் மூலமாக அந்த விலை கட்டுப்படுத்தப்பட்டது. இங்கே PPC, OPC என்று 2 வகையான சிமெண்ட்கள் இருக்கின்றன. 50 கிலோ இருக்கின்ற OPC சிமெண்ட் 135 ரூபாய், 145 ரூபாய்க்கு உள்ளே இருந்தால் 16 சதவிகிதமும், 135, 145 ரூபாய்க்கு மேலே போனால் 24 சதவிகிதமும், resale tax ஒரு ரூபாயும், 5%–ம் கட்ட வேண்டுமென்று போட்டதால், அந்த விலை கட்டுப்படுத்தப்பட்டு, நியாயமான விலையிலே மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே இன்றைக்குக் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கும் தமிழகத்திலே சிமெண்ட்டின் அதிகபட்ச விலை 158 ரூபாய்க்குள்தான், சிமெண்ட் விலை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. இன்றைக்கு 10 ரூபாய் கூடியதாக ஒரு செய்தி வந்து கொண்டிருக்கிறது. அதுகூட தவறான செய்தி. அது என்னவென்றால், ஏற்கெனவே 2 மாதக் காலமாக, கடந்த ஆண்டு 2, 3 மாதக் காலமாக தொடர் மழை, வெள்ளத்தின் காரணமாக வாங்கி வைக்கப்பட்டிருந்த சிமெண்ட் விற்பனை ஆகாமல் கட்டுமானப் பணிகள் நடைபெறாத காரணத்தால், ஏற்கெனவே இருந்த வரி விகிதங்களின்படி வாங்கப்பட்ட சிமெண்ட் 16%, 24%–லே வாங்கப்பட்ட சிமெண்ட் stock வைக்கப்பட்டிருந்த சிமெண்ட்களை இந்த 3 மாதக் காலத்திலே – இப்பொழுது இந்த ஜனவரி மாதம்–பொதுவாகவே, ஜனவரி மாதத்திலிருந்து கட்டுமானப் பணிகள் வேகமாக நடைபெறுகின்ற காலக்கட்டம். அந்தக் காலக்கட்டத்திலே சிமெண்ட் கிடைப்பதற்கு demand அதிகமாக இருக்கின்ற காலக்கட்டம். அதுவுமில்லாமல் ஏற்கெனவே வாங்கப்பட்ட சிமெண்ட்டை,





இன்றைக்கு ஜனவரி மாதத்திலே தமிழகத்திலே கட்டுமானப் பணிகள் மிக வேகமாக, தொழில் வளர்ச்சியின் காரணமாக, மிக அதிகப்படியான தொழில் வளர்ச்சியின் காரணமாக இன்றைக்கு சிமெண்ட் விற்பனை அதிகமாக உள்ள காரணத்தால் அந்த ஒருசில சில்லறை விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள் எங்கேயும் அந்த சிமெண்ட் விலையை உயர்த்தவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த 16 சதவிகிதம், 24 சதவிகிதத்தைக் குறைத்து நாங்கள் 14 சதவிகிதமாக்கிய பிறகு, தமிழகத்தினுடைய உறபத்தியாளர்கள் எங்கேயும் சிமெண்ட் விலையை உயர்த்தவில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட செய்தி எங்களுக்கு வந்து, நாங்கள் 18–1–2005 அன்று அனைத்து சிமெண்ட் உற்பத்தியாளர்களையும், மற்ற மாநிலங்களில் இருக்கின்ற சிமெண்ட் உற்பத்தியாளர்களுடைய பிரதிநிதிகளையும் வரவழைத்து கூட்டத்தில் பேசி இருப்பது, எந்தக் காரணத்தைக் கொண்டும், சிமெண்ட் விலை உயரக்கூடாது. அதேபோன்று எந்த அளவுக்கு நாங்கள் விற்பனை வரியைக் குறைத்திருக்கிறோமோ அந்த அளவுக்கு வரி விகிதம், அரசாங்கத்துக்கு வருகின்ற வரி வருவாய் கூடுதலாக வரவேண்டும். ஏனென்றால், இன்றைக்கு தமிழ்நாட்டிலே பார்த்தீர்கள் என்றால், சிமெண்ட் 22 சதவிகிதம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12–10

அதே நேரத்தில் 30 சதவிகிதம் அளவிற்கு இன்றைக்கு நுகர்வோர்கள் கூடியிருக்கிறார்கள். ஆனால், அந்த அளவுக்குப் பார்த்தீர்கள் என்றால், வருமானம், வருவாய் அரசாங்கத்துக்கு வரவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், கடந்த ஆண்டு மதிப்புக் கூட்டு வரி, இந்தியா முழுவதும் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியதற்குப் பிறகு, தமிழகத்தை ஒட்டியிருக்கிற மாநிலங்கள், கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், 8 சதவிகிதம் வரி விதிக்கின்றார்கள். மதிப்புக் கூட்டு வரி, 12-1/2 சதவிகிதத்தில் இருக்கின்ற காரணத்தால் நம்முடைய விற்பனை இன்றைக்கு அண்டை மாநிலங்களுக்குச் செல்கின்றன. பெரிய பெரிய கட்டுமானத் தொழிலைச் செய்கின்றவர்கள் எல்லாம் நேரடியாக அந்த மாநிலங்களிலே மதிப்புக் கூட்டு வரியிலே வருகின்ற 12-1/2 சதவிகிதத்தை கட்டிவிட்டு, நேரடியாக அந்த bulk purchase–ஐச் செய்து கொண்டு விடுகிறார்கள். அதனால், வருவாய் இழப்பு ஏற்படுகிறது. அதேபோன்று கட்டுமானம், இந்த ஒப்பந்ததாரர்கள் 4 சதவிகிதம், C.S.T.– Central Sales Tax–ஐ, 4 சதவிகிதத்தைக் கட்டிவிட்டு அந்த சிமெண்ட்டை எடுத்து

வருவதால் விற்பனை குறைகிறது. இப்படிப்பட்ட காரணங்களால்தான் இந்த வரி விகிதத்தில் வருவாய் வரி இழப்பு, சென்ற ஆண்டு 358 கோடி ரூபாய் விற்பனை வரியின்மூலம் வந்த வருவாய், இந்த ஆண்டு—2004–2005–லே 358 கோடி ரூபாயாக இருந்த வருமானம், இந்த வரிவிகிதத்தின் காரணமாக இந்த மதிப்புக் கூட்டு வரியின் காரணமாக, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய்க்கு மேலே 3 மாத காலத்திற்குள்ளாகவே நமக்கு வரி இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அதிகப்படியான உற்பத்தி வந்தும், நுகர்வோர்கள் 30 சதவிகிதத்திற்கு வந்தும், நமக்கு வரி வருவாய் குறைந்து கொண்டு வருகின்றது. ஆகவே, அந்த வரி வருவாய்க் குறைவைத் தடுக்கவும், அரசாங்கத்தினுடைய வருவாயை அதிகப்படுத்தவும் வேண்டும் என்பதற்காகவும்தான் இந்த வரியை ஒரே வரியாக 14 சதவிகிதத்திற்குக் குறைத்திருக்கிறோம். அதிலேயும் நீங்கள் பார்த்தீர்கள் என்றால், மதிப்புக் கூட்டு வரி 12-1/2 சதவிகிதம், நாம் 14 சதவிகிதத்திற்கு வைத்துக் கொண்டிருக்கிறோம். பக்கத்தில் இருக்கிற பாண்டிச்சேரியிலே 8 சதவிகிதம் வரியைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, உங்களுடைய கருத்து என்ன என்பதை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துதான், வேறு என்ன? அதைத்தானே பேசுகிறேன். நான் கொஞ்சம் நேரம் பேசினால், பதிலே இவ்வளவு நேரம் போய்க் கொண்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே. அதைத்தான் நானும் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். **

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. பேசுங்கள். (குறுக்கீடுகள்) சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) இல்லை, bill மேலே, சட்டமுன்வடிவின் மேலே பேச வேண்டுமே தவிர... (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. வேண்டுமென்று ஒரு சிக்கலை வரவழைக்க வேண்டுமென்கிற மாதிரியே பேசினீர்கள் என்றால் அதை allow பண்ண மாட்டேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





பேசுங்கள். (குறுக்கீடு) சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி முடித்து விட்டீர்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, சரி உரையை முடியுங்கள், உரையை முடியுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, குறைந்தபட்சம் 16 சதவிகிதமாக இருந்ததைக்கூட எடுத்துவிட்டு 14 சதவிகிதமாக இன்றைக்கு குறைத்துக் கொடுத்திருக்கிறீர்கள். இதனால் நிச்சயமாக வரி வருவாய் குறையத்தான் செய்யும். 500 கோடி ரூபாய் அளவுக்கு வரி உங்களுக்குக் குறையும். நீங்களே இந்த 3 வருடங்களாக இருந்தது என்று சொன்னீர்கள் (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் முடித்துவிடுகிறேன் சார். நீங்கள் பதில் சொல்லப் போகிறீர்கள், அப்போது சொல்லிக்கொள்ளுங்கள். நீங்கள், இப்போதே இந்த 3 வருடங்களாக இதனால் உங்களுக்கு வரி இழப்பு ஏற்படுகிறது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்டடின்மீது விதிக்கப்பட்ட இரட்டை வரி விதிப்பை மாற்றியமைக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திருவாளர் தமிழ்நாடு தொழில் வர்த்தகக் கழகமும், சென்னை சிமென்ட் உற்பத்தியாளர் சங்கமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒற்றை வரி விதிப்பு முறையைக் கொண்டு வாவேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 24 சதவிகிதமாக இருந்த வரி 14 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதிலே நான் தவறு சொல்லவில்லை. ஆனால், வரிவிதிப்பு குறைகின்ற நேரத்தில் அதுவும் 10 சதவிகிதம் மொத்தமாகக் குறைகின்ற நேரத்தில், சிமென்ட்டின் விலை குறைந்திருக்க வேண்டும். மாறாக, சிமென்ட்டின் விலை உயர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, யார் யாரெல்லாம் குறைக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டார்களோ, அவர்களே இன்றையதினம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குறை சொல்கிறார்கள். கட்டுமானச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், சிமென்ட்டின் விலை அதிகரித்துவிட்டது, மிகவும் அதிகரித்துவிட்டது, அதுவும் கடந்த இரண்டு வார காலத்தில் மிகவும் அதிகரித்திருக்கிறது. ஏன் அதிகரித்தது? அதை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை? கட்டுப்படுத்த வேண்டுமென்று அரசுக்குக் கட்டுமானச் சங்கத்தைச் சேர்ந்த தலைவர் அவர்களும், மற்றவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-15*

இந்த இரண்டு வார காலத்தில் பத்திரிகைச் செய்திப்படி குறைந்தபட்சம் மூட்டை ஒன்றிற்கு 30 ரூபாய் அதிகரித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. எனவே, வரி 10 சதவீதம் குறைத்ததற்குப் பிறகுகூட, மீண்டும் விலை ஏறுவதற்கு நியாயம் கிடையாது. எனவே, விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, விலையைக் குறைப்பதற்கான முழு நடவடிக்கைகளையும்–அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டும்கூட அது பொதுமக்களுக்குப் பலனாகப் போய்ச் சேரவில்லை. எனவே, பலனாகப் போய்ச் சேருகின்ற வகையில், அந்த வருவாய் இழப்பு ஏற்பட்டாலும், சாதாரணமான மக்களுக்கு அது பலனாகப் போய்ச் சேரவேண்டும். எனவே, விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் உற்பத்தியாளர் சங்கங்களுடைய கோரிக்கையை ஏற்று, சிமென்ட் மீதான இரட்டை வரி விதிப்பு முறையை ஒழித்து, OPC மற்றும் PPC ஆகிய இரண்டு வகையான சிமென்ட் மீதும் ஒரு சீர்மையான ஒற்றை விற்பனை வரி ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டிய இந்தக் கோரிக்கையை ஏற்று, அரசானது விற்பனை வரி விகிதத்தை இரட்டை வரி வீதங்களான 16 மற்றும் 24 சதவீதங்களிலிருந்து சிமென்டின் அனைத்து வகைகளுக்கும் 14 சதவீதம் என்ற ஒற்றை வரி வீதத்திற்குக் குறைப்பதென முடிவு செய்து ஏற்கெனவே அறிவிக்கை ஒன்றைப் பிறப்பித்தும்கூட, சிமென்ட் விலை குறையவில்லை. ஆகவே, ஏற்கெனவே இந்த அவையிலேயே இந்த சிமென்ட் விலையைக் குறைப்பதற்குப் பல்வேறு விவாதங்கள் நடத்தப்பெற்றிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அதிலே கலந்துகொண்டு, பல





கருத்துகளைக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, அப்படி அறிவிக்கை ஒன்றை வெளியிட்டும்கூட சிமென்ட் விலை குறையாத நிலை இருக்கின்ற நிலையிலே இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை, ஒரே சீரான 14 சதவீத ஒற்றை வரி வீதத்தைக் கொண்டு வருவதற்கு இங்கே கொண்டு வந்திருக்கின்றீர்கள். அப்படிக் கொண்டு வந்ததன் அடிப்படையிலே அந்த சிமென்ட் விலையைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வேண்டும். அப்படி சிமென்ட் விலையைக் குறைக்கிற நோக்கிலே, பொதுமக்களுக்கும், கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கும், கட்டுமானத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கெல்லாம், ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படக் கூடிய நிலை இருக்கின்றது. ஆகவே, சிமென்ட் விலையைக் குறைப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலுரை. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுழைவுத் தேர்வு இரத்துக்கு நல்ல சட்டம்தான் கொண்டுவரப் போகிறீர்கள். ஏற்கெனவே அரசு ஒரு நுழைவுத் தேர்வை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த நுழைவுத் தேர்வு இரத்து வந்த பிறகு தனியார் நடத்தக்கூடிய அந்த நுழைவுத் தேர்வே இல்லாமல் செய்யப்பட வேண்டும். அந்த நுழைவுத் தேர்வும் இரத்து தனியார் கல்வி நிறுவனங்கள் ஒரு நுழைவுத் தேர்வு இரத்து வந்த பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, ஒற்றைச் சாளர முறை தொடர்ந்து நிலை நிறுத்தப்படுவதற்கு நடவடிக்கை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஜி.கே. மணி? நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். நினைத்து, நினைத்து இப்போது திடீரென்று பேசுகிறீர்கள். (சிரிப்பு) (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் மீதான இருமுனை வரி விதிப்பு என்பது.... (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, என்னுடைய அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. திரு. மகேந்திரன். (குறுக்கீடு) திரு. மகேந்திரன்.

[2006 ஜனவரி 27

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் மீதான இருமுனை வரி விதிப்பு என்பது இரத்து செய்யப்பட்டு, இன்றைக்கு ஒருமுனை வரி விதிப்பாக, குறிப்பாக 16 சதத்திலிருந்து 24 சதமாக ஏற்கெனவே இருந்த வரி விதிப்பு இன்றைக்கு 14 சதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. குறைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தக் காலத்தில் சிமென்டினுடைய விலை குறையாமல் இருப்பதோடு, இன்றைக்கு சிறிதளவு உயர்ந்திருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக எந்தப் பொருள் மீதும் வரி விதிப்பு குறைக்கப்படும்போது, அந்தப் பொருளினுடைய விலை குறையும் என்ற நிலைமை என்பதுதான் பொதுவாக இருக்கக்கூடிய நிலைமை. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை சிமென்ட்டினுடைய விலைக் குறைவு என்பது இந்த வரிக் குறைப்பின் மூலமாக ஏற்படவில்லை. இந்த வரிக் குறைப்பின் மூலமாக ஏற்படக்கூடிய பலன்கள் முழுவதும் நுகர்வோருக்குக் கிடைக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு) திரு. அப்பாவு, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அப்பாவு அவர்கள் பேச வேண்டுமென்று திரும்பத் திரும்ப எழுந்து நிற்கிறார். திரு. அப்பாவு அவர்கள் இந்த அரசின் கருணையால்தான் இந்த அவையில் அமர்ந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அவையில் அவர் அமர்ந்திருக்கலாமே தவிர, பேசுகின்ற உரிமையை அவர் இழந்து விட்டார். கட்சித் தாவல் தடைச் சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் சுயேட்சையாக நின்று தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, அவர் வேறு எந்தக் கட்சியிலும் போய்ச் சேரக் கூடாது என்று சட்டம் தெளிவாகக் கூறுகிறது. அப்படியிருந்தும் அவர் சுயேட்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும், வேறு கட்சியில் போய் இணைந்தார். அவரைச் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து disqualify செய்வதற்கான கோப்பு என்னிடம் வந்தது. வேண்டாம், விட்டுவிடலாம், அவர் பிழைத்துப் போகட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றமே முடிவுக்கு வரப் போகிறது, இப்பொழுது எதற்கு disqualification. இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொன்னேன். ஆகவே, எங்கள் கருணையால்தான் இந்த அவையிலேயே அவர் அமர்ந்திருக்கின்றார். பேசுகின்ற தார்மீக உரிமையை, சட்டரீதியான உரிமையை அவர் இழந்துவிட்டார்.



2006 ஜனவரி 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருடைய கருணையால்தான் திரு. அப்பாவு உறுப்பினராகத் தொடர்கின்றார் என்று சொன்னார். ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, வேறொரு கட்சிக்குப் போனால்கூட, பேரவைத் தலைவரிடத்திலே, நான் இந்தக் கட்சியிலே சேர்ந்துவிட்டேன் என்று கடிதம் கொடுத்தால்தான் disqualification வருமே தவிர, அது கொடுக்காத வரையிலே disqualification வாராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி பத்திரிகையிலே படமெல்லாம் வந்தது. மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள். அனுமதியில்லாமல் பேசக் கூடாது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே. ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களைப் பதவி நீக்கம் செய்கின்ற கோப்பு எனக்கு வந்தது. நான் தேவையில்லை என்று எழுதினேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் எழுதியதாகச் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** இல்லை, வேண்டாம், விட்டுவிடலாம் என்று சொல்லிவிட்டார்கள். நான் ஒன்றைக் கேட்கின்றேன். ஓர் உறுப்பினரை வைத்துக்கொள்வதா, இல்லையா என்ற முழு அதிகாரமும் சபாநாயகருக்குத்தான் உண்டு. முதலமைச்சருக்கு அந்தக் கோப்பு போகத் தேவையில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை திரு. துரைமுருகன் அவர்கள் வேண்டுமென்றே தவறாகப் புரிந்துகொண்டு, திரித்துக் கூறுகின்றார். ஓர் உறுப்பினரை disqualify செய்கின்ற அதிகாரம் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். புதிதாக இங்கே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. Disqualify செய்யலாமா என்று என்னுடைய கருத்து கேட்கப்பட்டது. கருத்து கேட்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. கருத்து சொல்வதற்கு முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, disqualify செய்யலாமா என்று கேட்கப்பட்டது. தேவையில்லை, விட்டுவிடுங்கள் என்று சொன்னேன், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது நானும் வலியுறுத்திக் கூறுகின்றேன். முதலமைச்சர் அவர்களுடைய கருணையால்தான் அப்பாவு அவர்கள் இன்னும் இங்கே உட்கார்ந்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தமிழகத்தில் இருக்கின்ற கிராமப்புற ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, தொழிற்கல்வியில் சேருவதற்கு நுழைவுத் தேர்வு தடையாக இருக்கின்றது என்பதால், கிராமப்புற மாணவர்களுடைய பாதிப்பை உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த ஆண்டு இந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து ஆணை வெளியிட்டார்கள். ஆனால், இரத்து செய்யப்பட்ட அந்த அரசாணை செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன்பேரில் அன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டு, அது நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த அரசாணையை இரத்து செய்தபோது, உச்ச நீதிமன்றம் சொன்ன காரணம், இந்த அரசாணையைக் கொண்டு வந்திருக்கின்ற நோக்கம், நல்ல நோக்கம், நியாயமான நோக்கம் என்று சொன்னது. ஆனால், அது மத்திய அரசினுடைய சட்டத்தில் இயற்றப்பட்டிருக்கின்ற, இந்திய மருத்துவக் குழுமம், அகில இந்திய தொழில்நுட்ப பொறியியல் கல்லூரி குழுமம் ஆகியவற்றின் சட்டவிதிமுறைகளை மீறியதாக இருக்கிறது. ஆகவே, மத்திய சட்டத்தைத் திருத்தினாலொழிய, இந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்ய முடியாது என்று அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருந்தது. ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய அநதச் சட்டத்தை, அந்த சட்ட விதிமுறைகளைத் திருத்த



வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள், மத்திய அரசாங்கத்திற்குக் கோரிக்கை வைத்தார்கள், கடிதம் மூலமாக பாரதப் பிரதமர் அவர்களுக்கும் 16-8-2005 அன்று கடிதம் எழுதினார்கள். 24-10-2005 அன்று அந்தக் கடிதத்திற்கு நினைவூட்டுக் கடிதம் ஒன்றையும் அனுப்பினார்கள்.

அதுமட்டுமல்ல, M.C.I.--Medical Council of India-வினுடைய சட்டவிதிகளைத் திருத்த வேண்டுமென்பதற்காக 15-9-2005 அன்றும் இந்திய மனிதவள மேம்பாட்டுத் துறைச் செயலாளருக்கும், இந்திய சுகாதாரத் துறைச் செயலாளருக்கும் இந்த நுழைவுத் தேர்வு இரத்து செய்ய வேண்டுமென்பதற்காகவும், அந்தச் சட்டவிதிகளை நீங்கள் திருத்திக் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. அதன்பிறகு 1-12-2005 அன்று மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அதற்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திலே, இந்த வழக்கின் தீர்ப்புக்குப் பிறகு நடைபெற்ற கல்வி அமைச்சர்களுடைய மாநாட்டிலே மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மாநிலக் கல்வி அமைச்சர்களையும் கலந்து ஆலோசித்து ஒருமித்த கருத்து கொண்டு வந்து, ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவோம், அந்த சட்டத் திருத்தத்திலே இந்த மாணவர்கள் சேர்க்கை, மாணவர்கள் கட்டணம், இட ஒதுக்கீடு, நுழைவுத் தேர்வு அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்தார்கள்.

பிற்பகல் 12–25

அவர் உறுதியளித்த பிறகு, உறுதியளித்தது போன்று எந்தவித கூட்டத்தையும் கூட்டவில்லை. ஆனால், ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசியல் அமைப்புக்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே இந்த நுழைவுத் தேர்வைப் பற்றியோ, மாணவர் சேர்க்கையைப் பற்றியோ, அரசாங்கத்தில் இருக்கின்ற ஒதுக்கீடு பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே, வேறு வழியில்லாமல், இங்கே நம்முடைய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது எதறகாக இவ்வளவு காலதாமதமாகத் தேர்வு நெருங்குகின்ற நேரத்தில் நீங்கள் எடுத்து வந்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்குக் காரணம், நாங்கள் சும்மா இருந்து கொண்டு இருக்கவில்லை. என்றைக்கு அந்த

[திரு. சி.வி. சண்முகம்] [2006 ஜனவரி 27

அரசாணை இரத்து செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்திலே இன்றைக்கு வழக்கு நிலுவையில் இருக்கிறது. உடனடியாக நாங்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். நினைவூட்டுக் கடிதம் கொடுத்திருக்கிறோம். கல்வியமைச்சர் மாநாட்டிலே எங்களுடைய மாநில அரசின் சார்பாக ஒரு வரைவு சட்டமுன்வடிவைக் கொடுத்திருக்கிறோம். அந்தச் சட்டமுன்வடிவிலே மாநில அரசாங்கத்திற்கு நீங்கள் அதிகாரம் அளித்து, ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். எப்படி நுழைவுத் தேர்வை நடத்துவதா இல்லை, இல்லையா என்பதை அதிகாரம் அளித்து, மாநில அரசாங்கத்திற்கு நீங்கள் அதிகாரம் தர வேண்டும் என்று நாங்கள் ஒரு மாதிரிச் சட்டமுன்வடிவை வழங்கியிருக்கிறோம்.

நாங்கள் அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சொல்லியதுபோல, உங்களையெல்லாம் அழைத்துப் பேசி ஒரு ஒருமித்தக் கருத்தைக் கொண்டுவருவோம் என்று சொன்ன காரணத்திற்காக நாங்கள் காத்துக்கொண்டிருந்தோம். ஆனால், அவர் அழைக்கவில்லை. கடைசி வரைக்கும் எங்களைக் கலந்தாலோசிக்கவில்லை. இப்போது கொண்டு வந்திருக்கிறார்களே, 104-வது Amendment அதற்கான மாதிரிச் சட்டமுன்வடிவுகூட அரசாங்கத்திற்கு, மாநில அரசாங்கத்திற்குத் தரப்படவில்லை; நாங்கள் கேட்டும்கூட அவர்கள் எங்களுக்குத் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** நாங்கள் கேட்டும்கூட எங்களுக்கு (குறுக்கீடு) அந்தச் சட்டமுன்வடிவு 104-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவருகிற வரை எங்களுக்கு, மாநில அரசாங்கத்திற்குத் தரவில்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மத்திய அமைச்சர் இங்கு வந்து இதற்குப் பதில் சொல்லமுடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் பேசி முடித்தபிறகு கூப்பிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அங்கே விவாதித்ததைப்பற்றி நாம் இங்கே விவாதிக்க முடியாது.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** விவாதத்திற்குச் செல்லவில்லை. எதற்காக நீங்கள் காலதாமதமாக, இதை ஏன் கொண்டுவந்தீர்கள் என்று கேட்டதற்காக நான் காரணத்தைச் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரியல்ல. முறையல்ல, அப்படிப் பேசுவது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** நான் ஒன்றும் தவறாகப் பேசவில்லை. எதற்காக நீங்கள் காலதாமதமாக இந்தச் சட்டமுன்வடிவை எடுத்து வந்தீர்கள் என்று மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அவர்கள் கேட்டதற்குச் சொல்கிறேன். எதற்காக காலதாமதம் ஆகிறது என்று சொல்கிறேன். நாங்கள் 9-6-2005-லே அரசாணை வெளியிட்டோம், பொது நுழைவுத் தேர்வு இரத்து என்று வெளியிட்டோம். அதன்பிறகு 27-8-2005 அன்று அந்த அரசாணை செல்லாது என்று சொன்னார்கள். உடனடியாக உச்ச நீதிமன்றத்திலே நாங்கள் அப்பீல் செய்து அந்த வழக்கு இன்றைக்கு நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை வழங்கியவுடனே 16-9-2005 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்திலே கேட்டிருக்கிறார்கள், நீங்கள் உடனடியாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். அந்தச் சட்டத் திருத்தத்திலே பொது நுழைவுத்தேர்வை இரத்து செய்வதற்கு அதிகாரத்தை மாநில அரசாங்கத்திற்குத் தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை வலியுறுத்தி 24-10-2005 அன்று மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை, மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் அனுப்புகிறார்கள்.

அதுமட்டுமல்ல, 15-9-2005 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கும், மத்திய சுகாதார அமைச்சருக்கும் ஒரு கடிதம் அனுப்புகிறோம். மத்திய அரசாங்கத்திலிருக்கின்ற அந்த M.C.I., A.I.C.T.E.-இனுடைய சட்ட விதிமுறைகளை நீங்கள் திருத்த வேண்டும், நுழைவுத் தேர்வு என்கிற சட்டத்தை நீங்கள் திருத்தி மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கின்ற வகையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு கடிதம் அனுப்புகிறோம். அந்தக் கடிதத்திற்கு எந்த பதிலும் இல்லை. 1-12-2005 அன்று மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் அனுப்புகிறோம். அதற்கும் எதுவும் பதில் இல்லை. அதுமட்டுமல்ல, கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவிலே விவாதம் செய்து ஒரு பொதுக்

கருத்தைக் கொண்டு வந்து நீங்கள் கேட்கின்ற இந்தக் கோரிக்கைகளையெல்லாம் உள்ளடக்கி ஒரு சட்ட மசோதாவைக் கண்டிப்பாக நாங்கள் பாராளுமன்றத்திலே கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். அவர்கள் கொடுத்த உறுதிமொழி கடைசி வரை காப்பாற்றப்படவில்லை. எங்களுக்குத் தெரியாது. மாநில அரசாங்கம் கேட்டும், அந்த சட்ட விதிமுறைகளை, சட்டமுன்வடிவை நாங்கள் கேட்டும், பாராளுமன்றத்திலே நீங்கள் கொண்டுவருகிறீர்களே, அந்தச் சட்ட மாதிரி வடிவை எங்களுக்குக் கொடுங்கள், எங்களுடைய கருத்துகளை நாங்கள் தெரிவிக்கிறோம் என்று கேட்டும், அவர்கள் கடைசி வரை தரவில்லை.

எங்களைக் கேட்காமலே, எங்கள் கருத்தைக் கேட்கமாலே எங்கள் மாநில அரசை ஆலோசிக்காமலே மக்களைப் பாதிக்கின்ற, மாணவர்களைப் பாதிக்கின்ற, கிராமப்புற மாணவர்களைப் பாதிக்கின்ற, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களைப் பாதிக்கின்ற, நாங்கள் வைத்த கோரிக்கையைக் காதிலே வாங்கிக்கொள்ளாமல், தன்னிச்சையாக பாராளுமன்றத்திலே ஒரு சட்டத்தை, 104–வது அரசியல் அமைப்புச் சட்டத்திற்குத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள. அந்தத் திருத்தத்திலே எதைப் பற்றியும்—உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கின்ற, அந்த மாணவர்களைப் பாதிக்கின்ற அந்த நுழைவுத் தேர்வுக் கட்டண விகிதம், அரசாங்கத்திற்கு இதுவரை நாம் 50 சதவீதம், தனியார் கல்லூரிகளிலே இருக்கின்ற, பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் 50 சதவீத இடங்கள் அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அந்த 50 சதவீத சீட் இன்றைக்கு அரசாங்கத்திற்கு இல்லை. அதையெல்லாம் உள்ளடக்கி, மாநில அரசாங்கத்திற்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். இது எதைப் பற்றியும் காதிலே போட்டுக்கொள்ளாமல் வெறும் ஒரு சட்டத்தை, இடஒதுக்கீட்டைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டிருந்தோம். வேண்டுமென்றே நாங்கள் காலதாமதம் செய்யவில்லை.

*பிற்பகல் 12–30*

மத்திய அரசாங்கம் இப்போது கொண்டு வருகின்ற அந்தச் சட்டத் திருத்தத்திலே இதையெல்லாம் அவர்கள் கொண்டு வருவார்கள் என்று நம்பியிருந்தோம். மக்களைக் காப்பாற்றுவார்கள், அந்தக் கிராமப்புற மக்களை, மத்திய அரசாங்கம் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த





ஏழை மக்களைக் காப்பாற்றுவார்கள் என்று நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால், அவர்கள் நம்பிக்கையிலே, அவர்களுடைய வயிற்றிலே மண்ணைப் போட்டுவிட்டு, மத்திய அரசாங்கம் அந்த ஏழை மக்களைக் கண்டுகொள்ளவில்லை. அதனால்தான் இன்றைக்கு மத்திய அரசாங்கம் எடுத்து வராவிட்டாலும், இன்றைக்கு அம்மா அவர்கள், கிராமப்புற மக்களைக் காப்பாற்றுகின்ற அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களைக் காப்பாற்றுகின்ற அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் காப்பாற்றுகின்ற அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களைக் காத்துக் கொண்டிருக்கின்ற அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நான் கொண்டு வருகிறேன் சட்டம். டெல்லியிலே இருக்கிறவர்கள் கொண்டு வராவிட்டாலும் பரவாயில்லை; நான் காப்பாற்றுகிறேன் என்று அதற்கு என்னென்னவெல்லாம் வழி இருக்கிறதோ அதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்திலேகூட மத்திய அரசாங்கம் சொல்லி இருப்பது என்ன? பொது நுழைவுத் தேர்வு கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். நாங்களும் சொல்கிறோம். பொது நுழைவுத் தேர்வு நடத்துகிறோம். எப்படி நடத்துகிறோம், மாநில பல்வேறு பாடத் திட்டங்களில் இருக்கிற, பாடப் பிரிவுகளிலே இருப்பது போன்று பொது நுழைவுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பது சட்டம். ஆகவே, உயர் நீதிமன்றம் அதைச் சொல்லி இருக்கிறது. ஆகவே, நாங்கள் சொல்கிறோம். தமிழகத்திலே 5 இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் இந்த ஆண்டு ப்ளஸ் 2 தேர்வு எழுத இருக்கிறார்கள். அதிலே பார்த்தீர்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபோது 15 ஆயிரம் பேர் மத்திய பாடத் திட்டத்திலே படிக்கிறார்கள் என்றார்கள். இல்லை. 4,413 மாணவர்கள்தான் அந்த மற்ற பாடப் பிரிவிலே படிக்கின்ற மாணவர்கள். மொத்தம் 4,413 மாணவர்கள். ஆனால், நம்முடைய மாநில பாடத் திட்டத்திலே படிக்கின்ற மாணவர்கள் 5 இலட்சத்து 26 ஆயிரம் மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வு எழுத இருக்கிறார்கள். இப்படி பெரும்பான்மை மக்கள், 99 சதவிகிதம், அதாவது 5 இலட்சத்திற்குப் பார்த்தீர்கள் என்றால், ஒரு சதவிகிதம் 5 ஆயிரம் பேர். ஆனால், அந்த 5 ஆயிரம் பேர் ஒரு சதவிகிதத்திற்குக்குள்ளேகூட மற்ற பிரிவு பாடத் திட்டத்திலே படிக்கின்ற மாணவர்கள் வரவில்லை. இப்படி ஒரு சதவிகிதத்திற்கும் கீழே இருக்கின்ற மாணவர்களுக்காக மற்ற 99 சதவிகித மாணவர்களும் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். ஆகவே, அந்த ஒரு சதவிகித மாணவர்களுக்காக

நடத்தப்படுகின்ற அந்தப் பொது நுழைவுத் தேர்வுக்கான விதிமுறைகளை மாற்றுங்கள் என்று நாங்கள் பல முறை கோரிக்கை வைத்தோம். மத்திய அரசாங்கத்திற்குக் கோரிக்கை வைததோம். அந்தத் துறையிலே அமைச்சர்களைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற, இந்தத் தமிழகத்திலே 10 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 12 அமைச்சர்களையும் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், இங்கே இரட்டை வேடம் போட்டுக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஏழை மாணவர்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காகப் (மேசையைத் தட்டும் ஒலி) பாடுபடுகிறோம் என்று சொல்லிக் கொண்டு இங்கே நாடகம் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த ஒரு சதவிகித மாணவர்களுக்காக அந்தப் பொது நுழைவுத் தேர்வை நடத்துகின்ற அந்த விதிமுறைகளை மாற்றுவதற்கு முன்வரவில்லை. ஆனால், அம்மா அவர்கள் இநத 99 சதவிகித மாணவர்களுக்காக இன்றைக்கு அந்த நுழைவுத் தேர்வை நாங்கள் நடத்துகிறோம். எப்படி என்றால், 5 இலட்சத்து 26 ஆயிரம் மாணவர்கள் எழுதுகிற அந்த ப்ளஸ் 2 தேர்வு மாணவர்களுக்கு அந்த ப்ளஸ் 2 பாடப் படிப்பிலே மாநிலத் தேர்வு முறையிலே எழுதுகின்ற தேர்வை நுழைவுத் தேர்வாகக் கருதுகின்றோம். நுழைவுத் தேர்வை எடுக்கவில்லை. அந்தப பாடப் பிரிவிலே படிக்கின்ற மாணவர்கள் எடுக்கின்ற மதிப்பெண்ணை நுழைவுத் தேர்வுக்கான அடிப்படை மதிப்பெண்களாக வைத்து பிற பாடப் பிரிவிலே படிக்கின்ற மாணவாகளை அந்த மாநிலப் பாடத் திட்டத்திலே தேர்ச்சி பெற்று மீண்டும் தேர்வு எழுதி, அந்த மதிப்பினைச் சமநிலைப்படுத்தி, அந்த மாணவர்கள் சேர்க்கைக்காக இந்த நுழைவுத் தேர்வை நடத்துகிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டும் என்றால், 4,413 பேர்தான் மற்றப் பாடப் பிரிவிலே இருக்கின்றார்கள். மொத்தம் 13 ஆயிரம் பேர் கடந்த ஆண்டு மருத்துவக கல்லூரிக்கு மனு செய்திருந்தார்கள்; நுழைவுத் தேர்வு எழுதி இருந்தார்கள். அதிலே 42 பேர்தான் மற்ற பாடப் பிரிவிலே இருக்கிறவர்கள் அதை எழுதி இருந்தார்கள். அந்த 12 பேரிலே ஒருவர்கூட அந்த நுழைவுத் தேர்வு மூலமாக வெற்றி பெறவில்லை. அதேபோன்று பொறியியல் கல்லூரிகளிலே சேர்வதாக எழுதிய மாணவர்களிலே மற்றப் பாடப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 633 மாணவர்கள்தான் அந்தப் பொறியியல் கல்லூரிகளிலே அந்த அரசாங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களிலே சேர்ந்திருக்கிறார்கள். மொத்தமாகப் பார்த்தீர்கள் என்றால், 1,300 மாணவர்கள்தான் அந்தப் பாடப் பிரிவிலே, அந்தப் பொறியியல்





கல்லூரியிலே சேர்ந்தார்கள், சேர்ந்திருக்கிறார்கள். இதிலே குறிப்பிடத்தக்கது, நீங்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முக்கியமான கல்லூரிகள் -- Top 10 என்று சொல்வார்களே, அண்ணா யூனிவர்சிட்டி மற்றும் குறிப்பிட்ட அந்த 10 கல்லூரிகளிலே ஒரு மாணவர்கூட மற்றப் பாடப் பிரிவிலே இருந்து சேர்ந்தவர்கள் தேர்ச்சி பெற்று சேரவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன். இதை ஏன் சுட்டிக்காட்டுகின்றேன் என்றால், மற்றப் பாடப் பிரிவு மாணவர்கள்-- இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்களை ஒன்றாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரைக்கும் படிக்கின்ற மற்றப் பாடப் பிரிவுகளில் இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் நல்ல முறையிலே நல்ல கல்வியைக் கற்றுத் தருகின்றார்கள். ஆகவே, அவர்களிடம் நம்முடைய மாணவர்கள் போட்டி போட முடியாது என்று சொன்னார்கள். ஆனால், அம்மாவினுடைய ஆட்சியிலே இந்த 1½ ஆண்டு காலத்திலே கல்வித் துறையிலே செய்திருக்கின்ற சாதனையின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி உங்கள் வாதத்திலே உங்கள் கருத்து பிரகாரம் வைத்துக் கொண்டால் அந்த மாணவர்களைவிட இன்றைக்குத் தமிழகத்தினுடைய பாடப் பிரிவிலே படிக்கின்ற மாணவர்கள் மிக அதிகப்படியான இடங்களிலே தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் ஒரு இடத்தில்கூட இதுவரை தேர்ச்சி பெறவில்லை, சேரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த பொது நுழைவுத் தேர்வு குறித்து இன்றைக்கு மக்களை, கிராமப்புற மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து இருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

அதேபோன்று இன்றைக்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் திறந்தநிலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களுக்காக மீண்டும் 3 ஆண்டுக் காலம் முடிந்தபிறகு, அந்தப் பதவிக்கு அவர்களும் தகுதி அடைவதற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கே சில உறுப்பினர்கள் தவறாக அதைப் புரிந்துகொண்டு, ஏதோ இப்பொழுது இருக்கின்ற துணை வேந்தரையே மீண்டும், நேரடியாக அரசாங்கமே நியமித்துவிடப்போவதாக இன்றைக்குச் சொல்லுகின்றார்கள். அது இல்லை. இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற,

16 பல்கலைக்கழகங்கள் உட்பட, திருவள்ளுவர், திறந்தநிலைப் பல்கலைக்கழகம் உட்பட, 16 பல்கலைக்கழகங்களிலே நீங்கள் பார்த்தீர்களேயானால், இந்த இரண்டு பல்கலைக்கழகங்களைத் தவிர, மற்ற அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரு முறைக்கு மேலாக—Anna University, Madurai Kamaraj University , Madras University என்று பார்த்தீர்கள் என்றால், மூன்று முறை இருக்கலாம். மற்ற பல்கலைக்கழகங்களிலே, இரண்டு முறை இருக்கலாம் என்ற விதிமுறை இருக்கின்றது. ஒரு பொதுவான விதிமுறை — இந்தப் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் அந்த விதிமுறைகள் முரணாக இருக்கவேண்டாம் என்பதற்காக ஒரு பொதுவானதாகக் கொண்டுவந்தோமே தவிர, உள்நோக்கத் நுடன் இது கொண்டுவரப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேபோன்று, பொது விற்பனை வரியிலே, சிமென்டுக்கான வரியை, இரட்டை வரியை இன்றைக்கு ஒருமுனை வரியாகக் குறைத்திருக்கின்றோம். சில, உறுப்பினர்கள் இங்கே ஒரு அச்சத்தைத் தெரிவித்தார்கள். இன்றைக்கு அந்த விற்பனை வரியைக் குறைத்தும் சிமென்ட் விலை அதிகரித்திருககிறது. பத்திரிகைகள் வாயிலாகவும் 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய்க்கு இன்றைக்கு விலை ஏற்றம் இருக்கின்றது எனறு கூறுகின்றார்கள். நாங்கள் அதற்கான நடவடிக்கையை, பத்திரிகைகளிலே வருவதற்கு முன்பாகவே, நீங்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்பாகவே, நாங்கள் 18–1–2006 அன்றே அனைத்து உற்பத்தியாளர்களையும், பிற மாநிலத்தில் இருக்கின்ற உற்பத்தியாளர்களையும் அழைத்துப் பேசி நாங்கள் சொல்லியிருக்கின்றோம். இன்றைக்கு 22 சதவிகிதம் சிமென்டினுடைய உற்பத்தி கூடியிருக்கின்றது. 31 சதவிகிதம் நுகர்வோர்கள் இன்றைக்குக் கூடியிருக்கின்றார்கள். அதற்கு ஈடாக அரசுக்கு வருவாய் வரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த ஒருமுனை வரியை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம். இதற்கு எதிர்மாறாக வருவாய் குறையும் என்றால், அதனுடைய விலை ஏற்றம் ஏற்படும் என்றால், கண்டிப்பாக இந்த அரசு, அம்மாவுடைய அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்று அவர்களுக்கு நாங்கள் எச்சரிக்கை விட்டிருக்கின்றோம். ஆகவே, இந்த அரசு, அந்த வரியேற்றத்தை எந்தக் காரணத்தைக்கொண்டும், விலை ஏற்றம், ஏழை மக்களைப் பாதிக்கின்ற அளவிற்கு, கட்டுமானத் தொழிலாளர்களைப் பாதிக்கின்ற அளவிற்கு இந்த அரசு பார்த்துக்





கொண்டிருக்காது, சும்மா இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். ஆகவே, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்போம். அம்மாவுடைய அரசு தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்பதைக் கூறி இந்தச் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித் தாவேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுக்கொள்கின்றேன்.

## (ஈ) தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2006 ஆம் ஆணடு தமிழ்நாடு தொழிற் கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2006) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**முகப்புரை**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble, *for* the expression 'Fifty–sixth' *substitute* the expression 'Fifty–seventh' "

எனற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## (உ) திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: "2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2006) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 27

*பிற்பகல் 12–10*

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**முகப்புரை**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble, *for* the expression 'Fifty–sixth' *substitute* the expression 'Fifty–seventh' "

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2006 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

[2006 ஜனவரி 27

## (ஊ) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.



2006 ஜனவரி 27]

### முகப்புரை

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble, *for* the expression 'Fifty-sixth' *substitute* the expression 'Fifty-seventh'"

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தம் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

### முகப்புரை

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble, *for* the expression 'Fifty-sixth' *substitute* the expression 'Fifty-seventh' "

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் எனறு கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2006), மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து*



2006 ஜனவரி 27] [திரு. டி. ஜெயக்குமார்]

*உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2006)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், திருத்தம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"That the Tamil Nadu Acquisition, Transfer and Taking over of the Administration of Cable Television Network (Including Multiple Service Optical Transport System) Bill, 2006 (L.A. Bill No.6/2006) be referred to a Select Committee of the House consisting of . . . . . .Members (List of Members will be included later)"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுவோர் சுருக்கமாகப் பேசலாம். திரு. எஸ்.ஆர்.பி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுடைமைக் கொள்கைக்குக் காங்கிரஸ் கட்சி எந்த வகையிலும் எதிரானது அல்ல. பேருந்துகளை அரசுடைமை ஆக்கியதைப்போல, மக்களுக்குத் தேவையான சேவைகளை அரசே தன் பொறுப்பில் எடுத்துக்கொள்வது வரவேற்கத்தக்கதாகும். மருத்துவச் சேவையாக இருந்தாலும், கல்விச் சேவையாக இருந்தாலும் அரசு பொறுப்பேற்றுக் கொள்வது மக்கள் நல அரசின் ஒரு கடமையாகவே கருதப்படுகிறது. சத்துணவு, சீருடை, பாடப் புத்தகங்கள், சைக்கிள் போன்றவற்றை வழங்குவதெல்லாம் இந்த அடிப்படையில்தான் நம்முடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தனியாரால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் உயர் கல்வி நிறுவனங்களை நம்மால்

@ 21-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்][2006 ஜனவரி 27

ஏற்கமுடியாது. அவை தொடர்பான சட்டங்களை இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்குத்தான் இருக்கிறது. அதேபோன்று வங்கித் துறை, அஞ்சல் துறை போன்றவற்றில் குறைபாடுகள் இருந்தால் குறைதீர்க்கும் அமைப்புகள்மூலம் நிவாரணம் தேடிக்கொள்ளலாம். தவறுகள் நடைபெற்றால் சட்டப்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனால், அவற்றைக் கையகப்படுத்தவோ, நிர்வாகங்களை ஏற்றுக்கொள்ளவோ நமக்கு அதிகாரம் இல்லை.

1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கம்பெனிகள் சட்டத்தின்கீழ் செயல்படுத்த வேண்டிய அதிகாரத்தை ஒரு மாநில அரசு, தன் கையில் எடுத்துக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் செய்யத் தகாதவற்றைச் செய்த குற்றத்திற்கு ஆளாகிவிடுவோம். கம்பெனி விவகாரம் என்றாலே அது நம் கையை விட்டுப் போய்விடுகிறது. "செய்தக்க அல்ல செயக்கெடும்" என்ற வள்ளுவரின் எச்சரிக்கையைப் புறக்கணித்தவர்களாக மாறிவிடுவோம். இந்த அரசின் கொள்கையை அறிவிக்கிற ஆளுநர் உரையில்கூட குறிப்பிடாத ஒன்று இப்போது அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆத்திரப்பட்டோ, கோபப்பட்டோ ஒரு செயலைச் செய்யும்போது அது சரியாக அமைவதில்லை. "ஆத்திரம் கண்ணை மறைத்திடும்போது அறிவுக்கு வேலை கொடு" என்று அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் ஆனால், இந்தப் பொருள் குறித்து ஆழமாக ஆராய்ந்து பார்த்துக் கொண்டு வந்திருப்பதாகக் கூறினாலும், அது உண்மையாகத் தோன்றவில்லை. அதிகமாகப் போனால் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் நியாயமான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்காகவும், ஒரு மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டால் அது தவறில்லை. அதற்காகத் தொழில் நடத்துவதை அடிப்படையாகவும், அடிப்படை உரிமையாகவும் கொண்டுள்ள தனி மனிதன் உரிமையைப் பறிக்கும் வகையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு அரசமைப்புச் சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்படவில்லை. இந்திரா காந்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட, வங்கிகளை நாட்டுடைமையாக்கும் சட்டத்தைப் பற்றிய வழக்கில் உச்ச நீதிமன்றம் எல்லாவற்றையும் வரையறுத்துக் கூறியிருக்கிறது.

பேரவை விதி 126-ன்படி அரசுக்குப் பணச் செலவினை ஏற்படுத்தும் ஒரு சட்டமுன்வடிவோடு நிதி விளக்கக் குறிப்பு ஒன்றினை இணைக்க வேண்டும். அக்குறிப்பு செலவு ஏற்படுத்தும் பிரிவுகளைச் சுட்டிக்காட்டுவதோடு, அச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றால் அதனால் ஏற்படக்கூடிய தொடர் செலவு, தொடராச் செலவு



2006 ஜனவரி 27][திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஆகியவற்றின் மதிப்பீடும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால், இச்சட்டமுன்வடிவில் நிதி விளக்கக் குறிப்பு இணைக்கப்படவில்லை. ஏனென்றால், நாம் பணம் கொடுக்கிறோம். எடுத்துக்கொள்வதற்குப் பணம் கொடுக்கிறோம். பிறகு Commissioner ஒருவரைப் போடுகிறோம். அவரிடத்திலே நிதி ஒதுக்கப்படுகிறது, பல வகைகளிலே.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவல்; it is not a money bill.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் தெளிவாகச் சொல்கிறேன். Payment of amount, Section 7 தெளிவாக இருக்கிறது. எடுப்பதற்காக நாம் பணம் கொடுக்கப் போகிறோம். அதுமட்டுமல்ல, அதற்குப் பிறகு, 'for the transfer to, and vesting in, the Government, under the provisions of this Act of the undertaking of the Company or the person or the persons and the right, title and interest of the Company in relation to its undertakings...' என்று அதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, Commissioner ஒருவரைப் போடுகையில், Section 13 Commissioner போடுவதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. Section 14, Payment by the Government to the Commissoner என்று தெளிவாக இருக்கிறது. ஆக செலவாகிறது. செலவு ஆகவில்லை என்று சொல்லவில்லை. அரசு தொகுப்பு நிதியிலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது. அரசு தொகுப்பு நிதியிலிருந்து செலவை ஏற்படுத்துகின்ற எந்தச் சட்டமுன்வடிவாக இருந்தாலும் அந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் அதில் நிதி விளக்கக் குறிப்பு கண்டிப்பாக இடம்பெற வேண்டும் என்று பேரவை விதி 126 தெளிவாகச் சொல்கிறது. அந்த நிதி விளக்கக் குறிப்பு இல்லாமல் அவைக்கு முன்னாலே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவு நிச்சயமாக விதிகளுக்கு முரணானது, சட்டத்திற்கு முரணானது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல, ஒரு சட்டமுன்வடிவில் சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைவு செய்யும் செயற்குறிப்புகள் இருந்தால் அவற்றையும், அவற்றின் வரையறைகளையும் விளக்கி அந்த ஒப்படைவு சாதாரணமானதா அல்லது தனித் தன்மை வாய்ந்ததா என்பதைச் சுட்டிக்காட்டி, ஒரு விளக்கக் குறிப்பு சட்டமுன்வடிவோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், இப்போது இருக்கிற குறிப்பு விளக்கமாக இல்லை. சட்டப் பேரவை தன் அதிகார வரம்புக்கு உட்பட்டுத்தான் சட்டம் இயற்ற முடியும்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்][2006 ஜனவரி 27

*பிற்பகல் 12–50*

ஒலிபரப்பும், ஒளிபரப்பும் மாநிலப் பட்டியலிலும் இல்லை, பொதுப் பட்டியலிலும் இல்லை. எனவே, இதுகுறித்து நாடாளுமன்றம்தான் சட்டம் இயற்ற முடியும். இம்மன்றத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. குடியரசுத் தலைவரின் முன்னனுமதியும பெறவில்லை. வேறு ஏதாவது சில விஷயங்களிலே குடியரசுத் தலைவரின் முன்னனுமதி பெற வேண்டுமென்று சொன்னால், பேரவை விதி தெளிவாகச் சொல்கிறது, குடியரசுத் தலைவருடைய முன்னனுமதி பெற வேண்டுமென்று சொல்கிறது. ஒலிபரப்பும், ஒளிபரப்பும் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதில்லை. அது Entry 31–ல் வருகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் இதற்குத் தேவையில்லை. உறுபபினர் அவர்கள் Article 246–ஐப் பார்க்க வேண்டும். Article 246 of the Constitution deals with the distribution of legislative powers between the Parliament and the State Legislature. With reference to different lists in the 7th Schedule, the Parliament has exclusive power to legislate with respect to matters in List 1 and has also power to legislate with respect to matters in List 3. On the other hand, the State Legislature has exclusive power to legislate with respect to matters in List 2 and has concurred power with respect to matters included in List 3. The Bill falls mainly within the scope of the following entries of the State and the Concurrent List. மாநில அரசுக்கு உரிய அந்தப் பட்டியலிலும், பொதுப் பட்டியலிலும் வருகின்ற காரணத்தினால் 7th Schedule to the Constitution, namely, that is Entry 1 in public order, the Concurrent List Entry 42– Acquisition and requisition of property. *(குறுக்கீடு)* அதாவது, Acquisition and requisitioning of the property, take over பண்ணுவதனாலே இது Communication என்கிற அடிப்படையில் இருந்தால்தான் குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெறவேண்டியது இருக்குமேயொழிய, take over–க்கு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெறத் தேவையில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Schedule 7 தெளிவாகக் குறிப்பிடுகிறது. Telephones, Wireless broadcasting and other like forms of communication comes under Entry 31 of Schedule 7. It does not come under List 3.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொல்கிறார்கள். Communication–லே இது வராது. நீங்கள் சொல்வது...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதிலே இருக்கிறதே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** டெலிஃபோன் என்ன? *(குறுக்கீடு)* டெலிஃபோன் என்ன?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதிலே தெளிவாக இருக்கிறதே?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** டெலிஃபோன் என்ன கம்யூனிகேஷன்? ஆம். அப்புறம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்குப் பிறகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நீங்கள் அடுத்த பாயின்ட்டுக்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வயர்லெஸ் என்ன? *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* No. No.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது கம்யூனிகேஷனிலே வராது என்று சொல்கிறார்கள். நீங்கள் அதற்கடுத்த பாயின்ட்டுக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Posts and Telegraphs, Telephones, Wireless...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வயர்லெஸ் என்ன?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Wireless, broadcasting and other like forms of communications...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதைத்தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கம்யூனிகேஷன் என்பதிலே இது வராது, இந்தச் சட்டமுன்வடிவு வராது என்று சொல்கிறார்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை, நீங்கள் இதிலே, எந்தவொரு அரசாங்கமும் இந்த மாதிரி சட்டம் இயற்றியது இல்லை.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன். சன் டி.வி. என்பது Broadcasting–ல் வரும். நாங்கள் இப்போது அதை எடுக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை, தெளிவாகச் சொல்கிறேன், சன் டி.வி. என்பது broadcasting-லே வரும். இப்போது அதை எடுக்கவில்லை. நாங்கள் எடுப்பது MSOs தான். அதைத்தான் இப்போது நாங்கள் எடுக்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, DTH–க்கும்கூட மத்திய அரசாங்கம்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் அடுத்த பாயின்ட்டுக்குப் போங்கள். நீங்கள் சொன்ன கருத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** DTH–க்கும்கூட மத்திய அரசாங்கம்தான் ஆணை பிறபபித்திருக்கிறதே தவிர, எந்த மாநில அரசாங்கமும் ஆணை பிறப்பிக்கவில்லை. மத்திய அரசாங்கம்தான் ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆக, ஒலிபரப்பும், ஒளிபரப்பும் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல. எனவே, நம்முடைய எல்லை தாண்டிய செயலாக இது அமைந்துவிடும். எந்தச் சேவைக் குறைபாடாக இருந்தாலும், அதுகுறித்துப் புகார்கள் வந்தால் வேறு வகையில் நடவடிக்கை எடுக்கலாம். நான் எடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. அதிலே ஏதாவது தவறு இருக்கிறது என்றால், அந்தத் தவறுக்கு நிச்சயமாக நீங்கள் நடவடிக்கை எடுக்க முடியும். எந்தச் சட்டமாக இருந்தாலும், அது நியாயமான காரணங்களுக்காகக் கொண்டுவரப்பட வேண்டும். சிலவற்றை விட்டுவிட்டு, சிலவற்றை மட்டும் எடுக்கலாம் என்றிருப்பது என்பது தவறு. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 500–லே 11–ஐ மட்டும்தான் எடுக்கிறீர்கள். 500 பேர்களுக்கு மேலே நடத்துகிறார்கள். அதிலே 11 மட்டும்தான் எடுக்கப்படுகின்றன. பாகுபாடு காட்டுகிற வகையில் எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிரானதாக அமைந்துவிடும். That will amount to unconstitutional act. அப்படிக் கொண்டுவரப்படுகிற சட்டம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Courts have held that the procedure followed cannot be gone into in view of articles 212 and 255 of the Constitution of India. Article 212 says--"Courts not to inquire into proceedings of the Legislature. The validity of any



2006 ஜனவரி 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure" என்று தெளிவாக உள்ளது. ஆகவே, நீதிமன்றங்களில், ஒரு சட்டமன்றத்தில் நடைபெறுகின்ற நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்வி எழுப்ப முடியாது என்று தெளிவாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 212–வது பிரிவு கூறுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Proceedings என்பது வேறு. அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டு நாம் சட்டம் இயற்றினால் நிச்சயமாக அந்தச் சட்டம் செல்லாது என்று தாராளமாக நீதிமன்றம் சொல்லலாம். அது நீதிமன்றத்தாலே தெளிவாகப் பல முறை வரையறுக்கப்பட்ட ஒன்று. நான் சொல்வதெல்லாம், கொண்டு வரப்படுகிற சட்டம் நீதிமன்றச் சட்டத்திலே அடிபட்டுப் போய்விடக் கூடாது என்கிற...

பிற்பகல் 12–55

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில MSO–க்கள், அவற்றை take over செய்வதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு. The Bill proposes to allow acquisition of certain MSOs—சில நிறுவனங்களின் சொத்துகள், அந்த நிறுவனங்கள், அவற்றை அரசே மேற்கொள்வதற்கு மாநில அரசுக்கு எல்லாவிதமான அதிகாரமும் உள்ளது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்வது, சேவையை மாநில அரசு செய்யக் கூடாது என்று சொல்லவில்லை. அதற்குப் பதிலாக மாநில அரசே இந்தச் சேவையை, இந்த சர்வீசை, கேபிள் சர்வீசைத் தொடங்கி, தாராளமாக நடத்தலாம். ஏற்கெனவே சிமெண்ட் ஆலைகளை அரசே நடத்துகிறது. அதேபோன்று, இந்தத் தொழிலையும் நடத்தலாம். பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. எல்லாவற்றையும் தாராளமாக நாம் செய்யலாம். அதேமாதிரி, இந்தத் தொழிலையும் ஏற்று நடத்தலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. தனியாரிடமிருந்து எடுப்பது, எந்த வகையில் எடுப்பது என்பது—ஏனென்றால் நிச்சயமாக அதிலே discriminatory–ஆக இருக்கக் கூடாது என்று சட்டம் தெளிவாக வரையறுத்திருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவைக் கைவிட வேண்டும் என்றுகூட நான் சொல்லவில்லை. இதையெல்லாம் தெளிவாக ஆராய, இந்தச் சட்டமுன்வடிவை பொறுக்குக் குழுவிற்கு, Select Committee–க்கு அனுப்ப வேண்டுமென்கிற என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறகாடு நா. வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே உள்ள 500 MSO–க்களை அரசு கையகப்படுத்துமானால், அதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன் என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பத்திரிகை நிருபர்கள் மத்தியிலே இரண்டு தினங்களுக்கு முன்னாலே சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், கலைஞர் சொன்னதைப் போலவே, இந்த அரசு தமிழ்நாட்டிலே உள்ள 500 MSO–க்களையும் எடுக்கப் போவதில்லை. அதற்குக் காரணம், எங்களுக்கே நன்றாகத் தெரியும். திருப்பூரிலே இருக்கக்கூடிய MSO–க்களை எடுப்பார்களா? எடுக்க மாட்டார்கள். வட சென்னையிலே இருக்கக்கூடிய...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு, இறுதியில் நான் இவற்றிற்கெல்லாம் விளக்கம் கூற உள்ளேன். ஆனால், யாரையும் விட்டு வைப்பதாக எண்ணமில்லை. கடைக்கோடியில் இருக்கின்ற கேபிள் டிவி. ஆப்பரேட்டர்களைத் தவிர, மற்ற Cable TV MSO–க்களை எல்லாம், படிப்படியாக மேற்கொள்வது என்றுதான் இந்த அரசு உத்தேசித்துள்ளது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எல்லா MSO–க்களையும் இந்த அரசாங்கம் எடுக்கும் என்று சொன்னால், இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கின்றோம். இது யாரோ குறிப்பிட்ட ஒரு சிலரைப் பழி வாங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவு என்றால், அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு 21 ஆம் தேதி இங்கே அறிமுகப்படுத்தபபட்டது. இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அறிமுகப்படுத்தப்பட்ட அந்தச் சட்டமுன்வடிவிலே என்ன சொல்கிறார்கள் என்றால், அன்றையதினம் தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு, அதன் மேலாண்மையைக் கையகப்படுத்துதல் என்று அந்தச் சட்டமுன்வடிவிலே சொல்கிறார்கள். இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவிலே என்ன சொல்கிறார்கள் என்றால், சொத்துரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்காகச் சட்டமுன்வடிவு. நான் 1967–லிருந்து இந்த அவையிலே உறுப்பினராக இருந்திருக்கிறேன் பலமுறை. மேலவையிலே இருந்திருக்கிறேன். சட்டமுன்வடிவுகளிலேயே இவ்வளவு குழப்பமான சட்டமுன்வடிவு எப்போதும் வந்ததில்லை. 21 ஆம் தேதி ஒரு தலைப்பு...



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எந்தக் குழப்பமும் இல்லை. இந்த மாநில அரசுக்கு இந்த அதிகாரம் உள்ளதா, இல்லையா என்ற கேள்விதான் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் Schedule 7, List 3, Concurrent List–ல் Entry 42 தெளிவாகக் கூறுகிறது. மாநில அரசிற்குள்ள அதிகாரம், acquisition and requisitioning of property. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்கும், இந்த MSO–க்களை எடுத்துக்கொள்வதற்கும் அரசுக்கு எல்லா உரிமையும், அதிகாரமும் உள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆம் தேதி கொண்டு வந்த அந்த மசோதாவிற்கு இப்போது இந்தத் திருத்தத்தைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். Draft stage–லே வந்து, introduce பண்ணும்பொழுது, அதை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும்பொழுது, திருத்தத்தை முன்மொழிவது என்பது காலங்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது ஏற்கெனவே 1995 ஆம் ஆண்டுகளில் எல்லாம்கூட அந்த மரபுகள் அந்த precedents எல்லாம் இருக்கின்றன.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்வது, தலைப்பிலேயே ஒரு குழப்பம் வருகிறது. Bill எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு அரசாங்கம் முயற்சி செய்கின்ற நேரத்தில், அது தெளிவாக இருக்க வேண்டும். அது இல்லை, ஒன்று.

*பிற்பகல் 1–00*

இரண்டாவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எப்போதும் ஒரு சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது, மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய ஒப்புதலோடு இந்தச் சட்டமுன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்படுகிறது என்று சொல்வீர்கள். ஆனால், இந்தச் சட்டமுன்வடிவை எடுத்துக் கொள்ளும்போது ஆளுநருடைய ஒப்புதல் பெறப்பட்டதா என்று கேட்டால், எனக்குத் தெரிந்தவரையிலே அப்படிப் பெறப்படவில்லை. ஆனால், பெற்றிருக்க வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 207 (1)–வது பிரிவின்படியும், அப்போதுதான் இந்த அவையிலே அறிமுகப்படுத்த முடியும். 207(3) பிரிவின்படிதான் நாம் விவாதிக்க முடியும்; ஏன், நானேகூட பேச முடியும். ஆனால், அப்படி எந்தவிதமான அனுமதியும் ஆளுநரிடத்திலேயிருந்து இதுவரையிலே, இன்று வரையிலே, இந்த நிமிடம் வரையிலே பெறவில்லை. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவரமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு கவர்னரும தேவையில்லை' என்று சொன்னது தி.மு.க. (குறுக்கீடு) ஆனால், இன்றைக்கு கவர்னருடைய ஒப்புதல் தேவை என்ற சொல்லும்போதுதான் அவர்களுடைய இரட்டை வேடம் தெரிகிறது. (குறுக்கீடு) நான் பாயின்ட்டுக்கு வருகிறேன். அப்போது ராஜ மன்னார் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அந்த ராஜமன்னார் கமிட்டியிலே கவர்னரைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறீர்கள் நீங்கள்? செழியனோ, முரசொலி மாறனோ அன்றைக்கு இருக்கும்பொழுது, மாநிலத்தினுடைய சுயாட்சியைக் காக்கின்ற வகையில்—சட்டமன்றத்தால் அறிமுகப்படுத்தப்படுகின்ற எந்தச் சட்டத்திற்கும், மசோதாவிற்கும் கவர்னருடைய அனுமதி தேவை இல்லை என்று சொல்லிவிட்டு, இப்பொழுது கவர்னருக்கு வக்காலத்து வாங்குவதிலே உங்களுடைய இரட்டை வேடம் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி கிடைத்துவிட்டால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Article 199 (a to f) clauses–ன் அடிப்படையிலே only if it is a money bill, it should be sent to Governor. If it is not a money bill, we need not send it.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உண்மையிலேயே நம்முடைய நிதி அமைச்சருடைய ஆற்றலைப் பாராட்ட வேண்டும். இதிலே money bill இல்லை என்கிறார், money bill இல்லைதான். ஆனால், என்ன சொல்லியிருக்கிறீர்கள்? Commissioner–ஐ appoint பண்ணப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். Custodian–ஐ appoint பண்ணப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். மற்றதையெல்லாம் எடுக்கப் போகிறோம் என்று





சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு எங்கேயிருந்து பணம் கொடுக்கப் போகிறீர்கள்? ஆக, பணம் கொடுக்கப் போகிறீர்கள், செலவழிக்கப் போகிறீர்கள். அப்படி இருக்கும்போது அது ஆளுநருக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்வது முறையல்ல. எனவேதான், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் கொண்டு வருவதிலேயே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட சில நிறுவனங்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டு வந்தால் அதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

முதலமைச்சர் சொன்னார், எல்லாவற்றையும் நாங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று சொன்னார். அப்படி எடுத்துக் கொண்டால், அதை வரவேற்பதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன். இன்னொன்று, இதுகுறித்து 2000 ஆம் ஆண்டு ஒரு வழக்கு நீதிமன்றத்திற்குப் போனது. Mr. M. Arumugam Vs. Senior Post Master, Karur and four others (2002 CTC 80). அதிலே என்ன சொல்கிறார் என்றால், மிகத் தெளிவாக, மாநில அரசாங்கத்திற்கு இப்படி ஒரு சட்டம் கொண்டு வரவோ, இதை எடுத்துக்கொள்ளவோ எந்த அதிகாரமும் இல்லை. (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்த பாயின்ட்டுக்கு மட்டும் நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, both the Supreme Court and the High Court have consistently taken the view that the power vested with the State Government under Entry 42 of the Constitution is an independent and separate power of the State Government and the field of acquisition is not occupied by any Legislation by the Parliament. உச்ச நீதிமன்றத்திலும் சரி, உயர் நீதிமன்றத்திலும் சரி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 42–வது Entry–ன்கீழ் Acquisition of property என்பது மாநில அரசுக்கு உள்ள அதிகாரம் மாநில அரசின் தனிப்பட்ட அதிகாரம், independent அதிகாரம். இதற்கும் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் எந்தச் சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை. அதைக் கட்டுப்படுத்த முடியாது என்று தெளிவாக உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் கூறியிருக்கின்றன. Madurai Sugar Mills–ஐ—8/1984 வழக்கில், அந்த Sugar Mills–ஐ மாநில அரசு எடுத்துக்கொண்டபோது, அதற்கான licence—உரிமம் மத்திய அரசால் கொடுக்கப்பட்டதால் மாநில அரசுக்கு அந்த Sugar Mills–ஐ எடுத்துக்கொள்ளும் அதிகாரம் இல்லை என்று வாதாடப்பட்டது. ஆனால், சென்னை உயர் நீதிமன்றம், மாநில அரசுக்கு அந்த அதிகாரம் உள்ளது என்று தீர்ப்பு அளித்தது; Uphold செய்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசாங்கம், ஒன்றை நாட்டுடைமையாக்கும்போது, பல தீர்ப்புகள வந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. உச்ச நீதிமன்றம் அந்தச் சட்டத்தைப் பாராட்டியது. அதேநேரத்தில், இதே அரசு 2002 ஆம் ஆண்டு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில் குடியரசுத் தலைவர் இந்தச் சட்டத்திற்குக் கையெழுத்துப் போடாமல் திருப்பி அனுப்பிவிட்டார். அதற்கான ஆதாரமும் இதோ இங்கே இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, அதுவும் கேபிள்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெளிவாக்க விரும்புகிறேன். அப்போது இயற்றப்பட்ட சட்டம் communication, அதாவது தொடர்பு, அந்த ஒரு நிலையிலே அந்தச் சட்டம் இங்கிருந்து இயற்றப்பட்டு, ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், இப்போது இயற்றப்படுகின்ற சட்டம் take over, acquisition.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அதையே இந்தியக் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதை ஏற்றுக்கொண்டால் சரி, நான் வரவேற்கிறேன். ஆனால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் குடியரசுத் தலைவருக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே. முதலமைச்சர்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். அதாவது, சட்டமுன்வடிவைப் பொறுத்த அளவிலே உங்களுடைய கருத்து என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள். இந்தச் சட்டம் குடியரசுத் தலைவருக்குப் போக வேண்டுமா அல்லது போனால் என்னவாகும்...

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, அவர்கள்தான் சொன்னார்கள். நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்சினைகள் எதற்கு?





**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** குடியரசுத் தலைவருக்குப் போக வேண்டுமா, இல்லையா என்ற விவரத்திற்கே நான் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இல்லை. இதிலே நீதிமன்றத்திலே என்னவாகும் என்கிற அந்தப் பிரச்சினையும் இல்லை. இந்தச் சட்டமுன்வடிவின் மேலே உங்களுடைய கட்சியின் சார்பான கருத்துகளைக் கூறுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இப்போது பேசுகின்றபோது, இந்தச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்கிறாரா, இல்லையா என்பதைப் பார்ப்போம் என்று கூறினார். அதற்குத்தான் நான் விளக்கம் அளித்தேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொன்னது, ஏற்கெனவே 2002 ஆம் ஆண்டு அனுப்பிய அந்தச் சட்டத்தைப் பற்றி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் சட்ட அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். முன்பு கொண்டு வரப்பட்ட சட்டம் வேறு. That dealt with communication. இப்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டமுன்வடிவு deals with only take over, acquisition of property. இந்தச் சட்டம் வேறு. இதற்கு மாநில அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையிலே சொல்கிறேன். ஏற்கெனவே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இப்போது நான் என்ன சொல்கிறேன் என்றால்.. (குறுக்கீடு) நீங்கள் பதில் சொல்லப் போகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சரியாக, தெளிவாக (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதையொட்டி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். Entry 42, Concurrent list, Entry 1, Public Order Acquisition and requisitioning of property. Therefore, it is within the powers of the State legislature to enact the law. தெளிவாகச் சட்டத்தைப் பாருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசாங்கம் இதைப்போலவே 1995 ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தைக் கொணடு வந்துவிட்டது. அந்தச் சட்டத்திலே மிகத் தெளிவாக—இதில் என்ன சொல்கிறீர்கள் கடைசியிலே objects and reasons–லே? எங்களுக்குப் புகார் வந்தது, சில M.S.O.–க்கள் சரியாகக் காட்சிகளைக் காட்டவில்லை, அதிகமாகப் பணம் வசூல் செய்கிறார்கள், என்றெல்லாம் சொல்கிறீர்கள். நான் அது உண்மையாக இருந்தால ஏறறுக்கொள்கிறேன். ஆனால், அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று கேட்டால், அதிகாரம் இல்லை. TRAI என்ற ஓர் அமைப்பிற்குத்தான் அதிகாரம இருக்கிறது. மத்திய அரசாங்கம், அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலேயே TRAI என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். Telegraphic Regulatory Authority of India. அவர்கள்தான், ஒரு புகார் போனால், அதை விசாரிக்க முடியுமே தவிர, ஒருவர் அதிகமாகக் கட்டணம் வாங்கினார் என்று சொன்னால், விசாரிக்க முடியுமே தவிர, மாநில அரசாங்கத்திற்கு யார் அந்த அதிகாரம் கொடுததார்கள்? எனவேதான், உங்களுக்கு அப்படிப் புகார் வந்திருந்தால, நீங்கள அதை TRAI–க்கு recommend செய்திருக்கலாம். அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். ஆனால், அதைவிட்டுவிட்டு, இப்போது எங்களுக்குப் புகார் வந்தது, ஆகவே, இப்படி ஒரு சட்டம் கொண்டு வருகிறேன் என்று சொல்வீர்களேயானால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது, set top box குறித்து மத்திய அரசாங்கம் சொன்ன நேரத்தில் டெல்லி எதிர்த்தது, கல்கத்தா எதிர்த்தது, பாம்பே அரசு எதிர்த்தது, ஆனால், நம்முடைய தமிழக அரசு எதிர்க்கவில்லையே? (குறுக்கீடு) இல்லை, எதிர்த்து (குறுக்கீடு) இல்லை, வரவேற்றிருக்கிறீகள். அதுதான் நான் சொல்ல...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கேள்விகளை திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு நான் விளக்கம் கூற விரும்புகிறேன். தமிழக மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, கம்பிவட இணைபபமைவு நிறுவனத்தார் மக்கள் கண்ணோட்டம் சிறிதும் இன்றி, கம்பிவட இணைப்புப் பரிமாற்றத்தில் ஏற்படுத்தியுள்ள தற்போதைய மனநிறைவற்ற சூழ்நிலைக்குத் தகுந்த தீர்வு காணும் வகையில், கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு நிறுவனங்களின் மேலாண்மையைக் கையகப்படுத்துதல், அதன் சொத்து உரிமை மாற்றம் மற்றும் அதனை மேற்கொள்வதற்கானச் சட்டமுன்வடிவை 21–1–2006 அன்று தமிழகச் சட்டமன்றப் பேரவையில் எனது அரசு தாக்கல் செய்தது. இதற்கு ஆளுநரின் முன்னனுமதி பெறவில்லை என்று திரு. ஆற்காடு வீராசாமி அவாகள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். இதற்கு ஆளுநரின் முன் அனுமதி தேவையில்லை.





பிற்பகல் 1–10

This bill does not need a financial memorandum, as the payment will be made by a designated Government Company. As it is not a money bill, prior recommendation of the Governor is not required. இது சட்டமாக இயற்றப்பட்டால் பொது மக்களுக்கு நன்மை ஏறபடும் என்றாலும், தி.மு.க. தலைவரின் குடும்பம ஏற்படுத்தி இருக்கும் ஏகபோக ஆதிக்கத்திற்கு இது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் தி.மு.க. அதனை எதிர்க்கிறது. கூட்டணி தர்மத்திற்குக் கட்டுப்பட்டு இதர எதிர்க்கட்சியினரும் இந்தச் சட்டமுன்வடிவைக் கடுமையாக எதிர்த்து 21–1–2006 அன்றே பேட்டி அளித்தனர். குறிப்பாக, பொதுவுடைமைவாதிகளான கமயூனிஸ்டு கட்சியினர்கூட அன்றைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், ஒட்டுமொத்தத் தமிழகமும் இன்றைக்கு ஆதரவுக் குரல் கொடுத்ததும். பல எதிர்க்கட்சிகளும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒட்டுமொத்தத் தமிழகமும் இன்றைக்கு ஆதரவுக் குரல் கொடுத்ததும், பல எதிர்க்கட்சிகளும் தங்களது பேச்சிலும், எழுததிலும் இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த மாமன்றத்தில் 24–1–2006 அன்று உரையாற்றிய மார்கசிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. கருணாகரன், கேபிள் டி.வி. சம்பந்தமான அரசின் நடவடிக்கை சரியானதுதான் என்று பாராட்டியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஒரு ஜனநாயக அமைப்பின் நம்பகத்தன்மையும், அது குடிமக்களுக்கு அளிக்கின்ற சில அடிப்படை ஆதார உரிமைகளைப் பொறுத்தே அமைகிறது. ஆட்சி மற்றும் சமுதாயப் பிரச்சினைகளில் குடிமக்கள் முனைபபாகப் பங்கேற்பதைத் தகவல் சுதந்திரம் உறுதி செய்கிற காரணத்தால், அது மனித உரிமைகளின் ஆதாரமாக அமைகிறது. நவீன தகவல் தொடர்பு முறைகளின் வளர்ச்சி காரணமாக மக்களுக்குத் தகவல்களைக் கொண்டு சேர்க்கின்ற நடைமுறையில் மிகப் பெரும் மாற்றம் ஏற்பட்டு Visual Medium என்னும் காட்சி ஊடகம், தகவல் மற்றும் கேளிக்கையின் தலையாய அம்சமாக உருவெடுத்துள்ளது. தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே இல்லை என்பதுதான் இன்றைய நிலைமை. அதுவும் ஏழையெளிய மக்கள் தங்களது அன்றாடக் கவலைகளை மறந்து மனம் களிக்க பொழுதுபோக்குக்குத் தொலைக்காட்சியைப் பெரிதும் சார்ந்துள்ளனர். ஆக, தொலைக்காட்சியின் வழியாக வழங்கப்படுகின்ற

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 27

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு என்பது அன்றாட வாழ்க்கையின் அங்கமாகவே மாறிவிட்டது. இந்தக் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு என்பது ஒளிபரப்பாளர்கள் மற்றும் பன்முகச் சேவை, அதாவது Multiple Service Optical Transport System இயக்குபவர்கள், ஆகியோரை உள்ளடக்கியது ஆகும. பன்முகச் சேவை இயக்குபவர்கள், M.S.O.s ஒளிபரப்பாளர்களிடம் இருந்து சமிக்ஞைகளைப் பெற்று, signals-ஐப் பெற்று கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர் மூலமாக, Cable T.V. operators மூலமாக வீடுகளுக்கு இணைப்புகளைக் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் கம்பிவட இணைப்பமைவுத் துறையின் பகிர்மான அமைப்பின் கடைக்கோடியில் 14,000 கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் உள்ளனர். இவர்கள்மூலமாக சுமார் 45 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பைப் பெற்றுள்ளன. நமது மாநிலத்தில் இந்தத் தகவல் தொடர்பு அமைப்பில் ஒரு சில பன்முகச் சேவை இயக்குபவர்கள் தனி ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவர்கள் கிட்டத்தட்ட ஒரு ஏகபோக ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

இந்த ஆதிக்க பன்முகச் சேவை இயக்குபவர்கள், பகிர்மான அமைப்பின் கடைக்கோடியில் கள நிலையில் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களைத் தம்முடைய மனப்போக்கிற்கு இசைந்தபடி செயல்படுகிறவர்களாக இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றனர். அவவாறு இல்லாதவர்கள் அச்சுறுத்தப்படுவதும், வலுக்கட்டாயப்படுத்தப்படுவதும் சர்வ சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சிகள். தங்களது விருப்பத்திற்குக் கட்டுப்படாமல் தனிப்பட்ட முறையில் கம்பிவடத் தொலைக்காட்சி ஒளிபரப்புப் பணியை மேற்கொள்ள விரும்பும் அல்லது பிற சிறு போட்டி பன்முகச் சேவை இயக்குபவர்களின் சமிக்ஞைகளைப் பெற்று ஒளிபரப்ப விரும்பும் தெரு அளவில் செயல்படுகிற கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களை வர்த்தக ரீதியாகவும், நிதி ரீதியாகவும் இவர்கள் சீரழித்த நிகழ்வுகள் பல உண்டு. இதனால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள்தான். பொதுமக்கள் தாங்கள் விரும்பும் அலைவரிசைகளைக் கண்டு களிக்க முடியாது என்பதுடன், ஆதிக்க பன்முகச் சேவை இயக்குபவர்களின் மறைமுகமான உத்தரவுகளின்பேரில் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் தம் மனம்போன போக்கில் விதிக்கின்ற கட்டணங்களைச் செலுத்த வேண்டிய கட்டாய நிலைக்கும் ஆளாகின்றனர். எனவே, ஏகபோக ஆதிக்கம் செலுத்துகின்ற பன்முகச்



2006 ஜனவரி 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சேவை இயக்குபவர்களின் சுயநலச் செயல்பாட்டினால் போட்டி என்பது உள்ளபடியே இல்லை என்றாகி, நுகர்வோரின் விருப்பங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, ஆரோக்கியமான போட்டியினால கிடைக்கக்கூடிய பயன்கள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. எனவே, பொதுநலன் கருதி குடிமக்களுடைய ஆதார அடிப்படை உரிமை சம்பந்தப்பட்ட இதுபோன்ற இன்றியமையாப் பணிகளில் அரசு தலையிட்டு அதனை முறைப்படுத்த வேண்டியது அவசியத்திலும் அவசியம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

தொலைக்காட்சியைக் கண்டு களிக்கின்ற வசதி ஒரு காலத்தில் ஆடம்பரமாகக் கருதப்பட்டது. ஆனால், இன்று அந்த நிலை மாறி, தொலைக்காட்சி என்பது ஒவ்வொரு வீட்டின் அத்தியாவசியத் தேவையாக ஆகிவிட்டது. எனவே, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவுத் துறையில், ஒரு சில சுயநல ஆதிக்க சக்திகளின் தன்னிச்சையான வணிக நடவடிக்கைகளுக்கு அரசு நியாயமான கட்டுப்பாடு விதிப்பதில் தவறு ஏதும் கிடையாது என்பது மாத்திரம் அல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களுக்குத் தொல்லையற்ற, குறைந்த கட்டணத்தில் தொலைக்காட்சி இணைப்பமைவு கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டியது மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்பின் நுகர்வோருக்கு, அவர்கள் விரும்புகின்ற நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்கான வாய்ப்பை அதிகப்படுத்த வேண்டியது ஆகிய பொறுப்புகளைத் தமிழக அரசு தட்டிக் கழிக்க முடியாது.

பன்முகச் சேவை இயக்குபவர் மற்றும் ஒளியிழைச் செய்திப் பரிமாற்ற அமைப்பு உள்ளிட்ட கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கு இதுவே காரணம் ஆகும்.

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் தற்போது நிலவுகின்ற மனநிறைவற்ற ஒரு நிலைமைக்குத் தீர்வு காண்பதற்காகவே இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 162 மற்றும் 298 ஆம் உறுப்புகளில் அடங்கிய பொருட்பாடுகள் தொடர்பான கொள்கைகளைத் தீர்மானிப்பது மட்டுமல்லாது, மக்களின் நலன் கருதி அவற்றைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டியதுமான,

மாநில அரசின் நிர்வாகப் பணிகளுக்கு உட்பட்டே இந்தச் சட்டமுன்வடிவு அமைந்துள்ளது. அரசு மேற்கொண்டுள்ள அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது விவர அட்டவணையைச் சேர்ந்த பட்டியல் III, இனம் 42 மற்றும் அதனோடு தொடர்புடைய அதிகாரங்கள் ஆகியவற்றின் வரம்புக்கு உட்பட்டே இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

எனது அரசு இயற்றும் ஒவ்வொரு சட்டமும் மக்களின் நலனை மனதில் கொண்டே இயற்றப்படுகிறது. எனது அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் மக்கள் நலன் ஒன்றுதான் ஆதார சுருதியாக அமைநதுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மணல் வியாபாரத்தில் தனியாரின் ஏகபோகக் கொள்ளையினால் ஏழை, நடுததர மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டதால்தான், மணல் வியாபாரத்தை எனது அரசே ஏற்று நடத்தியது.

அதேபோன்று, தனியார் சில்லரை மதுபான விற்பனையாளர்கள் சிண்டிகேட் அமைத்து, அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயைச் சுருட்டிக் கொண்டதால், தனியார் சில்லரை மதுபான வியாபாரத்தை TASMAC நிறுவனமே ஏற்று நடத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக அரசின் வருவாய் கணிசமாக உயர்ந்துள்ளதே, மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படும் எனது அரசின் நல்லெண்ணத்தைப் பறைசாற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இப்போது சொன்னார்கள். யாரையோ பழி வாங்குவதற்காக இந்தச் சட்டத்தை எனது அரசு கொண்டு வருகிறது என்று சிலர் கூறுகிறார்கள். யாரையும் பழிவாங்குவதற்காக இந்தச் சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்படவில்லை; மக்கள் சக்தி தங்களுக்கு ஆதரவாக இல்லை என்பதற்காக, அந்த மக்களை யாரும் இனியும் பழிவாங்கக் கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு இந்த அவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவுத் தொழிலின் ஏக போக உரிமையைத் தன்வசம் வைத்துக்கொண்டு, ஒரு தனி நிறுவனம் எப்படியெல்லாம் தமிழக மக்களைப் பழிவாங்கியிருக்கிறது? எப்படியெல்லாம் அவர்களைச் சுரண்டி கொள்ளை இலாபம் அடித்திருக்கிறது? தனது ஏகபோக உரிமையை நிலை நிறுத்திக்கொள்ள எத்தகைய கொடுமைகளை எல்லாம் அரங்கேற்றியிருக்கிறது? ஏகபோக





ஆதிக்கச் சூழ்நிலையின் காரணமாக, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பைப் பெற்றிருக்கும் நுகர்வோர் எத்தகைய சொல்லொணா பாதிப்புகளுக்கு இலக்காகியுள்ளனர்!

கம்பிவட இணைப்பு மூலம் என்னென்ன அலைவரிசைகளை அளிக்க வேண்டும் என்பதையும், தமது கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளைக் காண்பதற்கு நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணங்களையும் இவர்களே தீர்மானிக்கின்றனர்.

தங்களது ஏகபோக உரிமையை நிலை நிறுத்திக்கொள்வதற்காகத் தங்களது வல்லாண்மையைக் காட்டி, கடைக் கோடியில் இருக்கின்ற கம்பிவடத் தொலைககாட்சி இயக்குபவர்களை அச்சுறுத்திப் பணிய வைக்கின்றனர்.

இவர்களுக்குப் போட்டி என்று எதுவும் பெரிதாகக் கிடையாது. எனினும், பெயரளவிற்குப் போட்டி நிலவுகிற பகுதிகளில்கூட, அந்தப் பன்முகச் சேவை இயக்குபவர்கள் குறித்து மக்கள் மத்தியில் கெட்ட பெயர் உண்டாக்கி, அவர்களை விரட்டி விட்டு அந்த இடத்திலும் தங்களது நிறுவனத்தின் இணைப்புகளை வழங்கிட தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி)

போட்டி பன்முகச் சேவை இயக்குபவர்கள் வழங்குகின்ற கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவைத் தரமற்றதாக, மக்களுக்கு மிகவும் அதிருப்தி அளிப்பதாக ஆக்க என்ன செய்ய வேண்டுமோ, அந்தச் செயல்களைத் திரைமறைவில் இருந்து செயல்படுத்தினர்.

போட்டியாளர்களின் ஒளிபரப்பைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளிலும், பொதுமக்கள் பிற அலைவரிசைகளைக் காண்பதைத் தடுக்கின்ற செயல்களிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

பிற்பகல் 1-20

இத்தனை மக்கள் விரோதச் செயல்களிலும், மக்கள் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட அந்த நிறுவனம் எது? அந்தப் பன்முகச் சேவையை இயக்குபவர் யார்? திரு. கருணாநிதி அவர்களின் குடும்பத் தொலைககாட்சியான 'சன் டி.வி.' நிறுவனத்தின் பிரிவு நிறுவனமான, அதாவது, யூனிட் நிறுவனமான SCV என்று அழைக்கப்படும் 'சுமங்கலி கேபிள் விஷன்' நிறுவனம்தான் அது. இத்தனை விஷமங்களுக்கும், விஷங்களுக்கும் அந்த 'விஷன்' தான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

'ஏகபோக உரிமை என்கிறீர்கள்; SCV மட்டும்தான் உங்களுக்குத் தெரிகிறதா? 500-க்கும் மேற்பட்ட பன்முகச் சேவை இயக்குபவர்கள் இருக்கின்றனரே' என்று தி.மு.க.-வினர் கேட்கின்றனர். ஆனால், உண்மை என்ன தெரியுமா? சென்னை மாநகரில் உள்ள மொத்த கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புகளில், சுமார் 95 சதவிகிதம் 'சுமங்கலி கேபிள் விஷன்' நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதாகத் தெரிகிறது. தமிழகத்தில் உள்ள ஏனைய மாநகராட்சிகளிலும் பெரும் அளவு கேபிள் டி.வி. இணைப்புகள் SCV நிறுவனத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. இதை நான் சொல்லவில்லை. திரு. கருணாநிதியின் குடும்பப் பத்திரிகையான 'தினகரன்' நாளிதழே கூறுகிறது.

3-9-2003 நாளிட்ட 'தினகரன்' நாளிதழ், set top box பற்றிய செய்தியில், 'சென்னை நகரில் கேபிள் கட்டுப்பாட்டாளர்களான SCV மற்றும் Hathway ஆகிய இரு நிறுவனங்களும் set top box-களைப் போட்டி போட்டுக்கொண்டு விநியோகித்து வருகின்றனர்' என்று கூறியுள்ளது. இப்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவு, சென்னை உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு நிறுவனங்களின் மேலாண்மையைக் கையகப்படுத்த வகை செய்கிறது.

டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை போன்ற பெருநகரங்களில் விரும்பிய கட்டணச் சேனல்களைப் பெறும் வகையில், Conditional Access System என்ற முறை 1-9-2003 முதல் அமல்படுத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்தபோதிலும், சென்னையில் மட்டும்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மும்பை, கொல்கத்தா, டெல்லி ஆகிய நகரங்களில் ஏதேதோ காரணங்களைக் காட்டி இந்தத் திட்டத்தை அமல்படுத்தாத மத்திய அரசு, சென்னையில் மட்டும் இதனைச் செயல்படுத்தியது. எனவே, சென்னை மாநகரிலும் இந்த Conditional Access System என்ற முறையைத் திரும்பப் பெற அப்போதைய செய்தி மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சரான திரு. ரவிசங்கர் பிரசாத் அவர்களுக்கு 6-1-2004 அன்று கடிதம் ஒன்றை நான் எழுதினேன். மத்திய அரசு 27-2-2004 நாளிட்ட அறிவிக்கையின்படி, இந்த Conditional Access System என்ற முறையை சென்னை உட்பட அனைத்துப் பெருநகரங்களிலும் நிறுத்தி வைத்தது. ஆனால், இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து SCV நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் 4890/2004 என்னும் எண் கொண்ட ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. ஏனென்றால், Conditional Access System என்ற முறையின் மூலம்தான்,





set top box வைத்து, கேபிள் டி.வி. இணைப்பு தருவதில் ஏகபோக மேலாதிக்கத்தைச் செலுத்தமுடியும்.

இந்த வழக்கில் தமிழக அரசு தாக்கல் செய்த எதிர் மனுவில், பொது நலனைக் கருத்தில்கொண்டு கொள்கை முடிவுகளை மாற்றிக்கொள்ளும்போது, அதாவது Conditional Access System என்ற முறையைத் திரும்பப் பெறும்போது, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைப் பொருட்படுத்தக்கூடாது என்று வாதாடியது. ஆனால், மைய அரசின் அறிவிக்கையை நிறுத்தி வைக்கக் கோரி SCV நிறுவனம் என்ன கூறி வாதிட்டது தெரியுமா? இதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்துள்ளதாகத் தெரிவித்து, மத்திய அரசின் அறிவிக்கைக்குத் தடை விதிக்கப்படவேண்டும் என்று SCV நிறுவனம் வாதாடியது. மக்கள் நலன் குறித்த சிந்தனை சிறிதும் இன்றி, எப்படியாவது Conditional Access System முறையைக் கொண்டுவந்து, set top box வைத்தால்தான், விரும்புகின்ற தொலைக்காட்சி அலைவரிசைகளைக் காணமுடியும் என்று மக்களை நிர்பந்தித்து, கம்பிவட இணைப்பமைவில் தன்னுடைய ஏகபோக உரிமையை நிலைநிறுத்தி, இத்துறையை முழுவதுமாகத் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே SCV நிறுவனம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது. SCV நிறுவனத்திற்குப் பொது நலனில் எவ்வளவு அக்கறை பாருங்கள்?

உயர் நீதிமன்றம் விதித்த தடையை நீக்க மத்திய அரசு எந்தவித நடவடிக்கையையும இதுவரை எடுக்கவில்லை. உண்மையிலேயே சென்னை மாநகர மக்கள்மீது தி.மு.க.-விற்கும், அதன் தோழமைக் கட்சிகளுக்கும் அக்கறை இருக்குமேயானால், இந்தத் தடை ஆணையை நீக்குவதற்கு முயற்சி எடுத்திருக்கமாட்டார்களா? பொது மக்கள் நலனைவிட, தி.மு.க. தலைவரின் குடும்ப வணிக நலனே பெரிது என்று எண்ணியதால்தான், இந்தத் தடை ஆணையை நீக்க இவர்கள் ஒரு துரும்பைக்கூட அசைக்கவில்லைபோலும்! (மேசையைத் தட்டும் ஒலி)

Conditional Access System என்ற முறையின்கீழ், இலவச சேனல்கள் மட்டும் பார்ப்பதற்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள அடிப்படைக் கட்டணம் 72 ரூபாய் மட்டும்தான். வரிகளுடன் சேர்த்து வசூலிக்கப்படவேண்டிய மொத்தத் தொகையும் 90 ரூபாய் மட்டுமே. ஆனால், நடைமுறையில் சென்னை மாநகரின் பல பகுதிகளில் இத்தொகைக்கு மிக அதிகமாக வசூல் செய்யப்படுகிறதே! சில இடங்களில் 200 ரூபாய்க்கும் அதிகமாகக்கூட வசூல் செய்யப்படுகிறதே! இதைப்போன்ற சுரண்டல்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை மாநில அரசுக்கு இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–25*

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மக்கள் நலனுக்காக, தனியார் ஏகபோக ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய அரசின் கடமையைச் செயல்படுத்தும் வகையில்தான், இந்தச் சட்டமுன்வடிவை இவ்வரசு தாக்கல் செய்துள்ளது.

முதற்கட்டமாக, சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் இந்தச் சட்டம் அமல்படுத்தப்படும். அதுவே, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு முறையில் உள்ள குறைபாடுகளையும், முறைகேடுகளையும் களைந்துவிடும். படிப்படியாக அனைத்து இடங்களிலும் இந்தச் சட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தச் சட்டமுன்வடிவு, குறிக்கப்பட்ட ஒரு நாளில், பன்முகச் சேவை இயக்குபவர்களின் பகிர்மான அமைப்பைக் கையகப்படுத்த வகை செய்கிறது. எனினும், கடைக்கோடி பகிர்மான நிலையில், சந்தாதாரர்களின் சேவையாளர்களான, தெரு அளவில் செயல்படுகின்ற கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் இந்தக் கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றத்தின் வரம்பிற்கு உட்படுத்தப்படவில்லை.

அரசு இவவாறு கையகப்படுத்துகின்ற நிறுவனத்தை, தான் பொருத்தம் எனக் கருதுகின்ற வரையறை, நிபந்தனைகளை உள்ளடககிய அறிவிக்கை ஒனறை வெளியிட்டு, அதன்மூலம், ஓர் அரசு நிறுவனத்திடம் ஒப்படைக்க இந்தச் சட்டமுன்வடிவு அதிகாரம் அளிக்கிறது. இந்த நிறுவனத்தின் நிர்வாகத்தை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாதுகாவலர்களிடம், அல்லது துறைகளிடம் ஒப்படைக்கின்ற உரிமையும் அரசுக்கு உள்ளது. இவ்வாறே, அரசு எடுத்துக்கொள்கின்ற நிறுவனங்களின் பணியாளர்கள் விவகாரங்கள் தொடர்பாக, இந்தச் சட்டமுன்வடிவில் ஒரு தனி அத்தியாயம் இடம் பெற்றுள்ளது.

மேலும், இந்தச் சட்டமுன்வடிவு, தொகை வழங்கல் ஆணையாளர் (Commissioner of Payments) ஒருவரை நியமிப்பதற்கும் வகை செய்கிறது. மேலும், உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை, அரசு எடுத்துக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் இதர கோரிக்கையாளர்களின் ஈட்டுத் தொகை கோரிக்கைகளுக்கு, இது தொடர்பாக வரையறுக்கப்படுகின்ற நடைமுறைகளைப் பின்பற்றி, ஒரு தீர்வு காணும் அதிகாரம் உள்ள ஆணையாளராக நியமிக்கவும், இந்தச் சட்டமுன்வடிவு வகை செய்கிறது. இது தொடர்பாக, மேல்முறையீடு செய்வதற்கும் வகை



செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் அனைத்தும் பின்பற்றப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

கம்பிவடத் தொலைக்காட்சியை தகவல், அறிவு மற்றும் பொழுதுபோக்கிற்கு ஆதாரமாகக் கொண்டு கண்டு களிக்கின்ற நுகர்வோரே, அதாவது, பொதுமக்களே இந்தச சட்டத்தின்மூலம் மிக அதிகப் பயன் அடையக்கூடியவர்கள் ஆவர். இதனால், எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் வீடுகளுக்கு உடனுக்குடன் கம்பிவடத் தொலைக்காட்சி சேவை கிடைப்பது உறுதிப்படுத்தப்படும். அரசின் இந்தத் தலையீடு மற்றும் உத்தேச சட்டத்தின்மூலம் கொண்டு வரப்பட இருக்கின்ற நெறிப்படுத்தும் ஏற்பாட்டின் பயனாக, கம்பிவடத் தொலைக்காட்சி பகிர்மான மேலாண்மைப் பணியில், ஒளிவு மறைவு இல்லாமல் நடைபெறுகின்ற ஒரு புதிய சகாப்தம் உருவாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய முறையினால், ஒளிவு மறைவற்ற, நல்ல ஆதாயம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், ஏராளமான ஒளிபரப்பாளர்கள் ஊக்கம் பெற்று, தங்களது முக்கிய அலைவரிசைகளைப் பொதுமக்களுக்கு அளிக்க முன்வருவர். இந்த நடைமுறையினால், நுகர்வோருக்கு அவர்கள் விரும்புகின்ற சிறந்த தொலைக்காட்சி அலைவரிசைகளைக் காண்பதற்கும், அவர்களுக்குச் சரியான கட்டணத்தில் தரமான ஒளிபரப்பு கிடைப்பதற்கும் வழிவகை ஏற்படும். இவற்றுக்கெல்லாம் மேலாக, இதன்மூலம் மக்களின் ஆதார, அடிப்படை உரிமைகள் பேணிக் காக்கப்படுகின்றன என்பதுதான் இதனுடைய உயர்தனிச் சிறப்பு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்... *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order raise பண்ணும்போது... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்வார். நீங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள... *(குறுக்கீடுகள்)*

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை. ஒரு நிமிடம் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத்தை எப்படி நிலை நிறுத்துவது என்கிற பொறுப்பை மாநில அரசு பார்த்துக்கொள்ளும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஆதரிக்கிறீர்கள் (குறுக்கீடுகள்) ஆதரிக்கிறீர்கள் (குறுக்கீடுகள்) ஆதரிக்கிறீர்கள் (குறுக்கீடுகள்) ஆதரிக்கிறீர்கள் இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டமுன்வடிவை விளக்கமாகச் சொல்லாமல், இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கருத்து என்ன என்பதை மட்டும் நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நேற்றுதானே ஆதரிக்கிறோம் என்று சொன்னீர்கள் நீங்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசவே இல்லையென்றால், இன்னும் எவ்வளவு நேரம்தான் பேசமுடியும்? ஒரு சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கருத்து என்னவென்று அவ்வளவுதான் சொல்லலாம். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சரி, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.



2006 ஜனவரி 27]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கருணாநிதியினுடைய குடும்பம் எப்படியெல்லாம் பொருள் ஈட்டி வருகிறது என்று சொன்னார்கள்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆனால், நான் ஒன்றைச் சொல்கிறேன். எங்கள் தலைவர் இதை வரவேற்றதற்குப் பிறகு இப்படி ஒரு குற்றச்சாட்டை முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன். கொஞ்சம், தயவுசெய்து (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேனே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கொஞ்சம் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அதையொட்டித்தான் நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி, இப்போதே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் இன்றையதினம் சொல்லியிருக்கக்கூடிய கருத்துகளை...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் சொல்லியிருக்கக்கூடிய...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாறுபட்ட கருத்து அல்ல. அதையொட்டித்தான் நான் சொல்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் சொல்லியிருக்கக்கூடிய கருத்துகளை நான் மறுக்கவில்லை.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னது சரி. ஏகபோகக் கொள்ளை நீங்கள் அடிக்கின்றீர்கள். அதற்கு ஆதாரமாகத்தான் அம்மா அவர்கள் சொன்னார்கள். உங்களுக்கு எந்த நிறுவனம என்று சொன்னால், அந்த நிறுவனத்தினுடைய பெயரைக்கூட சொல்லுவதற்கு நான் இங்கே கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தெரியும் எங்களுக்கு.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** SCV, அதாவது, 'the total revenue to SCV என்று சொன்னால், Metropolitan Corporation –அதாவது, ஆறு மாநகராட்சிப் பகுதிகளிலே (குறுக்கீடுகள்) ஏன் உங்களுக்கு எரிகிறது? மாநகராட்சிப் பகுதிகளில் மட்டும் 3 கோடியே 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், ஆறு மாநகராட்சிப் பகுதிகளிலே மாதந்தோறும் 3 கோடியே 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், நகராட்சிகளில் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய், Major Panchayats, அதிலே 81 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய், Village Panchayats, அதிலே ஒரு கோடியே 92 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய். Advertisement Scrollings, உங்களுடைய அந்த ஏகபோகக் கொள்ளை 25 இலட்சம் ரூபாய், Own Link Operators 1 கோடி ரூபாய், மாதத்திற்கு 9 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் SCV–க்குமட்டும் செல்கிறது என்றால், இது ஏகபோகக் கொள்ளை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவரைப் பேச விடுங்கள், அவரைப் பேச விடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் ஏதோ ஒரு பட்டியல் படிக்கிறார். அவர் பட்டியல் தனியாக இருக்கிறது. அதை இன்னொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். நான் சொல்வது.(குறுக்கீடுகள்) முதலமைச்சர் சொன்னார்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்திலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கட்டும். பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நீங்கள் 50 ரூபாய்க்கு அல்லது 20 ரூபாய்க்கு அல்லது இலவசமாகக்கூட cable connection கொடுத்தால் நாங்கள் வரவேற்கத் தயார். எங்களைப் பொறுத்தவரையில் சுமங்கலி



2006 ஜனவரி 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கேபிள் என்பது நேரடியாக வீட்டிற்கு இணைப்புக் கொடுக்கக்கூடிய நிறுவனம் அல்ல. ஆப்பரேட்டர்கள் வரையிலேதான் அவர்கள் கொண்டு செல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. விரிவான விளக்கம் தேவையில்லை. (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கட்சியினுடைய கருத்து என்ன என்பதை ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையிலே நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம். எங்கள் தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். முதலமைச்சர் இப்போது சொல்லியிருக்கின்றார். ஆனால், ஒன்றைப் புரிந்து கொண்டேன். அவர் என்ன சொல்கிறார் என்றால், நாங்கள் மதுபானக் கடைகளையெல்லாம் அரசுடைமையாக்கினோம், மணலை அரசுடைமையாக்கினோம் என்று சொன்னார். நான் கேட்கிறேன் மணல் அரசுடைமையாக்கினீர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதற்குச் சம்பந்தமில்லை, (குறுக்கீடுகள்) உங்களுடைய பேச்சு நிறைவுற்றது. (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி வாக்கியத்தைப் பேசி முடியுங்கள். வாக்கியத்தை முடியுங்கள். நீங்கள் மணல், கிணல் ஆகியவற்றிற்குப் போகாதீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் சொன்னது சரி. இந்தச் சட்டமுன்வடிவின்மீது (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கட்சியினுடைய கருத்து என்ன என்பதைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இறுதியாக நான் சொல்ல விரும்புவது. (குறுக்கீடுகள) இறுதியாக நான் சொல்ல விரும்புவது, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே (குறுக்கீடுகள்) இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே என்ன புரிகிறது என்று சொன்னால், நாங்கள் அடுத்து ஆட்சிக்கு வருவோம் என்று சொல்லுகின்றவர்கள் (குறுக்கீடுகள்) சன் டி.வி.யைப் பார்த்து இப்படி அலறுகிறீர்களே, ஏன் என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடியுங்கள். பேசி வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆகையால், சன் டி.வி.யை முடக்குவதற்கு யார் முயற்சித்தாலும், ஆண்டவனால்கூட அதை முடக்குவதற்கு நிச்சயமாக முடியாது என்பதை மட்டும் சொல்லி, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கள் தலைவருடைய கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் பதிலுரை சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதிலுரை சொல்லிவிடட்டும். உங்களைக் கூப்பிடுகிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) பேச வேண்டுமா? திரு. ஜி.கே. மணி யார் பேசப்போவது? (குறுக்கீடு) திரு. வேல் முருகன், சுருக்கமாகப் பேசிமுடியுங்கள். இதை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா, அவ்வளவுதான்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு பன்முகச் சேவை அதன் மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல் முருகன்:** என்ன, பேச ஆரம்பிக்கின்றபோதே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய திருத்தம் (குறுக்கீடுகள்) அமைச்சர் பதிலுரைக்குப் பிறகு சொல்லட்டுமா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், பதிலுரை, சட்ட அமைச்சர் அவர்கள்.. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, சட்ட அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜனவரி 27]

பிற்பகல் 1–35

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும். (குறுக்கீடு) அவர் பேசுவது முறையல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவர் பேசமாட்டேன் என்கிறாரே, பேசமாட்டேன் என்கிறாரே? திரு. வேல் முருகன், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, சட்ட அமைச்சர், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இப்போது ஆரம்பத்திலே குறிப்பிட்ட வாக்கியங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அடுத்து பேசுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** அவசரமாகக் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவகாசம் அளிக்காமலும், விளக்கம் ஏதும் கேட்காமலும் கொண்டுவந்துள்ளீர்கள். ஏராளமான முதலீடுகளைச் செய்து இயங்கி வருகின்ற இந்த... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** இந்த கம்பிவடத் தொலைக்காட்சி, அதை நடத்துகிறவர்களிடம் எந்தவித விளக்கமும் கேட்காமலும், இந்த அரசு கொண்டு வந்ததை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அவ்வளவுதான். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் (குறுக்கீடுகள்) ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை, துரதிருஷ்டவசமாக ஆதரிக்க முடியாத

நிலையிலே நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்தில், பொதுவுடைமைக் கட்சிகூட இதை எதிர்த்தார்கள் என்று சொன்னார்கள். நாங்கள், நீங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை சரிதான் என்று சொன்னோம். ஏனென்றால், நாங்கள் ஏகபோக நிலை எங்கே இருந்தாலும், அதை ஆதரிக்கக்கூடியவர்கள் அல்ல. Monopoly என்பது ஒழித்துக்கட்டப்பட வேண்டும் என்பது எங்களுடைய அடிப்படையான கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முறையிலே நீங்கள் இதற்கு முன்னரே நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. பழனிசாமி (குறுக்கீடு) திரு. பழனிசாமி (குறுக்கீடு) இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பழனிசாமி, பேச வேண்டுமா? (குறுக்கீடுகள்) சட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சட்ட அமைச்சருடைய பதிலுரை ஏதாவது இருந்தால் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சருடைய பதிலுரை. (குறுக்கீடு) வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. (குறுக்கீடு) சட்ட அமைச்சருடைய பதிலுரை, ஏதாவது இருந்தால் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) சட்ட அமைச்சர் அவர்கள.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள் இங்கே பேசும்போது, இங்கே அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். 21 ஆம் தேதியன்றே, இந்தச் சட்டமன்றத்திலே, இது அன்றைக்கே அறிமுகப்படுத்தப்பட்டது. கிட்டத்தட்ட 7 நாட்கள்-- 7 நாட்கள் இந்தச் சட்டமன்ற... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சர் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) பதிலுரையைச் சொல்லி முடியுங்கள். சட்ட அமைச்சர்,, பதிலுரையைச் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சர், நீங்கள் பதிலுரையைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள். சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, point of clarification.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இருங்கள். உங்கள் முரண்பாட்டை நான் சொல்கிறேன். உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சட்ட அமைசசர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** உங்கள் கட்சியினுடைய முரண்பாடுகளை நான் சொல்கிறேன், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அதைக் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அதைக் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள் முரண்பாட்டை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில் 2002 மே 10 ஆம் தேதி, திரு. கே.சி. கருணாகரன், யார், அவருடைய கட்சி, சி.பி.எம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அசரீரி மாதிரிக் கேட்டது. அதனால், சுற்றுமுற்றும் பார்த்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய விளக்கம், முழுக்க, முழுக்க, நூறு சதவிகிதம் உண்மையானது. (மேசையைத் தட்டும் ஒலி) "மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கேபிள் டி.வி.-யினுடைய ஏகபோகத் தனி ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக, கூலிக்கு வேலை செய்கிற சிறிய, ஏழை, நடுத்தர, படித்த இளைஞர்களைக் கொண்டிருக்கக்கூடிய, ஆப்பரேட்டர்களைக்

கொண்டிருக்கக்கூடிய ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கி நாங்கள் இதற்கான இயக்கம் நடத்தி வந்திருக்கிறோம். முதல்வர் அவர்கள் சொன்னதுபோல கோவை மாவட்டத்தில் 100 சதவிகிதம் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் ஆதிக்கத்தின்கீழ்தான் அது செயல்பட்டுக்கொண்டு, கோவை ஆற்றுப் பாலத்திலே தொடங்கி, மேட்டுப்பாளையம் வரைக்கும் விடிவதற்குள்ளே பார்த்தால், திடீரென்று வெள்ளிக் கம்பங்களைப்போல் நட்டு ஒரே இரவிலே அந்த வேலை நடந்ததையெல்லாம் நான் பார்த்தேன். எங்களுக்கே ஆச்சரியமாகப் போனது'' என்று கே.சி. கருணாகரன் சொல்லியிருக்கின்றார். (குறுக்கீடுகள்) ஏன் இந்த முரண்பாடு?

*பிற்பகல் 1–40*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அதாவது, தேர்தல் நேரத்திலே டாண்டன் அவர்கள்...

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே...

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே...

**திரு. என். நன்மாறன்:** தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் ஏற்கெனவே வலியுறுத்துவதாகச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய திருத்தம் (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.





மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (கூச்சல்–குழப்பம்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, மற்றும் இணைப்புப் பட்டியல் 1, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, மற்றும் இணைப்புப் பட்டியல் 1, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

இணைப்புப் பட்டியல்–2. மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**இணைப்புப் பட்டியல் – 2**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

" *For* Schedule II *substitute* the following Schedule, namely:–

"SCHEDULE–II"

(*see* Section 1(3))

APPLICABILITY OF THE ACT

This Act, on the appointed date, will apply to the activities of Multiple Service Optical Transport System in–

(A) CHENNAI

1. Sumangali Cable Vision
   1, Lynwood Lane,
   Mahalingapuram,
   Chennai.

2. Hathway
   "House of Lords"
   Flat No.GB, Door No.29,
   Luz Avenue, Mylapore,
   Chennai–600 004.

3. Baba Cable Vision,
   M.K.B. Nagar,
   Vyasarpadi,
   Chennai.

SALEM

4. Polymer Cable,
   No.48–A, Brindavan Main Road,
   Fairlands,
   Salem–16.

COIMBATORE

5. Sumangali Cable Vision,
   No.39, Ramakrishna Nagar,
   New Siddhapudur,
   Coimbatore–44.





6. Thamizh Thai Cable Vision,
   No.3, Ramar Koil Street,
   Coimbatore.

MADURAI

7. Sumangali Cable Vision,
   No.45, Kakkan Street,
   Shenoy Nagar,
   Madurai–2.

8. Ajai Cable TV,
   T.N.H.B. Colony,
   Villapuram,
   Madurai–9.

9. People's Cable Network,
   Krishnapuram Colony,
   Madurai–15.

TIRUCHIRAPPALLI

10. Sumangali Cable Vision,
    No.1, Alexandra Nagar,
    Cantonment,
    Tiruchirapalli–1

TIRUNELVELI

11. Karan TV,
    2nd Floor, Dinakaran Building,
    South Byepass Road,
    Tirunelveli–2

(B) Such other Multiple Service Optical Transport Systems notified under section 1(3)"

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

இணைப்புப் பட்டியல் 2, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏறபோரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**பிரிவு 1**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 1, *for* sub clauses (3) and (4) *substitute* the following sub clauses, namely:-

'(3) It applies to the persons or companies specified in Schedule-II and any other person or company which are carrying on business of Multiple Service Optical Transport System and are notified by the Government.

(4) It shall come into force on such date as the Government may, by notification, appoint. Different dates may be appointed for different areas' "

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.



2006 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**முகப்புரை**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble *for* the expression 'Fifty-sixth', *substitute* the expression 'Fifty-seventh'. "

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது..

பிற்பகல் 1–45

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒளியிழைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலான) மேலாண்மையைக் கையகப்படுத்துதல், சொத்து உரிமை மாற்றம், அதனை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2006), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

## (ஒ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2006), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2006)@@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 23-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

@@ 23-01-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2006 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட சட்டமுன்வடிவுகள் இரண்டின்மீதும் உறுப்பினர்கள் யாராவது கருத்துகள் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகளின் பேரிலே எங்கள் இயக்கத்தின் சார்பில் சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய இந்த 4 ஊராட்சிகளிலே நீண்ட காலமாக இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே அந்தப் பகுதிகளிலே ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டாலும்கூட, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பணிபுரிவதற்கான ஒரு சகஜ நிலைமையை உருவாக்க முடியவில்லை.

நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையிலே, அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே எவ்வளவு தாராள மனப்பான்மையோடு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய வேண்டும். திருச்சியிலே ஒரு பொது பாராளுமன்றத் தொகுதியிலே இடைத் தேர்தல் ஏற்பட்டபோது, ஒரு பொதுத் தொகுதியிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தவரை இடைத் தேர்தலிலே போட்டியிடச் செய்து வெற்றிபெற வைத்தார்கள். இந்த உள்ளாட்சித் தேர்தலிலேகூட தமிழ்நாட்டிலே, பல்லாவரத்திலே ஒரு பொதுத் தொகுதியிலே, நகராட்சிக்கு ஒரு தலித்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். அங்கே சகோதரர் தன்சிங் என்பவர் இன்றைக்கு நகரமன்றத் தலைவராக இருக்கிறார். ஆவூர் என்கிற ஒரு பொதுத் தொகுதியிலே சகோதரி லதா உதயகுமார் என்பவரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினாலே போட்டியிடச்செய்து இன்றைக்கு வெற்றிபெற்று, அங்கே அவர்கள் நகரமன்றத் தலைவியாக இருக்கிறார். சட்டமன்றத்திலே இட ஒதுக்கீடே இல்லாத கன்னியாகுமரியிலே ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் பொதுத் தொகுதியிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே போட்டியிட்டு இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே, இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதிலே, அதிலும் உள்ளாட்சியிலே செயல்படுத்துவதிலே, அனைத்திந்திய



2006 ஜனவரி 27] [முனைவர் செ.கு. தமிழரசன்]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு முனைப்பாக இருந்திருக்கிறது என்பதையும், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுத் தொகுதிகளிலேகூட தலித்களை நிறுத்தி சாதனை படைத்திருக்கிறார், பாராளுமன்றத்திற்கு, நகரமன்றத்திற்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு என்பதையும் நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஆளும் கட்சி மட்டுமே இந்த பாப்பாப்பட்டியிலோ, கொட்டக்காச்சியேந்தலிலோ, கீரிப்பட்டியிலோ, நாட்டார்மங்கலத்திலோ, இப்படிப்பட்ட இந்த நான்கு ...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அங்கேகூட ஒரு தொகுதியில் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொதுத் தொகுதியிலே நிறுத்தி இருக்கிறார்கள்.

பிற்பகல் *1–50*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ஆக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்த ஆட்சியோ மட்டுமே பொறுப்பு என்று யார் குற்றம் சாட்டினாலும், அது நியாயமாக இருக்க முடியாது. அது நேர்மையாக இருக்க முடியாது, அதுவொரு அரசியல் நியாயமாக இருக்கவே முடியாது என்பதாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்— இங்கே, இந்த 4 உள்ளாட்சிகளிலேகூட தேர்தலை நடத்த வேண்டுமென்பதிலோ அல்லது அங்கே போய் ஒரு சமூக நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டுமென்பதிலோ அவர்கள் முயற்சிக்கவில்லை என்று யாரும் குற்றம் சொல்ல முடியாது. ஒரு நடுநிலையாளனாய், ஒரு சமூக உணர்வு உள்ளவனாய் நான் சொல்கிற யோசனை, இப்போதும்கூட மீண்டும் ஒரு முயற்சி எடுக்கிற வகையிலே அங்கே நடுநிலையாளர்கள், சமுதாயத் தலைவர்களை உள்ளடக்கிய ஒரு தூதுக் குழுவை கடைசிக் கட்டமாக முயற்சித்துப் பார்க்கலாம். கடைசிக் கட்டமாக அங்கே தேர்தல்களை நடத்துவதற்கு, இன்னமும் சொல்லப்போனால், அங்கே இருக்கிற தலித் மக்கள்கூட, இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதுதான் எங்களைப் போன்றவர்களுடைய வருத்தமும், வேதனையும்கூட. ஆகவே, அங்கே எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டுமென்பதற்குக் கடைசிக் கட்டமாக நம்முடைய அரசு, சமூகத் தலைவர்கள், நடுநிலையாளர்கள், சமூக அறிஞர்கள், அப்படிப்பட்ட ஒரு நல்லிணக்கக் குழுவை அந்தப் பகுதியிலே அனுப்புவதற்கு முயற்சிக்கலாம் என்கிற அந்த ஒரு கருத்தை மட்டும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு சம்பந்தமான இந்த முன்வடிவு குறித்து, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம், கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி ஆகிய இந்த 4 ஊராட்சிகளிலே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் அநேகமாக நிறைவேறவில்லை. ஏன் நடத்த முடியவில்லை என்பதற்கான விளக்கக் காரணங்களாக இதிலே சொல்லப்பட்டிருப்பது, 'மழையும், வெள்ளமும், அதனால் ஏறபட்ட பாதிப்பின் காரணமாக, இந்தச் சிற்றூராட்சிகளை அமைத்து உருவாக்குவதற்குரிய வழக்கமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் நடைமுறைகள் செயறபடுத்தப்படவில்லை என்பதும், மேற்சொன்ன சிறறூராட்சிகளை அமைத்து உருவாக்க இயலவில்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன சிற்றூராட்சிகளின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை 2005 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாளுக்கு அப்பாலும் நீட்டிப்பது தேவையானதாகியுள்ளது' என்று சொல்லப்பட்டிருக்கிற இந்த நோக்கக் காரண விளக்கவுரைகளை எங்களால் ஏற்க முடியவில்லை.

வரலாறு காணாத வறட்சியை இந்த நாடு சந்தித்தபோதும், சுனாமியைச் சந்தித்தபோதும் நாடாளுமன்றத் தேர்தல் வறட்சிக் காலத்தில் நடந்தது. காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தல் நெருக்கடியான பல காலச் சூழ்நிலைகளின் காரணத்தால் நடத்தி முடிக்கப்பட்டது. ஆனால், இந்த 4 பஞ்சாயத்துக்களில் மாத்திரம், தொடர்ந்து இவ்வாறு நடத்தப்பட முடியாமல் இருப்பதும், நடத்தினாலும் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் பிரதிநிதிகள் செயல்பட முடியாமல் தொடர்ந்து ஜாதிய உயர் இந்துக்களால் ஆதிக்கம் செலுத்தப்படுவதும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தையும், அரசியல் சாசனம் வழங்கியிருக்கக்கூடிய உரிமைகளையும் அந்த 4 ஊராட்சிகளில் அமல்படுத்த நம்முடைய மாநில அரசு அல்லது மாநில அரசினுடைய இயந்திரங்கள் முற்றிலுமாய்த் தோற்றுப் போய் உள்ளன என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும், இந்த அரசு ஒத்துக்கொள்ள வேண்டும். 4 ஊராட்சிகளிலும் மேலும், மேலும் இந்த...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4 சிற்றூராட்சிகளிலே தேர்தல் நடத்த முடியாததற்கு அரசு இயந்திரம் முற்றிலும் 'செயல்





இழந்துவிட்டது என்று கூறுவது தவறான தகவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பல்வேறு முறை இந்த 4 சிற்றூராட்சிகளைப் பற்றித் தெளிவாக விவாதம் மேற்கொண்டு, அதற்கு பதிலுரையும் அளிக்கப்பட்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டு, முந்தைய ஆட்சியிலே இந்த 4 சிற்றூராட்சிகளிலும் சாதாரணத் தேர்தலும், இடைத் தேர்தலும் எப்போதும் நடைபெற்றதே கிடையாது. அந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-லே ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த 4 சிற்றூராட்சிகளுக்கும் மக்களுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கபபட வேண்டுமென்ற நோக்கத்தோடு முதல் கட்டமாக, மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் தொண்டு நிறுவனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும் அந்தக் கிராமங்களுக்கு அனுப்பி, தேர்தலிலே வேட்பாளர்களாக நிற்க வேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துக் கூறி தேர்தலிலே போட்டியிட வேண்டுமென்ற ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். அப்போதும் அந்தப பகுதிகளிலே இருக்கிற மக்கள் தேர்தலிலே போட்டியிடாத காரணத்தால் மாண்புமிகு இதய தெய்வம் புரடசித் தலைவி அம்மா அவர்கள் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்தார்கள். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், இந்த நால்வரும் அந்தப் பகுதிகளிலே இரண்டு நாட்கள் முகாமிட்டு, அந்தப் பகுதி மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, 17-9-2003 மற்றும் 18-9-2003 ஆகிய நாட்களிலே மேற்சொன்ன நான்கு சிற்றூராட்சிகளுக்கும் அவர்கள் சென்று பொதுமக்களைச் சந்தித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துக் கூறிய அறிவுரைகள் எல்லாம் அங்கே அவர்களுக்குக் கூறப்பட்டு, அவர்கள் இடைத் தேர்தலிலே போட்டியிட்டார்கள். போட்டியிட்ட பிறகு, தங்களுடைய பதவியை இராஜினாமா செய்துவிட்டார்கள்.

*பிற்பகல் 1-55*

மேலும், இந்தச் சூழ்நிலையிலே மீண்டும் தொடர்ச்சியாக அங்கே தேர்தல்கள் நடத்தப்பட்டன. அந்தத் தேர்தல்கள் நடத்தப்படுகின்ற

சூழ்நிலையிலே, அவர்கள் போட்டியிட்டு, மனுக்கள் கொடுக்கிறார்கள், போட்டியிடுகின்றார்கள், மீண்டும் இராஜினாமா செய்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது தொடர்ந்து தேர்தலை நடத்தி, அங்கே எப்படியாவது மக்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட்ட காலத்திலே, கடந்த 2001 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புத் தேர்தலிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12,618 கிராம ஊராட்சிகளிலே கிராம ஊராட்சி வார்டுகள் எண்ணிக்கையிலே, ஆதிதிராவிடப் பெண்கள் 97,158 மொத்த உறுப்பினர்கள் இருக்கின்ற சூழ்நிலையிலே, ஆதி திராவிடப பெண்கள் 6,210–ம், ஆதி திராவிடர்கள் (பொது) 13,091–ம் மற்றும் ஊராட்சி மன்றங்களினுடைய தலைவர்கள் 12,618–லே ஆதி திராவிடப் பெண்கள் 1,104–ம், ஆதி திராவிடர்கள் (பொது) 1,855–ம் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் 6,570–லே ஆதி திராவிடப் பெண்கள் 536–ம், ஆதி திராவிடாகள் (பொது) 833–ம் மற்றும ஒன்றியக் குழுத் தலைவர்கள் 385–லே ஆதி திராவிடப் பெண்கள் 31, ஆதி திராவிடர்கள் (பொது) 45, மேலும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் 656–லே ஆதி திராவிடப் பெண்கள் 54, ஆதி திராவிடர்கள் (பொது) 85, மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் 29–லே ஆதி திராவிடப் பெண்கள் 3, ஆதி திராவிடர்கள் (பொது) 4, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களில் இவ்வளவு பேர் மக்களுடைய பிரதிநிதிகளாக வருகிற சூழ்நிலையிலே, இந்த நான்கு சிற்றூராட்சிகளில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பல்வேறு வகைகளிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பகுதிகளிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கே முன்வராத காரணத்தினால் அந்தப் பகுதிகளில் இருக்கின்ற தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே தனி அலுவலர்களை நியமனம் செய்து அந்தப் பகுதிகளினுடைய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது சிறப்போடு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்கு எவ்வாறு பிரதிநிதித்துவத்தை இந்த அரசு வழங்கியிருக்கிறது என்பதற்கான பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். 100 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்டிருக்கிற இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தாழ்த்தப்பட்ட ஒருவா இருந்தார் என்பதெல்லாம்



இந்த உலகம் அறிந்திருக்கக்கூடிய உண்மை. இவ்வளவும் அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த மாநிலத்தில் நான்கு ஊராட்சிகளைச் சார்ந்த இந்தப் பகுதிகளில மாத்திரம் சட்டத்திற்குச் சவாலாக, தேர்தல் விதிமுறைகளுக்குச் சவாலாக, மக்கள் பிரதிநிதித்துவத்திற்குச் சவாலாக, இந்த அரசாங்கத்திற்கே சவாலாக நான்கு கிராம மக்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்றால், அதிலே நாம் தோற்றுப் போயிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அங்கே விதிமுறைகளின்படி—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல அங்கே எந்தவிதத்திலும், யாரும், எந்தவிதமான ஆதிக்கமும் செலுத்தவில்லை. அவர்களாகவே முன்வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** எதுவாக இருந்தபோதிலும் இவ்வாறான இந்த ஒரு சட்டமுன்வடிவின் மூலமாகத் தொடர்ந்து அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். ஆட்சேபிக்கிறோம். இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக இந்தச் சட்டமுன்வடிவு திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கிறது. இதைப்பற்றி இந்த அவையிலே பல முறை கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுகூட நான் இந்தச் சட்டமுன்வடிவு வருகிறபொழுது ஒரு விளக்கம் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நமது சட்டப் பேரவைத் துணைத் தலைவர், இவர்கள் எல்லாம் ஒரு குழுவாகச் சென்று அங்கே ஆய்வு நடத்தினார்கள். அதிலே நமது மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள்கூட அங்கே பங்கேற்ற செய்திகள் எல்லாம் வந்தன. அந்த ஆய்வுக் குழுவினுடைய அறிக்கையாகக்கூட இந்த அவையிலே ஓர் அறிக்கையை வைத்தால் அதில் விளக்கத்தை நம்மால் பெற்றிருக்க முடியும். நான் சென்ற ஆண்டு பேசுகிறபோதுகூட அந்த விளக்கத்தைக் கோரினேன். ஆனால், அது அளிக்கப்படவில்லை.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஜனவரி 27

*பிற்பகல் 2–00*

தொடர்ந்து இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவிலே குறிப்பிட்டுச் சொல்லப்படுகிற காரணம் என்பது, மழை, வெள்ளம் காரணத்தினாலே அவகாசம் போதுமானதாக இல்லை என்று காரணம் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு மழை, வெளளம என்பது ஏற்றுக்கொளளக்கூடிய ஒன்றுதான். ஆனால், ஒவ்வோர் ஆண்டும் இது தள்ளிக் கொண்டே வந்திருக்கின்றது என்பது யதார்த்தமான உண்மை. ஆகவே, குறிப்பாக நான் சொல்வது, இதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். இலேசான பிரச்சினையாக அதைக் கருதிவிட முடியாது. வேறுவிதமாக அதைத் தூண்டுவதற்கு, அது வேறு ஒரு நிலைக்குச் செல்வதற்கு வாயப்பெல்லாம் இருக்கிறது என்று கருதுவது உண்மைதான். ஆனால், அதே நிலையில் நாம் அரசியலமைப்புச் சடடர்தியாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே அதை நடத்துவதற்குரிய முயற்சி என்பது, அரசின் சார்பிலே செய்யப்படுகின்ற அந்த முயற்சி என்பது வலுவானதாக இல்லை என்பது என்னுடைய கருத்து. தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் முயற்சி எடுத்தீர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், அந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சியை நீங்கள் எடுக்கின்றபோது, அங்கே அது எப்படி நடைபெற்றது என்றால், அது ஒரு கண்துடைப்பு நாடகமாகத்தான் நடைபெற்றதே தவிர, உண்மையான தேர்தலாக, பதவி ஏற்கின்ற...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், அங்கே விழிபபுணர்வை ஏற்படுத்தியதைப் பற்றி அபாண்டமாகப் பழி சுமத்துகின்றார். நாடகம்போல் அங்கே நடந்ததே தவிர, அங்கே ஒரு விழிப்புணர்வை மக்களிடையே எடுத்துச் சொல்லவில்லை என்று கூறுகின்றார். முற்றிலும் அது தவறான தகவல்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, நான் விழிப்புணர்வு ஏற்படுத்தியதைத் தவறாகச் சொல்லவில்லை. தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். நான் அதனுடைய உணர்வு எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டுதான் பேசுகின்றேன். ஆகவே, நான் அதை வரவேற்றுதான் பேசுகின்றேன். சென்றவர்கள் அந்த அறிக்கையை அவைக்கு அளிக்க வேண்டுமென்றுதான் நான் சொன்னேனே தவிர, அதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய முயற்சியை நான் கொச்சைப்படுத்தவில்லை. தயவுசெய்து நான் சொல்லுவது, இந்திய தேசத்தில், குறிப்பாக நம்முடைய தமிழகத்தில், தந்தை பெரியார் பிறந்த



2006 ஜனவரி 27] [திரு. வை. சிவபுண்ணியம்]

மண்ணில், அண்ணா ஆண்ட மண்ணில், இப்படி ஒரு சமூக நீதிக் கொள்கையை வலுவாகக் கொண்டிருக்கின்ற இந்த மாநிலத்தில் அது நடைமுறைப்படுத்தபபடவில்லையே என்பதுதான் வேதனையே தவிர, இதிலே ஆளுகின்ற கட்சியா, எதிர்க் கட்சியா என்பதெல்லாம் பிரச்சினையல்ல. நம்முடைய தமிழ்நாட்டில் இந்த ஊராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த முடியவில்லை என்பது ஒட்டுமொத்தமாக நம் அனைவருக்குமே ஒரு பின்னடைவுதான். ஆகவே, இந்தக் கொள்கை நிலையிலிருந்து பார்க்கக்கூடியவர்களாக இருக்கின்ற நாம், இதில் வலுவான முயற்சியை எடுத்து, இந்தத் தேர்தலை நடத்தி, இப்படி ஒரு சுமையாக இருக்கின்ற அந்தப் பிரச்சினை என்பது ஒரு களங்கமாக மாறிக் கொண்டிருக்கின்ற நிலையைப் போக்குவதற்கான முயற்சியை வலுவாக எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, இப்படியே நீட்டித்துக் கொண்டேயிருப்பது என்பது வேறு விளைவுகளைச் செய்வதற்கான ஒரு முயற்சியைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறது என்ற வருத்தத்தை இந்தியக் கமயூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வெளிப்படுத்தி இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கினறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தேர்தல் கமிஷனால், வேட்பாளர்களாக யார் நிறுத்தப்படுகிறார்களோ, அவர்களே திரும்பப் பெற்றுக்கொணடால், அந்தத் தேர்தலுக்கான செலவுகள் அனைதகையுமே அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, தேர்தல் கமிஷனே அரசியல் கட்சிகளுக்கு ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றது. இதைக்கூட நம்முடைய அரசு அமல்படுத்துவதற்குத் தயாராக இல்லை. ஆகையால், யார் வேண்டுமானாலும இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திரும்ப வாபஸ் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது.**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகையதொரு வாசகத்தை அன்புகூர்ந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள் நாடு முழுவதற்கும நிறைய, ஏராளமான புள்ளிவிவரங்களைச் சொன்னார். தலித்கள் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள என்று சொன்னார் தமிழரசன் பேசும்போதுகூட பொதுத் தொகுதியிலே மாண்புமிகு முதலமைச்சர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் எப்படி தலித்களை நிறுத்தி வைத்து, வெற்றி பெற வைத்திருக்கின்றார்கள் என்பதையெல்லாம் சொன்னார். ஆகவே, ஒட்டுமொத்தமாக அப்படிச் சொல்வது முறையற்றது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அரசு எந்தளவுக்கு கடந்த காலங்களில் தேர்தல் நடத்தி, அந்த ஊராட்சிகளிலும் நம்முடைய ஆதி திராவிட மக்கள் பதவியில் அமர்வதற்கு எப்படி நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்கள் என்பதைத் தெளிவாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் free advice கொடுக்கின்றார்கள். அது என்ன advice? அது வலுவானதா? அது என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி நடத்தப்பட வேண்டிய சாதாரண தேர்தல், வரலாறு காணாத மழை மற்றும் வெள்ளம் காரணமாக, 22 மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட காரணத்தால், அந்தத் தேர்தலை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதே நேரத்தில் மக்களுடைய அடிப்படை வசதிகளைத் தேவைக்கேற்றாற்போல் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த நாலரை ஆண்டுகளில் பூர்த்தி செய்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அந்தப் பகுதியில் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றமுகத்தான், அந்த நான்கு ஊராட்சிகளுக்கும் தனி அலுவலர் பதவியினை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கின்றேன்.

## (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2-05

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்

### முகப்புரை

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble *for* the expression 'fifty–sixth', *substitute* the expression 'fifty–seventh' "

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 மற்றும் நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

### முகப்புரை

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the preamble *for* the expression 'fifty–sixth', *substitute* the expression 'fifty–seventh' "

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.





மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## 11. பன்னிரண்டாவது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையின் இந்தப் பன்னிரண்டாவது கூட்டத் தொடர் 13–1–2006 முதல் இன்று 27–1–2006 வரை மொத்தம் 11 நாட்கள் நடைபெற்றுள்ளது. 13–01–2006 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள். 20–1–2006 அன்று மாலை இடைக்கால நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளிக்கப்பட்டது.

| | |
|---|---|
| அவைக் கூட்டம் நடைபெற்ற நேரம் | — 36 மணி 26 நிமிடம் |
| அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்து வினாக்கள்–விடைகள உட்பட அனைத்து விவாதங்களிலும் பங்கு கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த மொத்த நேரம் (மேசையைத் தட்டும் ஒலி) | — 3 மணி 47 நிமிடம் 108 முறை |

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 27

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நான்கு நாட்கள் விவாதம் நடைபெற்றது. 15 உறுப்பினர்கள் விவாதத்தில் பங்குகொண்டனர். அவர்கள் உரையாற்றிய நேரம் 10 மணி 04 நிமிடம்.

இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின்மீது நான்கு நாட்கள் விவாதம் நடைபெற்றது. 17 உறுப்பினர்கள் அதில் பங்குகொண்டனர். பதிலுரை உட்பட மொத்த விவாத நேரம் 10 மணி.

6 நாட்கள் வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்றன. மொத்தம் 62 மூல வினாக்கள் அவையில் விடையளிக்கப்பட்டு, அவற்றில் 199 துணை வினாக்கள் கேட்கப்பட்டன.

பிற்பகல் 2-10

பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையின் 12 கூட்டத் தொடர்கள் 22-5-2001 முதல் இன்று 27-1-2006 வரை நடைபெற்றுள்ளது. இந்த ஐந்தாண்டுகளில் இப்பேரவை நிறைவேற்றிய அலுவல்களையும், இதர சில விவரங்களையும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

| | |
|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் | — 188 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் | — 47 |
| அவைக் கூட்டம் நடைபெற்ற நேரம் | — 755 மணி 39 நிமிடம் |
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானங்களின்மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | — 25 |
| உரையாற்றிய உறுப்பினர்கள் | — 168 பேர் |
| உரையாற்றிய நேரம் | — 70 மணி 56 நிமிடம் |

**நிதி அலுவல்கள்—**

| | |
|---|---|
| வரவு-செலவுத் திட்டங்களின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | — 30 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | — 155 பேர் |
| உரையாற்றிய நேரம் (அமைச்சர் பதிலுரை உட்பட) | — 87 மணி 23 நிமிடம் |



2006 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

**மானியக் கோரிக்கைகள்:**

| | |
|---|---|
| 5 ஆண்டுகளில் விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள் | — 82 |
| உறுப்பினர்களின் மொத்த உரைகள் | — 671 |
| உரையாற்றிய நேரம் (அமைச்சர்கள் பதிலுரை உட்பட) | — 259 மணி 28 நிமிடம் |

**வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட):**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | — 33,576 |
| அனுமதிக்கப்பெற்றவை | — 28,991 |
| அவையில் முன்மொழியப்பட்டவை | — 4,357 |

**வினாக்கள்-விடைகள்:**

| | |
|---|---|
| 22-5-2001-ல் இப்பேரவைக் கூட்டம் தொடங்கியது முதல் 25-1-2006 வரை 5 ஆண்டுகளில் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் | — 88,777 |
| அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | — 195 |
| மொத்தம் அனுமதிக்கப்பெற்றவை | — 87,332 |
| உடுக்குறியிட்டவை | — 20,652 |
| உடுக்குறியிடாதவை | — 27,184 |

அனுமதிக்கப் பெற்றவற்றில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:

| வரிசை எண் | உறுப்பினர் பெயர்/கட்சி | வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திரு. ஐ. கணேசன் (பா.ம.க.) | 15,630 |
| 2. | திரு. நா. சந்திரமோகன் (அ.இ.அ.தி.மு.க.) | 9,912 |
| 3. | திரு. கோவை தங்கம் (இ.தே.கா.) | 9,450 |
| 4. | திரு. ப. அரசன் (பா.ஜ.க.) | 7,318 |
| 5. | திரு. ஜி.கே. மணி (பா.ம.க.) | 3,436 |

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 27

உடுக்குறியிட்ட வினாக்கள் (அவையில் விடையளிக்கப்பட்டவை) –

அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:

| | | |
|---|---|---|
| 1. திரு. பி.கே. சேகர்பாபு | .. | 33 வினாக்கள் |
| 2. திரு. நா. சந்திரமோகன் | .. | 29 வினாக்கள் |
| 3. திரு. வெ. ஏழுமலை | .. | 24 வினாக்கள் |
| 4. திரு. பி.எச். பால மனோஜ் பாண்டியன் | .. | 23 வினாக்கள் |
| 5. திரு. ஐ. கணேசன் | .. | 21 வினாக்கள் |

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:

| | | |
|---|---|---|
| 1. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் | .. | 135 வினாக்கள் |
| 2. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | .. | 127 வினாக்கள் |
| 3. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | .. | 116 வினாக்கள் |
| 4. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | .. | 113 வினாக்கள் |
| 5. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | .. | 95 வினாக்கள் |
| வினாக்கள்–விடைகள் எடுத்துக்கொள்ளப் பெற்ற மொத்த நாட்கள் | .. | 92 |
| வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் | .. | 61 |
| நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் | .. | 12 மணி 09 நிமிடங்கள் |
| குறுகிய கால வினாக்கள் | .. | 11 |



2006 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| உடுக்குறியிடாத வினாக்கள் அவைமுன் வைக்கப்பெற்றவை | .. | 8,480 |
| உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 6,159 |

**சிறப்புக் கவன ஈர்ப்புகள்:**

| | | |
|---|---|---|
| அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருள்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு–Special Mention–என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை | — | 51 |
| மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை | — | 17 |

**கவன ஈர்ப்புகள்:**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | — | 4,084 |
| கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை | — | 1,102 |
| அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை | — | 130 |
| உறுப்பினர் இருக்கையில் இல்லாமல் அவையில் வைக்கப்பெற்றவை | — | 10 |
| ஒவ்வொரு கூட்டத் தொடரின் இறுதி நாளன்றும் அவைமுன் வைக்கப் பெற்றவற்றின் எண்ணிக்கை | — | 155 |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:**

| | | |
|---|---|---|
| அவையில் எழுப்பப்பெற்றவை | — | 11 |
| அனுமதி மறுக்கப்பெற்றவை | — | 3 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை | — | 8 |
| உரிமைக் குழுமுன் நிலுவையிலுள்ளவை | — | 5 |
| அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள் | — | 3 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள்:**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | — | 186 |
| நிறைவேற்றப்பெற்றவை | — | 185 |
| மூன்றாவது கூட்டத் தொடரில் ஆய்வுக் குழுவிற்கு விடப்பெற்றது | — | 1 |
| மூன்றாவது கூட்டத் தொடரில் ஆய்வுக் குழுவிற்கு விடப்பெற்று திரும்பப்பெறப்பட்டது | — | 1 |
| மூன்றாவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மறு ஆய்விற்கு விடப்பெற்று திரும்பப்பெற்றது | — | 1 |
| பேரவையில் நிறைவேற்றப்பட்டு தீர்மானத்தின்மூலம் திரும்பப்பெற்றது | — | 1 |

**ஒத்திவைப்புத் தீர்மானம்:**

| | | |
|---|---|---|
| இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க அனுமதி கேட்டு, விளக்கம் பெற்று இசைவு மறுக்கப்பெற்றது | — | 1 |

**அரசினர் தனித் தீர்மானம்:**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | — | 5 |
| நிறைவேற்றப்பெற்றவை | — | 5 |

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்:**

| | | |
|---|---|---|
| பொதுக் கணக்குக் குழு | — | 296 |
| பொது நிறுவனங்கள் குழு | — | 200 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு | — | 65 |
| அரசு உறுதிமொழிக் குழு | — | 43 |
| மதிப்பீட்டுக் குழு | — | 37 |
| மனுக்கள் குழு | — | 135 |





| | | |
|---|---|---|
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | — | 16 |
| அவை உரிமைக் குழு | — | 3 |
| விதிகள் குழு | — | 1 |

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்:**

| | | |
|---|---|---|
| (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும் | — | 1,046 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | — | 1,855 |

**உறுப்பினர்கள் வருகை:**

22-5-2001 முதல் இன்று வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள்:

1. திருமதி வி. அழகம்மாள்
2. திரு. மா. இராஜசேகர்
3. திரு. வெ. ஏழுமலை
4. டாக்டர் திருமதி ஆ. ரோகிணி
5. திருமதி ஆர். சசிகலா
6. திரு. கே.கே. சிவசாமி
7. திருமதி செ. சுந்தராம்பாள்
8. திருமதி சி.எம். சூரியகலா
9. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்
10. திரு. பி.கே.டி. நடராஜன்
11. திரு. ப. நீலகண்டன்
12. திரு. பி.எம். நரசிம்மன்
13. திரு. கே.எஸ். பழனிசாமி
14. திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்

15. திரு. டி.பி. பொன்னம்பலம்

16. திரு. எஸ். மாணிக்கராஜ்

17. திரு. என். ரெங்கநாதன்

18. திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்

19. திருமதி எஸ். ராஜம்மாள்

20. திரு. வி.ஆர். ராஜாங்கம்

21. திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்

| | | |
|---|---|---|
| பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் | — | 90,010 பேர் |
| இப்பேரவையின் ஐந்தாண்டுக் காலத்தில் சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | — | 4,402 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | — | 9,938 |

பிற்பகல் 2–15

**நடவடிக்கைக் குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர) | — | 3,418 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள் | — | 39,400 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | — | 10,093 |
| தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | — | 2,592 |

சட்டமன்றத்தின் இந்த நிறைவு நாள் கூட்டத்தொடரில் ஏக்கத்தோடு கூடிய மனநிறைவோடு என் எண்ணங்களை அவை உறுப்பினர்களோடு பகிர்ந்துகொள்கிறேன். புகழ்மிக்க தமிழகத்தின் போற்றுதலுக்குரிய பாரம்பரியமிக்க இந்தச் சட்டப் பேரவையில் – வெல்லிங்டன் பிரபுவும் – லேடி வெல்லிங்டனும் வழங்கிய இந்த ஆசனத்தில் பாண்டிய





நாட்டின் ஒரு சிற்றூரில் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அமர வைத்த அன்னை, என் குல தெய்வம், எங்கள் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவிக்கு நெஞ்சம் நெகிழ நன்றி கூறுகிறேன்.

பேரவையின் நடவடிக்கைகளை நடத்திச் செல்வதில் எனக்குத் தோள் கொடுத்துத் துணை நின்ற பேரவைத் துணைத் தலைவர் சகோதரர் வரகூர் அருணாசலம் அவர்களுக்கும், தலைமைக் கொறடா சகோதரர் பி.எம். நரசிம்மன் அவர்களுக்கும், அவை முன்னவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், நேரில் பழகும்போது நேசத்தோடு உறவாடும் இனிய இயல்பு கொண்ட எதிர்வரிசைத் தலைவர்களுக்கும், அனைத்துக் கட்சிகளின் மாண்பமை உறுப்பினர்களுக்கும் என் நன்றி. பேரவை நிகழ்வுகளை வரையறுப்பதிலும், தொகுத்துத் தருவதிலும் முகம் சுளிக்காமல் கடமையாற்றும் பேரவைச் செயலாளர் திரு. இராசாராமன் அவர்களுக்கும், ஏனைய செயலாளர்கள், பேரவையின் அலுவலர்கள் அனைவருக்கும் என் அன்பான நன்றி மலர்கள்.

சட்டமன்ற நிகழ்வுகளைப் பொது மக்களுக்குத் தக்கமுறையில் தெரிவித்த தொலைக்காட்சிகள், பத்திரிகை நிருபர்கள், செய்தியாளர்கள், நிறுவனங்கள் ஆகியோருக்கு என் அன்பு கலந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

சீரிய திட்டங்கள், சிறந்த கொள்கை முடிவுகள், தமிழகத்தின் வாழ்வுக்கும், வளத்துக்கும் உரிய பெரிய அறிவிப்புகள், ஆரோக்கியமான வாதப் பிரதிவாதங்கள் பேரவையில் பதிவு செய்யப் பெற்றிருக்கின்றன. சில கசப்பான நிகழ்வுகள் பேரவையில் நிகழ்ந்திருக்கக்கூடும். அந்தக் கசப்புகளை எட்டிக்காய் கசப்பாகக் கருதாமல், பாகற்காய் கசப்பாக ஏற்றுக்கொள்கிறேன். பேரவைப் புறக்கணிப்புக்கள் – வெளிநடப்புக்கள், பேரவைத் தலைவரை எதிர்த்து இங்கும், பேரவை வளாகத்திலும் முழங்கிய முழக்கங்கள் கட்சி அரசியலின் காரணமாக நிகழ்ந்தவை என்பதால் அவை எதுவும் என் நெஞ்சை நெருடவில்லை. 'வெறுப்பு என்பது தலைகீழாகக் காட்டப்படும் அன்பு' என்ற அறிஞர் அண்ணாவின் பொன்மொழியை எண்ணி இதயத்தில் இதம் பெறுகிறேன். நான் செய்த சில வெளியேற்றங்கள், எடுத்த நடவடிக்கைகள் பேரவையில் மோதல் போக்கைத் தவிர்க்க பேரவைத் தலைவர் என்ற கடமையின்பாற்பட்டுச் செய்தவை என்பதை எதிர்வரிசை உறுப்பினர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சுமார் 20 ஆண்டுகளுக்குமுன் என்மீது C.B.I. தொடுத்த வழக்கு மீண்டும் புதுப்பிக்கப்பட்டபோது, நான் பேரவைத் தலைவர் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என வெளியே சில விமர்சனங்கள் எழுந்தபோது – இந்தப் பேரவையில் எழுந்து நின்று, 'பேரவைத் தலைவர் மீது நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம், அவர் பதவி விலகத் தேவையில்லை' என மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பேரவையில் அறிவித்ததை (மேசையைத் தட்டும் ஒலி) என் வாழ்நாளில் நான் பெற்ற உயர்ந்த நற்சாட்சிப் பத்திரமாகக் கருதுகிறேன். அவர்கள் அன்று தெரிவித்த நம்பிக்கை வரிகள் என் இதயத்தில் பதிந்த கல்வெட்டு! என் உயிரில் எழுதிய உயில். 'எனக்கொரு தாய் இருக்கின்றார்; அவர் என்றும் என்னைக் காக்கின்றார்' (மேசையைத் தட்டும் ஒலி) எனப் புரட்சித் தலைவர் இசைத்த பாடல் வரிகள் அன்று நெஞ்சில் ஒலித்தன. அந்த வழக்கு பற்றி ஓர் ஐயத்தைக் கிளப்பி அரசின் விளக்கத்தைக் கேட்ட மாண்புமிகு சட்டமன்றக் காங்கிரஸ் தலைவர் S.R.B. அவர்கள்கூட என்மீது எந்த அவநம்பிக்கையையும் புலப்படுத்தவில்லை. அவருக்கும், என்மீது நம்பிக்கை கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

*பிற்பகல் 2–20*

சட்டமன்றம் ஒரு தேன்கூடு என்றால் அதன் இராணித் தேனீ மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தகைய இன்றியமையா அரசுப் பணிகள் இருந்தாலும், அவையெல்லாவற்றையும்விட சட்டமன்றப் பணிக்கு முதன்மையிடம் தந்து, நித்தம் நித்தம் சட்டமன்றத்திற்கு வந்து, ஆளுங்கட்சி உறுப்பினர்களோ, எதிர்க்கட்சி உறுப்பினர்களோ எவராயினும், அவர்கள் பேசுவதை எழுத்து எழுத்தாகக் கவனித்து, விளக்கமளிக்க வேண்டிய நேரத்திலே விளக்கமளித்து, அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகள் நியாயமானவை என்றால் அவற்றை விரைந்து நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்ட (மேசையைத் தட்டும் ஒலி) பைந்தமிழில் வார்த்தைகளைத் தேடுகிறேன். இந்தச் சட்டமன்ற வரலாற்றிலும் அவர் இமாலயச் சாதனையைச் செய்து பிரமிக்க வைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பேரவைக் காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வினாக்கள்—விடைகள் உட்பட அனைத்து விவாதங்களிலும் பங்கு கொண்டு விளக்கம் அளித்த மொத்த நேரம் 48 மணி 52 நிமிடம். (மேசையைத் தட்டும் ஒலி) 1,614 முறை அவர்கள் ஒவ்வொரு விவாதத்திலும் பங்குகொண்டிருக்கிறார்கள்.





ஏழ்மையும், இல்லாமையும், கல்லாமையும்தான் தமிழகத்து மக்களின் தலைவிதி என்றால் அதை மாற்றிய விதி ஒன்றுண்டு. அந்த விதி தான் 110–வது விதி. (மேசையைத் தட்டும் ஒலி) 110–வது விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 52 அறிக்கைகளை அளித்துள்ளார்கள். 2001–லிருந்தே இந்த அறிவிப்புக்களை அவர்கள் தந்ததிலிருந்து ஒன்றைப் புரிந்துகொள்ளலாம். இந்த அறிவிபபுக்கள் தேர்தலை எண்ணிச் செய்யப்பட்டவை அல்ல. தமிழ் மக்களின் வாழ்வில் மகத்தான மாறுதலை எதிர்நோக்கிச் செய்யப்பட்டவை. (மேசையைத் தட்டும் ஒலி) சில குறிப்புகளைக் கோடிட்டுக் காட்டுகிறேன். 110–ன்கீழ் அவர்கள் அளித்த அறிக்கைகளிலே சில அம்சங்கள்.

**2001–ல்—**

- அரிசியையும், நெல்லையும் மாநிலத்திற்கு வெளியே லெவி செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தல் மற்றும் நெல்லுக்கு ஆதார விலையுடன் ஊக்கத் தொகை அளித்து கொள்முதல் செய்தல்.
- பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை தொழில் தீர்ப்பாயத்திற்கு விடுதல் மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்குதல்.
- வட்ட கூட்டுறவு வீட்டு வசதி கடனுக்கான வட்டி, அபராத வட்டி, சேவைக் கட்டணம் தள்ளுபடி.

**2002–ல்—**

- பொது விநியோகத் திட்டத்திற்காக கொள்முதல் செய்யும் நெல்லுக்குக் கூடுதல் விலை அளித்தல்.
- சென்னை நகரில் குடிநீர் விநியோகம் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
- திரையரங்குகளில் நுழைவுக் கட்டணச் சீரமைப்பு.
- தமிழக மின் உற்பத்திப் பெருக்குத் திட்டம் மற்றும் மத்திய தொகுப்பிலிருந்து மின்சாரம் வழங்கப்படுதல்குறித்த மத்திய எரிசக்தித் துறை அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை விவரம்.
- பட்டுப் புடவையின் மீதான ஆடம்பர வரி இரத்து.
- விசைத்தறிகளுக்கான கூடுதல் மின் கட்டண உயர்வு இரத்து.
- காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளுக்குத் தீபாவளிப் பரிசு.

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 27

**2003-ல்—**

- விவசாயிகளுக்கு வரிகள் இரத்து, கூட்டுறவு கடன்கள் வட்டி தள்ளுபடி மற்றும் சலுகைகள்.
- திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம் மற்றும் ஆன்மீகப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- புது தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவ நல்கை தொகை.
- குழந்தையின் பெயருக்கு முன்னால் தாய்/தந்தை பெயரின் முதல் எழுத்தை 'Initial' பயன்படுத்துவது பற்றி வெளியிடப்பட்ட ஆணை, 'Citizen' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பெண்பால் தமிழ்ச் சொல்லாக 'குடிமகள்' என்ற சொல்லைப் பயன்படுத்துதல்.
- இராணிமேரி கல்லூரி முதல் மாடி வராண்டா இடிந்து விழுந்ததால் ஊனமடைந்த மாணவி எம். ஷீலாவிற்கு ரூ.9 இலட்சம் நிதியுதவி.
- காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் கொலையுண்ட மேலாளர் திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி.

**2005-ல்—**

- பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்கான சலுகைகள் மற்றும் அரசுப் பணியிடங்கள்.
- சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு.
- காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளின் பணியாளர்களுக்குப் படிகளை உயர்த்தி வழங்குதல்.
- மாணவருக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல் மற்றும் பெற்றோரை இழந்த மாணவருக்கு வைப்பு நிதி வழங்குதல்.
- சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு புதிய குடியிருப்புகள் கட்டித் தருதல்.
- விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தல்.



2006 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

- விரைவு நீதிமன்றங்கள் 31-3-2005-க்குப் பிறகும் செயல்பட மாநில அரசு நிதி வழங்குதல்.
- கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.
- சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் மீன்பிடி தொழில் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு.
- ஜப்பான் நிதி நிறுவன உதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்துதல்.
- சென்னை கிரீம்ஸ் சாலையில் வணிக வரித் துறை ஆணையர் புதிய அலுவலகம் கட்டுதல்.
- நோக்கியா நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் தொழிற்சாலை நிறுவுதல்.
- ஊராட்சிப் பணியாளர்களுக்குத் தொகுப்பூதியம் உயர்த்துதல்.
- பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்.
- உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய உயர்வு வழங்குதல்.
- விவசாயிகள், நெசவாளர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்கு அபராத வட்டி, வட்டி ஆகியவற்றை தள்ளுபடி செய்தல்.
- வனத் துறை பணியாளர்களுக்குச் சலுகைகள்.

**2006-ல்—**

- வேளாண், கால்நடை மருத்துவம், ஊரகத் தொழில், சிறு தொழில் மற்றும் அரசின் நலத் திட்டங்கள் குறித்து அரசின் சார்பில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் தலைமையிடத்திலும் பொருட்காட்சி நடத்தவும், அதில் 'ஊரக இளைஞர் விளையாட்டு விழா' நடத்தவும், அதற்கு இலவச அனுமதி வழங்கவும் ஆணை.
- திருமதி ஏ. கிருஷ்ணவேணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினருக்கு கருணைத் தொகை ரூ.5 இலட்சம் மற்றும் வாழ்நாள் முழுதும் குடியிருக்க வாடகையின்றி அரசு குடியிருப்பு ஒன்று வழங்குதல்.

- ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியர் தங்கிப் பயில புதிய விடுதிகள் கட்டுதல், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு அகராதி மற்றும் அட்லஸ் வழங்குதல்

இப்போது நான் ஓர் அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். 2006 மே திங்கள் இறுதி வாரத்திலிருந்து மீண்டும் இந்த அறிவிப்புக்கள் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2–25*

மக்களுக்குக் கடமையாற்றுவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழிபாடாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்பதுதான் மகத்தான உண்மை, மறுக்கமுடியாத உண்மை.

வினாடி முள்ளையும் வெல்லும் சுறுசுறுப்போடு தமிழ் மக்களின் வாழ்வை உயர்த்துவதில் சீரக முனை அளவுகூட சிரத்தை குன்றாமல், சத்தியப் பார்வையோடு, சலியாத உழைப்போடு அவர் ஆற்றிவரும் பணிகளுக்குத் தமிழகம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

ஆலிவர் கோல்டு ஸ்மித் பற்றி ஒரு திறனாய்வாளன் குறிப்பிடும்போது, ‘அவன் தொடாத துறை இல்லை, தொட்டதைப் பொன்னாக்காமல் விட்டதும் இல்லை' என்றான். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சித் துறைகள் எதனையும் தொடாமல் விட்டதில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தொட்டது பொன்னாகும் வரை அதை விட்டதுமில்லை.

**“இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்”**

எனும் வள்ளுவரின் குறளுக்கிணங்க, தமிழகத்திற்கு வந்த சோகங்கள் அனைத்தையும் வென்று மக்களுக்குச் சுகத்தைத் தந்தவர் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அவர் உரம் பெற்றவர் – துன்பங்கண்டு கலங்காத உள்ள உரம் பெற்றவர்;





தரம் பெற்றவர் – எதிரிகளும் உள்ளூற மதிக்கும் தரம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எவருக்கும் தாழாத சிரம் பெற்றவர்;

அன்னையென அள்ளித்தரும் கரம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மறம் பெற்றவர் – பகையை நடுங்க வைக்கும் மறம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

திறம் பெற்றவர் – அனைத்துத் துறைகளிலும் பன்மொழிகளிலும்

திறம் பெற்றவர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நிறைவாக ஒன்று.

வரம் பெற்றவர் – மீண்டும் முதல்வராய் வா தமிழ் மக்களிடம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வரம் பெற்றவர். வரம் பெற்றவர் – மீண்டும் முதல்வராய் வர தமிழ் மக்களிடம் வரம் பெற்றவர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

செம்பொன் மேனி, செந்தமிழ் நாயகி அன்னையை வணங்கி, அனைத்து உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. திருவாளர்கள் ஆக்ஷன்-எய்டு இண்டர்நேஷனல் இந்தியா, சென்னை என்ற நிறுவனம், அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அந்த நிறுவனத்திற்கு விற்பனை செய்த குடும்பப் பயனுக்கான பொருட்கள் அடங்கிய சிப்பங்களுக்கு மறுவிற்பனை வரியைப் பொறுத்தவரையில் விலக்கு அளித்தது குறித்து வணிக வரித் துறையின் 8-9-2005 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. வணிக வரித் துறையில் உருவாகி, அதன் பின்னர் திருத்தப்பட்டவாறான 30-11-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/வ.வ./892 (e-4) 2001 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் மற்றும் வணிக வரித் துறையில் 30.11.2001 ஆம் நாளன்று உருவாகி 30-11-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் III - பிரிவு 1 (a) ல் வெளியிடப்பட்ட SRO A 72 (a-2) / 2001 ஆம் எண் கொண்ட முந்தைய அறிவிக்கையினை இரத்து செய்தும், வணிக வரி உதவி ஆணையாளர், வணிக வரி துணை ஆணையாளர்



ஆகியோரை உள்ளாட்சிப் பகுதிக்கான மேல்முறையீட்டு அதிகாரிகளாக நியமித்தது குறித்து வணிக வரித் துறையின் 2-1-2006 ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் பொருட்களை கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001)14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. வணிகவரி-அறநிலையத் துறையில் உருவாகி, அதன் பின்னர் திருத்தப்பட்டவாறான 20-2-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/ வ.வ.அ.நி./996 (n-1)/90 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் மற்றும் வணிகவரி-அறநிலையத் துறையில் உருவாகி, 20-2-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/வ.வ.அ.நி./ 996 (n-2)/90 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் வணிக வரித் (சி2) துறையின் 2-1-2006 ஆம் நாளிட்ட 3 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவு மீதான வரிச் சட்டம் 18 (4) (தமிழ்நாடு சட்டம் 13/1990) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. (i) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் திருத்தம் செய்தும் (ii) ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிமெண்ட் விற்பனை மீது செலுத்த வேண்டிய மேல்வரியினை விலக்களித்தும் மற்றும் (iii) ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுளள சிமெண்ட் விற்பனை மீது செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்தும் வணிக வரித் துறையின் 2-1-2006 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. 17-3-1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II பிரிவு I-ல் வெளியிடப்பட்ட 17-3-1986 ஆம் நாளிட்ட - II (1) / வணிக வரி மற்றும் அறநிலையத் துறை / 47 (g) /86 ஆம் எண்ணுள்ள வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் அறிவிக்கையின்படி வானொலிப் பெட்டி பாகங்களின் விற்பனைக்காக

வணிகர்களால் வசூலித்த வரி மேம்பாட்டுத் தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 24-10-2005 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*64. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு விதிகள் இயற்றியது குறித்து 29-12-1999 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (AB-2) துறையின் 528 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1969 ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு சட்டம் (மத்திய சட்டம் 18/1969) 30 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*65. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகள் இயற்றியது குறித்து 7-10-2005 ஆம் நாளிட்ட பொதுத் (நிருவாகம்-1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 989 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 22/2005) 29 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*66. 2004-2005 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*67. 2004-2005 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*68. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*69. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*





*70. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*71. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் முப்பத்து ஒன்றாம் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*72. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*73. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்திய சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*74. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*75. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2004-2005 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*76. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2004-2005 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*83. 2004-2005 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை.*

[2006 ஜனவரி 27

84. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2003–2006)

85. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2003–2006)

86. 2005–2006 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

87. 2005–2006 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

88. 2005–2006 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

89. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை)

90. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை)

91. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 117 வரை)

92. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 154 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டன.)



2006 ஜனவரி 27]

# இணைப்பு - I

(1ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## (அ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 4 முதல் 6 வரை)*

## பட்டியல் 4

1—

### பயிற்சிக் கூடம்

**வினா எண் 4908—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளுக்காக பின்தங்கிய மற்றும் ஆதி திராவிட மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் தாலுகாக்களைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

2—

### அலுவலக நேரங்கள்

**வினா எண் 6330அ—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள போக்குவரத்து நெரிசலைக் களைய அலுவலகங்களின் நேரங்களை மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

அரசு அலுவலகங்களின் வேலை நேரங்களை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**3—**

**ஓய்வு பெறும் திட்டம்**

**வினா எண் 7593—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு ஊழியர்கள் தாமாக முன்வந்து ஓய்வுபெறும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

(அ) மாநில அரசு ஊழியர்கள் தாமாகவே முன்வந்து ஓய்வுபெறும் திட்டம் ஏற்கெனவே இந்த மாநிலத்தில் நடைமுறையில் உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**4—**

**சாலை வசதி**

**வினா எண் 588—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, திருத்தங்கல்—செங்கமலநாச்சியார்புரம் வழியாக ஸ்ரீவில்லிப்புத்தூர் சாலை இணைப்புச் சாலை 5 கி.மீ. வரை உள்ளதைச் செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் 30-5-2002-ல் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.



**5—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 1998—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம்-முதுகம்பட்டி வரையிலான சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இச்சாலை சீர் செய்து செப்பனிடப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் சில பகுதிகள், பழுதடைந்துள்ள சாலைப் பகுதிகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழும் மற்றும் பேருந்து செல்ல இயலாத சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பழுதடைந்துள்ள சாலை, வரும் நிதியாண்டின் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**6—**

**BAR வசதி**

**வினா எண் 9360—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உரிமம் பெற்ற மதுக் கடைகளில் பல இடங்களில் bar நடப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் கள்ளத்தனமாக "Bar" நடத்திய குற்றங்களுக்காக முறையே 2,177 மற்றும் 909 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 61 மற்றும் 127 மதுக்கடைகளின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டன.

23-1-2002 முதற்கொண்டு தனியார் மதுபானக் கடைகளில் மதுபான அருந்தகங்கள் திறக்க அனுமதியளிக்கப்பட்டன. 29-11-2003 முதற்கொண்டு, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளையும் டாஸ்மாக் மட்டுமே ஏற்று நடத்த ஆரமபித்த பிறகு தேவையான இடங்களில் மதுபான அருந்தகங்களை டாஸ்மாக் நிறுவனமே நிறுவி அவற்றை நடத்தி வருகின்றது. தவிர, வேறு இடங்களில் கள்ளத்தனமான 'Bar'கள் நடத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட நபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

## மெத்தனால் இரசாயனப் பொருள்

**வினா எண் 9547—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விஷ சாராய மரணங்களுக்கு மெத்தனால் இரசாயனப் பொருள் காரணம் என்பதால் அதைத் தடை செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு திரிந்த சாராவி மீத்தேல் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளின்கீழ் மெத்தனால் இருப்பு வைதது பயன்படுத்திட டி.எல்.2 உரிமம் வழங்கப்படுவதால் இந்த உரிமத்தின்மூலம் மெத்தனால் பயனபடுத்துவோரைக் கட்டுப்படுத்தவும்,



தவறாகப் பயன்படுத்துவோரைத் தண்டிக்கவும் இயலும். மேலும் டி.எல்.2 உரிமம் வழங்கும்போது உரிய அலுவலர்கள் மூலம் தக்க விசாரணை மேற்கொண்டு உண்மைத் தன்மையை அறிந்து அதன் பிறகே வழங்கப்படுகிறது. எனவே, மெத்தனாலைத் தடை செய்யும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை.

(ஆ) மெத்தனாலைத் தடைசெய்யும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை என்பதால் இவ்வினா எழ வாய்ப்பில்லை.

8—

## மதுபானக் கடைகள்

**வினா எண் 14560—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனுமதி இல்லாமல் 'Bar' நடத்தும் மதுக் கடைகளைத் தடை செய்ய அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய் துறை அமைச்சர்:**

29-11-2003 முதல் மாநிலம் முழுவதும் மதுக் கடைகள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் (TASMAC) ஏற்று நடத்தப்பட்டு வருகிறது. இம்மதுக்கடைகளில் 'Bar'கள் நடத்துவது குறித்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே முடிவு செய்து அமல் செய்யப்பட்டு வருவதால், அனுமதி இல்லாமல் 'Bar' நடத்துவது என்பதற்கு இடமில்லை.

9—

## மதுபானக் கடை

**வினா எண் 28180—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், தும்மன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் மதுபானக் கடை வைக்க அக்கிராமத்து மக்கள் அனுமதிக்காததன் அடிப்படையில் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதால் அங்கு கடை வைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மதுபானக் கடை அமைப்பது தொடர்பாக தும்மன்பட்டி கிராமப் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தற்பொழுது அங்கு மதுபானக் கடை அமைக்கப்பட்டுள்ளது.

**10—**

## மதுபானக் கடைகள்

**வினா எண் 29758—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் மதுபானக் கடைகள் எத்தனை உள்ளன?

(ஆ) ஏலம் போகாத கடைகள் இன்னமும் உள்ளனவா?

(இ) ஆம் எனில், ஏலம் போகாததற்கான காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் தற்பொழுது 88 மதுபானக் கடைகள் உள்ளன.

(ஆ) மற்றும் (இ) 29-11-2003 முதற்கொண்டு இம்மாநிலம் முழுவதிலும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) மதுபான சில்லறை விற்பனையை ஏற்று நடத்தி வருகிறது. தேவையான இடங்களில் மதுபானக் கடைகளை அக்கழகமே அமைத்து வருவதால் கடைகள் ஏலம் போகாமலுள்ள நிலை எழவில்லை.

**11—**

## வாகன விபத்துகள்

**வினா எண் 38731—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதால் வாகன விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் மதுக்கடைகளைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாகன விபத்துகள் அதிகமாக நடைபெறுவது மதுபானங்கள் அருந்திவிட்டு வாகனங்கள் ஓட்டுவதால் மட்டுமே வாகன விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன என்று கூறமுடியாது. மேலும், தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் மதுபானக் கடைகள் அமைக்கப்படுவது தடுக்கப்பட்டால் மட்டுமே வாகன ஓட்டுநர்கள் மதுபானத்தை நாடிச் செல்வதைத் தடுக்க முடியாது. ஏனெனில், நெடுஞ்சாலையிலிருந்து சிறுதொலைவில் அமையப் பெற்றுள்ள மதுபானக் கடைகளை அவர்கள் நாடிச் செல்லக்கூடிய வாய்ப்புள்ளது. குடித்துவிட்டு வாகன ஓட்டுநர்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படும் வாகன விபத்துகளைத் தடுக்க காவல் துறையினர் தேசிய நெடுஞ்சாலைகளில் ஓடும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து, குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்களின் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்து வருவதால் நெடுஞ்சாலைகளில் வாகன விபத்துகள் தவிர்க்கப்படுகின்றன. எனவே, தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள மதுபானக் கடைகளைத் தடை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**12—**

## சாலை வசதி

**வினா எண் 42532—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், கொடிமங்கலம் சாலை சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலை மேம்படுத்தப்பட்டு, வாகன போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

**13—**

**உரிமம் வழங்குதல்**

**வினா எண் 43513—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனமகிழ் மன்றங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் அயல்நாட்டு மது மற்றும் பீர் வகைகள் சில்லறை விற்பனை செய்ய உரிமம் வழங்கும் போது டெபாசிட் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வசூல் செய்யப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மனமகிழ் மன்றங்கள் (கிளப்) மற்றும் தங்கும் விடுதிகளில் (ஓட்டல்) அயல்நாட்டு மது மற்றும் பீர் வகைகள் ஆகியவைகளை கிளப் உறுப்பினர்கள் மற்றும் ஓட்டலில் தங்கும் நபர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என விதிகளில் உள்ளது. அதன்படி உரிமம் அதாவது எப்.எல்.2, எப்.எல்.3 உரிமங்கள் வழங்கும்போது உரிமத்திற்குரிய டெபாசிட் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) ஆம், ரூ.50,000/- வசூலிக்கப்படுகிறது.

**14—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 50836—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

மலைப்பகுதி சாலை மேம்பாட்டுக்காக சிறப்புத் திட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**15—**

**காவல் கட்டுப்பாடு**

**வினா எண் 59915—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் கஞ்சாச் செடிகள் அறவே ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன? எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியின் மேற்குத் தொடர்ச்சி மற்றும் மலைப் பகுதிகளில், கஞ்சாச் செடிகளைப் பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகளை அறவே ஒழிக்கும்பொருட்டு, மாவட்டக் காவல் துறை, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் வனத் துறை ஆகிய மூன்று அரசு முகமைகளால், தகுந்த தகவல் அமைப்பு, தனித்தனியாக உருவாக்கப்பட்டு, தகவல் கிடைக்கும் போதெல்லாம், இந்த முகமைகளால், திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு கஞ்சாச் செடிகளை அறவே ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**16—**

**மதுபானக் கடை**

**வினா எண் 72875—திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி, அரசு தாவரவியல் பூங்கா அருகில் இருதய ஆண்டவர் திருக்கோயில், காது கேளாதோர் பள்ளி, ஆதிதிராவிட பெண்கள் தங்கும் விடுதி, ஆளுநர் மாளிகை, அரசுக் குடியிருப்பு எல்லாம் உள்ளதாலும் 2-3-2005 அன்று திறக்கப்பட்ட மதுபானக் கடைக்கு எல்லா பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவிப்பதாலும், பதற்றமான நிலைமை இருப்பதாலும், மேற்படி மதுபானக் கடையை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

விதிகளின்படி நகராட்சிப் பகுதியிலுள்ள மதுபானக் கடையானது வழிபாட்டு இடம் அல்லது கல்வி நிறுவனம் ஆகியவற்றிலிருந்து 50 மீட்டர் தூரத்திற்குள் இருத்தலாகாது. ஆனால், புனித இருதய ஆண்டவர் மேல்நிலைப் பள்ளி, காதுகேளாதோர் பள்ளி மற்றும் புனித இருதய ஆண்டவர் தேவாலயம் ஆகியவை மேற்சொன்ன மதுபானக் கடையிலிருந்து சுமார் 250 மீட்டருக்கு அப்பால் அமைந்துள்ளன. எனவே, இந்த மதுபானக் கடையானது மேற்சொன்ன விதிகளுக்குட்பட்டே அமைந்துள்ளது. எனவே, மேற்படி மதுபானக் கடையினை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை.

**17—**

### விரைவு நீதிமன்றம்

**வினா எண் 27551—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அதனை விஸ்தரித்து எடப்பாடி நகரில் ஒரு விரைவு நீதிமன்றம் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம் சேலத்தில் இரு விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.



(ஆ) சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் விரைவு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலோ அல்லது உயர்நீதிமன்றத்தின் ஆய்விலோ இல்லை.

**18—**

### 'டைடல் பார்க்'

**வினா எண் 28122—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி பின்புறம் உள்ள (நிலம் சுமார் 153 ஏக்கர்) நிலத்தில் 'டைடல் பார்க்' அமைக்க அரசு நிலம் கையகப்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மருத்துவக் கல்லூரி பின்புறம் உள்ள நிலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்காக 29.08 ஏக்கர் நிலத்தினை அரசு எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணையிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**19—**

### தமிழ்மொழிப் பயன்பாடு

**வினா எண் 30631—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

ஆம். தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவிக்க தமிழ் இணையப் பல்கலைக்கழகம்மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**20—**

**நீதிபதி நியமனம்**

**வினா எண் 46315—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள நீதிமன்றத்தில் வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டும், நீதிபதி பொள்ளாச்சி நீதிமன்றத்திலிருந்து வந்து வழக்குகளை விசாரித்துச் செல்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தர நீதிபதி வால்பாறைக்கு எப்போது நியமிக்கப்படுவார்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிரப்பப்படாமல் இருந்து வந்த நீதிபதி பதவிக்கு 18-3-2004 அன்று நீதிபதி நியமிக்கப்பட்டு, நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**21—**

**உயர் நீதிமன்றக் கிளை**

**வினா எண் 54862—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் உயர் நீதிமன்றத்தின் கிளை நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) உயர் நீதிமன்றக் கிளையினைச் சேலத்தில் நிறுவுதல் குறித்து செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**22—**

**தொழில்நுட்பப் பூங்கா**

**வினா எண் 60063—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சேலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு அரசிடம் திட்டம் இல்லை. தனியார் தொழில் முனைவோர் முன்வந்தால் அதனை அரசு ஊக்குவிக்கும்.

**23—**

**மென்பொருள் பூங்கா**

**வினா எண் 60978—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. தனியார் தொழில் முனைவோர்கள் முன்வந்தால் அதனை அரசு ஊக்குவிக்கும்.

24—

### சட்டக் கல்லூரி

**வினா எண் 75517—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று 2000 ஆம் ஆண்டு சட்டத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் அரசு அறிவித்தவாறு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

### ஊக்கத் தொகை

**வினா எண் 79099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்வழி சட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

தமிழ்வழி சட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு 1977 ஆம் ஆண்டு முதல் ஊக்கத் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

26—

### நியாயவிலைக் கடை

**வினா எண் 15512—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ப. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் புதியதாக நியாயவிலைக் கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வடகைலாசம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் பணிக்கன்குப்பம் நியாயவிலைக் கடையிலுள்ள 838 குடும்ப அட்டைகளிலிருந்து 192 குடும்ப அட்டைகளைப் பிரித்து ப. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க 2-12-2004 ஆம் நாளிட்ட கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அரசு ஆணை (நிலை) எண் 374-ல் ஆணை வெளியிடப்பட்டு, 10-3-2005 முதல் மேற்படி கிராமத்தில் பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது.

**27—**

### பணி நிரந்தரம்

**வினா எண் 8482—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள நியாயவிலைக் கடைகளில் பல ஆண்டுகளாக தினச் சம்பள அடிப்படையில் பணிபுரியும் விற்பனையாளர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அந்த விற்பனையாளர்களைப் பணி நிரந்தரம் ஆக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் 851 விற்பனையாளர்கள் தினக் கூலி அடிப்படையில் பணிபுரிகின்றனர்.

(ஆ) 12-3-2001 ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 86-ல் 8-7-1980-க்குப் பின் 12-3-2001 வரை கூட்டுறவுச் சங்கங்களில் வேலைவாய்ப்பகம்மூலமின்றி முறையற்ற விதத்தில் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**28—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 37288-திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு பட்டயப் பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் வேலைவாய்ப்பு கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பணியாளர்கள் பணி நியமனம் செய்யும்போது, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி அந்தந்த பதவிக்குரிய கல்வித் தகுதி மற்றும் இதர வழிமுறைகளின் அடிப்படையிலும், பணி நிலைத்திறன் அடிப்படையிலும் அவ்வப்பொழுது ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**29—**

### பங்குத் தொகை

**வினா எண் 74400—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி நகரக் கூட்டுறவு வங்கியில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட பங்குத் தொகைக்கு டிவிடண்ட் 2000-2001-க்குப் பிறகு வழங்கப்படாத காரணம் என்ன?

(ஆ) எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அறந்தாங்கி நகரக் கூட்டுறவு வங்கியில் 2000-2001ஆம் ஆண்டில் ரூ. 10,83,583.58/- அளவிற்கும், 2001-2002ஆம் ஆண்டில் ரூ.19,75,388.39/- அளவிற்கும் நட்டம் ஏற்பட்டதால், அந்த ஆண்டுகளுக்கு உறுப்பினர்களுக்குப் பங்கு ஈவுத் தொகை வழங்கப்படவில்லை. 2002-2003ஆம் ஆண்டில் ரூ.15,62,750.51/- அளவிற்கும், 2003-2004ஆம் ஆண்டில் ரூ. 13,27,986.32/- அளவிற்கும் இந்த வங்கி இலாபம் ஈட்டியிருந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கை எண் BSI/PCB/16/12/5/2003-04 நாள் 19-9-2003-ன்படி இந்த வங்கியின் ஆதாயம் ஈட்டா சொத்தின் மதிப்பு (Non Performing Assets Value)

மொத்தக் கடன் நிலுவையில் 2002-2003 மற்றும் 2003-2004ஆம் ஆண்டுகளில் 10%-க்குக் கீழ் இல்லாததாலும், இவ்வங்கி, வங்கித் தர வரிசையில் மூன்றாம் நிலையில் உள்ள காரணத்தாலும் 2002-2003 மற்றும் 2003-2004ஆம் ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு பங்கு ஈவுத் தொகை வழங்கப்படவில்லை.

(ஆ) வங்கியின் ஆதாயம் ஈட்டா சொத்து கடன் நிலுவையில் 10%-க்குட்பட்டு வங்கித் தர வரிசையில் இந்த வங்கி முதலாவது அல்லது இரண்டாம் நிலைக்கு வந்த பின்னர் இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்று உறுப்பினர்களுக்குப் பங்கு ஈவுத் தொகை வழங்கப்படும்.

**30—**

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 18961—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, காட்டுமன்னார்குடி வட்டம், கானூர் கிராமத்திலுள்ள செல்லியம்மன் கோயிலைப் புதுப்பித்து அரசு திருப்பணி நடத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், கானூர் கிராமம் அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில் திருப்பணி வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 27-8-2004 மேற்படி கிராமத்தைச் சேர்ந்த உபயதாரர்கள்மூலம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்துள்ளது.

**31—**

## அடிப்படை வசதி

**வினா எண் 20745—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், குமரகிரி முருகன் திருக்கோயிலுக்குச் செல்ல மலைப்பாதையும், மின்விளக்கு வசதியும் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், குமரகிரி முருகன் திருக்கோயிலுக்குச் செல்ல மலைப்பாதை வசதி அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மலைப்பாதை பணி உபயப் பணியாக, நற்பணி மன்றத்தினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்வசதி அமைப்பது குறித்தும் மின்வாரியத்தைத் தொடர்பு கொண்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நிதியாதாரம் ஏற்படுத்துவது குறித்தும், பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**32—**

## இலவசத் திருமணங்கள்

**வினா எண் 27226—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் சுகவனேஸ்வரர் ஆலயத்தில் கோயிலின் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2002-2003-ல் எத்தனை திருமணங்கள் நடத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒட்டுமொத்தமாக 1,053 இணைகளுக்கு திருவேற்காட்டில் 18-6-2003-ல் இலவசமாகத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இதில்

[2006 ஜனவரி 27

சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலிலிருந்து பெறப்பட்ட 68 விண்ணப்பங்களும் சேர்க்கப்பட்டு, அவர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, திருமணம் நடத்தப்பட்டது. எனவே, சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில் சார்பாக தனியாக இலவசத் திருமணங்கள் நடத்தப்படவில்லை.

**33—**

## கோயில் கட்ட உதவி

**வினா எண் 34974—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இந்து அறநிலையத் துறையின்மூலமாக ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் கோயில் கட்டுவதற்கு ரூ.25 ஆயிரம் வழங்குவது போல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதிக்கும் இத்தொகை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களையும் சேர்த்துதான் பட்டியல் தயாரிக்கப்பட்டு, திருக்கோயில் திருப்பணிக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. எனவே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களும் இத்திட்டங்கள்மூலம் பயன்பெறுகின்றன.

**34—**

## தூர் வாரும் பணி

**வினா எண் 47851—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியிலுள்ள கல்யாண ரெங்கநாதர் பெருமாள் கோயில், திருப்புங்கூர் ஊராட்சியிலுள்ள சிவலோகநாதசுவாமி கோயில் ஆகிய திருக்கோயில்களின் குளங்களைத் தூர் வாரி, சுற்றுச்சுவர் கட்டி மழைநீரைச் சேகரிக்க வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருப்புங்கூர், அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நான்கு திருக்குளங்களில் 3 குளங்கள் ஏற்கெனவே தூர்வாரி செப்பனிடப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒரு திருக்குளத்தை நடப்பு நிதியாண்டில் செப்பனிட்டுத் தர மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மற்றும் சீர்காழி வட்டம், திருநகரி அருள்மிகு கல்யாண ரெங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நான்கு திருக்குளங்கள் 2002-2003ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி நிர்வாகத்தின்மூலம் ஏற்கெனவே தூர் வாரி செப்பனிடப்பட்டுள்ளன.

**35—**

## மரங்களைப் பராமரித்தல்

**வினா எண் 59430—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான மரங்கள், குடியிருக்கும் வீட்டின்மீது விழும் அபாயம் ஏற்பட்டு இதனால் உயிர்ச் சேதம் ஏற்படுகின்ற நிலை உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு உரிமையான மரங்கள், குடியிருக்கும் வீட்டின் மீது விழும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக முறைப்படி அனைத்து மரங்களும் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், உயிர்ச் சேதம் ஏற்படுகின்ற நிலை ஏதும் தற்போது இல்லை.

36—

## தூர்வாரும் பணி

**வினா எண் 66108—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் கமலாலய குளத்தைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலின் கமலாலய குளம் 2003ஆம் ஆண்டு ரூ.2,74,000/- மதிப்பீட்டில் தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டு தற்சமயம் தண்ணீர் நிறைந்து நல்ல நிலையில் உள்ளது. தற்போது குளம் தூர்வாரும் நிலையில் இல்லை.

37—

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 68000—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

சேலம் மாவட்டம், மேச்சேரியில் உள்ள அருள்மிகு பத்ரகாளியம்மன் கோவிலை உடனடியாகப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலைப் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டு ரூ.93.87 இலட்சம் மதிப்பீட்டில் உபயப் பணிகளையும் ரூ.14.32 இலட்சத்திற்கு திருக்கோயில் நிதி வழியாகவும் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

38—

## நலத் திட்ட உதவிகள்

**வினா எண் 68091—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில்களில் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழகத் திருக்கோயில்களில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் மூலம் நடத்தப்படும் இலவசத் திருமணத்திற்குத் தங்கத் திருமாங்கல்யம் 4 கிராம் உட்பட ரூ.5,500/- மதிப்பு பொருட்கள் மணமக்களுக்கு வழங்கப்படுகின்றன. கலப்புத் திருமணங்களுக்கு என சிறப்புத் திட்டம் ஏதும் இல்லை.

39—

## குடமுழுக்கு விழா

**வினா எண் 69151—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை கோயில்களில் அரசு குடமுழுக்கு விழா நடத்தியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 346 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

**40—**

## ஆலயத் திருப்பணிகள்

**வினா எண் 72933—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நஞ்சுண்டேஸ்வர் ஆலயத் திருப்பணிகள் செய்யப்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி அருள்மிகு நஞ்சுண்டேஸ்வர் திருக்கோயிலில் அனைத்து சன்னதிகள், விமானங்கள், பிரகார தரை தளம், முன்மண்டபம், மதிற்சுவர் ஆகியவை நல்ல நிலையில் இருப்பதாலும், குடமுழுக்கு 2000 ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ளதாலும், தற்போது திருப்பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை.

**41—**

## கதர் துணி உற்பத்தி

**வினா எண் 10807—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) தமிழக மக்கள் விரும்பிப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அதிக தரமுள்ள கதர் துணிகளை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது மக்கள் விரும்பிப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மிக மெல்லிய கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்களை (கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு உட்பட) மும்பை கதராணைக் குழுமத்தின் நிபந்தனைக்குட்பட்டு பல இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத்தில் உள்ள கதரங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், மக்கள் மத்தியில் கதர் போர்வை வகைகளுக்கும் துண்டு இரகங்களுக்கும் நல்ல வரவேற்பு இருப்பதால் அவற்றை உற்பத்தி செய்வதுடன் மெத்தை விரிப்புகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**42—**

## பட்டு உற்பத்தி

**வினா எண் 19640—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் பட்டு முறுக்கேற்றும் நிலையத்தில் எத்தனை மெட்ரிக் டன் முறுக்கேற்றிய பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?

(ஆ) 2002-2003-ல் இந்த பட்டு உற்பத்தியை அதிகப்படுத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பட்டு முறுக்கேற்றும் நிலையத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் 831.950 கிலோ கிராமும் 2002-2003 ஆம் ஆண்டில்

*637.300 கிலோ கிராமும் 2003-2004ஆம் ஆண்டில் 505.500 கிலோ கிராமும் 2004-2005ஆம் ஆண்டில் 631.750 கிலோ கிராமும் முறுக்கிய பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.*

*(ஆ) 2004-2005ஆம் ஆண்டில் பட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் சேலம் பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் அவர்கள், சேலம் பட்டு முறுக்கேற்றும் உற்பத்தி அலகினைத் தொடர்ந்து ஆய்வு செய்து, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களை ஊக்குவித்து வருவதால் 2004-2005ஆம் ஆண்டில் 28-2-2005 முடிய 631.750 கி.கி. முறுக்கிய பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.*

**43—**

## ஓய்வூதியம்

**வினா எண் 19641—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கதர் நெசவாளர்களுக்கு / நூற்பாளர்களுக்கு மாதம் ரூ.200/- ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேர் பயன் பெற்றுள்ளார்கள்?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கதர் நூல் மற்றும் துணி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நெசவாளர்கள்/ நூற்பாளர்களுக்கு சில வரையறைகளுக்குட்பட்டு மாதம் ரூ.200/- வீதம் ஓய்வூதியம் வழங்க அரசு அனுமதித்து 21-09-2001 நாளிட்ட ஆணை வெளியிடப்பட்டது. அரசாணையில் தெரிவிக்கப்பட்ட வரையறைகளை நூற்போர் மற்றும் நெய்வோர்களிடம் தெரிவிக்கப்பட்டதில் அவர்களது ஓராண்டுக் கால நல நிதியிலிருந்து 10 விழுக்காடு தொகையைப் பிடித்தம் செய்து இத்திட்டத்தில் சேர்த்திட அவர்கள் விருப்பம் தெரிவிக்காததால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.*



**44—**

## சிறு தொழில் கடன்

**வினா எண் 24392—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சிறு தொழில் செய்ய கடன் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். சிறுதொழில்கள் ஆரம்பிக்க கீழ்க்கண்ட திட்டங்கள்/ நிறுவனங்கள்மூலம் வேலையற்ற படித்த இளைஞர்கள் கடன்பெற வாய்ப்புள்ளது. கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை மாவட்டத் தொழில் மையம், கோயம்புத்தூர் மூலம் செய்யப்பட்டு வருகிறது.*

1. பிரதமர் வேலை வாய்ப்புத் திட்டம்
2. காதி மற்றும் கிராமத் தொழில் விளிம்பு கடன் உதவித் திட்டம்
3. தாட்கோ
4. டாப்செட்கோ
5. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
6. வங்கிகள்

**45—**

## சலுகைகள்

**வினா எண் 28069—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிராமங்களில் மண்பாண்டத் தொழில் நலிந்துள்ளதால், மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு சிறு தொழில் துறைமூலம் கடன் மற்றும் சலுகைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கிராமங்களில் மண்பாண்டத் தொழில் நலிந்துள்ளதால் மண்பாண்டத் தொழிலாளர்களுக்குக் கடனுதவி வழங்கிட விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**46—**

### விற்பனை நிலையங்கள்

**வினா எண் 41062—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் கடந்த 2002-2003 ஆம் ஆண்டில் எவ்வளவு இலாபம் கிடைத்தது?

(ஆ) விற்பனை நிலையங்களை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் விற்பனை நிலையங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.468.28 இலட்சங்கள் இலாபம் அடைந்தன.

(ஆ) தற்போதுள்ள பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கும் நிலையில் இக்கழகம் இல்லை.

**47—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 50387—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நிறுவனங்கள் நிதியில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிலையைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சான்றளிக்கப்பட்ட சர்வோதய சங்கங்களின் கதர் தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் அரசுத் துறை தணிக்கையாளர்களால் மறு தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கைச் சான்றுகளின் அடிப்படையில் மாநில அரசினால் அனுமதிக்கப்பட்ட தள்ளுபடித் தொகை சம்பந்தப்பட்ட சர்வோதய சங்கங்களுக்கு வழங்கபபட்டு விட்டது. எனவே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சர்வோதய சங்கங்கள் தற்போது எந்தவித நிதி பாதிப்பில்லாமல் செயல்படுகின்றன.

**48—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 50392—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் ஆணையத்தின்மூலம் புதியதாக அறிவிக்கப்பட்ட விளிம்புத் தொகை திட்டத்தின்படி, தாதுப் பொருள், சார்புத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு கிராமங்களில் வேலைவாய்ப்பினை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு அறிமுகப்படுத்தியுள்ள திட்டமான விளிம்புத் தொகை திட்டம் தமிழ்நாடு கதர் கிராமத்

தொழில் வாரியத்தினால் 1999-2000 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தாதுப் பொருள், சார்புத் தொழில்களில் அடையாளம் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள 15 கிராமத் தொழில்களை அறிமுகப்படுத்தி அத்தொழிலில் ஈடுபடும் தொழில் முனைவோர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடன் அனுமதிக்கப்படுகிறது.

(1) மட்பாண்டம் தயாரித்தல்

(2) கிளிஞ்சல் மற்றும் சுண்ணாம்பு

(3) கல்வெட்டுதல், அரைத்தல் மற்றும் செதுக்குதல்

(4) கல்லில் செய்யப்படும் பயன்படு பொருட்கள்

(5) சிலேட்டு, சிலேட்டு பென்சில் செய்தல்

(6) பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரித்தல்

(7) பாத்திரம் கழுவும் பவுடர்

(8) எரிபொருளாகப் பயன்படும் கரி

(9) தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த செயற்கைக் கற்களால் செய்யப்படும் ஆபரணங்கள்

(10) கோலப் பொடி

(11) வளையல்

(12) பெயிண்ட், வார்னிஷ், டிஸ்டம்பர் மற்றும் கலர் பொடிகள்

(13) கண்ணாடி பொம்மைகள்

(14) கண்ணாடி அலங்காரத் தொழில்

(15) செயற்கை வைரம் கட்டிங்

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் முதல் தவணைக் கடன் தொகையை விடுவித்த பின்னர் அதற்கான விளிம்புத் தொகை மானியம் 2.5% முதல் 30% வரை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

**49—**

## கதர் நிறுவனங்கள்

**வினா எண் 50401—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கதர் நிறுவனங்கள்மூலம் தேன் சேகரிப்பு மற்றும் சோப்பு உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**50—**

## சலுகைகள்

**வினா எண் 50404—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மத்திய அரசு கதர் நிறுவனங்களுக்கு வழங்கி வந்த சலுகைகள் மீண்டும் கிடைக்க வழிவகை செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்திலுள்ள சர்வோதய சங்கங்களுக்கு மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தள்ளுபடி சலுகையை மத்திய அரசின் தள்ளுபடி எனக் கருதலாம். இந்தத் தள்ளுபடியை மாற்றி விற்பனை மேம்பாட்டு உதவி (Marketing Development Assistance) வழங்கப்படும் என கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழு தெரிவித்தது. ஆனால், மீண்டும் தள்ளுபடித் திட்டம் தொடரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க மீண்டும் தள்ளுபடி வழங்குவதாக கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தனது 19-7-2004 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. இதன்படி மத்திய அரசு கதர் நிறுவனங்களுக்கும் வழங்கி வந்த சலுகை மீண்டும் பெறப்பட்டுள்ளது.

51—

### கூட்டுறவு தொழிற்பேட்டை

**வினா எண் 51697—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ சின் சிறுதொழில் வளர்ச்சி வங்கி, மாநில மற்றும் மத்திய அரசின் நிதி உதவி பெற்று வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் அல்லது அங்களகுறிச்சி ஊராட்சியில் கூட்டுறவு தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் அல்லது அங்களகுறிச்சி ஊராட்சியில் கூட்டுறவு தொழிற்பேட்டை அமைக்க முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

### தொழில் துவங்குதல்

**வினா எண் 60235—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பனை மரங்கள் அதிகமாக இருப்பதால், பனை வாரியத்தின் மூலம் தொழில் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



53—

### உயர்நிலைப் பள்ளி

**வினா எண் 16518—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேட்டிலுள்ள அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேட்டில் செயல்பட்டுவரும் அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி, 23-8-2004 நாளிட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 103-ன் ஆணைப்படி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

54—

### மேல்நிலைப் பள்ளி

**வினா எண் 19958—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, எம்.ஆர். பாளையம், ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், முசிறி தொகுதியில் உள்ள எம்.ஆர். பாளையம் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, 25-5-2005 நாளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 78-ன்படி மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

55—

### கிராமங்களுக்குப் பரிசு

**வினா எண் 31298—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் தீண்டாமை இல்லாத கிராமங்களுக்குப் பரிசு வழங்குதல் திட்டத்தின்கீழ் அரசு எந்த கிராமத்தையாவது தேர்வு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில், கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்கள் தீண்டாமை கடைபிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

| மாவட்டம் | வருடம் | தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. சேலம் | 2000-2001 | மஞ்சக்குட்டை கிராமம், ஏற்காடு வட்டம். |
| | 2002-2003 | அந்தியூர், ஆட்டையாம்பட்டி |
| 2. ஈரோடு | 1999-2000 | மைலம்பாடி ஊராட்சி |
| | 2000-2001 | தாளவாடி கிராமம், சத்தி வட்டம். |

56—

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 34382—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) உடுமலைப்பேட்டை அருகே பெரியவாளவாடி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியவாளவாடி கிராமம் க.ச. எண் 44/1 மற்றும் 44/2 ஆகிய சாலைகளில் 138.5 எக்டேர் நிலம் கையகம் செய்யப்பட்டு 100 நபர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

57—

### ஆசிரியர் நியமனம்

**வினா எண் 47333—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சின்ன கல்லூரில் உள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு ஆசிரியர் வராமல் இருப்பதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சின்ன கல்லூரில் உள்ள ஆதிதிராவிட நலப் பள்ளிக்குத் தற்போது ஒரு தலைமை ஆசிரியர் பணியிடமும் நிரப்பப்பட்டு மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

58—

### மாணவ, மாணவியர் விடுதி

**வினா எண் 68144—அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர் பகுதியில் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர் பகுதியில் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு விடுதி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

### போக்குவரத்துத் தொழிலாளர்கள்

**வினா எண் 21229—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 2001-ல் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் அரசுக்கு எவ்வளவு நட்டம் ஏற்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 2001-ல் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தால் அரசுக்கு மொத்தம் ரூ.5345.12 இலட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது.



60—

### பேருந்தை இயக்குதல்

**வினா எண் 22885—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து விளாத்திகுளம் வழியாக தூத்துக்குடிக்கு இரவு 10 மணிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை-தூத்துக்குடி (வழி) விளாத்திகுளம் ஒரு சுற்று வழிப்பாதையாகும். இத்தடத்தில் பின் இரவு நேரத்தில் பேருந்து இயக்கினால் பயணிகள் அடர்வு மிகக் குறைவாக இருக்க வாய்ப்புள்ளது. எனவே, கோரிக்கைத் தடத்தில் இரவு 10 மணிக்குப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 35456—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் இருந்து இடையப்பட்டிக்கு வரும் பேருந்தை மஞ்சம்பட்டி வரை நீட்டித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து இடையப்பட்டி வரை நான்கு நடைகள் இயக்கப்பட்டு வந்த பேருந்து 8-2-2002 முதல்

மஞ்சம்பட்டி வழியாக கறம்பக்குடி வரை, நாள ஒன்றுக்கு நான்கு நடைகள் நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

**62—**

## பணி நிரந்தரம்

**வினா எண் 49957—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள காடம்பாறை மின் நிலையத்தில் பணியாற்றிவரும் தற்காலிகப் பணியாளரைப் பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காடம்பாறை மின் நிலையத்தில் உள்ள 169 ஒப்பந்தத் தொழிலாளர்களில் 120 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 29-1-2001 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுவிட்டனர். எஞ்சிய 49 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 1-5-1999 முதல் தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து பணி செய்கின்றனர். காடம்பாறை மின் உற்பத்தி வட்டத்தில் எஞ்சியுள்ள 49 நபர்களையும் மற்றும் இதர நீர்மின் உற்பத்தி வட்டங்களிலுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்திடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவை தற்போது நிலுவையில் உள்ளன. ஆகவே, காடம்பாறை மின் நிலையத்தில் உள்ள எஞ்சிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**63—**

## பேருந்தை இயக்குதல்

**வினா எண் 51979—திரு. நா. சந்திரமோகன்:** மாண் புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சீர்காழியிலிருந்து உமையாள்பதி, மாதானம், ஆச்சாள்புரம் வழியாக சிதம்பரத்திற்கு அரசுப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 24-2-2005 முதல் கோரிக்கை தடமாகிய சீர்காழி - சிதம்பரம் (வழி) மாதானம், ஆலாலசுந்தரம், ஆச்சாள்புரம், கொள்ளிடம் தடத்தில் தடம் எண் 224 K பேருந்துமூலம் தினசரி நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**64—**

## விபத்து வழக்குகள்

**வினா எண் 53835—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகம்மூலம் நடைபெறும் விபத்து வழக்குகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகம் மூலம் நடைபெறும் விபத்து வழக்குகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**65—**

## மின் உற்பத்தி

**வினா எண் 54810—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மஞ்சம்பட்டி வழியாக கறம்பக்குடி வரை, நாள ஒன்றுக்கு நான்கு நடைகள் நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

**62—**

### பணி நிரந்தரம்

**வினா எண் 49957—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள காடம்பாறை மின் நிலையத்தில் பணியாற்றிவரும் தற்காலிகப் பணியாளரைப் பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காடம்பாறை மின் நிலையத்தில் உள்ள 169 ஒப்பந்தத் தொழிலாளர்களில் 120 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 29-1-2001 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுவிட்டனர். எஞ்சிய 49 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 1-5-1999 முதல் தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து பணி செய்கின்றனர். காடம்பாறை மின் உற்பத்தி வட்டத்தில் எஞ்சியுள்ள 49 நபர்களையும் மற்றும் இதர நீர்மின் உற்பத்தி வட்டங்களிலுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்திடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவை தற்போது நிலுவையில் உள்ளன. ஆகவே, காடம்பாறை மின் நிலையத்தில் உள்ள எஞ்சிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**63—**

### பேருந்தை இயக்குதல்

**வினா எண் 51979—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சீர்காழியிலிருந்து உமையாள்பதி, மாதானம், ஆச்சாள்புரம் வழியாக சிதம்பரத்திற்கு அரசுப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எபபோது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 24-2-2005 முதல் கோரிக்கை தடமாகிய சீர்காழி - சிதம்பரம் (வழி) மாதானம், ஆலாலசுந்தரம், ஆச்சாள்புரம், கொள்ளிடம் தடத்தில் தடம் எண் 224 K பேருந்துமூலம் தினசரி நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**64—**

### விபத்து வழக்குகள்

**வினா எண் 53835—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகம்மூலம் நடைபெறும் விபத்து வழக்குகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?.

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகம் மூலட் நடைபெறும் விபத்து வழக்குகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**65—**

### மின் உற்பத்தி

**வினா எண் 54810—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு நெய்வேலியில் மின் உற்பத்தி செய்யும் தனியார் மின் திட்டம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு நெய்வேலியில் மின் உற்பத்தி செய்யும் தனியார் மின் திட்டம் துவக்க செயற்குறிப்பு ஏதுமில்லை. எஸ்டிசிஎம்எஸ். நிறுவனத்தினர் ஏற்கெனவே நெய்வேலியில், கருத்தளவு ஒப்பந்த அடிப்படையில் 250 மெகாவாட் மின் நிலையத்தை அமைத்துள்ளனர். அந்நிலையம் 15-12-2002 முதல் இயங்கி வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**66—**

## அனல் மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 56557—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் மின்சாரத் தட்டுப்பாட்டைப் போக்க அனல் மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் கீழ்க்கண்ட காரணங்களால் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான திட்டம் எதுவும் வாரியத்திடம் இல்லை.





(i) கோயம்புத்தூர், கடற்கரையிலிருந்து வெகுதூரத்தில் உள்நாட்டில் அமைந்திருப்பதால், அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு அதிக செலவு பிடிக்கும்.

(ii) அனல் மின் நிலையத்திற்குக் கொதிகலன் நீர் மற்றும் சுழலிக்குத் தேவையான குளிர்ந்த நீர் ஆகியவற்றுக்கு ஏதுவான நீர்நிலை ஆதாரங்கள் கடற்கரை ஓரப் பகுதியாக இருப்பின் குறைந்த செலவில் கிடைக்கும். மேலும், கோயம்புத்தூரின் மின் வளர்ச்சியின் தேவையை கருத்தில்கொண்டு, ஏற்கெனவே 3 x 50 மெகாவாட் திறனுடைய பைக்காரா இறுதி நீர் மின் திட்டம் துவங்கப்பட்டு நிறைவு பெறும் தருவாயில் உள்ளது.

இத்திட்டம் இந்த ஆண்டிற்குள் (2004-2005) செயல்பாட்டிற்கு வந்துவிடும். அதன்பிறகு கோயம்புத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மின் தட்டுப்பாடு இல்லாமல் சீரான மின்சாரம் வழங்க ஏதுவாகும்.

**67—**

## விளை நிலத்தில் மண் எடுக்கத் தடை

**வினா எண் 35070—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கோ. பொன்னேரி கிராமத்திலுள்ள விளைநிலத்தில் மண் எடுக்கத் தடை விதிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட விருத்தாசலம் நகர எல்லைக்கு சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கோ. பொன்னேரி கிராமத்தில் விளைநிலத்தில் மண் எடுக்கப்படவில்லை.

**68—**

## வேதியியல் பகுப்பாய்வு

**வினா எண் 55316—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

*(அ)* தமிழகத்தில் வேடசந்தூர் தொகுதி, வெள்ளம்பட்டி கிணற்றில் இரும்புத் தாது உள்ளதாக வேதியியல் பகுப்பாய்வு செய்துள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழகத்தில் வேடசந்தூர் தொகுதி வெள்ளம்பட்டி கிணற்றில் இரும்புத் தாது உள்ளதாக அறியப்பட்டு அவற்றின் மாதிரிகள் எடுக்கப்பட்டு வேதியியல் பகுப்பாய்வுக்குக் கொடுக்கப்பட்டன.

*(ஆ)* மேற்படி கிணற்றில் இருந்து இரண்டு மாதிரிகள் எடுக்கப்பட்டு அவற்றில் இரும்புத் தாது உள்ளனவா என்பதைக் கண்டறிய வேதியியல் பகுப்பாய்வுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த மாதிரிகளைப் பரிசோதனை செய்ததில் இரும்பு ஆக்ஸைடு 78.83 மற்றும் 81.41 விழுக்காடு உள்ளதாக சோதனையில் தெரிய வந்துள்ளது.

**69—**

**வெள்ளிலா காயைப் பயிரிடுதல்**

**வினா எண் 42577—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் சோலையாறு அணை பகுதியில் விளையும் விலை உயர்ந்த வெள்ளிலா காயை மற்ற பகுதிகளிலும் பயிரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* 2003-2004 ஆம் ஆண்டில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2006 ஜனவரி 27]

**70—**

**மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள்**

**வினா எண் 4294—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மாணவர், மாணவியர் தங்கும் விடுதிகள் அமைத்து சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதியில் கீழ்க்கண்ட மூன்று விடுதிகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன:

*(1)* அரசு மாணவர் விடுதி (மிபிந), வைத்தீஸ்வரன் கோயில்

*(2)* அரசு மாணவியர் விடுதி (பிந), சீர்காழி

*(3)* அரசு மாணவியர் விடுதி (மிபிந), திருமுல்லைவாசல்

இவைத் தவிர புதிய விடுதிகள் திறக்கும் கருத்துரு எதுவும் ஆய்வில் இல்லை.

**71—**

**இலவசப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 4469—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, காமாட்சிப்பேட்டை கிராம மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், திருவாமூர் மதுரா காமாட்சிப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 66 நபர்களுக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

**72—**

**மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 6368—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியிலும் மற்றும் வல்லம் ஒன்றியம், இல்லோடு கிராமத்திலும் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சியில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு ரூ.31.50 இலட்சம் செலவில், 2004-05-ல் கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், வல்லம் ஒன்றியம், இல்லோடு கிராமத்தில் பிறபடுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. இல்லோடு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு 31-7-2003 முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.



2006 ஜனவரி 27]

**73—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 9315—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, நிலமற்ற சலவைத் தொழிலாளிகள் மற்றும் மருத்துவர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் வீடற்ற பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மக்களுக்கு குழுமூரில் 114 பட்டாக்களும், வஞ்சினாபுரத்தில் 106 பட்டாக்களும், கொடுக்கூரில் 114 பட்டாக்களும், ஆக மொத்தம் 334 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**74—**

**ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 18607—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பாப்பாப்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் கணிதம் முதுகலை பட்டதாரி பணி இடம் காலியாக உள்ளதை, விரைவில் நியமனம் செய்து நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பாப்பாப்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் கணித முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடம் 12-6-2002 அன்று பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது.

[2006 ஜனவரி 27

75—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 34694—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை, குறிச்சிக்கோட்டை பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நில ஆர்ஜிதம் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 85, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 28-12-2001-ன்படி, பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை முன்னிட்டு, நில எடுப்பு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, குறிச்சிக்கோட்டை பகுதியில், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா தற்போது வழங்க இயலாது.

76—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 34697—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை அருகே பாப்பான்குளம் செல்லப்பம்பாளையம் மற்றும் ரெட்டிபாளையம் கிராமங்களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், பாப்பான்குளம கிராமம் மற்றும் மஜரா ரெட்டிபாளையம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு க.ச. எண் 225/1-ல் 2.75 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி 24-4-2003 அன்று பட்டா வழங்கப்பட்டுள்ளது. செல்லப்பம்பாளையம் கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கத் தகுதியான காலி நிலம் கிடைக்கப்பெறாததாலும், புதியதாக நில எடுப்பு செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாலும், அவர்களுக்குப் பட்டா வழங்க இயலவில்லை.

77—

## கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 38778—திரு. ரா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தபபட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆரியபட்டி பஞ்சாயத்து, ஆரியபட்டி அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தவும் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்கவும அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, ஆரியபட்டி பஞ்சாயத்து, ஆரியபட்டி அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆயினும், அப்பள்ளிக்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் கூடுதல் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

[2006 ஜனவரி 27

78—

### மாணவர் விடுதிகளை ஆரம்பித்தல்

**வினா எண் 44546—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள அரசு இசைப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தனித் தனியாக மாணவர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில்.. எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

79—

### கால்நடை மருத்துவக் கல்லூரி

**வினா எண் 14454—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசிடம் செயல்திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கும் திட்டம் ஏதுமில்லை.

80—

### கால்நடைக் கிளை மருத்துவமனை

**வினா எண் 14460—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, மாட்டையாம்பட்டி என்ற பகுதியில் கால்நடை கிளை மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தெசவிளக்கு ஊராட்சிக்குட்பட்ட மாட்டையாம்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் 1-3-1970 முதல் செயல்பட்டு வருவதால், புதியதாக கால்நடை கிளை நிலையம் தோற்றுவிப்பது குறித்து வினா எழாது.

(ஆ) எழாது.

81—

### கோமாரி நோய்களுக்கு மருந்துகள் வழங்குதல்

**வினா எண் 16620—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய்களுக்கு மருந்துகள் போதுமானதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையான அளவிற்கு மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய்க்கு மருந்துகள் போதுமானதாக உள்ளன. "கால்நடை நோய்களைக்

[2006 ஜனவரி 27

கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு நிதி உதவி" (ஆஸ்காட்) என்ற புதிய திட்டத்தின்கீழ் தமிழகத்தில் கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய்க்குத் தடுப்பூசி போடும பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**82—**

### கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம்

**வினா எண் 20442—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி நகரில் கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி நகரில் கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் கட்ட நபார்டு (NABARD) திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**83—**

### கால்நடை மையத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 30421—திரு. இ.எ. லியாவுதீன் சேட்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரவக்குறிச்சி தொகுதி, பரமத்தி ஒன்றியம், தென்னிலை ஊராட்சியில் கால்நடை மையத்தை உடனடியாகச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) 2003-2004 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் அரசு ஆணை நிலை எண் 105, கால்நடை பராமரிபபு மற்றும் மீன்வளத் துறை, நாள் 22-10-2003-ன்படி பரமத்தி ஒன்றியம், தென்னிலையில் உள்ள கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்தப்பட்டு, 28-1-2004 முதல் வாடகையில்லாத கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைத்து போர்வெல் உடன் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. 400 சதுர அடியில் சிகிச்சைக் கூடம் ஒன்று அமைக்கப்படடுளளது.*

*(ஆ) எழாது.*

**84—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 44627—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மூக்கம்பட்டி மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி, குளத்துநாயக்கன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், ராஜகோபாலபுரம் இருப்பு குளத்துநாயக்கன்பட்டியில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம், தற்பொழுது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மூக்கன்பட்டி அருகில் 4 கி.மீ. தூரத்தில் வெட்டிக்காடு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம்*

அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. புதுக்கோட்டை மாவட்டம் மூக்கம்பட்டி மற்றும் கந்தர்வக்கோட்டை ஆளுகைக்குட்பட்ட குளத்துநாயக்கன்பட்டி கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**85—**

## ஆய்வாளர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 47133—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் ஊராட்சி, சென்னியநல்லூரில் கால்நடை மருத்துவமனைக்கு ஆய்வாளர்களை நியமித்து அதனை மீண்டும் திறப்பதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 357, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (காப-6) துறை, நாள் 30-10-1992-ன்படி, 57 கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் கலைக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. எனவே, சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் ஊராட்சி, சென்னியநல்லூரில் கால்நடை மருத்துவமனைக்குக் கால்நடை ஆய்வாளர் பணியிடம் நிரப்பிடவும், அதனை மீண்டும் திறப்பதற்கும் இயலாது.

(ஆ) எழாது.

**86—**

## கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 52084—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்புங்கூர், திருநகரி, கொண்டல், எடமணல் ஆகிய ஊராட்சிகளில் உள்ள கால்நடை துணை மையத்தினை மருந்தகமாகத் (டிஸ்பென்சரி) தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 148, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (கா.ப.2) துறை, நாள் 8-12-2004-ன்வழி கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் எடமணல் கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில் சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்புங்கூர், திருநகரி, கொண்டல் ஆகிய ஊராட்சிகளில் உள்ள கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**87—**

## நிதி உதவித் திட்டம்

**வினா எண் 64747—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் செயல்படாமல் உள்ள 571 கால்நடை கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் செயல்படுத்த அரசு நிதி உதவி அளிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் செயல்படுத்த அரசு நிதி உதவித் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

88—

**கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்**

**வினா எண் 65399—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், ஆலம்பள்ளம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், ஆலம்பள்ளத்தில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு கால்நடை மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. ஆதலால், ஆலம்பள்ளத்தில் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

**கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 70319—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமப் பகுதியிலுள்ள கால்நடை சுகாதார துணை மையத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமப் பகுதியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

90—

**மரங்களை ஏலம் விடுதல்**

**வினா எண் 327—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகக் காடுகளிலுள்ள மரங்களை ஏலம் விட்டதால் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அந்த மரங்களின் வகைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகக் காடுகளிலுள்ள மரங்களை ஏலம் விட்டதால், அரசுக்குக் கிடைதத வருவாயின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) கருவேல மரம் | .. | ரூ. 13.35 கோடி |
| (2) சந்தனக் கட்டைகள் | .. | ரூ. 79,67,16,852 |
| (3) சந்தன வெள்ளடை | .. | ரூ. 1,67,67,010 |
| (4) தேக்குமரம் (தருமபுரி மண்டலம் தவிர) | .. | ரூ. 1,06,22,939 |
| (5) கூழ்மரம் (தருமபுரி மண்டலம் தவிர) | .. | ரூ. 1,23,861 |

91— [2006 ஜனவரி 27

## விட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்

**வினா எண் 9099—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் சேர்வலாறு பகுதியில் 2 வருடங்களாக பட்டா குடியிருப்புப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்ததை அகற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் சேர்வலாறு பகுதியில் உள்ள காப்புக் காடுகளில் ஆக்கிரமித்துள்ள மலைச்சாதி அல்லாதவர்களைக் காப்புக்காட்டுப் பகுதியிலிருந்து அகற்றும் பணி நடைபெற்று, மாவட்ட ஆட்சித் தலைவரால் மாற்று ஏற்பாடாக அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

92—

## மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்குதல்

**வினா எண் 16665—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் வனவிலங்குகளால் உயிர்ச் சேதம் ஏற்படும்பொழுது உடனடியாக தமிழக அரசு ரூ. 25,000/- வழங்குவதுபோல் மீதிப் பணத்தை இதுவரை மத்திய அரசால் வழங்கபபடாமல் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து ஏழை எளிய மக்களுக்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடனடி நிவாரணமாக ரூ. 25,000/- வழங்கியும், மீதமுள்ள தொகை ரூ. 75,000/-ஐ வாரிசுச் சான்றிதழ் பெற்று அதன் அடிப்படையில் வாரிசுதாரர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டும் வருகிறது.

93—

## புதிய இரக மரங்களை நடுதல்

**வினா எண் 41863—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி மற்றும் திருமூர்த்தி வனச் சரகத்தில் புதிய இரக மரங்கள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி மற்றும் திருமூர்த்தி வனச் சரகத்தில் வன மேம்பாட்டு முகமைகள் (Forest Development Agencies) மூலம் செயல்படுத்தப்படும் தேசிய வன வளர்ப்புத் திட்டத்தின் கீழ் புதியதாக மரங்கள் நடும் திட்டம 2003-2004-ல் துவக்கப்பட்டு இதுவரை நடைபெற்று வருகிறது.

**94—**

### குத்தகை வரியை உயர்த்துதல்

**வினா எண் 62272—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டங்களுக்குக் குத்தகை வரியை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குக் குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ள நிலங்கள் நீங்கலாக மீதமுள்ள நிலங்கள் அனைத்தும் தொடர்புடைய எஸ்டேட் நிர்வாகங்களுக்கு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தேயிலை, காபி, மிளகு, ஏலக்காய் போன்ற மலைத் தோட்டப் பயிர்களைப் பயிர் செய்ய ஒப்படைக்கப்பட்ட பட்டா நிலங்கள் என்பதாலும், அவை குத்தகை அளிக்கப்பட்ட நிலங்களல்ல என்பதாலும், அவற்றிற்குக் குத்தகை வரியை உயர்த்தும் நிலை எழவில்லை. வால்பாறைப் பகுதியில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குக் குத்தகைக்கு அளிக்கப்பட்ட நிலங்களுக்கு அக்கழகம் 2003-2004 ஆம் ஆண்டு முதல் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.2000/- வீதம் ஆண்டுக் குத்தகை செலுத்த வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அதனை உயர்த்தும் செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையிலில்லை.

**95—**

### ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 12477—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தை மையமாகக் கொண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகளின் ஆய்வாளர் அலுவலகம ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வர் அலுவலகம் அமைக்கப்பட்டு 1-2-2002 முதல் இயங்கி வருகிறது. இதன் கட்டுப்பாட்டில் சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன.

**96—**

### பொறியியல் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 16860—திரு. ஐ. கணேசன்:** மாணபுமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் அரசு பொறியியல் கல்லூரி துவக்கலாம் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**97—**

### மொழிப் போர் தியாகிகள் ஓய்வூதியம்

**வினா எண் 19943—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு டிசம்பர் வரை எத்தனை மொழிப் போர் தியாகிகள் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்தார்கள்?

(ஆ) எத்தனை பேருக்கு அரசு வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) உயர்நிலைக் குழுவின் ஆய்வில் உரிய சிறைச் சான்று இல்லையென தள்ளுபடி செய்யப்பட்ட நபர்களும், புதியதாக விண்ணப்பிப்பவர்களும் தொடர்ந்து விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாலும், இவர்களும், பல விண்ணப்பங்களைப் பலருக்கும் அனுப்பும் வழக்கத்தைக் கொண்டிருப்பதாலும், மொழிப் போர் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கையை அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

(ஆ) இதுவரை 2,801 பேருக்கு மொழிப் போர் தியாகிகளுக்கான ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**98—**

## ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். இலவசப் பயிற்சி

**வினா எண் 21049—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மாணவர்கள் அகில இந்தியத் தேர்வுகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் அதிக அளவில் வெற்றி பெற மாநிலத்தில், மாநகரப் பகுதிகளில் இலவசப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை அண்ணா நகரில் தமிழக அரசின் அண்ணா மேலாண்மை நிலையத்தின்கீழ் இயங்கிவரும் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தால் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பணிகளுக்கான தேர்வுகளுக்குத் தமிழகத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு (ஆண்கள்/பெண்கள்) இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள மகளிர் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, அகில இந்தியப் பணி மற்றும் மத்திய அரசுப் பணிகளுக்கான (All India Service and Central Services Examinations) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் மகளிர் கலந்துகொள்ளும்பொருட்டு இலவசப் பயிற்சி மையங்கள், சென்னை, இராணி மேரிக் கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.



**99—**

## நிதி ஒதுக்கீடு வழங்குதல்

**வினா எண் 21722—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியிலுள்ள துவக்கப் பள்ளிகளைப் பழுதுபார்க்க சிறப்பு மானியமாக நிதி ஒதுக்கீடு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியிலுள்ள துவக்கப் பள்ளிகளைப் பழுதுபார்க்க அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின்கீழ் 2004-2005 ஆம் கல்வியாண்டில் பள்ளி மானியமாக ரூ.2,000/- உம், பள்ளி பராமரிப்பு மானியாக ரூ. 5,000/- உம் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**100—**

## பொறியியல் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 22775—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் பொறியியல் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

101—

**மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்**

**வினா எண் 27002—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி (என்ஜினியரிங் காலேஜ்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

102—

**மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி**

**வினா எண் 27234—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

103—

**நிதி உதவி**

**வினா எண் 33028—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் போதுமான நிதி இன்றி அதன் வளர்ச்சி பாதிக்கப்படுவதால், அரசு போதுமான நிதி உதவி செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு ஆண்டுதோறும் தமிழக அரசாலும், பல்கலைக்கழக நல்கை நிதிக் குழுவாலும் போதுமான நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

104—

**நடமாடும் நூலகம்**

**வினா எண் 37415—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) ஏற்காடு தொகுதியில், 2003-2004 ஆம் ஆண்டில் நடமாடும் நூலகங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் நடமாடும் நூலகம் செயல்பாட்டில் உள்ளது. நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. மேலும், நடமாடும் நூலகப் பணியினை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**105—**

### நூலகங்களைத் திறத்தல்

**வினா எண் 39118—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற நூலகங்களை அதிகமாகத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வி, நாள் 11-4-2003-ல் 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் 867 கிராமங்களில் படிப்படியாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதியளித்து ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் அடிப்படையில், 867 கிராமங்களில் ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.



2006 ஜனவரி 27]

**106—**

### திருமலைநாயக்கர் மகாலைப் புதுப்பித்தல்

**வினா எண் 42116—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மன்னர் திருமலைநாயக்கர் மகாலைப் புதுப்பிக்கும் பணியை அரசு மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 11-வது நிதிக் குழு பரிந்துரையின்கீழ் நிருவாக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மரபுச் செல்வங்கள் பாதுகாத்தலுக்காக பரிந்துரைக்கப்பட்ட நிதியில், மதுரை திருமலைநாயக்கர் அரண்மனை பழுதுபார்த்தல் பணி, பொதுப் பணித் துறை மூலம் மேற்கொள்ள அரசு ரூ.100.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்து மேற்கண்ட அரண்மனை பாதுகாப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் 21-1-2004 அன்று துவக்கப்பட்டு, 24-11-2004 அன்று முடிக்கப்பட்டுவிட்டன.

**107—**

### தேர்வுக் கட்டணத்தைக் குறைத்தல்

**வினா எண் 47448—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தாம் வகுப்பு மற்றும் +2 படித்து ஒரு பாடம், இரண்டு பாடம் மூன்று பாடம் தவறியவர்கள் தேர்வு எழுதுவதற்கு (சிறப்புத் தேர்வு) கட்டணம் அதிகமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தேர்வுக் கட்டணத்தைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) (1) பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி தோல்வி அடைந்த மாணவர்கள் ஒன்று. இரண்டு அல்லது மூன்று பாடங்களுக்கு அல்லது அனைத்துப் பாடங்களுக்கும் மார்ச்/செப்டம்பரில் நடைபெறும் தேர்வு எழுத ரூ.125/- கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அந்தக் கட்டணம்தான் ஜூன்/ஜூலை மாதம் நடைபெறும் சிறப்புத் தேர்விற்கும் வசூல் செய்யப்படுகிறது.

(2) மேல்நிலைத் தேர்வு எழுதி தோல்வி அடைந்த மாணவர்கள் ஒரு பாடத்திற்கு ரூ.85/- இரண்டு பாடத்திற்கு ரூ.135/- மற்றும் மூன்று பாடத்திற்கு ரூ.185/-ம் மார்ச்/செப்டம்பர் மாதங்களில் நடைபெறும் தேர்விற்கும், ஜூன்/ஜூலை மாதங்களில் நடைபெறும் சிறப்புத் தேர்விற்கும் ஒரே மாதிரியான தேர்வுக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

(ஆ) இல்லை.

**108—**

## மகளிர் கல்லூரி

**வினா எண் 52101—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் மகளிர் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**109—**

## புதிய பாடத் திட்டம்

**வினா எண் 59370—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டு புதிய பாடத் திட்டம் அறிமுகம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டு புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2004-2005 ஆம் கல்வி ஆண்டு முதல் உருவாக்கப்பட்டுள்ளது.

**110—**

## விடைத்தாள் நகல் வழங்கும் திட்டம்

**வினா எண் 67935—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

10 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதிய மாணவர்கள் தேர்வு முடிவு வெளியான பிறகு மாணவர்களின் விடைத்தாள்களின் நகலை அவர்களுக்கு வழங்கலாம் என்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தற்போது 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களின் தேர்வு முடிவு வெளியான பிறகு மாணவர்களுக்கு கணிதம், இயற்பியல்,

[2006 ஜனவரி 27

வேதியியல், உயிரியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய 6 பாடங்களின் விடைத் தாள்களுக்கு மட்டுமே அச்சுப் பகர்ப்பு நகல் அதனைக் கோரும் மாணவர்களுக்கு வழங்கும் முறை நடைமுறையிலுள்ளது. விடைத்தாள் நகல் வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல் மற்றும் மொத்த மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, +2 தேர்வில் ஏனைய பாடங்களுக்கும், 10 ஆம் வகுப்பு தேர்வின் எந்த ஒரு பாடத்திற்கும் விடைத்தாள் நகல் வழங்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**111—**

### இம்ப்ரூவ்மென்ட் தேர்வு எழுதியவர்கள்

**வினா எண் 67992—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற +2 தேர்வில் மேம்படுத்தும் (இம்ப்ரூவ்மென்ட்) தேர்வு எழுதியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எந்த மாவட்டத்தில் இத்தேர்வினை அதிக மாணவர்கள் எழுதியுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற +2 தேர்வில் இம்ப்ரூவ்மென்ட் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கை 6,396 ஆகும்.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் இத்தேர்வினை அதிக மாணவர்கள் எழுதியுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் எழுதிய தேர்வர்களின் எண்ணிக்கை 1,326 ஆகும்.



2006 ஜனவரி 27]

**112—**

### விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல்

**வினா எண் 69336—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

12 ஆம் வகுப்பு (+2) தேர்வில் மாணவர்களின் விடைத் தாள்களைச் சரியாக மதிப்பீடு செய்ய அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

+2 தேர்வில் மாணவர்களின் விடைத் தாள்களைச் சரியாக மதிப்பீடு செய்ய அனுபவம் வாய்ந்த பாட ஆசிரியர்கள் தேர்வாளர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**113—**

### விவசாய நிலங்கள்

**வினா எண் 34715—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள காட்டூர் ஊராட்சியில் விளைநிலங்களில் இறால் குட்டை அமைத்து விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை அரசு தடுத்து நிறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள காட்டூர் கிராமத்தில் இதுவரை 12 இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 8 பண்ணைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 பண்ணைகளுக்கு உரிமம் வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ளன. உரிமம்

வழங்கப்பட்டுள்ள பண்ணைகளினால் விளைநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சுற்றிலும் 'Buffer Zone' அமைக்க பண்ணை உரிமையாளர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, விளைநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை.

*(ஆ) வினா எழவில்லை.*

**114—**

### மீனவர்களுக்கு நிவாரண நிதியினை வழங்குதல்

**வினா எண் 50505—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், மேல்மணக்குடி மீனவக் கிராமத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றவர்கள் காணாமல் போனது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அவர்களைக் கண்டுபிடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

*(இ) பாதிக்கப்பட்ட இக்குடும்பத்திற்கு உணவு, நிவாரண நிதி ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 21-12-2003 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் திருவாளர்கள் (1) ரெம்ஜியூஸ் (2) ததேயூஸ் (3) ஜான் மற்றும் (4) வின்செண்ட் ஆகியோர் கடலில் மீன்பிடிக்கும்பொழுது காணாமல் போனது குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன், இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் கப்பல் படைமூலமும், அண்டை நாடுகளான இலங்கை மற்றும் மாலத் தீவுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களுக்குத் தகவல் அனுப்பியும் தேடப்பட்டது இந்நாள் வரையிலும் அவர்கள் குறித்த எவ்விதமான தகவலும் அந்நாடுகளிலிருந்து பெறப்படவில்லை.*

*(இ) இம்மீனவர்களில் (1) ரெம்ஜியூஸ் (2) ஜான் மற்றும் (3) வின்சென்ட் ஆகியோர் மேல்மணக்குடி மீனவக் கூட்டுறவுச் சங்க*





*உறுப்பினர்களாதலால், அவர்களது வாரிசுதாரர்கள் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிவாரணம் பெற இயலும் என்பதால், நிவாரணத் தொகை பெற்று வழங்குவதற்கு மீன்வளத் துறைமூலம் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய மீனவர் திரு. ததேயூஸ் எந்தவொரு மீனவக் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினராக இல்லாததால், அவரது வாரிசுதாரர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.15,000/- உடனடியாக வழங்க அரசால் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் 22-4-2004 அன்று பணிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் 17-12-2004 அன்று திரு. ததேயூஸின் (காணாமல் போன மீனவர்) தந்தை திரு. எட்வர்ட் அவர்களிடம் ரூ.15,000/-க்கான காசோலையை வழங்கியுள்ளார்.*

**115—**

### தொழிற்கூடம் துவக்கும் திட்டம்

**வினா எண் 52074—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதியில் பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் விசைப் படகு மற்றும் நாட்டுப் படகுகள் உருவாக்கும் தொழிற்கூடம் துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் விசைப்படகு மற்றும் நாட்டுப் படகுகள் உருவாக்கும் தொழிற்கூடம் துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**116—**

### மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை

**வினா எண் 66003—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு துறைமுகத்தில் மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழையாறு துறைமுகத்தில் மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

117—

## படகு நிறுத்தும் தளம்

**வினா எண் 67266—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம்பாளையம் தெரு மற்றும் திருமுல்லைவாசல் மீனவர்களுக்குப் படகு நிறுத்தும் தளம் (ஜெட்டி) அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம்பாளையம் தெரு மற்றும் திருமுல்லைவாசல் மீனவர்களுக்குப் படகு நிறுத்தும் தளம் (ஜெட்டி) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

118—

## தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

**வினா எண் 19407—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) 56 வகையான முறைசாரா தொழிலாளர்களுக்கு வாரியம் அமைக்கப்பட்டு, சுமார் 10 கோடி ரூபாய் வரை வசூல் செய்த அந்த வாரியம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எதிர்காலத்தில் கட்டடத் தொழிலாளர்களைப்போல் ஓய்வூதியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) முறைசாரா தொழிலாளர்களுக்காக அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தை அமைத்து, நலத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

(ஆ) செயற்குறிப்பு இல்லை.

119—

## பயிற்சித் துறையை நவீனப்படுத்துதல்

**வினா எண் 24356—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையை மேலும் நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.4 இலட்சம் செலவில் பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கென கணினி நிறுவப்பட்டு அவ்வலுவலகத்தின் செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) எழவில்லை.

[2006 ஜனவரி 27

120—

## மூடப்பட்ட மில்களைத் திறத்தல்

**வினா எண் 24595—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் உள்ள விசாலாட்சி, மீனாட்சி, சிவகாமி ஆகிய மில்கள் மூடப்பட்டுள்ளதால் 2000 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அன்னாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரையில் விசாலாட்சி மில்-ஏ,பி,சி. என 3 ஆலைகள் இயங்குகின்றன. இந்த ஆலைகள் ஏதும் மூடப்படவில்லை. ஸ்ரீ மீனாட்சி மில்ஸ், பரவை மற்றும் மதுரை என இரண்டு ஆலைகள் உள்ளன. பரவையில் உள்ள ஆலை தொடர்ந்து இயங்குகிறது. மதுரையில் உள்ள ஆலை தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கியதால், அனைத்துத் தொழிலாளர்களும் வி.ஆர்.எஸ். திட்டத்தின்கீழ் வேலையை ராஜினாமா செய்து பணம் பெற்றுக் கொண்டனர். எந்தத் தொழிற் தகராறும் இல்லை. சிவகாமி மில்ஸ், ஷீலாராணி டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் திரு. சுந்தரபாண்டியன் என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாலையைத் திறப்பது தொடர்பாக 18-12-2003-ல் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையின்படி, தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைத் தொகை ரூ.1,200/-ஐத் தற்போது நிர்வாகம் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வழங்கிவிட்டது. 10-1-2004 முதல் ஷிப்ட் முறையில் ஆலை இயங்கி வருகிறது. தற்போது சுமுக நிலை நிலவி வருகிறது.

121—

## விம்கோ தொழிற்சாலை

**வினா எண் 30252—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

திருவொற்றியூர் நகரம், 8-வது வட்டத்தில் அமைந்து இருக்கும் விம்கோ தொழிற்சாலை நான்கு மாதங்களாக மூடிக் கிடப்பதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அன்னாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

விம்கோ தொழிற்சாலையில் தொழிலாளர்கள் மேற்கொண்ட 'மெது வேலை' நடவடிக்கையினால், ஒப்பந்தப்படி உற்பத்தி அளவு எட்டாத நிலையில், தொழிலாளர்களின் 2002 மே மாதச் சம்பளம் நிர்வாகத்தால் குறைவு செய்தது தொடர்பாக, தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், 11-06-2002 முதல் நிறுவனம் கதவடைப்பு செய்தது. நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கம் மேற்கொண்ட நேரடிப் பேச்சுவார்த்தைகளில் இணக்கமான முடிவு ஏற்படாததால், மாண்புமிகு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. முடிவில், தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன்படி, தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் தொழிலாளர்களின் ஊதியம், இதரப் படிகள் மற்றும் கதவடைப்பை நீக்குதல் குறித்து 17-02-2003-ல் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 8 மாத காலமாக நிலவி வந்த கதவடைப்பு 19-02-2003 முதல் நீக்கப்பட்டு தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த ஒப்பந்தத்தினால், 524 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இந்நிறுவனம் தொடர்பாக தற்போது தொழிற்தாவா ஏதும் இல்லை.

122—

## தொழிற் பயிற்சி

**வினா எண் 36444—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எவ்வளவு பேர் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்த்தல் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டனர்?

(ஆ) பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளருக்கு அரசு அளித்த உதவித் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்கள் 19 பேருக்குத் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்க்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

(ஆ) ஒரு வருட பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்கள் 19 பேருக்கும் ரூ.62,025/- தாட்கோமூலம் அரசு உதவித் தொகையளிக்கப்பட்டது.

**123—**

### ஓய்வூதியம்

**வினா எண் 40311—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, என்.ஈ.பி.சி. நிர்வாகம் கவர்கல் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள என்.ஈ.பி.சி. நிர்வாகம் கவர்கல் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியப் பலன்களைப் பெற்று வருகின்றனர்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**124—**

### பணி நிரந்தரம்

**வினா எண் 43140—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தற்காலிக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணி நிரந்தரம் மற்றும் அந்தஸ்து வழங்குதல்) சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**125—**

### ஆலைகள் திறப்பு

**வினா எண் 47539—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள டி.பி.எப். மில், ஞானாம்பிகை மில், ராமகிருஷ்ணா மில், சிங்காநல்லூரில் உள்ள ஜெயலட்சுமி மில், வசந்தா மில் மற்றும் ராதாகிருஷ்ணா மில், ஜனார்த்தனா மில், கஸ்தூரி மில், ரவிச்சந்திரா மில், மது ஸ்பின்னிங் மில், சோமசுந்தரா மில், என்.டி.சி. மில், கிருஷ்ணவேணி மில், கோத்தாரி மில், ஸ்ரீஹரி மில், ராஜலட்சுமி மில் ஆகியவை நீண்ட நாட்களாக மூடிக்கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 16 ஆலைகளில் 'ரவிச்சந்திரா மில்ஸ்' என்ற ஆலை கோவை மாவட்டத்தில் இல்லை. மாறாக ரவீந்திரா மில்ஸ் என்ற ஆலை மட்டுமே இயங்காமல உள்ளது. இதுபோன்று கோத்தாரி மில்ஸ் என்ற ஆலை பி.எல்.ஆர். டெக்ஸ்டைல்ஸ் எனப் பெயர் மாற்றம செய்யப்பட்டுள்ளது. மேலும்

இராமகிருஷ்ணா மில்ஸ் தற்போது இயக்கப்படுகிறது. டி.பி.எப் டெக்ஸ்டைல்ஸ், ஞானாம்பிகா டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ஜனார்த்தனா மில்ஸ் ஆகிய ஆலைகளில் தொழிலாளர்கள் அவர்களுக்குச் சேர வேண்டிய தொகையை நிர்வாகத்திடமிருந்து பெற்றுக்கொண்டு கணக்கை முடித்துள்ளனர். சோமசுந்தரா மில்ஸ் மற்றும் கிருஷ்ணவேணி மில்ஸ் ஆகிய என்.டி.சி. ஆலைகளைப் பொறுத்தமட்டில், இவற்றை மூடிவிட மத்திய அரசின் தொழிலாளர் துறை உத்தரவிட்டுள்ளது. தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் பணி விலகி விட்டனர். மீதமுள்ள தொழிலாளர்கள் இதர என்.டி.சி ஆலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் வசந்தா மில்ஸ், ராதாகிருஷ்ணா மில்ஸ், மது ஸ்பின்னிங் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ் மற்றும் ரவீந்திரா மில்ஸ் ஆகியவை சீரமைக்க வாய்ப்பில்லாததால், அவற்றைத் திறந்து இயக்க வாய்ப்பில்லை என்று தெரிகிறது. பி.எல்.ஆர் டெகஸ்டைல்ஸ் (கோத்தாரி மில்ஸ்) மற்றும் ராஜலட்சுமி மில்ஸ் ஆகியவற்றில் கதவடைப்பு பிரச்சினை சென்னை தொழிற் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ள நிலையில், தங்களுக்குச் சேரவேண்டிய தொகை குறித்து தொழிலாளர்கள் நிர்வாகத்துடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாலைகளின் கட்டடங்கள் இடிக்கப்பட்டு இயந்திரங்கள் விற்கப்பட்ட நிலையில் இவ்வாலைகளை மீண்டும் இயக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை.

மீதமுள்ள ஆலையான "கஸ்தூரி மில்ஸ்"-ஐ பொறுத்தமட்டில், ஆலை இயங்காத பிரச்சினை சென்னை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளது. தொழிற் தீர்ப்பாயம் பிறப்பிக்க இருக்கும் தீர்ப்பினைப் பொறுத்தே, இவ்வாலை மீண்டும் திறக்கும் வாய்ப்புகள் அமையும்.

**126—**

## பீடித் தொழில்

**வினா எண் 58599—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பீடித் தொழில் ஒழிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பீடித் தொழிலை ஒழிக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**127—**

## புதிய கட்டடம்

**வினா எண் 66999—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கழுகுமலை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**128—**

## தேர்வுகள்

**வினா எண் 69908—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தொழிற்பயிற்சிப் பள்ளி (ஐ.டி.ஐ) மாணவர்களுக்கு நடத்தப்படும் தேர்வுகளை மற்ற கலைப் பிரிவு மாணவர்கட்கு நடத்தப்படும் தேர்வுக் காலத்திலேயே நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2006 ஜனவரி 27

**விடை.—**

**மாண்புமிகு திரு. ப. அன்னாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை

*(ஆ)* எழாது.

**129—**

**கட்டட வசதி**

**வினா எண் 70043—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் இயங்கி வரும் தொழிலாளர் நல அலுவலர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அன்னாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதியில் இயங்கிவரும் தொழிலாளர் நல அலுவலர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கான முன்மொழிவு ஏதும் அரசிடம் தற்போது நிலுவையில் இல்லை.

**130—**

**வேலைவாய்ப்பு**

**வினா எண் 70528—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

கோவை மாவட்டத்தில் மூங்கில் தொழிலில் ஈடுபட்டுள்ள சிலர் வேலை இழந்துவிட்டபடியால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அன்னாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**131—**

**கடனுதவி**

**வினா எண் 72235—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலையில்லாப் பட்டதாரிகள் பயன்பெறும்வகையில் சிறப்புக் கடனுதவித் திட்டங்களை அரசு அறிமுகப்படுத்துமா?

*(ஆ)* ஆம் எனில், எத்தகைய கடன் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அன்னாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சிறப்புக் கடனுதவித் திட்டங்களைப் பொறுத்தமட்டில், மாவட்டத் தொழில் மையங்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பல்வேறு வங்கிகளால் நிறைவேற்றப்படும் பல்வேறு சுயதொழில் திட்டங்கள் பற்றி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. விருப்பமுள்ள பதிவுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு கடனுதவி பெற பரிந்துரைக்கப்படுகிறது.

*(ஆ)* ஏதுமில்லை.

132—

## வழக்குகள் விசாரணை

**வினா எண் 72954—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களின் வழக்குகளை விரைவில் முடிக்க புதிய திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் எழுப்பப்படும் தொழிற் தாவாக்களில் இறுதி ஆணை பிறப்பிக்க கால வரையறை நிர்ணயம் செய்யப்பட்டு, பெரும்பாலான நேர்வுகளில் அக்கால வரையறைக்குள் வழக்குகள் முடிக்கப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இந்நிலையில் வழக்குகளை முடித்திடத் தனியாக புதிய திட்டங்கள் ஏற்படுத்திட அவசியம் எழவில்லை.

133—

## தொழிற்சாலைகள்

**வினா எண் 74879—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை உடனடியாகத் திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



134—

## உதவித் தொகை

**வினா எண் 80538—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிரசவ கால ஊதியம், குறைந்தபட்ச ஊதிய அடிப்படையில் மூன்று மாத ஊதியமாக அனைத்து அமைப்புசாரா பெண் தொழிலாளர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித் தொகையாக 15-6-2005 முதல் ரூ.4,000/-ஆக உயர்த்தி வழங்க, திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 3 மாத ஊதிய அடிப்படையில் பிரசவ கால ஊதியம் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

135—

## புகைப்படத் தொழில்

**வினா எண் 83931—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் லித்தோ ஆப்செட் இயந்திரம் இயக்க, தொழில் கல்வி மற்றும் டிஜிட்டல் புகைப்படத் தொழில் கல்வி துவக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

136—

## மரங்கள் நடுதல்

**வினா எண் 11—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வீதிகளில் நிழல் தரும் மரங்கள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் 2,870 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

137—

## தார்ச் சாலை

**வினா எண் 916—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஆரல்குந்தியில் தற்போது விடுபட்ட தார்ச் சாலை பகுதியிலிருந்து சாமத்தாள் சாலை வரை, தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஆரல்குந்தியில் தற்போது விடுபட்ட தார்ச் சாலை அமைக்க நபார்டு திட்டம்மூலம் நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்படவுள்ளது.



138—

## பேருந்து நிலையம்

**வினா எண் 935—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை வேறு இடத்தில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் பேருந்து நிலையம் தற்போது புதுப்பிக்கப்பட்டு நல்ல முறையில் பேருந்து தங்கிச் செல்லும் வகையில் உள்ளது. பொது பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

139—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 2710—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமயநல்லூர் தொகுதி, அனைத்துச் சமுதாயக் கூடங்களுக்கும் குடிநீர் வசதியும், மின்விளக்கு வசதியும் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதியில் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் மற்றும் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கும்.

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் 42 சமுதாயக் கூடங்களும், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தில் 9 சமுதாயக் கூடங்களும் உள்ளன.

இவற்றில் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 16 சமுதாயக் கூடங்களிலும் மின் வசதி உள்ளது. 26 மின் வசதியில்லாத சமுதாயக் கூடங்களிலும், 42 குடிநீர் வசதியில்லாத சமுதாயக் கூடங்களிலும் உரிய வசதிகள் ஊராட்சிமூலம் செய்து தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 9 சமுதாயக் கூடங்களிலும் மின்விளக்கு வசதி உள்ளது. 5 சமுதாயக் கூடங்களில் குடிநீர் வசதி உள்ளது. குடிநீர் வசதியில்லாத 4 சமுதாயக் கூடங்களில் குடிநீர் வசதி ஊராட்சிமூலம் செய்து தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**140—**

### குடிநீர் வசதி

**வினா எண் 2882—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட சவூர்வெளி கிராமம் மற்றும் சிலம்பூர் ஊராட்சி, சிலம்பூர் மேலப்பட்டி குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சியைச் சார்ந்த 250 மக்கள் தொகை கொண்ட சவூர்வெளி குடியிருப்பில், ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், சிலம்பூர் ஊராட்சியில் சிலம்பூர் மேலப்பட்டி என்ற குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் 1997 முதல் பயன்பாட்டில் உள்ளது.



**141—**

### மின் விளக்கு வசதி

**வினா எண் 3238—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட திருவதிகை-கடலூர் பிரதான சாலையில் அமைந்துள்ள சக்ரபாணி நகர் தெருவில் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட திருவதிகை-கடலூர் பிரதான சாலையில் அமைந்துள்ள சக்ரபாணி நகர், அனுமதியற்ற மனைப் பிரிவில் அமைந்துள்ள ஒரு பகுதியாகும். மேற்கண்ட இடத்தில் குடிநீர் வசதிகள், தெருவிளக்கு வசதிகள் மற்றும் சாலை வசதிகள் நகராட்சியால் செய்து தர இயலாது. இருப்பினும், மேற்கண்ட இடத்தில் ஏற்கெனவே தமிழ்நாடு மின் வாரியத்தால் அமைக்கப்பட்ட மின் கம்பங்கள் நல்ல நிலையில் உள்ளதால், இவ்விடத்தில் மூன்று தெரு விளக்குகள் மின் வாரிய ஒப்புதலுடன் அமைக்க நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

**142—**

### குடிநீர் வசதி

**வினா எண் 3501—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள வடக்குத்து கிழக்கு கிராமத்தில் நீர் இறைக்கும் இயக்கி சரியாக இயங்காததால், புதியதாக ஆழ்குழாய்க் கிணறும், நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த வடக்குத்து ஊராட்சியிலுள்ள கீழ்வடக்குத்து குடியிருப்பிற்கு பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5.70 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் 4/2003-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

**143—**

**காவிரிக் குடிநீர்**

**வினா எண் 4160—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், கொத்துக்காடு மக்களுக்கு காவிரிக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், துங்காயூர் ஊராட்சியில் உள்ள கொத்துக்காடு குடியிருப்புக்கு, பயனிலுள்ள எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தற்போது காவிரிக் குடிநீர் வழங்கப்படுகிறது.

**144—**

**தார்ச் சாலை**

**வினா எண் 4919—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி, மன்மதன் கோவில் தெருவில் தார்ச் சாலை போட்டுத் தருவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி, மன்மதன் கோவில் தெருவிற்கு தார்ச் சாலை வசதி செய்திட ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

**145—**

**திரையரங்கு வரி**

**வினா எண் 8753—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலம், கேபிள் தொலைக்காட்சி நடத்துனரிடம் வசூலிக்கப்படும் வரியை, சினிமா திரையரங்குகளில் வசூலிக்கப்படும் ஒட்டுமொத்த வரியைப் போல வசூலிக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) உள்ளாட்சி அமைப்புக்கு தகுந்தாற்போல் அந்த வரி விதிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**146—**

**பணி நியமனம்**

**வினா எண் 3846—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் கடைநிலை ஊழியர், காவலர் பதவிகள் காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிரப்ப அரசு அனுமதி அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 29-11-2001 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 212-ல் அரசுப் பணிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையாணை ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களுக்கும் பொருந்தும். எனவே, தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் கடைநிலை ஊழியர் மற்றும் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கு வாய்ப்பில்லை.

**147—**

## வரி வசூல்

**வினா எண் 10289—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் நகராட்சியில் சொத்து வரி, தொழில் வரி மற்றும் தண்ணீர் வரி, 31-7-2001 வரை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்யப்படாமல் இருப்பதால் பல நலப் பணிகளை நகராட்சி செய்ய முடியாமல் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிலுவையிலுள்ள வரிப் பணத்தை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாச்சலம் நகரில் 31-3-2002 வரை செலுத்தப்படாமல் உள்ள சொத்து வரி, தொழில் வரி மற்றும் தண்ணீர்



வரித் தொகையான ரூ.158.76 இலட்சத்தில் ரூ.72.61 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**148—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10675—திரு. பே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிக்கனம்பட்டி ஊராட்சியில் குப்பனூர்-காட்டுவளவு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி. சிக்கனம்பட்டி ஊராட்சி, குப்பனூர் காட்டுவளவு பகுதிக்கு குப்பூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. மேலும் இக்குடியிருப்புக்கு ஓமலூர் (வடக்கு) ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 102 ஊரகக் குடியிருப்புக்களுக்கான காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 4-5-2004 முதல் காவிரி ஆற்று நீர் வழங்கப்பட்டு வருகிறது.

**149—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10759—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், காணப்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், காணப்பட்டி கிராமத்து மக்களுக்கு ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்கிராமத்தில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

**150—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10790—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமன அள்ளி ஊராட்சி, வெத்தாலாத்துக் கொட்டாய் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இங்கு மக்கட்தொகை 50 பேர் மட்டுமே என்பதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.



2006 ஜனவரி 27]

**151—**

### சிறு தொழில்

**வினா எண் 12369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பெண்கள் எவ்வளவு என்று அரசு கணக்கெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் சிறு தொழில் துவங்க அரசு கடனுதவி செய்ய முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் 1,27,000 பெண்கள் உள்ளனர்.

(ஆ) அவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு கடன் பெற வழிவகை செய்யப்படுகிறது.

**152—**

### புதிய நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12577—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள மறவன் கோரை கிராமத்திற்கு மேட்டூர்-காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, மறவன்கோரை குடியிருப்புக்கு, கிழங்குகாரன் தெரு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள் மூலமாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**153—**

## குடிநீர் வசதி

**வினா எண் 13337—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி ஊராட்சி, நரசிமேடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், மஞ்சார அள்ளி ஊராட்சி, நரசிமேடு குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் 1998-1999 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ளது. எனவே, தற்போது இக்குடியிருப்பில் வழங்கப்படும் குடிநீர் வசதியே போதுமானதாகும்.



**154—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 14850—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, திருமலவாடிக்கு சமுதாயக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**155—**

## காந்தி பூங்கா

**வினா எண் 17040—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சி, கிழக்கு தாம்பரம், காந்தி பூங்கா பராமரிப்பு இன்றி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதினோராவது நிதிக்குழு உதவியுடன் ரூ.10 இலட்சம் செலவில் கிழக்கு தாம்பரத்திலுள்ள காந்தி பூங்காவில் சுற்றுச் சுவர்

அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பூங்கா பகுதிகளில் சுற்றுச் சூழல் பாதிக்காதவண்ணம் சுமார் 200 பல்வகை மரக்கன்றுகள் நகராட்சியால் நடப்பட்டுள்ளன. தற்போது இப்பூங்கா நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**156—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 17703—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சின்னதோப்புக்கொல்லை கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி டிசம்பர் 2002-ல் அமைத்துக் கொடுக்கப்பட்டு தற்சமயம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**157—**

## சிமெண்ட் களம்

**வினா எண் 18050—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சியில் உள்ள கீழவெளி மந்தக்கரையில் உள்ள 1½ ஏக்கர் களத்தை சிமெண்ட் களமாக அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சியில் உள்ள கீழவெளி மந்தக்கரையில் உள்ள 1½ ஏக்கர் களத்தில் 150 சதுர மீட்டர் பரப்பில் ரூ.60,000 மதிப்பீட்டில் ஏற்கெனவே சிமெண்ட் களம் அமைக்கப்பட்டுள்ளது.

**158—**

## குடிநீர் வசதி

**வினா எண் 19373—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, ஜமீன் எளம்பள்ளி அருந்ததியர் காலனி மக்கள், குடிநீர் வசதியின்றி சிரமப்படுவது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், எளம்பள்ளி ஊராட்சி ஜமீன் எளம்பள்ளி அருந்ததியர் காலனிக்கு 2002-2003 ஆம் ஆண்டில் சிறு மின் விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**159—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 21154—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் கிராமம் அண்ணாநகர், காமராஜர் நகர் மசையன் தெரு ஆகிய பகுதிகளுக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சியிலுள்ள அண்ணாநகர், காமராஜர் நகர் மசையன் தெரு ஆகிய பகுதிகளுககு எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தனித்தனியே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து காவிரிக் குடிநீர் ஏற்றப்பட்டு மக்கள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டம் தற்பொழுது ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு ஊராட்சி பராமரிப்பில் உள்ளது.

**160—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 21158—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கிராமம் மேல்காட்டில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சிக்கு உட்பட்ட இராமகவுண்டனூரின் ஒரு பகுதி மேல்காடு ஆகும்.

இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், இராமகவுண்டனூரில், 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு பகிர்மானக் குழாய் மூலம், காவிரிக் குடிநீர் மேல்காடு பகுதிக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்குத் தனியாக மேல்நிலைத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.



2006 ஜனவரி 27]

**161—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 21945—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சின்னம்பள்ளி ஊராட்சி, கரியக்காட்டுவளவு கிராமத்தில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நல்லம்பள்ளி ஒன்றியம், சின்னம்பள்ளி ஊராட்சியைச் சார்ந்த கரியக்காட்டுவளவு குடியிருப்பிற்கு தற்போது பயனில் உள்ள 5 கையிறைப்பான்கள் மூலமும், 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்து தற்போது பரிசீலனையில் இல்லை.

**162—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 22038—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலவாடி ஊராட்சி, பொன்னப்பணம்பட்டி கிராமத்திற்குக் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பாலவாடி ஊராட்சியில் உள்ள குடியிருப்பின் பெயர் மொளப்பணம்பட்டி என்பதே சரியானதாகும். இக்குடியிருப்பிற்கு இரு கையிறைப்பான்கள் மூலம் அத்தியாவசியத் தேவைக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது தற்போது பரிசீலனையில் இல்லை.

**163—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 22157—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு ஒன்றியம், இளமானூர் புதூர் குடியிருப்பிற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், இளமானூர் ஊராட்சியில் உள்ள இ.புதூர் குடியிருப்பிற்கு, குடிநீர்த் திட்டம் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 12-12-2002 முதல் ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது திட்டம் மக்கள் பயனில் உள்ளது.

**164—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 22167—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



உசிலம்பட்டி தொகுதி, அல்லிக்குண்டம் பஞ்சாயத்து பொம்மனம்பட்டிக்குக் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிக்குண்டம் ஊராட்சியைச் சார்ந்த பொம்மனம்பட்டி குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**165—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 22557—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரத்தில் அதிக கொள்ளளவு திறன் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த லட்சுமிநாராயணபுரம் ஊராட்சியிலுள்ள லட்சுமிநாராயணபுரம் குடியிருப்பிற்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

[2006 ஜனவரி 27

166—

## குடிநீர் குளம்

**வினா எண் 23002—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பள்ள ஈகை குடிநீர்க் குளம் ஆழப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், 50 x 56 மீ. அளவுள்ள பள்ள ஈகை குடிநீர்க் குளம் 2002-2003 ஆம் ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தில், ரூ.13,022/- செலவிடப்பட்டு ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

167—

## கல்பட்டு குளம்

**வினா எண் 23072—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கல்பட்டு குளம் சீரமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கல்பட்டு குளம் 2004-2005 ஆம் ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தில், ரூ.29,900/- மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது.



2006 ஜனவரி 27]

168—

## கோயில் குளம்

**வினா எண் 23079—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், அனுமந்தை மாரியம்மன் கோயில் குளத்தைச் சீர் செய்யும் நோக்கம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், அனுமந்தை மாரியம்மன் கோயில் குளத்தினைச் சீர் செய்ய தற்போது நிதி வசதி இல்லை.

169—

## நிலத்தடி நீர்

**வினா எண் 24317—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரத்திலுள்ள குட்டைகள், ஏரிகள், குளங்கள், கோவில் குளங்களுக்கு நிலத்தடி நீர் மேம்பட வழிவகை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரத்திலுள்ள குட்டைகள், ஏரிகள், குளங்கள், கோவில் குளங்களுக்கு நிலத்தடி நீர் மேம்படுத்தும் பணிக்காக

[2006 ஜனவரி 27

பனைமரத்துப்பட்டி ஏரியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 1,400 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு நடவடிக்கை எடுக்கபட்டு வருகிறது. மேலும் தற்போது அரிசிபாளையம் ராஜேந்திரா சத்திரத்தில் அமைந்துள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான தெப்பக்குளம் தூர் வாரப்பட்டு மழைநீர் சேகரிப்புக்கான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**170—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 26058—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சி, வாராதிக் கொட்டாய் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, வாராதிக் கொட்டாய் குடியிருப்பின் மக்கட்தொகை மிகக் குறைவாக உள்ளதால், இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் அமைக்க இயலாது. எனினும், இக்குடியிருப்பிற்கு ஊராட்சியின்மூலம் கையிறைப்பான் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**171—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 26064—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேலம்பட்டி ஊராட்சி, கொள்ளக் கொட்டாய் இடத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2006 ஜனவரி 27]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளக் கொட்டாய் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 35 மட்டுமேயாதலால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

**172—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 26206—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், அய்யம்பாளையத்தில் குடிநீர்த் தட்டுபாடு உள்ளதால், அங்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி ஊர் முழுவதும் குடிநீர் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், அய்யம்பாளையம் குடியிருப்புக்கு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு காவிரிக் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**173—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 26212—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சி, மோனராக்கன் நாயக்கன்வளவு என்ற பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதால், அங்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சியில் மோனராக்கன் நாயக்கன்வளவு என்ற குடியிருப்பு இல்லை. எனினும், சமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட மனம்போக்கியான் வளவு என்னும் குடியிருப்பும், மோனராக்கன் நாயக்கன்வளவு குடியிருப்பும் ஒரே குடியிருப்பைக் குறிப்பதாகும். இக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் மூலமாகக் குடிநீர் வழங்கப்படுகிறது.

**174—**

**நீர்த் தொட்டிகள்**

**வினா எண் 27436—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், துப்பாக்குடி தெற்கு தெருவில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் நீர்த் தொட்டிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஒன்றியம், துப்பாக்குடி குடியிருப்பில் 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.



2006 ஜனவரி 27]

**175—**

**காவிரிக் குடிநீர்**

**வினா எண் 27807—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரி கிராமம், பெருமாள் கோயில் அருகில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி காவிரிக் குடிநீர் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வேம்பனேரி ஊராட்சி, வேம்பனேரி பெருமாள் கோவில் குடியிருப்பிற்குக் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், எடப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த 97 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் 3/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**176—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 30150—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் வேலை செய்யும் தினக்கூலி ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் வேலை செய்யும் தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற அரசாணை (பல்வகை) எண் 212, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ல் தடை யுத்தரவு உள்ளதால், தடை நீங்கிய பின்னர் புதுக்கோட்டை நகராட்சியில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் பணி மூப்பு மற்றும் கல்வித் தகுதிக்கேற்ப தினக்கூலிப் பணியாளர்களை பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

177—

**குடிநீர் வசதி**

**வினா எண் 30755—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மகாவீர் ஹை பாரஸ்ட்டில் குடியிருக்கும் பொது மக்கள் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குப்பட்ட ஹை பாரஸ்ட் எஸ்டேட், மகாவீர் பிளான்டேசன் என்ற தனியார் தோட்ட நிறுவனத்திற்குப் பாத்தியப்பட்ட பகுதி. அந்நிறுவனம் மூலம் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.





178—

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 30917—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சி, ஆதனக்கோட்டையில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சியில் உள்ள ஆதனக்கோட்டை குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இககுடியிருப்பிற்குப் புதிய மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

179—

**பாதாள சாக்கடைத் திட்டம்**

**வினா எண் 31626—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**180—**

**நிலத்தடி நீர்**

**வினா எண் 33386—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகரில் உள்ள சீலாவரி ஏரியைத் தூர் எடுத்து நிலத்தடி நீர் சேகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது இத்திட்டம் செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீலாவரி ஏரியைச் சுற்றியுள்ள மனைப் பிரிவுகளில் இருந்து வரும் கழிவுநீர், ஓடைநீர் யாவும் ஏரியில் தேங்கி நிற்பதால் ஏரியைத் தூர் எடுத்து, நிலத்தடி நீர் சேகரிக்கும் திட்டம் ஏதும் செயல்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

**181—**

**சுற்றுப்புறச் சுகாதாரம்**

**வினா எண் 34020—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டம், கபிலர் மலைத் தொகுதி, பரமத்தி வேலூர் மற்றும் மோகனூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் திரையரங்குகளில் சுற்றுப்புறச் சுகாதாரத்தைச் செயல்படுத்தாமல் உள்ள திரையரங்குகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* நாமக்கல் மாவட்டம், கபிலர் மலைத் தொகுதி, பரமத்தி வேலூர் மற்றும் மோகனூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் திரையரங்குகளில் தணிக்கையின்போது சுற்றுப்புறச் சுகாதாரக் குறைபாடுகள் இருப்பின் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

*(ஆ)* மேற்காணும் திரையரங்குகளில் சுற்றுப்புறச் சுகாதாரம் செயல்படுத்தாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**182—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 34810—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, தெற்குமேடு கந்தன் பிள்ளையார்கோயில் பொட்டியம்மாவளவு, ராமசாமி வளவு ஆகிய இடங்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சிக்குட்பட்ட தெற்குமேடு ராமசாமி வளவு குடியிருப்பின் பகுதிகளான பொட்டியம்மாவளவு, கந்தன்பிள்ளையார் கோயில் ஆகிய பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 176 வழியோர ஊரகக் குடியிருப்புகள் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் 10/2003 முதல் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

[2006 ஜனவரி 27

183—

குடிநீர் வசதி

**வினா எண் 38837—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் சிறப்புச் சிற்றூராட்சியில் ஏற்கனவே 11 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தற்போது மண்ணச்சநல்லூர் சிறப்புச் சிற்றூராட்சியில் நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 77 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

184—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 38842—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, திருப்பஞ்ஞிலி ஊராட்சி, வால்மால்பாளையம் தெற்கியூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, திருப்பஞ்ஞிலி ஊராட்சி, வால்மால்பாளையம் தெற்கியூர் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

185—

நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 38951—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, கிழக்கு குடியிருப்பு பகுதிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உளளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, கிழக்கு குடியிருப்பு பகுதிக்கு தனி மின்விசைத் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி 1992 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் கையிறைப்பான் ஒன்றும் உள்ளது. மக்கள் தொகை 753 கொண்ட இவ்வூராட்சிக்கு மேற்கண்ட நீர் ஆதாரங்கள் போதுமானதாக உள்ளன.

186—

திரையரங்குகள் பராமரித்தல்

**வினா எண் 41416—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) சேலம் மாநகராட்சியில் உள்ள சினிமா திரையரங்குகள் சுகாதாரமற்ற முறையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியிலுள்ள 32 திரையரங்குகளில் துப்புரவு ஆய்வாளர்கள்மூலம் அவ்வப்போது மாநகர அலுவலர் தலைமையில் ஆய்வு செய்து அதற்கான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, பொது சுகாதாரச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**187—**

## மேம்பாலம்

**வினா எண் 41899—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகருக்கு நுழையும் இரயில்வே கேட்டின்மேல் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஆய்வில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு நகருக்கு நுழையும் இரயில்வே கேட்டின் அருகில் புறவழிச்சாலை மேம்பாலமாக அமைந்துள்ளதால் தனியாக செங்கற்பட்டு இரயில்வே கேட்டின் மேல் மேம்பாலம் அமைக்க இயலாது.

**188—**

## கிராம அங்காடி

**வினா எண் 42628—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சி நெப்பத்தூரில் கிராம அங்காடி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996-97 ஆம் ஆண்டிலேயே கிராம அங்காடி கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

**189—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 48040—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் மின் கம்பங்கள் போக்குவரத்துக்கு இடையூறாகச் சாலையின் நடுவில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூர் மாநகராட்சியில் போக்குவரத்துக்கு இடையூறாக சாலையின் நடுவில் இருக்கும் மின்கம்பங்களை அகற்றி சாலையோரத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**190—**

## குடிநீர் வசதி

**வினா எண் 48204—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் உலக வங்கியில் கடன் பெற்று குடிநீர்த் தட்டுப்பாட்டை முற்றிலும் நீக்குவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் உலக வங்கியில் கடன் பெற்று குடிநீர்த் தட்டுப்பாட்டை முற்றிலும் நீக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை எனினும், குடிநீர்த் தட்டுப்பாட்டை முற்றிலும் நீக்குவதற்கு பில்லூர் (இரண்டாவது) திட்டத்தின் மூலம் ரூ. 105.26 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அரசு கடன் உதவி பெற்று செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**191—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 48493—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதி, பெரமாண்டம்பாளையம் ஊராட்சி பெரமாண்டம்பாளையம் முத்தூர் பிரிவு சாலையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் ஊராட்சி, பெரமாண்டம்பாளையத்திற்கு முத்தூர் குடிநீர் திட்டத்திலிருந்து தற்போதுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2006 ஜனவரி 27]

**192—**

## சாக்கடை வசதி

**வினா எண் 49265—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மக்கான் தெருவில் சாக்கடை வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மக்கான் தெருவில் சாக்கடை வசதி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**193—**

## மின்விளக்கு வசதி

**வினா எண் 50550—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி, 3,5,6,7,10,11-வது பிரிவுகளில் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி, 3,5,6,7,10,11-வது வார்டு பிரிவுகளில் புதிய 189 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

194—

### கல்வெட்டு

**வினா எண் 51664—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை காந்திப்பொட்டல் பகுதியிலுள்ள காந்தியடிகள் சிலையின்கீழ் 'காந்தியடிகள் வேட்டி துண்டுடன் முதன் முதலில் மக்களிடம் உரையாற்றிய இடம்' என்பதைக் கல்வெட்டில் பொறிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மதுரை காந்திப்பொட்டல் பகுதியிலுள்ள காந்தியடிகள் சிலையின்கீழ் 'காந்தியடிகள் வேட்டி துண்டுடன் முதன்முதலில் உரையாற்றிய இடம்' எனக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

195—

### நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 52567—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாற்றில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டும் செயல்படாமல் உள்ளதை உடனடியாக செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு குடியிருப்பிலுள்ள தனி மின் விசைத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட



ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஜூலை 2003-ல் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

196—

### பேருந்து நிலையம்

**வினா எண் 52940—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி அண்ணா மத்திய பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்ய காவல் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் சொந்தமான 1.80 ஏக்கர் நிலத்தை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யவும், அதற்கு ஈடாக நகராட்சிக்குச் சொந்தமான மகாலிங்கபுரத்தில் உள்ள இடத்தினை காவல் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் நில உரிமை மாற்றம் செய்யவும் அனுமதியளித்து, அரசாணை (நிலை) எண் 192, நாள் 2-12-2003-ல் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. நகராட்சியால் நில உரிமை மாற்றம் குறித்த முன் மொழிவுகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

197—

### குடிநீர் வசதி

**வினா எண் 53418—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர்த் தட்டுப்பாட்டைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாட்டை அகற்ற மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**198—**

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 53446—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருமணி ஊராட்சியிலுள்ள இந்திரா நகரில் பேருந்து நிறுத்தம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**199—**

## கட்டட வசதி

**வினா எண் 54154—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) சேலம் மாநகர் 5-வது பகுதி மிட்டாபுதூரிலுள்ள சேலம் மாநகராட்சி துவக்கப் பள்ளியில் மேல் தளம் புதுப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 5-வது பகுதியிலுள்ள மிட்டாபுதூர் பள்ளிக் கட்டடம் 25 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால், அக்கட்டடத்தை இடித்துவிட்டு புதிய பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**200—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 56543—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, திருநெல்லிவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, திருநெல்லிவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தற்போது தினையாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருநெல்லிவயல் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றின் கொடுதிறன் போதுமான அளவு உளளது. எனவே, திருநெல்லிவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2006 ஜனவரி 27

## பட்டியல் 5

1—

### சாலை வசதி

**வினா எண் 27873—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சின்கோனா செல்லும் வழியில் உள்ள சுட்டினார் தேயிலைத் தோட்டத்திற்குச் சாலை வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

### சாராய வழக்குகள்

**வினா எண் 33575—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் 2002-2003 ஆண்டுகளில் பதிவான சாராய வழக்குகள் எத்தனை?

(ஆ) சாராயத்தைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 33,275 ஆகும்.

(ஆ) தீவிரமான மதுவிலக்கு திடீர் சோதனைகள் காவல் துறையினராலும், மதுவிலக்கு பிரிவினராலும், வேலூர் சரகக் காவல் துறைத் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரின் தலைமையில் வாரத்தில் இரண்டு நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், கிராம மக்கள் மத்தியில் மதுவிலக்கு விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படுகின்றன. இதன் காரணமாக கள்ளச் சாராய நடவடிக்கைகள் குறைந்துள்ளன.

3—

### மதுபானக் கடைக்கு நிரந்தரத் தடை

**வினா எண் 43822—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் 11-வது வட்டத்தில், திருவொற்றியூர் பிரதான சாலையில் சுகம் மருத்துவமனைக்கும், நாகாத்தம்மன் கோயில் மற்றும் கிறித்துவ ஆலயம் இருக்கும் இடத்திற்கும் நடுவில் உள்ள மதுபானக் கடைக்கு அரசு நிரந்தரத் தடை விதிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இந்த மதுபானக் கடையானது 29-3-2005 முதல் மூடப்பட்டுவிட்டது.

4—

### வட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 58573—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, கோட்டூரில் ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகம் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

5—

**கள் இறக்குதல்**

**வினா எண் 61711—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பனை மரத் தொழிலாளர்களைக் காப்பாற்றிட கள் இறக்க அரசு அனுமதிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசு கொள்கையின்படி தற்போது இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை மட்டுமே விற்பனை செய்ய அனுமதி உள்ளது. கள் விற்பனைக்கு அனுமதி இல்லை. இதற்கு முந்தைய ஆண்டுகளில் கள் விற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு அதில் குளோரால் ஹைட்டிரேடு போன்ற பொருட்களின் கலப்படத்தால் உபயோகிப்பவர்களின் உடல் நலத்திற்கு கேடு விளைவித்ததால் மேற்கண்ட உரிமம் திரும்பப் பெறப்பட்டது. பனைமரத் தொழிலாளர்களுக்கு கள் இறக்குவதற்கு உரிமம் வழங்குவது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) கள் இறக்குவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லாத காரணத்தினால் இக்கேள்வி எழவில்லை.



2006 ஜனவரி 27]

6—

**புதிய சார்பதிவாளர் கிளை அலுவலகம்**

**வினா எண் 64907—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில், கந்திலியை மையமாகக் கொண்டு புதிய சார்பதிவாளர் கிளை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சார்பதிவகங்கள் சீரமைப்பது தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளதால் நாட்ராம்பள்ளி சார்பதிவகம் திருப்பத்தூர் சார்பதிவகத்துடன் தற்போது இணைக்கப்படவில்லை. எனவே, நாட்ராம்பள்ளியில் சார்பதிவகம் இயங்கி வரும் நிலையில் கந்திலியை மையமாகக் கொண்டு புதிய சார்பதிவகம் துவக்கும் அவசியம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

7—

**பொது சிறையாக மாற்றுதல்**

**வினா எண் 71712—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் இருக்கும் டார்ஸ்டல் பள்ளியை (சிறுவர் சிறை) பொது சிறையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போதைய புதுக்கோட்டை இளங் குற்றவாளிகள் சிறைப் பள்ளியைப் பராமரித்துவரும் ஊழியர்களைக் கொண்டே, இச்சிறைப் பள்ளியை

[2006 ஜனவரி 27

மாவட்டச் சிறையாக மாற்றவும், அதே வளாகத்தில் இயங்கிவரும் கிளைச் சிறையை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியாக மாற்றியமைக்கவும், கூடுதல் சிறைத் துறை இயக்குநர், அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

8—

## மதுபானக் கடைகள்

**வினா எண் 76773—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வி நிலையங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அருகில் உள்ள மதுபானக் கடைகளைக் கண்டறிந்து அவற்றை வேறு இடங்களுக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

9—

## முத்திரைத் தீர்வை

**வினா எண் 72966—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரம் பதிவு செய்ய குறைவான முத்திரைத்தாள் வாங்கியவர்கள் பத்திரத்தைத் திரும்ப பெற 20 அல்லது 30 தவணைகளில் உரிய தொகை செலுத்தி பத்திரம் பெறலாம் என அரசு அறிவிக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) முத்திரைத் தீர்வையைத் தவணை முறையில் வசூலிக்கும் திட்டமேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

10—

## சிறுசேமிப்பு வசூல்

**வினா எண் 74564—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் சிறுசேமிப்பு வசூலில் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் சிறுசேமிப்பு வசூலில் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தி வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு ஊக்கத் தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

(ஆ) ஆம். உள்ளாட்சி மன்றங்களைச் சிறுசேமிப்பு வசூல் பணிகளில ஊக்கப்படுத்தும் வகையில் உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத் தொகைத் திட்டம் அரசால் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டங்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அந் நிதியினை மாவட்ட ஆட்சியர் ரூ.10 இலட்சத்திற்கும் அதிகமான சிறுசேமிப்பு நிகர வசூல் செய்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு விகிதாச்சார அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளுக்காக பகிர்ந்தளிப்பார். இதன்படி 2003-04 ஆம் ஆண்டின் நிகர வசூல் அடிப்படையில் மாநிலத்தின் அனைத்து

[2006 ஜனவரி 27

மாவட்டங்களுக்கும் ரூ.30 கோடி, உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத் தொகையாக அரசாணை நிலை எண் 42, நிதி (சிறு சேமிப்பு)த் துறை, நாள் 08-02-2005 வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இதில் தருமபுரி மாவட்டத்திற்கென ரூ.58.74 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11—**

**இணையதள மையங்கள்**

**வினா எண் 43061—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்தில் இணையதள மையங்கள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகரத்தில் இணையதள மையங்கள் அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**12—**

**உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 54864—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகரில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**13—**

**நேரடி நெல் கொள்முதல் நிலையம்**

**வினா எண் 599—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் நகரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் நகரில் தகுதியான இனாம் நிலம் தேர்வு செய்து பெறப்பட்டால், அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப வரும் நிதி ஆண்டுகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டப்படும்.

**14—**

**துப்புரவுப் பணியாளர்கள்**

**வினா எண் 9119—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகராட்சிப் பணியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் துப்புரவுப் பணியாளர்களையும் உறுப்பினர்களாகச் சேர்க்க அரசு முன்வருமா?

[2006 ஜனவரி 27

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**15—**

### பகுதிநேர கிராமக் கூட்டுறவுக் கடை

**வினா எண் 22509—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கட்டாரிக்குப்பம் கிராமத்தில் பகுதிநேர கிராமக் கூட்டுறவுக் கடை திறக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கட்டாரிக்குப்பம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை திறக்கப்பட்டு, 19-7-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

**16—**

### வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 23637—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மாம்பாக்கம் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி திறக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மாம்பாக்கம் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மாம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நவீன கட்டடம் 11-2-2005-ல் திறந்து வைக்கப்பட்டது.

**17—**

### கடன் வழங்குதல்

**வினா எண் 32878—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கி மூலம் நெசவாளர் சங்கங்களுக்கு 9.5% வட்டியில் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 9 சதவிகித வட்டி விகிதத்திலும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 9.50 சதவிகித வட்டி விகிதத்திலும் 13-2-2004 முதல் கடன்கள் வழங்கி வருகின்றன.

**18—**

### நிபுணர் குழு அமைத்தல்

**வினா எண் 35203—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை ஆராய்வதற்கு நிபுணர் குழு அமைக்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை ஆராய்வதற்கு நிபுணர் குழு அமைக்கும் எண்ணம் ஏதும் அரசிடம் இல்லை.

**19—**

### எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை

**வினா எண் 39710—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் ஊராட்சியில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை செயல்படாததை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், மேற்கண்ட தொழிற்சாலையை மீண்டும் துவக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) எருக்கூரில் தவிட்டு எண்ணெய் ஆலை இலாபகரமானதாக இயங்காததால், அங்குள்ள இயந்திரங்களுக்கு, டெண்டர் கோரி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விற்பனை செய்யப்பட்டு விட்டன.

(ஆ) மேற்கண்ட தொழிற்சாலையை மீண்டும் துவங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் தற்போது திட்டம் எதுவுமில்லை.

**20—**

### குடும்ப அட்டைகளுக்குப் பொருட்களை வழங்குதல்

**வினா எண் 42510—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சி, செம்பியனேந்தல் கிராமத்தில் குடும்ப அட்டைகளுக்குப் பொருட்கள் வழங்க கட்டப்பட்டுள்ள கடையில் பழுது ஏற்பட்டு, சரிவர இயங்காதது குறித்து நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு வட்டம், அரும்பனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் நடத்தப்பட்டு வரும் செம்பியனேந்தல் நியாயவிலைக் கடை, தற்போது செம்பியனேந்தல் கிராமத்தில், சுய வேலைவாய்ப்புத் திடடத்தினகீழ் கட்டப்பட்டு, பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ள கட்டடததில் 27-6-2005 முதல் செயலபடடு வருகிறது.

**21—**

### யானை நாசப்படுத்துதல்

**வினா எண் 58506—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் சிறுகுன்றா எஸ்டேட்டுக்குள் இருக்கும் சிந்தாமணி நியாயவிலைக் கடை மற்றும் பாரளை எஸ்டேட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழு நடத்தும் நியாயவிலைக் கடை ஆகியவற்றை யானை நாசப்படுத்தியதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்துஸ்தான் கம்பெனிக்குச் சொந்தமான இடத்தில் சிறுகுன்றா எஸ்டேட்டுக்குள் இயங்கிவரும் சிந்தாமணி நியாயவிலைக் கடையை

முறை காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளதால், சிந்தாமணி நிர்வாகம், பழுதடைந்த கட்டடத்தைச் செப்பனிடவில்லை. மாறாக, மேற்படி நியாயவிலைக் கடைக்குரிய பொருட்களை சிந்தாமணி தலைமையகத்தில் இருப்பு வைத்து அதனை வாரத்திற்கு மூன்று முறை கம்பெனி லாரிமூலம் எடுத்து நியாயவிலைக் கடையில் வைத்து பொருட்கள் செவ்வனே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல், பாரணை எஸ்டேட்டில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு நடத்தும் நியாயவிலைக் கடையை காட்டு யானைகள் தாக்கியதால் பழுதடைந்த கட்டடம் 27-3-2004 அன்றே செப்பனிடப்பட்டு, பொருட்கள் பொது மக்களுக்குச் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

**22—**

## கோவிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 19114—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம், கீழப்பாவூர் ஒன்றியத்தில் வி.கே. புதூர், அருள்மிகு நவநீத கிருஷ்ணசாமி கோயில் பராமரிப்பு இன்றி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இக்கோயிலைச் சுத்தம் செய்து கும்பாபிஷேகம் நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர், அருள்மிகு நவநீத கிருஷ்ணசாமி திருக்கோயில், பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. பரம்பரை அறங்காவலர் சட்டவிதிகளுக்கு முரணாக நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் அவர் 5-8-2003 அன்று தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு துறை அலுவலர்கள் பொறுப்பில் திருக்கோயில் 13-8-2003 முதல் உள்ளது. திருக்கோயில் நன்கு சுத்தம் செய்யப்பட்டு, பக்தர்கள் இடையூறு இல்லாமல் தரிசனம் செய்து வருகிறார்கள். பதவி நீக்கம் செய்யப்பட்ட பரம்பரை அறங்காவலர்களுக்குப் பதிலாக அடுத்த வாரிசுதாரர் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்த பின்னர், இவருடன்





பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் ஐவர் நியமனம் செய்யப்பட்ட பின்னரே, திருப்பணிக் குழு அமைத்து, கும்பாபிஷேகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க இயலும்.

**23—**

## புதிய தேர் செய்தல்

**வினா எண் 39348—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் அருள்மிகு தலசயனப் பெருமாள் திருத்தேர் பழுதடைந்துள்ளதால், புதிய தேர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரம் அருள்மிகு தலசயனப்பெருமாள் திருக்கோயில் திருத்தேர் பழுதடைந்துவிட்டதால் 18 ஆண்டுகளாகத் தேரோட்டம் நடைபெறவில்லை. தற்போது இத்திருக்கோயிலுக்கு உபயமாக புதியதாக 27½ அடி உயரத்தில் திருத்தேர் செய்ய உத்தேசிக்கப்பட்டு, ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 18-2-2005 அன்று திருத்தேர் திருப்பணி துவங்கப்பட்டுள்ளது.

**24—**

## தங்கும் விடுதி கட்டுதல்

**வினா எண் 48870—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், அருள்மிகு சிவலோகநாதசுவாமி கோயில் வளாகத்தில் தங்கும் விடுதி கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்புங்கூர், அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தங்கும் விடுதி கட்டும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

**25—**

## குடிநீர் மற்றும் மின் விளக்கு வசதி

**வினா எண் 56962—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, வெலக்கல்நத்தம் ஊராட்சி, நந்திபெண்டா கிராமத்தில் குன்றின் மீதுள்ள அருள்மிகு நந்திகேசவப் பெருமாள் ஆலயத்திற்குக் குடிநீர், குளியல் அறை, மின்விளக்கு, கழிப்பறை வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை என்பதோடு, திருக்கோயில் அமைந்துள்ள குன்றின் மீது குளியலறை, கழிப்பறை கட்டுவதற்குப போதிய இடமும் இல்லை. இத்திருக்கோயிலுக்கு அருகில் ஊராட்சியின் மூலம் ஆழ்துளைக் கிணறு அனுமதிக்கப்பட்டு, பக்தர்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆழ்துளைக் கிணற்றிலும் நீர் இல்லாத காலங்களில் புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் வரும் பக்தர்களுக்குத் தேவையான குடிநீரினை வெளியிடங்களிலிருந்து கட்டணம் செலுத்தி, தண்ணீர் கொண்டு வரப்பட்டு அளிக்கப்படுகிறது. இத்திருக்கோயிலில் போதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. திருவிழாக் காலங்களில் மின் விளக்குகள், மின்விசிறி வசதிகள் பக்தர்களுக்குக் கூடுதலாகச் செய்து தரப்படுகிறது.



2006 ஜனவரி 27]

**26—**

## இராஜகோபுரம் பணிக்கு மானியம் வழங்குதல்

**வினா எண் 74075—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொழுமம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு மற்றும் மூன்று நிலை இராஜகோபுர பணிக்கு அரசு மானியம் அளிக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொழுமம், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் கட்டப்பட்டு பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும், பழுதடைந்து உள்ளதாலும் இதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, புதியதாகக் கட்டுவதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு முதற்கட்டப் பணிக்கு ரூ.22.19 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உபயதாரர்கள் மூலம் 10-3-2005 முதல் பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டப் பணியாக மூன்று நிலை இராஜகோபுரம் கட்டுவதற்கு ரூ.11.80 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளது.

**27—**

## நிலையுயர்வு செய்தல்

**வினா எண் 75516—திருமதி எ.எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில் மற்றும் ஈச்சனாரி அருள்மிகு விநாயகர் கோயில் ஆகிய திருக்கோயில்களின் செயல் அலுவலர் பதவி, உதவி ஆணையர் நிலைக்கு நிலையுயர்வு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் மற்றும் ஈச்சனாரி அருள்மிகு விநாயகர் திருக்கோயில்களின் செயல் அலுவலர் பதவி 25-9-1998-ல் செயல் அலுவலர் நிலை-I-லிருந்து உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன. நேரடி நியமனத்திற்கு அரசு தடை விதித்துள்ளதால், மேற்படி தடை விலக்கப்பட்டவுடன் இப்பணியிடங்களை உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும்.*

**28—**

## மகளிருக்குச் சேவை இல்லம்

**வினா எண் 55903—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் மகளிருக்கான சேவை இல்லம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் சிறப்பு அரசு சேவை இல்லம் துவங்கப்பட்டு, 18-1-2005 முதல் இயங்கி வருகிறது.*

**29—**

## சிறிய அறுவை சிகிச்சை அரங்கம்

**வினா எண் 44965—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2006 ஜனவரி 27]

*(அ) சீர்காழி தொகுதி, குன்னம், திருமுல்லைவாசல், கொள்ளிடம், வள்ளுவக்குடி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறிய அறுவை சிகிச்சை அரங்கக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, குன்னம், திருமுல்லைவாசல், கொள்ளிடம், வள்ளுவக்குடி ஆகிய புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறிய அறுவை சிகிச்சை அரங்கக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.*

**30—**

## புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 75083—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேலச்செவல் சிறப்பு நிலை ஊராட்சியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அ்மைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், மேலச்செவல் கிராமத்திற்கு 4 கிலோ மீட்டர் தொலைவில் பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் சிங்கிகுளம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. இரண்டு சுகாதார மையங்களுக்கு, குறைந்த பட்சம் இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். எனவே, மேலச்செவல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

[2006 ஜனவரி 27

**31—**

## சர்வோதய சங்கம்

**வினா எண் 4313—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கொடுங்கியத்தில் கதர் வாரியத்தின்மூலம் இயங்கும் சர்வோதய சங்கம் சரிவரச் செயல்படாததன் காரணம என்ன?

(ஆ) இதனை நல்ல முறையில் இயக்க அரசு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கொடுங்கியத்தில் இயங்கும் சர்வோதய சங்கம் கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கவில்லை. சர்வோதய சங்கங்கள் அனைத்தும் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றன. எனினும், மாநில அரசு வழங்க வேண்டிய தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் மட்டும் கதர் கிராமத் தொழில் வாரியம் அரசுக்கு அனுப்பி, அரசு வழங்கிய தொகையினை சம்பந்தப்பட்ட சர்வோதய சங்கங்களுக்கு வழங்குவதறகு மட்டும் வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழ இடமில்லை.

**32—**

## கதர் இரகங்களுக்குத் தள்ளுபடி வழங்குதல்

**வினா எண் 10319—திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கதருக்கு 30% தள்ளுபடி கொடுப்பதுபோல, தமிழகத்தில் விற்கப்படும் பிற மாநில கதர் இரகங்களுக்கும் 30% தள்ளுபடி வழங்க அரசு முன்வருமா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கதருக்கு 30% தள்ளுபடி கொடுப்பதுபோல, தமிழகத்தில் விற்கப்படும் பிற மாநில கதர் இரகங்களுக்கும் 30% தள்ளுபடி வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**33—**

## பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி

**வினா எண் 19639—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பயிற்சி மையத்தில எத்தனை விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்தாண்டில் கூடுதலாக விவசாயிகள் பயிற்சிக்கு வர அரசால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் 999 விவசாயிகளுக்கும், 2002-2003 ஆம் ஆண்டில் 496 விவசாயிகளுக்கும், 2003-2004 ஆம் ஆண்டில் 362 விவசாயிகளுக்கும், 2004-2005 ஆம் ஆண்டில் 242 விவசாயிகளுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) விவசாயிகள் பயிற்சிக்குக் கூடுதலாக வருவார்களாயின், அவர்களுக்கு முன்னிடம் வழங்கி, அடுத்தாண்டில 2005-2006 ஆம் ஆண்டில் பயிற்சி வழங்கப்படும்.

[2006 ஜனவரி 27

34—

## சுய தொழில் தொடங்க கடன் வசதி

**வினா எண் 19771—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சல்நத்தம் ஊராட்சியில் இளைஞர் மற்றும் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சியும், சுய தொழில் தொடங்கக் கடன வசதியும் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சல்நத்தம் ஊராட்சியில் இளைஞர்களுக்கு தமிழக அரசு பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் கடன் பெற்று சுய தொழில் துவங்க உதவி செய்கிறது. மத்திய அரசின் திட்டமான பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மாவட்டத் தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் 7 நாள் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயிற்சி பெற்றவர்களுக்குத் தொழில் தொடங்க பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற ஆவன செய்யப்படுகிறது. இது தவிர, விருப்பமுள்ள அனைவருக்கும் தேவையான திட்ட அறிக்கைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

35—

## வாழைப் பழத் தொழிற்சாலை

**வினா எண் 24006—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வாழை அதிகமாகப் பயிரிடப்பட்டு வருவதால் வாழைப் பழத் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

36—

## கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்தல்

**வினா எண் 36073—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்து சிறப்பான முறையில் செயல்பட, அரசு பல்வேறு வகையான சலுகைகளை அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் தேயிலை விவசாயிகளின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள "டீசர்வ்" ஏல மையத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு தமிழ்நாட்டில் விற்பனை வரியான எட்டு விழுக்காட்டிலிருந்து நான்கு விழுக்காடாகவும், மத்திய விற்பனை வரியை நான்கு விழுக்காட்டிலிருந்து இரண்டு விழுக்காடாகவும் குறைக்கப்பட்டுள்ளது. சேகோசர்வ்-க்கு விற்பனை வரி இரண்டு விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு, சந்தை வளர்ச்சி நிதி உதவித திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் விற்பனையாகும் கயிறு பொருட்களின் மதிப்பீட்டில் 10 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இதில் தமிழக அரசு தனது பங்காக 50 விழுக்காட்டினை (அதாவது பாதித் தொகையினை) வழங்கி வருகிறது. தாட்கோ, டாப்செட்கோ மூலம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும், பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பங்கு மூலதனமும் அரசால் வழங்கப்படுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் ஆண்டுதோறும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

[2006 ஜனவரி 27

37—

### மட்டாண்டத் தொழிலை ஊக்குவித்தல்

**வினா எண் 46633—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மட்பாண்டத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் மட்பாண்டத் தொழிலை ஊக்குவிப்பது தொடர்பான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

38—

### பட்டு உற்பத்தித் தொழில்

**வினா எண் 50389—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்ககாணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் நிறுவனங்களின் தனி வாரியம் மூலம் பட்டு உற்பத்தித் தொழிலை கிராமங்களில் கூடுதலாக உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

39—

### காந்தியடிகள் அருங்காட்சியகம்

**வினா எண் 50405—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) கோயம்புத்தூர் மாநகரில் அவினாசி சாலை, கதர் அங்காடி வளாகத்திலுள்ள அண்ணல் காந்தியடிகள அருங்காட்சியகத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

40—

### கடலை எண்ணெய் தொழிற்சாலை

**வினா எண் 53701—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் கடலை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் கடலை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

41—

### மின்னணு தொழிற்பேட்டை

**வினா எண் 57618—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், திருச்சி துவாக்குடியில் மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருப்பதால், சீர்காழி தொகுதியில் மேலும் ஒரு மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**42—**

**மூலிகை மருந்துத் தொழிற்சாலை**

**வினா எண் 75795—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் மூலிகை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் மூலிகை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.*

**43—**

**மயானக் கொட்டகை அமைத்தல்**

**வினா எண் 890—திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, வடக்குப் பொன்னிரை ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் தெருவிற்கு மயானச் சாலை அமைத்து மயானக் கொட்டகை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஆலத்தம்பாடி ஊராட்சி, வடக்குப் பொன்னிரை ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானச் சாலை தற்போது அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் மயானக் கொட்டகை அமைக்கப்படவில்லை.*

**44—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 16395—திரு. எஸ். மகாலிங்கம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அவினாசி-அன்னூர் ஒன்றியங்களில் அதிகமான அளவில் அருந்ததியர் வசித்து வருவதால், அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், அன்னூர் மற்றும் அவினாசி ஒன்றியங்களில் வாழும் அருந்ததியர் உள்ளிட்ட ஆதிதிராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க 8 கிராமங்களில் 20.17 ஏக்கர் நிலமெடுப்பு செய்யப்பட்டு 490 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*

**45—**

**ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 34383—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2006 ஜனவரி 27

(அ) உடுமலைப்பேட்டை அருகே ஓலைநாயக்கனூர் ஜோதிபாளையம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கிடைக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், கண்ணமநாயக்கனூர் கிராமம், மஜரா ஜோதிபாளையம், ஓலைநாயக்கனூர் ஆகிய பகுதிகளில் வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க கண்ணமநாயக்கனூர் கிராமம் க.ச. 87/6பி சாலையில் 188.5 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 76 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**46—**

### மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 37447—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, கருமந்துறை பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதி கருமந்துறையில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி, 23-8-2001 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 105-ன்படி மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.



2006 ஜனவரி 27]

**47—**

### மின்தூக்கி உரிமம் பெறுதல்

**வினா எண் 23010—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அடுக்குமாடி கட்டடங்களில் மின்தூக்கி (லிப்ட்) அமைப்பதற்கு மாநகராட்சியிடம் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி, உரிமம் பெறவேண்டும் என்ற நடைமுறையைச் சென்னைப் பெருநகருக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னைப் பெருநகர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மின் தூக்கி (லிப்ட்) உரிமம் பெறுவது 1997 முதல் நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாடு மின்தூக்கி (லிப்ட்) சட்டம், 1997 மற்றும் தமிழ்நாடு மின்தூக்கி (லிப்ட்) விதிகள் 1997-ன்படி மின் ஆய்வுத் துறையின் ஒவ்வொரு மாவட்ட மின் ஆய்வாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிமம் வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் வேறு எந்த ஒரு முகவராலும் மின் தூக்கி (லிப்ட்) உரிமம் வழங்கப்படவில்லை.

**48—**

### பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 23340—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் பகுதியிலுள்ள பேருந்து நிலையத்திலிருந்து 56 எச், 138, 237 போன்ற வழித்தடப் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண்ணூர் பகுதியிலுள்ள பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் வழித்தட எண் 56 எச், 138 மற்றும் 237 ஆகியவற்றில் பேருந்துகளின் இயக்கம் இதுவரை நிறுத்தப்படவில்லை. எனினும், தடம் எண் 56 எச-இல் பொது மக்களின் பயன்பாடு மிகவும் குறைந்ததன் காரணமாக அப்பேருந்து வழித்தடம் 56 என்-உடன் இணைக்கப்பட்டு அதே வழியில் இயக்கப்படுகிறது.

**49—**

**உதிரி பாகங்களை வழங்குதல்**

**வினா எண் 23623—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பேருந்து நிலையத்திலுள்ள பழுதடைந்த நிலையில் இயங்காமல் உள்ள பேருந்துகளை இயக்குவதற்குத் தேவையான உதிரி பாகங்களை வழங்கி இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாதவரம் பேருந்து நிலையத்திலுள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்துகளுக்கு உதிரி பாகங்கள் வழங்கி, பழுதுகள் சரி செய்யப்பட்டு நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன.

**50—**

**பயணக் கட்டணத்தைக் கூடுதலாக வசூலித்தல்**

**வினா எண் 28505—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டில் பல இடங்களில் பேருந்துகளில் பயணக் கட்டணம் புறநகரப் பேருந்துகளைவிட நகரப் பேருந்துகளில் கூடுதலாக வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுவாக பேருந்துகளில் பயணக் கட்டணம் புறநகர் பேருந்துகளைவிட நகரப் பேருந்துகளில் குறைவாகவே வசூலிக்கப்படுகிறது. எனினும், சில வழித்தடங்களில் இயக்கப்படுகின்ற நகரப் பேருந்துகளில் மட்டுமே புறநகர் பேருந்துகளைக் காட்டிலும் அதிகபட்சமாக சுமார் 50 பைசா மட்டுமே, சில நிலைகளில் கணக்கிட்டு பயணக் கட்டண அமைப்பின் அடிப்படையில், பயணக் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது.

**51—**

**நிலம் மற்றும் கட்டடம் அடைமானம்**

**வினா எண் 38419—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் வங்கிகளில் அடைமானம் வைக்கப்பட்டு, பணம் பெறப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பணிமனைகள் எவ்வளவு தொகைக்கு கடன் வாங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப பணிமனைகள், அலுவலகங்கள், நிலம் மற்றும் கட்டடம் அடைமானம் வைக்கப்பட்டு பணம் பெறப்பட்டுள்ளன.

(ஆ) 74 பணிமனைகள், அலுவலகங்கள், நிலம் மற்றும் கட்டடங்கள் அடைமானம் வைக்கப்பட்டு மொத்தம் ரூ. 6,782 இலட்சங்கள் கடன் பெறப்பட்டுள்ளன.

**52—**

## பேருந்தை இயக்குதல்

**வினா எண் 38764—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து நாட்டார்பட்டி செல்லும் பேருந்தை குறவக்குடி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து நாட்டார்பட்டி தடத்தில் காலை/மாலை நேரங்களில் இயக்கப்பட்ட வழித்தடம் எண் 55 எப் பேருந்தின் நான்கு தனி நடைகள் 6-10-2004 முதல் குறவக்குடி வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

**53—**

## பேருந்தை இயக்குதல்

**வினா எண் 38765—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து பாப்பாபட்டி, கொடிக்குளம் வழியாக மதுரைக்குப் பேருந்து விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து பாப்பாபட்டி, கொடிக்குளம் வழியாக மதுரைக்கு தற்போதுள்ள பேருந்து வசதிகள்



போதுமானது ஆகும். எனவே, உசிலம்பட்டியிலிருந்து பாப்பாபட்டி, கொடிக்குளம் வழியாக மதுரைக்குப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 38769—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, திருமங்கலத்திலிருந்து எ. கன்னியம்பட்டிக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எ. கன்னியம்பட்டி, பிரதானச் சாலையின் மிக அருகிலேயே உள்ளதால் தனியாக திருமங்கலம்-எ. கன்னியம்பட்டி என புதிய பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமிலலை.

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 38771—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து எ. கன்னியம்பட்டிக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முனவருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி எ. கன்னியம்பட்டி பிரிவு நிறுத்தம் வழியாக தேவையான அளவிற்கு நகர மற்றும் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுவதால் எ. கன்னியம்பட்டிக்கு உசிலம்பட்டியிலிருந்து பேருந்து இயக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

56—

### செயற்பொறியாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 41469—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளியில் வாடகைக் கட்டடத்திலுள்ள மின் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

57—

### பேருந்தை இயக்குதல்

**வினா எண் 43836—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பேருந்து எண் 6 வழித்தடத்தை மாற்றி நாட்ராம்பள்ளி, வெள்ளநாயக்கனேரி, சொரக்காயல்நத்தம், பச்சூர் வழியாக கொத்தூர் செல்லும் வகையில் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடம் முழுவதும் பகுதி வாரியாக இரு நகரப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெறப்பட்டுள்ளது.



எனவே, பேருந்து எண் 6 வழித்தடத்தை மாற்றி நாட்ராம்பள்ளி, வெள்ளநாயக்கனேரி, சொரக்காயல்நத்தம், பச்சூர் வழியாக கொத்தூர் செல்லும் வகையில் இயக்க சாத்தியமில்லை.

58—

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 49115—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏரிகுத்தி கிராமத்தில் துண்ண மின் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வேலூர் மாவட்டம், ஏரிகுத்தி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் இல்லாததால் இந்த கேள்விக்கான அவசியம் எழவில்லை.

59—

### துணை மின்நிலையம் அமைத்தல்

**வினா எண் 49342—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி பூலாம்பட்டியில் 110/22 கி.வோ. புதிய துணை மின் நிலையம் அமைக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள பில்லுக்குறிச்சி கிராமத்தில் தனியார் நிலம் சர்வே எண் 491/4 சி-யில் 4.84 ஏக்கர் நிலத்தில் உடனடியாக துணை மின் நிலையம் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் 110/22 கி.வோ. புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் சென்ற நிதியாண்டில் (2004-2005) துவங்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டுக்குள் (2005-2006) பணிகள் பூர்த்தி அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**60—**

### பேருந்தை இயக்குதல்

**வினா எண் 51665—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதியில் முனிச்சாலை வழியாக சென்றுவந்த பேருந்துகளை அதே வழியில் மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை கிழக்கு தொகுதியில் முனிச்சாலை வழியாக சிலைமான் மற்றும் அருகில் உள்ள சுற்றுக் கிராமங்களுக்குச் சென்றுவந்த பேருந்துகள் மட்டும், போக்குவரத்து நெரிசல் காரணமாக மாற்றி இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றை மீண்டும் முனிச்சாலை வழியாக இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**61—**

### பேருந்தை இயக்குதல்

**வினா எண் 51984—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறிலிருந்து உமையாள்பதி, பச்சைபெருமாநல்லூர், மாதானம், தாண்டவன்குளம், வை.கோவில்



வழியாக மயிலாடுதுறை வரை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளதால் தற்போதைய நிலையில் அத்தடத்தில் புதிதாகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**62—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 52401—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் 33 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சீர்காழி நகரில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

**63—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 53089—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் நடுக்குட்டை ஏரி பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ரூபாய் 14.251 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் திருப்பத்தூர் நடுக்குட்டை ஏரி உள்ளிட்ட பகுதிகளில் கண்டறியப்பட்டு வருகிறது. நிலம் கிடைக்கப் பெற்றவுடன் திருப்பத்தூரில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைத்து, திருப்பத்தூர் முனிசிபல் பகுதிக்கு இத்துணை மின் நிலையத்தில் இருந்து மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**64—**

## எரிசக்தி மூலம் மின்சாரம் தயாரித்தல்

**வினா எண் 53411—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதியில் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களான காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிரியல் சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் மானிய உதவி அளிக்கிறது. மானியம் நீங்கலாக ஆகும் மீதிச் செலவை பயனாளிகள் ஏற்க வேண்டும். காற்று சக்தியைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் காற்றின் வேகம் மற்றும் காற்றின் விசை ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் காற்றாலை மூலம் மின்சாரம்







உற்பத்தி செய்ய ஏற்ற பகுதிகளான 8 மாவட்டங்களில் 11 இடங்களை, மைய அரசு தெரிவு செய்து அறிவித்துள்ளது. காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் தற்பொழுது இத்தகைய இடங்களில் மட்டுமே நிறுவ சாத்தியக்கூறுகள் உள்ளன. மதுரை கிழக்கு தொகுதியிலுள்ள பகுதிகள் காற்று வளம் மிக்க பகுதியில் இல்லை. எனவே இப்பகுதியில் காற்றாலை மூலம் பெரிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலாது. ஆனால் மதுரை மாவட்டத்தில் சூரிய சக்தி மூலமும், பிற தாவரக் கழிவுகள், விறகுகளிலிருந்து பெறப்படும் உயிரியல் சக்தி மூலமும் எரிசக்தி உற்பத்தி திட்டங்கள் செயல்படுத்தலாம்.

(ஆ) இந்த அடிப்படையில் மதுரை மாவட்டத்தில் 2003-04 ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தி ஆதாரமான சூரிய சக்தி மூலம் சிறிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்து 100 தெரு விளக்குகள் மற்றும் 45 வீட்டு விளக்குகளை இயக்குவதற்கு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**65—**

## பேருந்துகளில் ஒரே கட்டணம் வசூலித்தல்

**வினா எண் 53827—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகளில் இரவு, பகல் ஆகிய இரு நேரங்களிலும் ஒரே கட்டணம் வசூல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இரவு நேரங்களில் மிகமிகக் குறைவான பயணிகளே பேருந்துகளில் பயணம் செய்வதால் இயக்கச் செலவினை ஓரளவு ஈடுசெய்யவே இரவு நேர நகரப் பேருந்துகளில் அரசு ஆணைப்படி இருமடங்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பல தடங்களில் வருவாய் குறைவாய் இருந்தபோதும், பொதுமக்களின் நலன் மற்றும் இரவு நேரத்தில் பயணிகளின் பாதுகாப்புக் கருதியும், இரவு நேரப் பேருந்து இயக்கத்தால் தொடர்ந்து மிகுந்த நட்டம் ஏற்பட்டாலும் அவை தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பேருந்துகளில் இரவு, பகல் ஆகிய இரு நேரங்களிலும் ஒரே கட்டணம் வசூல் செய்ய இயலாது.

**66—**

### மின் உற்பத்தியை அதிகப்படுத்துதல்

**வினா எண் 54657—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை மேலும் விரிவுபடுத்தி மின் உற்பத்தியை அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக அரசு ஒப்புதல் அளித்ததன்பேரில், தூத்துக்குடியில் கூடுதலாக 1000 மெகா வாட் திறனுடைய ஓர் அனல் மின் நிலையம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டுத் திட்டமாக அமைப்பதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்துள்ளது.

(ஆ) அதன்படி, 19-06-2003 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு (M.O.U) ஒப்பந்தத்தில் தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் கையெழுத்திட்டுள்ளன. இந்தத் திட்டம் தொடங்குவதற்குத் தேவையான அடிப்படைப் பணிகளை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்சார வாரியம் செய்து வருகிறது. இந்தத் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்தியில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**67—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 55102—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் 33 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் 33 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

**68—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 59855—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் ஒன்றியம், 89 மங்கநல்லூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், 89 மங்கநல்லூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**69—**

### புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 60046—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதியில் சீர்காழியிலிருந்து மகேந்திரபள்ளி வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழியிலிருந்து மகேந்திரபள்ளி தடத்தில் புதிய வழித்தடப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

**70—**

### பயணிகளுக்கு நேரத்தைத் தெரிவித்தல்

**வினா எண் 62593—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் போக்குவரத்துப் பேருந்துகளில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த நேரம் மற்றும் அடுத்த நிறுத்தம் ஆகியவற்றை பயணிகளுக்குத் தெரிவிக்கும் முறையை மீண்டும் கொண்டுவர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த நேரம் மற்றும் அடுத்த நிறுத்தம் ஆகியவற்றை பயணிகளுக்குத் தெரிவிக்கும் முறை. நடைமுறைச் சிக்கல் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக ஏற்கெனவே நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி முறையை மீண்டும் அமல்படுத்திட திட்டம் ஏதுமில்லை.

**71—**

### கடல் அலை மூலம் மின்சாரம் உற்பத்தி

**வினா எண் 62896—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடல் அலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கடல் அலை வளம் மிகுந்து காணப்படுகிறது. ஆனாலும், கடல் அலை மூலம் இந்தியக் கடற்கரைப் பகுதிகளில் பிற இடங்களிலும் சிறிய அளவில் மின்சாரம் தயாரிக்கலாம். ஆனால், இதற்கு அதிக அளவில் செலவாகும். தற்சமயம் கடல் அலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தமிழ்நாட்டில் ஏதும் செயல்படவில்லை. தற்போது வணிக ரீதியாக, இத்தொழில்நுட்பம் பயன்பாட்டில் இல்லாததால் கடல் அலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**72—**

### மின்சார அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 66733—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, வேலூரில் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, வேலூரில் தற்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியப் பிரிவு அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் குப்பிச்சிப்பாளையம் என்ற ஊரில் இயங்கி வருகிறது. இப்பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2006 ஜனவரி 27

**73—**

## பேருந்துகளில் திருக்குறளை எழுதுதல்

**வினா எண் 69432—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுப் பேருந்துகளில் ஓட்டுநர் பின்புறம் திருக்குறள் மற்றும் அதன் கருத்தையும் எழுதிய பலகை வைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஏற்கெனவே ஓட்டுநர் இருக்கைக்கு முன்புறம்/பின்புறம் திருக்குறள் எழுதப்பட்டுள்ளது. மேலும், அதன் கருத்தை எழுதுவதற்கு அக்குறிப்பிட்ட பகுதியில் இடம் போதாது. எனவே, இதை அமல்படுத்த சாத்தியமில்லை.*

**74—**

## புதிய துணை மின் நிலையம்

**வினா எண் 72823—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், குணவாயப்பட்டி ஊராட்சி, மாத்தூர் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் உள்ளதால், அங்கு புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*குணவாய்ப்பட்டி ஊராட்சி, மாத்தூர் பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு சுமார் ரூ. 130 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாரிய நிதி நிலைகளுக்கு ஏற்ப, வரும் 2005-2007-ல் இத்துணை மின்நிலையம் அமைக்க ஆவன செய்யப்படுகிறது.*



2006 ஜனவரி 27]

**75—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 85234—திரு. மு. கார்த்தி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதியில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க இந்து சமய அறநிலையத் துறை நிலம் ஒதுக்க முன்வருவதால் அங்கு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஆவன செய்யப்படும்.*

**76—**

## கனிம வள மையங்கள்

**வினா எண் 11476—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் உள்ள கனிம வள மையங்கள் எத்தனை? அவை எந்தெந்த வகையைச் சேர்ந்தவை?*

*(ஆ) அவை அனைத்தும் ஏலம் விடப்பட்டு விட்டனவா? ஆம் எனில், எவ்வளவு வருமானம் வருகிறது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) புவியியல் ரீதியாக தமிழகத்தில் கனிம வள மையங்கள் என்ற இனம் ஏதுமில்லை.*

*(ஆ) 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளின்படி, அரசு நிலங்களில் சாதாரண கனிமங்களை விதி 8-ன்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மூலமும் மெருகூட்டக் கூடிய கிரானைட் கனிமங்களை விதி 10 ஏ-யின்படி பட்டா நிலங்களில் குவாரி செய்ய அரசு மூலமும் குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சிறு கனிம விதி 8ஏ-யை, நீதிமன்றம் செல்லாதபடி செய்துள்ளதால் அரசு நிலங்களில் கிரானைட் குவாரி குத்தகை செய்ய உரிமம் வழங்கப்படவில்லை. பெருங் கனிமங்களுக்குச் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) விதி 1957 மற்றும் கனிமச் சலுகை விதிகள் 1960-ன் கீழும் குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது.*

*மணல் குவாரிகளைப் பொறுத்தவரை 2-10-2003 முதல் தனி நபர்களுக்குக் குத்தகை வழங்கும் முடிவு இரத்து செய்யப்பட்டு, அரசு பொதுப் பணித் துறை மூலம் மட்டுமே மணல் எடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, அவற்றினை ஏலம் விடும் கேள்வி எழவில்லை.*

**77—**

### அபூர்வ படிகங்கள்

**வினா எண் 50852—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை அருகே விலையுயர்ந்த அபூர்வ படிகங்கள் உள்ளதை உறுதி செய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*திருவண்ணாமலை அருகே விலையுயர்ந்த அபூர்வ படிகங்கள் உள்ளதை உறுதி செய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை ஏதுமில்லை.*

**78—**

### சிப்காட் மூலம் தொழிற்சாலை

**வினா எண் 51406—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) வால்பாறை மலைப்பகுதி, பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் ஊராட்சியில் சிப்காட் மூலம் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழகத்தில் எந்த மாவட்டத்திலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் பணியினைச் செய்து வரவில்லை. சிப்காட் நிறுவனம் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளை அமைப்பதற்காக தொழில் வளாகங்களை/பூங்காக்களைத் தேவையின் அடிப்படையில் உருவாக்கி மற்றும் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதியில் சிப்காட் தொழில் வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

**79—**

### சர்க்கரை ஆலை நிறுவுதல்

**வினா எண் 51413—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் சர்க்கரை ஆலை நிறுவப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் புதியதாக சர்க்கரை ஆலை நிறுவும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.*

**80—**

### உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம்

**வினா எண் 22744—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டத்தில் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், இந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு மாநில அளவிலான உணவு பதனிடும் தொழில்நுட்பப் பயிற்சி மையத்தினை, சேலத்தில், மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் நிதியுதவியுடன் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க வேளாண்மை விற்பனை மற்றும வேளாண் வணிக ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தக்க கருத்துருவை 4-11-2003 அன்று வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் மைய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளார். இது சம்பந்தமாக அந்த அமைச்சகத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**81—**

### விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்

**வினா எண் 30621—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் காய்கறிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற வகையில் அரசு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகள் காய்கறிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென தனியாக பயிற்சி ஏதும் இதுவரை அளிக்கப்படவில்லை. எனினும் மைய அரசுத் திட்டமான காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காய்கறி சாகுபடியில் உற்பத்தித் திறன் அதிகரிக்க தொழில்நுட்பச் செய்திகள் பற்றிய பயிற்சி உரிய தொழில்நுட்ப வல்லுநர்களால் விவசாயிகளுக்கு





வழங்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள், அலுவலர்கள்மூலம் பயிர் சாகுபடி, நுண்ணீர் பாசனம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் வழங்கப்படும் செய்திகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தி கூடும். அந்நிலையில் வெளிநாடுகளுக்குக் காய்கறிகளை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உண்டாகும்.

**82—**

### தேயிலை உற்பத்தி

**வினா எண் 52972—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை, பாரி அக்ரோ தேயிலை எஸ்டேட்டில் தேயிலை கொழுந்துகளை சிவப்பு சிலந்தி கடித்து வருவதால், தேயிலை உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வால்பாறை, பாரி அக்ரோ தேயிலை எஸ்டேட்டில் தேயிலை கொழுந்துகளை சிவப்பு சிலந்திப் பூச்சி தாக்குதலை "வெர்டிசிலியம் லேகேனே" உயிர்பூச்சிக்கொல்லி மருந்தை (2 மில்லி லிட்டர் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**83—**

### குளிர்பதன வசதி

**வினா எண் 58308—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூரில் வெற்றிலைகளைச் சேமித்து வைக்க குளிர்பதன வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, பரமத்தி வேலூரில் வெற்றிலைகளைச் சேமித்து வைக்க குளிர்பதன வசதி செய்து கொடுக்கும் கருத்துரு அரசிடம் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**84—**

### காட்டாமணக்குச் செடிகளை வழங்குதல்

**வினா எண் 66865—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் கம்கலாபட்டி ஊராட்சியில் காட்டாமணக்கு பயிர்மூலம் பயோ டீசலைத் தயாரிக்க வால்பாறை தொகுதியிலுள்ள ஊராட்சிகளுக்குக் காட்டாமணக்குச் செடிகளை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) பயோ டீசல் தயாரிக்க காட்டாமணக்குச் செடிகளை இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசால் செயல்படுத்தப்படவில்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**85—**

### மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 6979—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (எம்.பி.சி.) மாணவர்களுக்கு, அரசு மாணவர் விடுதி அமைக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் அமைக்கும திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.*

**86—**

### மாணவர், மாணவியர் விடுதி

**வினா எண் 13806—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாளை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாளை மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்/மாணவியர் விடுதிகளுக்கு தலா ரூ.31.50 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்ட அரசாணை நிலை எண் 72, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்: 18-7-2005-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

**87—**

### நாடோடி இன மக்களுக்குச் சிறப்புத் திட்டம்

**வினா எண் 27972—திரு. சி. சண்முகம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர், குடுகுடுப்பைக்காரர்கள், பூம்பூம் மாட்டுக்காரர்கள், மணியாட்டிக்காரர்கள, லண்டர், பைராகி, கழைக்கூத்தாடி போன்ற நாடோடி இனமக்களை நாடோடிகள் (ஜிப்ஸிஸ் அல்லது நோமாடிக் டிரைப்ஸ்) என்ற தலைப்பில் சேர்த்து சிறப்புத் திட்டங்களை அரசு செயல்படுத்துமா?*

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர், குடுகுடுப்பைக்காரர்கள், பூம்பூம் மாட்டுக்காரர்கள், மணியாட்டிக்காரர்கள், லண்டர், பைராகி, கழைக்கூத்தாடி போன்ற நாடோடி இனத்தவர்களை ஜிப்ஸிஸ் அல்லது நோமாடிக் டிரைப்ஸ் என்ற தலைப்பில் சேர்த்து சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தும் கருத்துரு எதுவும் ஆய்வில் இல்லை.

**88—**

**மாணவ, மாணவிகளுக்குத் தங்கும் விடுதி**

**வினா எண் 50912—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ மாணவிகளுக்குத் தங்கும் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக விடுதி கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

**89—**

**கள்ளர் சீரமைப்புப் பள்ளி துவங்குதல்**

**வினா எண் 53711—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) சீர்காழி தொகுதியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளி துவங்குவது குறித்து திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

**பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தங்கும் விடுதி**

**வினா எண் 66222—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக விடுதி துவங்கும் வாய்ப்பில்லை.

**91—**

**மாட்டுத் தீவனம் தயாரித்தல்**

**வினா எண் 6727—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் ஒன்றியத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் ஒன்றியத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**92—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 12533—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலியில் கால்நடை மருந்தகம் அமைக்க இடம் வாங்கிக் கொடுத்தும் அரசு மருந்தகம் அமைக்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்திலி கிராமத்திற்கு அருகில் 5 கி.மீ. தூரத்தில் நரியனேரி கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் தேவையான மருத்துவப் பணிகள் கந்திலி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு அளிக்கப்பட்டு வருவதாலும், தற்போது கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் கந்திலி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.





**93—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 20636—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் ஊராட்சியில் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் செயல்படும் கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை ஒன்றியம், மச்சுவாடி (இருப்பு), வாராப்பூர் கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனை முழுநேர மருத்துவமனையாக மாற்ற தற்போது வாய்ப்பில்லை.

**94—**

**துணை கால்நடை மருந்தகம்**

**வினா எண் 20928—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, மேலபெருமாள்பட்டியில் துணை கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதிக்கப்பட்ட தடை உத்தரவு அமலிலுள்ள நிலையில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்துக்குட்பட்ட மேல்பெருமாள்பட்டியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

[2006 ஜனவரி 27

95—

## நோய் தடுப்பு மருந்துகள்

**வினா எண் 44714—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கால்நடை மருந்தகங்களுக்கும் நோய் தடுப்பு மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கால்நடை மருந்தகங்களுக்குத் தேவையான நோய் தடுப்பு மருந்துகள், கோமாரி நோய் தடுப்பு மருந்து தவிர யாவும் இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கோமாரி நோய் தடுப்பு மருந்து மட்டும் மத்திய அரசு திட்டங்களின்கீழும், வறட்சி நிவாரணப் பணிகளின்கீழும், நோயற்ற பகுதி திட்டத்தின்கீழும் நிதி ஒதுக்கீட்டின்படி தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவைக் கழகம்மூலம் வாங்கப்பட்டு அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் தேவைக்கேற்ப விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

96—

## கால்நடை வாரச் சந்தை

**வினா எண் 53363—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பெரம்பலூர் மாவட்டம், செயங்கொண்டம் ஒன்றியம், மேலணிக்குழி ஊராட்சி, பாப்பாக்குடியில் கால்நடை வாரச் சந்தை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செயங்கொண்டம் ஒன்றியம், மேலணிக்குழி ஊராட்சி, பாப்பாக்குடியில் கால்நடை வாரச் சந்தை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.*

97—

## கால்நடை மருந்தகம் கட்டுதல்

**வினா எண் 53613—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஏற்காடு தொகுதி, தும்பலில் கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதி தும்பல் கால்நடை கிளை நிலையம் அரசாணை (நிலை) எண்.148, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் (காப2) துறை, நாள் 8-12-2004-ன்படி கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தும்பல் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமான சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, இங்கு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

98—

## கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 57769—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காட்டிலுள்ள பகுதிநேர கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடையாணை அமலில் உள்ள நிலையில், அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காட்டில் புதியதாக கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**99—**

### மருத்துவருக்குக் குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 58186—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை கால்நடை மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவருக்குக் குடியிருப்பு கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வால்பாறை கால்நடை மருத்துவமனையில் பணிபுரியும் கால்நடை மருத்துவருக்குக் குடியிருப்புக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**100—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 59907—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கபிலர்மலை தொகுதி, பெருங்குறிச்சி ஊராட்சி, பெருங்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பெருங்குறிச்சி கிராமத்திற்கு அருகில் 4 கி.மீ தூரத்தில் சித்தளந்தூர் கால்நடை கிளை நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் நல்லூர் கால்நடை மருந்தகமும், சோழசிராமணி கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவைமூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் பெருங்குறிச்சி கிராமத்திலுள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும் தற்போது துறையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், பெருங்குறிச்சி கிராமத்தில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

**101—**

### கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

**வினா எண் 62002—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவடிசூலம் ஊராட்சியில் துணை கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில திட்டக் குழு புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடை இன்னமும் அமலில் உள்ள நிலையில் செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவடிசூலம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் தொடங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

102—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 67981—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மணப்பள்ளி மற்றும் கெலப்பாளையம் ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மணப்பள்ளி மற்றும் கெலப்பாளையம் ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

103—

## கால்நடை துணை மருத்துவ நிலையம்

**வினா எண் 68044—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் கால்நடை துணை மருத்துவ நிலையம் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட தடை உள்ளதால், செங்கற்பட்டு நகரில் கால்நடை கிளை நிலையம் துவக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.



104—

## புதிய கால்நடை கிளை நிலையம்

**வினா எண் 69398—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு தொகுதி, இரகுபதிநாயக்கன்பாளையத்தில் வாரத்தில் ஒரு நாள் மட்டும் செயல்பட்டுவரும் பார்வை கிளை நிலையத்திற்கு மாற்றாக புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய கால்நடைக் கிளை நிலையங்களைத் துவக்கிட வெளியிடப்பட்ட தடை உத்தரவு இன்னும் அமலில் உள்ளதால், ஈரோடு தொகுதி, இரகுபகுதிநாயக்கன்பாளையத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

105—

## ஆட்டுப் பண்ணை அமைத்தல்

**வினா எண் 70178—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் ஆட்டுப் பண்ணை அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் ஆட்டுப் பண்ணை அமைத்திட தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

106—

### பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம்

**வினா எண் 74744—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் கால்நடை மருத்துவமனை வளாகத்திலேயே பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரில் கால்நடை மருத்துவமனை வளாகத்திலேயே பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் அமைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

107—

### வன மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 58681—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சூரியன்கரடு பகுதியில் வனம் அழிந்து வருவதால் அதை மேம்பாடு செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சூரியன்கரடு பகுதியை மேம்பாடு செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



108—

### மக்களுக்கு இடம் ஒதுக்குதல்

**வினா எண் 7961—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் (ஆர்.கே.நகர்) தொகுதி, 4,8,11 மற்றும் 15 ஆகிய வட்டங்களில் சில இடங்களில் இரயில்வே தண்டவாளம் ஓரமாக பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வசிக்கும் மக்களுக்கு மாற்று இடம் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

109—

### கடன் தொகையை அதிகப்படுத்துதல்

**வினா எண் 14991—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதி வாரியத்தின்மூலம் கிராமப்புறங்களில் வீடுகட்ட வழங்கப்படும் கடன் தொகையை அதிகப்படுத்தித் தர, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கிராமப்புறங்களில் வீடுகட்ட வழங்கப்படும் கடன் தொகையை அதிகப்படுத்துவது குறித்து தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2006 ஜனவரி 27

**110—**

**வீடுகள் கட்ட கடன் வழங்குதல்**

**வினா எண் 19930—திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டு EWS திட்டத்தின்மூலம் வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தினை அரசு தெரியப்படுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**111—**

**வீட்டுமனை விரைவு ஒதுக்கீடு திட்டம்**

**வினா எண் 20223—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளின்படி "வீட்டுமனை விரைவு ஒதுக்கீடு திட்டத்தை" உடுமலைப்பேட்டை பகுதியில் நடப்பாண்டில் செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வீடுகளில் மத்திய வருவாய்ப் பிரிவில் 294 வீடுகளும், உயர் வருவாய்ப் பிரிவில் 22 வீடுகளும் இன்னும் விற்கப்படாமல் உள்ளன. இந்நிலையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளின்படி புதிய வீட்டுமனை விரைவு ஒதுக்கீடு திட்டத்தை உடுமலைப்பேட்டை பகுதியில் நடப்பாண்டில் செயல்படுத்த இயலாது.



2006 ஜனவரி 27]

**112—**

**ஆற்றுப் படுகையில் வசிக்கும் மக்களுக்கு இட ஒதுக்கீடு**

**வினா எண் 31911—திரு. ராதாரவி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் ஆற்றுப் படுகையில் வசித்து வரும் மக்களுக்கு மாற்று இடம் ஒதுக்கித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பொதுப் பணித் துறையினரால் கண்டறியப்பட்ட சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் அடையாறு ஆற்றின் கரைகளில் வாழும் 808 குடும்பங்களில் 75 குடும்பங்கள் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறு குடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 733 குடும்பங்கள் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறு குடியமர்வு செய்யப்படுவர்.

**113—**

**கல்நார் கூரை வீடு கட்டித் தருதல்**

**வினா எண் 37507—திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, கொளத்தூர், எம்.ஜி.ஆர். நகரில் குடிசைகளை அகற்றி கல்நார் கூரை வீடுகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**114—**

**விடுகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 72174—திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலும், கோவை மாவட்டத்தின் இதர பகுதிகளிலும் வீட்டுவசதி வாரிய வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை உடனடியாகப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலும், கோவை மாவட்டத்தின் இதர பகுதிகளிலும் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் அரசு ஊழியர் குடியிருப்புகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியும்.

கோவை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் வின்சென்ட் ரோட்டில் உள்ள வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு, அதன் பராமரிப்பில் உள்ள 352 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணிக்கென ரூ.50 இலட்சங்கள் 2005-06 நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. கோவை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் எதுவும் இல்லை.



கோவை மாநகரின் இதர பகுதிகளில் உள்ள அருந்ததியர் காலனி, கோவை சித்தா புதூர் ஆகிய இடங்களில் உள்ள குடிசை மாற்று அடுக்குமாடி வீடுகளுக்கு முறையே ரூ.30 இலட்சம் மற்றும் ரூ.75 இலட்சம் செலவில் சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகளுக்காக மதிப்பீடு தயாரிக்கும் பணி வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் தமிழநாடு அரசு ஊழியா வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2,958 அடுக்குமாடிக் குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் கோவையில் உள்ள குடியிருப்புகளுக்கு ரூ.113 இலட்சங்களிலும், திருப்பூரில் உள்ள குடியிருப்புகளுக்கு ரூ.3 இலட்சங்களிலும், பொள்ளாச்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு ரூ.1 இலட்சத்திலும், உடுமலைப்பேட்டையில் உள்ள குடியிருப்புகளுக்கு ரூ.1 இலட்சத்திலும், ஆக மொத்தம் 118 இலட்சம் மதிப்பீட்டில இக்குடியிருப்புகளில் உள்ள பழுதுகளை நீக்க சிறப்புப பழுதுபார்க்கும் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கபபட்டு, அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது. இதற்கான நிதி ஒதுக்கபபட்டவுடன் இத்திட்டங்களிலுள்ள பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுதுகள் பார்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.

இத்திட்டங்களைத் தவிர, கோவை மேற்கு சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த பாளைத் தோட்டம், லிங்கோ கவுடர் தோட்டம், ஸ்லாட்டர் அவுஸ், செல்வபுரம் வடக்குக் காலனி மற்றும் செல்வபுரம் தெற்குக் காலனி ஆகிய ஐந்து காலனிகள் அக்டோபர் 2004 முதல் பராமரிப்பிற்கென தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகள் அரசாணை எண் 276, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 11-9-1997-ன்படி, குடியிருப்புதாரர்களுக்குச் சொந்தமாக்கும் திட்டத்தின்படி விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் பின்னர் இக்குடியிருப்புகளைக் குடியிருப்புதாரர்களே பழுதுபார்த்துக் கொள்ளவேண்டும்.

**115—**

**கிரயப் பத்திரம் வழங்குதல்**

**வினா எண் 73173—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 10-வது வட்டம், எம்.ஜி.ஆர். நகர், எழில் நகர், திருவள்ளுவர் நகர், 8-வது வட்டம் அஜீஸ் நகர் ஆகிய வீட்டு உரிமையாளர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

மேற்கண்ட பகுதிகளிலுள்ள நிலங்கள் சென்னையிலுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலுள்ள 10-வது வட்டம் எம்.ஜி.ஆர். நகர் மற்றும் எழில் நகர், திருவள்ளுவர் நகர், 8-வது வட்டம் அஜீஸ் நகர் ஆகிய பகுதியில் கிரயப் பத்திரம் கோரும் வீட்டு உரிமையாளர்கள் தற்போது வாழ்ந்துவரும் நிலப்பகுதிகள் வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறைக்குச் சொந்தமானவையல்ல. அவை பிற துறைகளுக்குச் சொந்தமானவையாகும். அவற்றைத் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில மாற்றத்திற்குப்பின் அப்பகுதியிலுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்பட இயலும். எம்.ஜி.ஆர். நகர் பகுதியிலுள்ள 400 குடும்பங்களுக்கு இன்னும் இரு மாதங்களில் கிரயப் பத்திரம் வழங்கப்பட வாய்ப்புள்ளது. எழில் நகர் பகுதியிலுள்ள 900 குடும்பங்களுக்கு இன்னும் மூன்று மாதங்களில் கிரயப் பத்திரம் வழங்கப்பட வாய்ப்புள்ளது. அஜீஸ் நகர் பகுதி இரயில்வே துறைக்குச் சொந்தமானதாகும். நில மாற்றம் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நில மாற்றம் செய்தபின் 475 குடும்பங்களுக்கு நிலக் கிரயப் பத்திரம் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

**116—**

## பொறியியல் கல்லூரி ஆரம்பித்தல்

**வினா எண் 2914—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரில் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**117—**

## தொழில்நுட்பக் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 7397—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**118—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 10244—டாக்டர் ப. வள்ளல்பெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த 10 ஆண்டுகளாக தமிழக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?

(ஆ) என்னென்ன வகையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசு கடந்த 10 ஆண்டுகளாக அதாவது 1995-96 முதல் 2004-2005 வரையிலான காலத்திற்கு ரூ.89,80,09,490 (ரூபாய் எண்பத்து ஒன்பது கோடியே எண்பது இலட்சத்து ஒன்பதாயிரத்து நானூற்று தொன்னூறு மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசு 1995-96 முதல் 2004-2005 வரை உள்ள காலத்திற்கு அரசுக்கு வரையறுக்கப்பட்ட ஒட்டுமொத்த மானியம், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு பரிந்துரைத்த ஊதிய உயர்வுக்கான கூடுதல் செலவினம், புகுமுக வகுப்பு ஆசிரியர்களுக்கான ஊதியம், நூலகர்கள் ஊதிய உயர்வுக்கான கூடுதல் செலவினம், பொங்கல் பரிசு, திட்டப் பணியாளர்களுக்கான ஊதியம், தமிழக அரசின் ஊதிய உயர்வுக்கான கூடுதல் செலவினம், அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி, இடைக்கால நிவாரணம் ஆகிய இனங்களுக்கு வழங்கியுள்ளது. இவற்றில் உயர் தொழில்நுட்ப கணினி வசதி மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்ட மானியம் ரூபாய் 50,00,000 மற்றும் கட்டடங்களுக்கான திட்ட மானியப் பங்காக ரூபாய் 33,10,000-ம் அடங்கியுள்ளது.

**119—**

## தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 10463—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.



2006 ஜனவரி 27]

**120—**

## பொறியியல் கல்லூரி தொடங்குதல்

**வினா எண் 12166—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் பொறியியல் கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**121—**

## பொறியியல் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 15160—திரு. அ. சிவபெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் தொகுதியில் பொறியியற் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**122—**

## தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 18951—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) சங்கராபுரம் தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**123—**

## தேர்வு எழுதும் மையம்

**வினா எண் 20247—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட அஞ்சூர் உயர்நிலைப் பள்ளியில், மாணவர்கள், 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**124—**

## ஆலோசனைக் குழு அமைத்தல்

**வினா எண் 27621—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) வணிக வரித் துறையில், மாவட்டந்தோறும் வணிகர்களைக் கொண்டு ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது குழு அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இக்குழுக்களை மாற்றியமைக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமனம் செய்வது குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**125—**

## பொறியியல் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 33146—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் அரசு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**126—**

## அரசுக் கலைக் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 39384—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) ஆண்டிமடம் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**127—**

**மகளிர் கல்லூரி அமைத்தல்**

**வினா எண் 43888—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர் நகரில் அரசு மகளிர் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**128—**

**விரிவுரையாளர்கள் நியமனம்**

**வினா எண் 50002—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பொறியியற் கல்லூரிகளில் ஓய்வு பெற்றவர்களை விரிவுரையாளர்களாக நியமிக்க விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளதா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தனியார் பொறியியற் கல்லூரிகளில் ஓய்வு பெற்றவர்களை விரிவுரையாளர்களாக நியமிக்க விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**129—**

**இசைக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம்**

**வினா எண் 53034—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகம் மற்றும் அரசு இசைக் கல்லூரிக்கு பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நிரந்தரக் கட்டடம் எப்பொழுது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

பல்கலைக்கழக வளாகத்தில் போதுமான இடம் இல்லாததால், அரசு இசைக் கல்லூரிக்கு இடம் ஒதுக்கீடு செய்யவில்லை. மேலும் அப் பல்கலைக்கழகம் நகரிலிருந்து வெகு தொலைவில் உள்ளதால், இந்த இடம் அரசு அருங்காட்சியகம் அமைப்பதற்கு உகந்ததல்ல. எனவே, கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகம் மற்றும் அரசு இசைக் கல்லூரிக்கு பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் தற்போது இல்லை.

**130—**

**குடைவரைக் கோயில்களைப் பாதுகாத்தல்**

**வினா எண் 53921—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

மதுரையைச் சுற்றியுள்ள கீழக்குயில்குடி, மேலக்குயில்குடி, கொங்கர்புளியங்குளம், ஆனைமலை, கருங்காலக்குடி, அரிட்டாப்பட்டி, தென்பரங்குன்றம் பகுதிகளில் உள்ள சமணர்களின் பள்ளிகள், தவக் கூடங்கள், குடைவரைக் கோயில்களைப் பாதுகாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மதுரையைச் சுற்றியுள்ள கொங்கர்புளியங்குளம், ஆனைமலை, கருங்காலக்குடி, அரிட்டாப்பட்டி பகுதிகளில் உள்ள சமணர்களின் பள்ளிகள், தவக் கூடங்கள், குடைவரைக் கோயில்கள், மாநில அரசின் தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கீழக்குயில்குடி, மேலக்குயில்குடி, தென்பரங்குன்றம் பகுதியில் உள்ள சமணர்களின் பள்ளிகள், தவக் கூடங்கள், குடைவரைக் கோயில்கள் மத்திய அரசின் தொல்பொருள் துறை பராமரிப்பில் உள்ளன.

**131—**

## கம்பன் விழாவை நடத்துதல்

**வினா எண் 59847—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரில் மீண்டும் அரசின் சார்பில் கம்பர் விழா நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

1992 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கம்பர் கோட்டம், தமிழ் வளர்ச்சித் துறையிலிருந்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு மாற்றப்பட்டது. 1998 ஆம் ஆண்டு கம்பர் கோட்டம் ஊரக வளர்ச்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது கம்பர் கோட்டம் மற்றும் திருமண மண்டபத்தின் நிருவாகங்கள் குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் இருந்து வருகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டிலிருந்து கம்பர் கோட்டம் விடுவிக்கப்பட்டபின், அரசு சார்பில் விழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. இதன் அடிப்படையில் கம்பர் கோட்டத்தில் அரசு சார்பில் விழா நடத்தும் நிலை தற்போது இல்லை.



2006 ஜனவரி 27]

**132—**

## நினைவு நாளைக் கொண்டாடுதல்

**வினா எண் 61618—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உமறுப் புலவர் நினைவு நாளை அரசு சார்பில் கொண்டாட திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

**133—**

## பொறியியல் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 62871—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரில் பொறியியற் கல்லூரி துவங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**134—**

### பல்தொழிற் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 65347அ—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் பல்தொழிற் பயிற்சிப் பள்ளி (பாலிடெக்னிக்) அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது அரசுத் தரப்பில் ஒட்டப்பிடாரம் தொகுதியில் புதியதாக அரசு பாலிடெக்னிக் கல்லூரி துவங்க வாய்ப்புகள் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**135—**

### கலைக் கல்லூரிக்குக் கட்டட வசதி

**வினா எண் 69163—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருச்சி மாவட்டம், முசிறியில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரிக்குக் கூடுதலாக வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் தற்சமயம் 20 வகுப்பறைகள் உள்ளன. மேலும் கூடுதலாக வகுப்பறைகள்



கட்டுவதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து கருத்துரு வரப்பெற்றால், அது அரசால பரிசீலிக்கப்படும்.

**136—**

### பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல்

**வினா எண் 56986—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**137—**

### ஆவின் பாலகம் அமைத்தல்

**வினா எண் 66006—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் பகுதியில் தற்பொழுது ஆவின் பாலகம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2006 ஜனவரி 27

138—

### மீன்வளக் கண்காட்சி

**வினா எண் 20765—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் உள்ள மீன்வளக் கண்காட்சியை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் உள்ள மீன்வளக் கண்காட்சியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

139—

### ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 47134—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் இயங்கிவரும் மீன்வளத் துறை ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2006 ஜனவரி 27]

140—

### கடற்கரை கலங்கரை விளக்கு

**வினா எண் 49453—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற்கரை கலங்கரை விளக்கைப் பழுதுநீக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற்கரையில் உள்ள வழிகாட்டி விளக்கைச் சரி செய்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அக்கடற்கரையில் கலங்கரை விளக்கம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

141—

### தோணித் துறை கட்டுதல்

**வினா எண் 50874—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரம், தலைமன்னார் படகுத் துறை முற்றிலுமாகப் பழுதடைந்துவிட்டதால் அங்கு ஆர்.சி.சி. தோணித் துறை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

142—

### மீன் பாசி குத்தகை

**வினா எண் 59372—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் உள்ள சிங்காநல்லூர் குளத்தில் மீன் அதிகமாக வளர்க்கவும், முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி அதிக வருமானம கிடைக்கவும், அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாநகரில் உள்ள சிங்காநல்லூர் குளத்தில் மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் மீன் பாசி குத்தகை வழங்கப்படுகிறது. இதில் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை.

143—

### மீன்பிடி படகு போக்குவரத்து

**வினா எண் 59743—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு துறைமுகத்தில் கொள்ளிடம் ஆறு கடலில் கலக்கும் இடத்தில் மண்மேடுகள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அம் மண்மேடுகளை நிரந்தரமாக அகற்றி மீன்பிடி படகு போக்குவரத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பழையாறு துறைமுகத்தில் கொள்ளிடம் ஆறு, கடலில் கலக்கும் இடத்திலுள்ள மண்மேடுகளை நிரந்தரமாக அகற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) எழாது.

144—

### மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகாம்

**வினா எண் 64756—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

145—

### மீன்களை அதிகமாக உற்பத்தி செய்தல்

**வினா எண் 87207—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடலில் உள்ள வஜ்ஜிரம், வாவல், இறால், வாளை, அயலை, மத்தி போன்ற மீன்களை அதிகமாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீன்களின் இனப்பெருக்கத்திற்காக செயற்கை மீன் உறைவிடங்கள் (Artificial Reefs) கடலில் நிறுவப்படுகின்றன. இதன் மூலம் மீன்களின் இனவிருத்தியைப் பெருக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பரங்கிப்பேட்டை, முட்டுக்காடு, வேதாளை போன்ற இடங்களிலும் 2004-05 ஆம் ஆண்டில் இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ.2.78 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மீன் வளத்தினை அதிகப்படுத்த கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல் (Sea Ranching) என்னும் திட்டத்தின்கீழ் இறால் குஞ்சுகள் வளர்த்தெடுத்து கடலோரத்தில் இருப்பு செய்யப்படுகின்றன. இதுபோன்ற இதர கடல் மீன் இனங்களை அதிகரிக்க வழிவகை உள்ளதா என ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**146—**

## படகுகளை அழகுபடுத்துதல்

**வினா எண் 67244—திரு. நா. சந்திரமோகன்:** மாணபுமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையாறு மீனவர் கிராமத்தில் பக்கிங்காம் கால்வாயில் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வசதியாக அழகுபடுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுகத்திற்கு அருகில் இருக்கும் பக்கிங்காம் கால்வாயில் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வசதியாக அழகுபடுத்திக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 27]

**147—**

## மீன்பிடித் துறைமுகத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 67245—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தைப் புதுப்பித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை ரூ.300.00 இலட்சம் செலவில் புதுப்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டு, அதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்கும்.

**148—**

## தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்தல்

**வினா எண் 23939—திரு. எம். கப்பையா பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறும்வகையில் அரசுத் தொழிற்பயிற்சிப் பள்ளி (I.T.I.) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

[2006 ஜனவரி 27

**149—**

**பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி**

**வினா எண் 34475—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் மாநிலம் முழுவதும் செயற்படுத்தப்படுகிறது. அவ்வகையில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த 3 பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள மானியம் அளிக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.*

**150—**

**பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு**

**வினா எண் 39427—திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பஞ்சாலைத் தொழிலாளர்களின் சம்பளப் பேச்சுவார்த்தை நான்கு ஆண்டுக் காலம் கடந்த பின்னும் துவக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான தாவா, சிறப்புத் தொழிற் தீர்ப்பாயத்தின் பரிசீலனையில் உள்ளது. எனவே, இதுகுறித்த பேச்சுவார்த்தை தற்போது துவக்கப்பட வாய்ப்பில்லை.*



2006 ஜனவரி 27]

**151—**

**தொழிற்கல்வி பயிற்சி நிலையம்**

**வினா எண் 45779—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தொழிற்கல்வி பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழாது.*

**152—**

**.தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்**

**வினா எண் 60269—திரு. டி. மணி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் கழகம், கீரிப்பாறை கோட்டத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்?*

*(ஆ) இத்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுகின்றதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் கழகம், கீரிப்பாறை பிரிவில் 182 தொழிலாளர்களும், கீரிப்பாறை தொழிற்கூடத்தில் 64 தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*

*(ஆ) இத்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை விட கூடுதலாகச் சம்பளம் வழங்கப்படுகிறது.*

[2006 ஜனவரி 27

**153—**

**தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்தல்**

**வினா எண் 65347—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதியில் தொழிற்பயிற்சிப் பள்ளி (ஐ.டி.ஐ.) அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு இல்லை.

(ஆ) எழாது.

**154—**

**தொழிற்பயிற்சி மையம் துவங்குதல்**

**வினா எண் 67025—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் மகளிருக்கான புதிய தொழிற்பயிற்சி மையம் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.



2006 ஜனவரி 27]

**155—**

**சுமை தூக்கும் தொழிலாளர் நல வாரியம்**

**வினா எண் 73571—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 5 லட்சத்திற்கு மேறபட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுக்கும் தொழிலாளர்களுக்கென தனியாக சுமை தூக்கும் தொழிலாளர் நல வாரியம் அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சாத்தியக்கூறு இல்லை.

**156—**

**ஐ.ஏ.எஸ். தேர்வு பயிற்சி மையம்**

**வினா எண் 76149—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

சேலம் மாவட்டம், மேட்டூரில் ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஏ.எஸ்., போன்ற தேர்வுக்குப் பயிற்சி அளிக்க அரசு பயிற்சி மையம் தொடங்க அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இந்திய அளவில் நடைபெறும் ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஏ.எஸ்., தேர்வுகளில் மட்டும் பங்கு பெறுவதற்கு சேலம் மாவட்டம், மேட்டூரில் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

[2006 ஜனவரி 27

157—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 81132—திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, ஆலங்குளத்தில் அரசு தொழிற்பயிற்சி (Industrial Training Institute) நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

158—

## வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 83881—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

159—

## மின்சார வசதி

**வினா எண் 1503—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் அடிப்படை பிரச்சினையான மின்சார வசதியைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவொற்றியூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தற்போது கீழ்வரும் எண்ணிக்கையில் தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| (1) குழல் விளக்குகள் | .. | 2,501 |
| (2) சோடியம் ஆவி விளக்குகள் | .. | 809 |
| (3) மெர்குரி விளக்குகள் | .. | 193 |
| (4) சாதாரண விளக்குகள் | .. | 29 |
| (5) உயர்மின் கோபுர விளக்குகள் | .. | 1 |
| | | 3,536 |

இந்நகராட்சியில், மேலும் சில தெரு விளக்குகள் அமைக்க மின்சார வாரியத்துடன் கலந்தாய்வு செய்து அதற்கான தொகையும் மின்சார வாரியத்திற்குச் செலுத்தப்பட்டு மின்சார வாரியம் இந்நகராட்சியில் சில இடங்களில் மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந் நகராட்சியின் எல்லைக்குள் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில் மெட்டல் அலாய்டு விளக்குகள் (ரூ.2,90,000-க்கு) 100 எண்ணிக்கையில் பெறப்பட்டு அவற்றினை இந்நகராட்சியில் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கடற்கரை சாலைகளில் உள்ள நாலடி குழல் விளக்குகள் பிட்டிங்குகள் துருப்பிடித்து சேதமுற்று உள்ளதால் ரூ.95,000-க்கு 200 எண்ணிக்கையில் டியூப் லைட் பிட்டிங்குகள் பெறப்பட்டு அவற்றை இந்நகராட்சியில் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

160—

## பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 1840—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராசிபுரம், புதிய பேருந்து நிலையம் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் இல்லை.

**161—**

**தார்ச் சாலையாக மாற்றும் திட்டம்**

**வினா எண் 2004—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஓகேனக்கல்-நாட்ராம்பள்ளி வரையிலான சாலையைச் சீர்செய்து, தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஓகேனக்கல்-நாட்ராம்பள்ளி வரையிலான சாலையைச் சீர்செய்து தார்ச் சாலையாக அமைக்கும் பணி ரூ.199.00 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தில் மாவட்ட வன அலுவலர், தருமபுரி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**162—**

**ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்**

**வினா எண் 2498—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் ஒன்றியம், மயில்ரங்கம் கிராமத்தையும், மூலனூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டூர் கிராமத்தையும்



2006 ஜனவரி 27]

இணைக்கும் வகையில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் ஒன்றியம், மயில்ரங்கம் கிராமத்தையும், மூலனூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டூர் கிராமத்தையும் இணைக்கும் வகையில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**163—**

**நாடக மேடை**

**வினா எண் 33069—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், ஏ. புதுப்பட்டி பஞ்சாயத்து, பசுக்காரன்பட்டிக்கு நாடக மேடை கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், எ.புதுப்பட்டி பஞ்சாயத்து, பசுக்காரன்பட்டிக்கு நாடக மேடை கட்டித் தர தற்சமயம் வாய்ப்பில்லை.

**164—**

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 4111—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகராட்சி, கோபாலபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க போதிய கொள்ளளவு உள்ளதாக இல்லை. எனவே, 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடியாத்தம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தற்போது புதிதாக பத்து லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, திட்டப் பணிகள் அனைத்தும் 6/2003-ல் முடிக்கப்பட்டு தற்போது நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. அதன் மூலம் இந்நகராட்சியின் கோபாலபுரம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் முழுமையாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**165—**

### சலவைத் துறை அமைத்தல்

**வினா எண் 4836—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, பண்பொழி கிராமத்திலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைத் துறை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் தொகுதி, பண்பொழி கிராமத்திலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைத் துறை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



**166—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 6719—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, உமாமகேசுவரபுரம் ஊராட்சி, கீழப்புலியம்பேட்டை மணல்மேடு, ஆதிதிராவிடர் தெருவிற்குச் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**167—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7156—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சியில் உள்ள மூங்கபாடியான் வளவு-மேட்டூர் முதல் காடையாம்பட்டி வரையுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சியில் உள்ள மூங்கபாடியான் வளவு குடியிருப்புக்குக் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஓமலூர் (தெற்கு) ஒன்றியத்தைச் சார்ந்த 121 வழியோரக்

குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அங்கு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டத் தேவையில்லை.

**168—**

### அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருதல்

**வினா எண் 7549—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் வீடுகள், இடிந்து விழும் நிலையில் உள்ளதால், அடுக்குமாடி குடியிருப்புகளை அரசு கட்டித் தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், மேட்டூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர இயலாது.

**169—**

### சுரங்கப் பாதை திட்டம்

**வினா எண் 7556—திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராயநகர் தொகுதி, ரங்கராஜபுரம் சின்னகேட் ரயில்வே சுரங்கப் பாதை திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தியாகராயநகர் தொகுதி, ரங்கராஜபுரம் இரயில்வே சின்னகடவில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்காக திட்ட மதிப்பீடு



தயார் செய்து தென்னக இரயில்வேக்கு அனுப்பப்பட்டு, நடப்பு நிதியாண்டிலேயே (2005-2006) அதற்கான பணிகள் மேற்கொள்ள வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**170—**

### சாலை மற்றும் தெரு விளக்கு வசதி

**வினா எண் 7664—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், துர்காதேவி நகரில் 3, 4, 5, 6 ஆகிய தெருக்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவுநீர்க் குழாய்கள், சாலை வசதி, தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், துர்காதேவி நகரில் 3, 4, 5 மற்றும் 6 தெருக்களில் சாலை வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. துர்காதேவி நகர் 3, 4, 5, 6 ஆகிய தெருக்களில் குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. துர்காதேவி நகர் 6-வது குறுக்குத் தெருவில் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு, நவம்பர் 2003 இறுதியில் பணி முடிக்கப்பட்டு விட்டது.

**171—**

### மயானப் பாதை

**வினா எண் 7804—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சி மதுரா கண்டிகை கிராமத்தில் மயானப் பாதை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சி மதுரா கண்டிகை கிராமத்தில் மயானப் பாதை அமைக்க தற்போது போதிய நிதி வசதி இல்லாததால் இப்பணியினைச் செய்ய இயலாது.

**172—**

### எழில்மிகு சென்னையை உருவாக்குதல்

**வினா எண் 8400—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழில்மிகு சென்னையை உருவாக்கும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எழில்மிகு சென்னையை உருவாக்குவதற்குப் பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பல பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**173—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 9176—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதியில் உள்ள ஊராட்சிக் கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிக் கோட்டை, தொட்டிப்பாளையம், வரதநல்லூர் மற்றும் சன்னியாசிப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த 51 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

**174—**

### விளையாட்டுத் திடல்

**வினா எண் 9655—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், பட்டேல் நகர் மாநகராட்சிப் பள்ளிக்கு அருகில் உள்ள காலி இடத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி, 3-வது வட்டம், பட்டேல் நகர் பள்ளி மற்றும் விளையாட்டுத் திடல் பயன்பாட்டிற்காக 34 மனை 2115 சதுர அடி பரப்பளவு கொண்ட குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தினை சென்னை மாநகராட்சிக்குக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையில், அந்த இடத்தில் இருக்கும் ஆக்கிரமிப்புதாரர்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இந்த இடத்தை குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு, இந்நிலத்தை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்ததும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

175—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 10081—திருமதி கனிதா சம்பத்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியிலுள்ள கோவளம் கிராமத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தையூர் பகுதி மற்றும் முட்டுக்காடு ஆகிய இடங்களிலிருந்து தண்ணீர், குழாய்கள் மூலம் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்பொழுது துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலுள்ள கோவளம் கிராமக் குடியிருப்பிற்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது பயனில் உள்ளது. மேலும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், தையூர் ஏரியிலிருந்து கோவளம் ஊராட்சியிலுள்ள 8 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் தையூர் ஏரியில் நீராதாரம் அமைக்கப்பட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 10/2003-ல் முடிக்கப்பட்டு அதன் மூலம் தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது.

176—

## ஒதுக்கீடு நிலக் கட்டணம்

**வினா எண் 10303—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சிப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி பல ஆண்டுகள் வாழ்ந்து வருவதால் அபிவிருத்திக் கட்டணம், ஒதுக்கீடு நிலக் கட்டணம் போன்றவற்றை அரசு இரத்து செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள் மற்றும் நில மேம்பாடுகளை முறைப்படுத்துதல், கட்டணம் செலுத்தி முறைப்படுத்திக் கொள்ள 2002 ஆம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

177—

## பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுதல்

**வினா எண் 12539—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தேர்வு நிலைப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994)-இன்படி மக்கள் தொகை 30,000-க்கு கீழ் உள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஊராட்சியாக வகைப்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாட்றாம்பள்ளி பேரூராட்சியின் மக்கள் தொகை 9,076 ஆக இருந்ததால், அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11-6-2004-இல் நாட்றாம்பள்ளி பேரூராட்சி என்பது நாட்றாம்பள்ளி ஊராட்சியாக வகைப்படுத்தி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

178—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 12811—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி ஒன்றியம், காசிநாதபுரம் கிராமத்தில் பொது விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**179—**

### நவீன பேருந்து நிலையம்

**வினா எண் 15203—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் ஒரு நவீன பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் தற்போது பேருந்து நிலையம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**180—**

### சலவை செய்யும் மேடை

**வினா எண் 16765—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, வெலக்கல்நத்தம் கிராமத்தில் சலவை செய்ய மேடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தற்போது சலவை மேடை அமைத்துத்தர இயலவில்லை.

**181—**

### பூங்காவிற்குச் சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 17041—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சி, மேற்குத் தாம்பரம் முத்துரங்கம் பூங்கா பராமரிப்பின்றி ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் பொருட்டு II-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. மேலும், ஆங்காங்கே இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

**182—**

### மின் மயானம் கட்டும் திட்டம்

**வினா எண் 17220—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கவுண்டம்பாளையம் உரக் கிடங்கு உள்ள நிலத்தில் ஒரு மின் மயானம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பநாயக்கன்பாளையம், ஆத்துப்பாலம் மற்றும் சொக்கம்புதூர் ஆகிய இடங்களில் மின் மயானங்கள் உள்ளன. ஆதலால், கோயம்புத்தூர் மாநகராட்சியில் கவுண்டம்பாளையம் உரக் கிடங்கு உள்ள நிலத்தில் மின் மயானம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**183—**

**உடற்பயிற்சிக் கூடம்**

**வினா எண் 17411—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், தென்பாதி, வ.உ.சி. நகர், திரிபுரசுந்தரி நகர், சபரி நகர், காமராஜர் பகுதியில் இளைஞர் உடற்பயிற்சிக் கூடம், பூங்கா அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. நிதிநிலை சரியில்லாததால் சீர்காழி நகரம், தென்பாதி, வ.உ.சி. நகர், திரிபுரசுந்தரி நகர், சபரி நகர், காமராஜர் பகுதியில் இளைஞர் உடற்பயிற்சிக் கூடம், பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.



2006 ஜனவரி 27]

**184—**

**மின் எரியூட்டு இடுகாடு**

**வினா எண் 18458—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடசென்னை பகுதிகளில் உள்ள கொடுங்கையூர், காசிமேடு, வியாசர்பாடி வடக்கு, பெரம்பூர், ஓட்டேரி ஆகிய இடங்களில் மின் எரியூட்டு இடுகாடு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது சென்னை மாநகராட்சியின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு ஓட்டேரி நீங்கலாக மற்ற இடுகாடுகளில் மின் எரியூட்டு சாதனம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**185—**

**கலை அரங்கம்**

**வினா எண் 18905—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், மேக்கிழார்பட்டி பஞ்சாயத்து, எம். புதுப்பட்டி மற்றும் சில்லாம்பட்டியில் கலையரங்கம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

186—

## நடைபாதைப் பாலம்

**வினா எண் 19019—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னை மண்டலம் 1, மண்டலம் 2 ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், எம்.ஜி.ஆர். நகர், ஆர்.ஆர். நகர் போன்ற பகுதிகளில் மழைநீர் வடிகால் கால்வாய்களின்மீது நடைபாதைப் பாலங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். தற்போது ஏற்கெனவே உள்ள நடைபாதைப் பாலங்களை மக்கள் பயன்படுத்துகிறார்கள். மேலும் ஏற்கெனவே நடைபாதைப் பாலங்கள் பயன்பாட்டில் உள்ளதால், புதியதாக நடைபாதைப் பாலங்கள் அமைக்கும் பணிக்கான திட்டம் தற்போது சென்னை மாநகராட்சியில் ஏதும் இல்லை.*

187—

## பூங்காக்களைச் சீர் செய்தல்

**வினா எண் 19507—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆர்.கே.நகர் தொகுதி, 13-வது வட்டத்திலுள்ள இரண்டு பூங்காக்களைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆர்.கே.நகர் தொகுதி, 13-வது வட்டத்தில் இரண்டு தீவுப் பூங்காக்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.*

188—

## விடுதிகளைச் சீரமைத்தல்

**வினா எண் 20370—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பயணியர் தங்கும் விடுதிகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஆம்.*

189—

## தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

**வினா எண் 20749—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாநகராட்சி, மணிமுத்தாறு கழிவு நீரைச் சுத்திகரிக்க தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செயல்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தினை தேசிய நதிநீர்த் திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் உத்தேசம் இல்லை. இத்திட்டத்தினை மாவட்டத் தலைநகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள அரசு கருதியுள்ளது.

**190—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 21106—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் நடைபெறும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியை விரைந்து முடிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**191—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 21133—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், விந்தன் கோட்டை கிராமத்திற்குத் தரை போர் போட்டு குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாம்பவர் வடகரை பேரூராட்சியைச் சார்ந்த விந்தன் கோட்டை கிராமத்திற்கு தற்பொழுது ஆழ்குழாய்க் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு, 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**192—**

**ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்துதல்**

**வினா எண் 21922—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, புட்டான் ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, புட்டான் ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்திட போதிய நிதி வசதி இல்லை.

**193—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 22037—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலவாடி ஊராட்சி, பையூரான் கொட்டாய் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் குடிநீர் உப்புநீராக உள்ளதால, இதை மாற்றி ஆழ்குழாய்க் கிணறு அமைத்து நல்ல குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலவாடி ஊராட்சி, பையூரான் கொட்டாய் குடியிருப்புக்கு, வரும் நிதியாண்டுகளில் வாரிய நிதிநிலைமைக்குட்பட்டு, தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மாற்று நீராதாரம் உருவாக்கி நல்ல குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**194—**

## தொழில் முனைவோருக்குத் தனிப் பிரிவு

**வினா எண் 22142—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுதொழில் முனைவோருக்குப் பயிற்சி மற்றும் விளக்கங்கள் தெரிவிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தனிப் பிரிவு ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிறுதொழில் முனைவோருக்குப் பயிற்சி மற்றும் விளக்கங்கள் தெரிவிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தனிப் பிரிவு எழுத்தர் உள்ளார்



**195—**

## குளத்தினைச் செப்பனிடுதல்

**வினா எண் 23080—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், தேனூர் ஊத்துக்காட்டம்மன் குளத்தினைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், தேனூர் ஊத்துக்காட்டம்மன் குளத்தினைச் செப்பனிட தற்போது நிதி வசதி இல்லை.

**196—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26053—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி, அட்டப்பள்ளம் கிராமத்தில் குடிநீர் வசதிக்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி, அட்டப்பள்ளம் குடியிருப்பில் வீடுகள்

பரவலாக உள்ளன. இதன் தற்போதைய மக்கட்தொகை 50 ஆகும். மக்கள் தொகை குறைவாக இருப்பதால், ஊரகக் குடிநீர்த் திட்ட விதி முறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**197—**

**மக்கள் கோரிக்கை**

**வினா எண் 30041—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, மருதங்குடி ஆகிய பஞ்சாயத்துக்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஊராட்சிகளாக ஒதுக்கீடு செய்திருப்பது குறித்து புகார் ஏதேனும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பாப்பாப்பட்டி மற்றும் கீரிப்பட்டி ஊராட்சித் தலைவர் பதவியிடத்தை ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கியதை மாற்றி பொது என இட ஒதுக்கீடு செய்ய ஒரு பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஆ) இக்கோரிக்கை ஏற்கப்படவில்லை.

**198—**

**ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல்**

**வினா எண் 30042—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) விருதுநகர் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட கொட்டக்காச்சியேந்தல் என்ற ஊராட்சியைத் தாழ்த்தப்பட்ட மக்களுககு ஒதுக்கியது தவறு என்று அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**199—**

**மீன் அங்காடி**

**வினா எண் 31052—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி பேரூராட்சியில் காய்கறி மற்றும் மீன் அங்காடி கட்டிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செஞ்சி சிறப்பு சிற்றூராட்சியில் காய்கறி மற்றும் மீன் அங்காடி கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**200—**

**மணல் அரிப்பைத் தடுக்க தடுப்பணை**

**வினா எண் 31431—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் அருகில் வைப்பாற்றின் குறுக்கே அணைக்கட்டுடன்கூடிய பாலம் அமைத்து போக்குவரத்துக்கும், பாசனத்துக்கும் உபயோகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பகுதியில் வைப்பாற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு இயங்கி வரும் குடிநீர்த் திட்டத்தின் நீர் ஆதாரங்கள் மேம்படும்வகையிலும், மணல் அரிப்பைத் தடுப்பதற்கும், வைப்பாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை சுமார் ரூ.224.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரதமரின் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ளது.





## பட்டியல் 6

**1—**

### சாலை வசதி

**வினா எண் 35446—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் சாலையைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**2—**

### 'கியோஸ்க்' திட்டம்

**வினா எண் 50080—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் தொடுதிரை 'கியோஸ்க்' திட்டம் (குறை தீர்ப்போம்) செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒரு முன்னோடித் திட்டமாக 'குறை தீர்ப்போம்' கணினி தொடுதிரை சாதனம் ஒன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

அவர்களின் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்டது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள மற்ற 233 சட்டமன்றத் தொகுதிகளிலும் 'குறை தீர்ப்போம்' கணினி தொடுதிரை சாதனம் அமைக்கப் பரிசீலிக்கப்படுகிறது

**3—**

## தொழில் பூங்கா

**வினா எண் 30094—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூ.235 கோடி செலவில் பழைய மகாபலிபுரம் சாலையில் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு சான்ஸா இந்தியா நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறதா?

(ஆ) அதன் விவரங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பழைய மகாபலிபுரம் சாலையில் சிறுசேரியில் மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்கு சான்ஸா இந்தியா நிறுவனத்துடன் ஒப்பந்தம் 19-4-2002 அன்று கையெழுத்தாகியுள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்ற நிறுவனம் சுமார் 27.36 ஏக்கர் நிலப்பரப்பை 7-1-2002 அன்று சான்ஸா இந்தியா நிறுவனத்திற்கு ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக இந்நிறுவனம் மென்பொருள் மேம்பாட்டு மையத் திட்டப் பணிகளை சுமார் 37.50 கோடி செலவில் நிறைவு செய்து தனது உற்பத்தியை 24-7-2003 அன்று தொடங்கியது.



**4—**

## நீதிமன்றம்

**வினா எண் 54884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகரில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**5—**

## கல்விக் கடன்

**வினா எண் 54056—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூரில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்குக் கல்விக் கடன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**6—**

### விலை நிர்ணயம்

**வினா எண் 58701—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கொப்பரைத் தேங்காய்க்கு உரிய விலையை அரசே நிர்ணயம் செய்து கொடுத்து கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மைய அரசு நிர்ணயித்த ஆதார விலைத் திட்டத்தின்கீழ் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,570/- வீதம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கொப்பரையைக் கொள்முதல் செய்ய, 14-7-2005 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி தற்போது விவசாயிகளிடமிருந்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்து வருகிறது.

**7—**

### வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 86210—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் கூடுதலாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**8—**

### நவீன அரிசி ஆலை

**வினா எண் 77055—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, நெடுங்குளம் பகுதியில் நவீன அரிசி ஆலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மாநிலம் முழுவதுமாக 23 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. புதிதாக நவீன அரிசி ஆலை ஏதும் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

9—

### கோயில் கட்டுதல்

**வினா எண் 73009—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*ஈரோடு நகரின் மையப் பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மிகவும் நெருக்கடியான இடத்தில் அமைந்துள்ளதால், சி.எஸ்.ஐ.-க்குச் சொந்தமான இடத்தை வாங்கி அங்கு கோயில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*ஈரோடு நகரின் மையப் பகுதியில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு அருகில் உள்ள நிலத்தினை வாங்கி திருக்கோயிலின் சுற்றுப் பிரகாரம் மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கான நடவடிக்கைகள், 1986 ஆம் ஆண்டிலேயே துவங்கப்பட்டுவிட்டது. குறிப்பிட்ட நிலத்தின் உரிமையாளர் நிலை குறித்த பொருள் ஆய்வில் உள்ளது. மேலும், இந்த நிலத்தினைத் திருக்கோயிலுக்கு வாங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்று கோரி தனி நபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் முடிவான தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.*

10—

### யானைக்கால் நோய்

**வினா எண் 59106—செல்வி சி. கனகதாரா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*பேரணாம்பட்டு தொகுதி, அத்திமாகுலபள்ளி, கரும்பூர் ஆகிய கிராமங்களில் பைலேரியா (யானைக்கால்) நோய் பரவி உள்ளதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*அத்திமாகுலபள்ளி, கரும்பூர் ஆகிய கிராமங்களில் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் முறையே 18 மற்றும் 6 ஆகும். இவர்களால் மற்றவர்களுக்கு யானைக்கால் நோய் பரவாது. கடந்த 2001 ஆம் ஆண்டில் அத்திமாகுலபள்ளியில் 151 இரத்தத் தடவல்கள் எடுக்கப்பட்டு அதில் இருவருக்கு நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கரும்பூர் கிராமத்தில் 108 இரத்தத் தடவல்கள் எடுக்கப்பட்டு அதில் யாருக்கும் இந்த நோய் இருப்பதாகக் கண்டறியப்படவில்லை.*

11—

### சிறுதொழில்

**வினா எண் 16200—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அரசே சிறு தொழில்கள் தொடங்கும் பிரேரணை எதுவும் தற்போது இல்லை.*

*(ஆ) இவ்வினா எழாது.*

12—

### நறுமணத் தைலம் தொழிற்சாலை

**வினா எண் 23121—திரு. வெ. கோவிந்தராஜ்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் அதிகப்படியாக மல்லிகைப் பூ மகசூல் செய்யப்படுவதால் அத்தொகுதியில் நறுமணத் தைலம் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் நறுமணத் தைலம் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**13—**

## விளிம்புத் தொகை

**வினா எண் 30610—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்கள் செலுத்த வேண்டிய விளிம்புத் தொகை 20 சதவீதத்தை 10 சதவீதமாக செலுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டையில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்கள் செலுத்த வேண்டிய விளிம்புத் தொகை 20 சதவீதத்தை 10 சதவீதமாக செலுத்துவது சம்பந்தமாக செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**14—**

## தொழில் துவங்குதல்

**வினா எண் 33345—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றியத்துக்கு ஒரு தொழிற்சாலை என்ற திட்டத்தில் மிகவும் பின்தங்கிய இளம்புவனம் கிராமத்தில் அரசுத் தரப்பில் தொழில் தொடங்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**15—**

## தொழிற் பூங்கா

**வினா எண் 48700—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் சிட்கோ நிறுவனம் மூலம் தொழிற் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் சிட்கோ நிறுவனம் மூலம் தொழிற் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது சிட்கோவின் பரிசீலனையில் இல்லை. போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர் முன்வந்தால், புதிதாக தொழிற்பேட்டை அமைப்பது குறித்து சிட்கோ பரிசீலிக்கும்.

[2006 ஜனவரி 27

16—

## கதர் நிறுவனம்

**வினா எண் 50385—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நிறுவனங்களில் நூற்கும் நூல் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் இயங்கும் கதர் நிறுவனங்களில் பணியாற்றும் நூற்போர், நெய்வோர்களுக்குத் தடையின்றி வேலை வாய்ப்பினை நல்கும்பொருட்டு தேவைப்படும் பஞ்சு பட்டைகளை மும்பை கதர் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் சான்று பெறப்பட்ட சகோதர நிறுவனத்திலிருந்து அவ்வப்போது பெறப்பட்டு வழங்கப்படுகிறது. இதன்மூலம் கோவை மாவட்டத்தில் இயங்கும் கதர் நிறுவனங்களில் நூல் தட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

17—

## மூலிகை மருந்து தொழிற்சாலை

**வினா எண் 75795—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் மூலிகை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் மூலிகை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.



2006 ஜனவரி 27]

18—

## கடனுதவி

**வினா எண் 24227—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் நிலங்கள், காடுகள் வாங்க கடன் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திட்டம் 2003-2001 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

19—

## கடன் வழங்குதல்

**வினா எண் 24231—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை செய்ய முடியாத 10 வயதிற்கு மேற்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு ஆடு, மாடு வளர்க்க தாட்கோ மூலம் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 18 வயது முதல் 50 வயதிற்கு உட்பட்ட ஆதிதிராவிட மக்கள் தாட்கோ மூலம் ஆடு, மாடு கறவை மாடுகள் உள்ளிட்ட கடன் உதவி பெறத் தகுதியுடையவராவர்.

20—

## உதவித் தொகை

**வினா எண் 31619—திரு. க. பாரமலை:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாட்கோ மூலம் 2000-2001 மற்றும் 2001-2002 ஆகிய வருடங்களில் எத்தனை ஆதிதிராவிடர்களுக்குத் தொழில் துவங்க உதவித்தொகை (subsidy) மற்றும் விளிம்புத் தொகை வழங்கப்பட்டது?*

*(ஆ) மொத்தத் தொகை எவ்வளவு? எத்தனை பேர்களுக்கு வங்கிகள் கடன் வழங்கி உள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் பயனடைந்த நபர்களின் விவரம்:-*

| வருடம் | தொழில் துவங்க மானிய உதவி பெற்ற நபர்களின் எண்ணிக்கை | மானியத் தொகை | விளிம்புத் தொகை | வங்கிக் கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 2000-2001 | 10,109 | 1278.06 | 641.01 | 2713.77 | 4632.84 |
| 2001-2002 | 11,776 | 1911.91 | 958.05 | 4211.86 | 7081.32 |

21—

## நம்பர் பிளேட்டு

**வினா எண் 30678—திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –*

*(அ) லாரிகளின் பின்புறம் உள்ள நம்பர் பிளேட்டுகளை கம்பி வலைகளால் மறைப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு முன்வருமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இது போன்ற குறிப்பிட்ட புகார் எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. எனினும், அவ்வப்போது வாகனத் தணிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் இத்தகைய குற்றங்களைத் தடுக்க போக்குவரத்துத் துறையும், காவல் துறையும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.*

22—

## பேருந்து நிலையம்

**வினா எண் 49638—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பேருந்து நிலையம் திறக்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் பேருந்து நிலையம் ஏற்கெனவே திறக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.*

*(ஆ) கேள்வி எழாது.*

23—

## மின் வசதி

**வினா எண் 50655—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2006 ஜனவரி 27

(அ) கோயம்புத்தூர் மாநகரில் அடிக்கடி மின் தடை ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரில், அடிக்கடி மின் தடை ஏற்படுவதில்லை. மின்தடை ஏற்படும் சமயங்களில் அவை குறுகிய காலத்திற்குள் சீர் செய்யப்படுகின்றன. மின்னூட்டிகளில், தடையேற்படுவதை அளவிட்டு, மத்திய மின்சார ஆணையத்தின் வழிகாட்டுதல்படி நம்பகக் குறியீடு (Reliability Index) கணக்கிடப்படுகிறது. இது ஜனவரி 2004-இல் 98.73%, பிப்ரவரி 2004-இல் 99.18%, மார்ச் 2004-இல் 99.41% மற்றும் சராசரியாக 99.12% என்று இருப்பதே தடையற்ற மின்சாரம் இருப்பதைக் காட்டுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பு மற்றும் இன்றியமையாத அவசரப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது பத்திரிக்கைகள் மற்றும் வானொலிமூலம் மின்தடை முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.

**24—**

### விரைவுப் பேருந்து வசதி

**வினா எண் 53482—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி என்ற தாலுகா தலைநகருக்கு இரவு நேரத்தில் வந்து செல்ல அரசு விரைவுப் பேருந்து விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் எடப்பாடியிலிருந்து இரவு நேரத்தில் வந்து செல்லுமாறு பேருந்து இயக்க திட்டம் ஏதுமில்லை. ஆனால், எடப்பாடி-சேலம், சேலம்-சென்னை



2006 ஜனவரி 27]

எனப் பகுதிவாரியாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இரவு நேரத்தில் இயங்குவதால், எடப்பாடி-சென்னை நேரடிப் பேருந்து வசதி இரவு நேரத்தில் இயக்க தேவை எழவில்லை.

**25—**

### மின் நிலையம்

**வினா எண் 54082—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்ய புதிய 110 கி.வோ. மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நடப்பு நிதியாண்டு 2004-05-ல் விளாத்திகுளத்தில் புதிய 110/33/11 கி.வோ. துணை மின் நிலையம் ரூ.71.12 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவிட மின்வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட துணை மின்நிலையப் பணிகள் தொடங்கிட ஒப்பந்த ஆணைகள் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளன. நிலத்தை சமன்படுத்துதல் மற்றும் வேலி அமைக்கும் கூடுதல் பணி நடந்து கொண்டுள்ளது.

**26—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 53493—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் இட வசதி உள்ளதால் சிமெண்ட் கம்பம் தயாரிக்கும் மையம் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**27—**

## புனல் மின் திட்டம்

**வினா எண் 54670—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி கட்டளை இரண்டாவது தடுப்பணை புனல் மின் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) அப்பணி எப்போது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. பவானி கட்டளை இரண்டாவது தடுப்பணை புனல் மின் திட்டம் (2 x 15 மெகாவாட்) அமைப்பதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதாவது 2007-இல் மின் உற்பத்தி துவக்கப்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

**28—**

## மின் உற்பத்தி

**வினா எண் 54805—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை மின் உற்பத்தித் திட்டத்தினை மீண்டும் துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். கொல்லிமலை மின் உற்பத்தித் திட்டத்தை (1 x 20 மெகாவாட்) மீண்டும் எடுத்துக்கொள்ளும் திட்டம் உள்ளது.

**29—**

## விரைவுப் பேருந்து நிலையம்

**வினா எண் 58256—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகர் காந்திபுரத்திலுள்ள விரைவுப் பேருந்து நிலையத்தை வேறு இடத்தில் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகர், காந்திபுரத்திலுள்ள விரைவுப் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றியமைக்கும் கருத்துரு எதுவும் இல்லை.

**30—**

## பேருந்து வசதி

**வினா எண் 59167—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில், சீர்காழி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரிக்குப் பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் சீர்காழியிலிருந்து கன்னியாகுமரிக்கு திருநெல்வேலி வழியாக பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை.

**31—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 65422—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சேராப்பட்டு மலை மற்றும் வெள்ளிமலையில் துணை மின் நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, சேராப்பட்டு மலை மற்றும் வெள்ளிமலையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**32—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 72175—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஈரோடு ஒன்றியம், கதிரம்பட்டியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள துணை மின் நிலையம் உடனடியாக இயங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு ஒன்றியம், கதிரம்பட்டி சர்வே எண் 72-ல் மேட்டுக்கடை 110/22 கி.வோ. துணை மின் நிலையம் ரூபாய் 3601 இலட்சம் மதிப்பீட்டில் 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் அமைக்கப்பட்டு 3-6-2001 முதல் இயக்கத்தில் உள்ளது.

**33—**

### மண் பரிசோதனை நிலையம்

**வினா எண் 41007—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரத்தில் மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**34—**

### மாணவர் விடுதி

**வினா எண் 19881—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இந்த நிதியாண்டில் கட்டடம் கட்டும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**35—**

**கள்ளர் மாணவர் விடுதி**

**வினா எண் 28479—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி யூனியன், வதாணி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு கள்ளர் மாணவர் விடுதி கட்ட அரசு அனுமதி வழங்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*புதிய விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.*

**36—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 40934—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், சாத்தனூர் ஊராட்சி, இருப்பையூரில் வாழும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்குத் தனியார் நிலத்தை அரசு கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**37—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 69973—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலில் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியை, சீர்காழி நகருக்கு மாற்றம் செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மட்டுமே இயங்கி வருகிறது. இவ்விடுதியில் 2005-2006-ல் 33 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாலும், இவ்விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டுவிட்டதாலும் இவ்விடுதியைச் சீர்காழி நகருக்கு மாற்றும் அவசியம் இல்லை.*

[2006 ஜனவரி 27

**38—**

### கால்நடை அபிவிருத்தி

**வினா எண் 7054—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராமநல்லூர் பேரூராட்சியில் ருத்திரபாளையம், குப்பம்பாளையம், நல்லண்ணகவுண்டன்புதூர் ஆகிய ஏதேனும் ஒரு இடத்தில் கேந்திர கிராமக் கால்நடை அபிவிருத்தி நிலையம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 212, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (கா.ப.3) துறை, நாள் 12-6-1991-ன்வழி இருபது கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டங்கள் துவங்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் உறைவிந்து மூலம் செயற்கைமுறை இனவிருத்திப் பணிகள், சீரிய முறையில் செயல்பட்டு வருவதால், உடுமலைப் பேட்டை வட்டம், சங்கராமநல்லூர் பேரூராட்சியில் ருத்திரபாளையம், குப்பம்பாளையம், நல்லண்ணகவுண்டன்புதூர் ஆகிய ஏதேனும் ஒரு இடத்தில் கேந்திர கிராமக் கால்நடை அபிவிருத்தி நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**39—**

### கால்நடை கிளை மருத்துவமனை

**வினா எண் 22856—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, காவேரிபுரம், சத்யா நகர் கால்நடை கிளை மருத்துவமனை மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மேட்டூர் தொகுதி, காவேரிபுரம், சத்யா நகரில் செயல்பட்டு வந்த பார்வை கிளை நிலையம் தற்போது செயல்படாத நிலையிலும், பார்வை கிளை நிலையம் / கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க தற்போது தடையாணை அமலில் உள்ளதாலும் சத்யா நகரில் பார்வைக் கிளை நிலையமோ/ கால்நடைக் கிளை நிலையமோ தற்போது தோற்றுவிக்க வாய்ப்பு இல்லை.

**40—**

### கட்டட வசதி

**வினா எண் 46637—திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, எஸ்.வி. நகரம் கால்நடை மருந்தகத்திற்குத் தனியாக கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எஸ்.வி. நகரத்தில் கால்நடை மருந்தகம் எதும் செயல்படவில்லை. இங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இது இத்துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் அல்லாமல் வேறு துறையைச் சார்ந்த நிலைய கட்டடத்தில் இலவசமாக அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதற்குத் தனியாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

## கால்நடை கல்வி பயிலகம்

**வினா எண் 69626—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் ஒன்றியம், கருவேப்பிலங்குறிச்சியில் கால்நடை கல்வி பயிலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் விரைவில் எடுத்துக்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் ஒன்றியம், கருவேப்பிலங்குறிச்சியில் கால்நடை கல்வி பயிலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது எதுவும் இல்லை.

42—

## புதிய கட்டடம்

**வினா எண் 70154—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, வேலூர் சிறப்பு ஊராட்சி, வேலூர் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதி, வேலூர் சிறப்பு ஊராட்சி, வேலூர் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



43—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 70180—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலுள்ள கால்நடை மருத்துவமனையை நவீனமுறையில் விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் கால்நடை மருத்துவமனை செயல்படவில்லை. கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இதனை நவீன முறையில் விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

44—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 79080—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தப்பக்குட்டை ஊராட்சியின் அருகில் 3 கி.மீ. தூரத்தில் காடையாம்பட்டி கால்நடை கிளை நிலையமும், 3 கி.மீ. தூரத்தில் அழகப்பன்-பாளையம்புதூர் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் தப்பக்குட்டை ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும், அரசு தற்போது துறையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆதலால சேலம் மாவட்டம், தப்பக்குட்டை கிராமத்தில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**45—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 84123—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, காரக்கோட்டை மற்றும் அத்தானியில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, காரக்கோட்டை மற்றும் அத்தானியில், கால்நடை மருத்துவமனை அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 27]

**46—**

**மாசுக் கட்டுப்பாடு**

**வினா எண் 67953—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி மற்றும் மாவு தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுவதால் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கட்டுப்பாடுகளைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

மாசு கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்த சம்பந்தப்பட்ட சட்டங்களில் வழிவகை இல்லை.

**47—**

**தெருக்களைச் செப்பனிடுதல்**

**வினா எண் 6734—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சி காலனி தெருக்களைக் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சியில் 2001-2002 ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் சக்காராபுரம் பழைய காலனி குடிசைப் பகுதியில் ரூ. 5,59,606 செலவில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை | ரூ. 1,61,747 |
| 2. | வெள்ள நீர் வடிகால் திட்டம் | ரூ. 3,97,859 |
| | மொத்தம் | ரூ. 5,59,606 |

48—

### மருத்துவக் கல்லூரி

**வினா எண் 7614—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உருவாக்கப்பட்ட மகளிர் கல்லூரி போல, வீட்டு வசதி சங்கம் சார்பாக திருப்பூரில் மருத்துவக் கல்லூரி கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருப்பூரில் மருத்துவக் கல்லூரி துவங்குவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

### பணியாளர் நியமனம்

**வினா எண் 9677—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் குப்பைகளை அகற்றுவதற்கும் பழுதடைந்த கழிவுநீர்க் குழாய்களைச் சரி செய்வதற்கும் போதிய அளவு பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.



50—

### உரிமைப் பத்திரம்

**வினா எண் 10460—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, திருவான்மியூர், திருவள்ளுவர் நகர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புதாரர்களுக்காக உரிய பணம் செலுத்திய பின்பும் உரிமைப் பத்திரம் வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவான்மியூர் விரிவாக்கத்தின்கீழ் திருவள்ளுவர் நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்ட மொத்தம் 2,518 குடியிருப்புகளுக்கு இதுவரை தோராய விலை மற்றும் வித்தியாசத் தொகை முழுவதையும் செலுத்திய 987 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒதுக்கீடுதாரர்கள் வீட்டின் வித்தியாசத் தொகையினைச் செலுத்தியவுடன் விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

51—

### பலமாடிக் குடியிருப்புகள்

**வினா எண் 12432—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைவாழ் மக்களுக்குப் பலமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் சேலம் மாநகருக்கும் விரிவுபடுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) குடிசைவாழ மக்களுக்குப் பலமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் சேலம் மாநகருக்கும் விரிவுபடுத்துவது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**52—**

**கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா எண் 20689—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலங்களை வாங்கி, மனைப் பிரிவு போட்டு வீட்டுமனைகளை விற்பனை செய்ய இயலாமல் நிதி முடக்கம் ஏற்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டனவா?

(ஆ) அதன் விளைவுகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) நிலங்களை வாங்கி, மனைப் பிரிவு அமைத்து வீட்டுமனைகள் விற்பனை செய்ய இயலாமல் உள்ளது பற்றி ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்து வீட்டுமனைகளை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) விற்பனை ஆகாத வீட்டுமனைகள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டும் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்கள்மீது தண்டத் தீர்வை நடவடிக்கை மற்றும் குற்ற வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**53—**

**பத்திரங்களைப் பதிவு செய்தல்**

**வினா எண் 21100—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதியில் உள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைச் சொந்தமாக பணம் செலுத்தி வீடுகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு எவ்வித நிர்பந்தம், நிபந்தனை எதுவுமின்றி உரியவர்களுக்குப் பத்திரங்களைப் பதிவு செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சிங்காநல்லூர் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 12 திட்டப் பகுதிகளில் கட்டப்பட்ட மொத்தமுள்ள 1,121 குடியிருப்புகளில் 6 திட்டப் பகுதிகளில் முழுத் தொகையும் செலுத்திய 1,921 குடியிருப்புதாரர்களுக்குக் கிரையப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள திட்டப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு இறுதி விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்டவுடன் வித்தியாசத் தொகையினை ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு வாரிய விதிகளின்படி கிரையப் பத்திரம் வழங்கப்படும்.

**54—**

**அடுக்குமாடிக் குடியிருப்பு**

**வினா எண் 40507—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கத்திவாக்கம் நகராட்சி, தாழங்குப்பம் மற்றும் பல்வேறு பகுதிக்கு ரூ.10.50 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்கு 1996 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி தொடங்கப்படாமல் உள்ள இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) திருவொற்றியூர் தொகுதி, கத்திவாக்கம் நகராட்சி, தாழங்குப்பம் பகுதியில் 468 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ. 6.07 கோடி செலவில் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் 2004-ஆம் ஆண்டு ஜூலை மாதம் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் 31-12-2005-ல் முடிவுறும்.*

**55—**

### குடிநீர்த் தொட்டிகள்

**வினா எண் 71483—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவை நகர் 26-வது வார்டில் வீட்டு வசதி வாரிய (டி.எப். ஓ.காம்பவுண்டில்) வீடுகளுக்கு சின்டெக்ஸ் தொட்டி வைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கி தொட்டிகள் வைத்த பின்பும், அங்கு குடிநீர் வழங்காமல் இருப்பதன் காரணம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*கோவை (கிழக்கு) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் செலவில் பந்தயச் சாலையில், டி.எப்.ஓ. காம்பவுண்டில் உள்ள அரசு வாடகைக் குடியிருப்புகளில் கடந்த மார்ச் 2000 ஆம் ஆண்டு சின்டெக்ஸ் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணி தொடங்கப் பெற்று மே 2000-ல் பணி நிறைவு செய்யப்பட்டு, 2001 ஆம் ஆண்டு முடிய இம்மேல்நிலைத் தொட்டிகளின்மூலம் குடியிருப்புகளுக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படும் மேற்கண்ட டி.எப்.ஓ. அரசு அலுவலர் குடியிருப்புகளுக்கு 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிறுவாணி தண்ணீர்*



*தட்டுப்பாடு காரணமாக நாளொன்றுக்கு 25,000 லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டதால் சிறிது காலம் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் மேல்நிலை சின்டெக்ஸ் தொட்டிகள்மூலமே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த 2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகக் கடுமையான சிறுவாணி குடிநீர்ப் பற்றாக்குறையினால் மேல்நிலைத் தொட்டியின்மூலம் தண்ணீர் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு பொதுக் குழாய்களின் மூலமாக முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் கோவை மாநகராட்சியின்மூலம் தோராயமாக 50,000 லிட்டர் சிறுவாணி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பி.வி.சி. குழாய்களில் ஆங்காங்கு உடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் வழங்க இயலவில்லை. பாதிக்கப்பட்ட பி.வி.சி. குழாய்களையும், உடைப்புகளையும், தண்ணீர்த் தொட்டிகளில் ஏற்படும் கசிவுகளையும் பழுது பார்த்தபின், இன்னும் சில மாதங்களில் தண்ணீர் மேல்நிலைத் தொட்டிகளின்மூலம் வழங்கப்படும்.*

**56—**

### குடிசை மாற்று வாரிய வீடுகள்

**வினா எண் 71783—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு தொகுதி, ஈரோடு நகரத்திலுள்ள பெரியார் நகர் 'E' பிளாக், கருங்கல்பாளையம், அழகரசன் நகர், மாணிக்கம் திரையரங்கு பகுதி, புதுமைக் காலனி, மேட்டூர் சாலை டேனிப்பாலம் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட மேட்டூர் சாலை அருகிலுள்ள டோனிப்பாலம், ஓடைப்பள்ளம் அருகில் உள்ள குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளும் பணிகள் துவங்கப்பட்டு*

31-07-2005-க்குள் முடிவுறும் நிலையில் உள்ளன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பில் உள்ள பெரியார் நகர் ('E' Block) 'இ' பிளாக் கருங்கல்பாளையம், அழகாசன் நகர், மாணிக்கம் திரையாங்கம் பகுதி, புதுமைக் காலனி பகுதிகளில் பழுதுபார்க்கும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

57—

### அடுக்குமாடிக் குடியிருப்பு

**வினா எண் 71860—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு தொகுதி, ஈரோடு நகரம், ஜீவானந்தம் சாலை, ஓடைப்பள்ளம் அருகில் உள்ள குடிசைப் பகுதியில், குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

58—

### தனி வீடுகள்

**வினா எண் 72176—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை பாலன் நகரில் பொது மக்களுக்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் தனி வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை பாலன் நகர் திட்டப் பகுதியில் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 100 தனி வீடுகள் 2003-2004 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இங்கு கூடுதலாக 11 வீடுகள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மேலும் 91 வீடுகள் 2005-2006 ஆம் ஆண்டில் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கான கட்டுமானப் பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

59—

### பொறியியல் கல்லூரி

**வினா எண் 11938—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதியில் பொறியியல் கல்லூரி புதிதாகத் துவங்க தனியாரிடமிருந்து விண்ணப்பம் அரசின் பரிசீலனைக்காக பெறப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதியில் பொறியியல் கல்லூரி புதிதாகத் துவங்க தனியாரிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

60—

### வேளாண்மை பட்டயப் படிப்பு

**வினா எண் 14502—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மை பட்டயப் படிப்பு படித்த மாணவர்களைப் பள்ளிகளில் பணிக்கு அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**61—**

## நூலகம்

**வினா எண் 16418—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கரைச்சுத்துப்புதூர் ஊராட்சி, தோப்புவிளை கிராமத்தில் பொது நூலகம் அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கரைச்சுத்துப்புதூர் ஊராட்சி, தோப்புவிளை கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறப்பதற்குரிய கீழ்க்கண்ட நிபந்தனைகள் இன்னும் நிறைவேற்றித் தராததால் நூலகம் திறக்கப்படவில்லை.

1. பகுதிநேர நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலி மனை மதுரை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



**62—**

## அறிவியல் பாடநூல்

**வினா எண் 20199—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அறிவியல் பாட நூலின் 372-வது பக்கத்தில், புரதப் பற்றாக்குறையினால் "க்வாஷியாகர்" (Kwashiorkor) மற்றும் "மாராமஸ்" (Maramus) நோய்கள் வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள தவறைத் திருத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் அறிவியல் பாட நூலில் 372-வது பக்கத்தில், புரதப் பற்றாக்குறையினால் "க்வாஷியாகர்" (Kwashiorkor) மற்றும் "மாராமஸ்" (Maramus) நோய்கள் வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது சரியானதே.

**63—**

## தட்டச்சுப் பயிலும் பிரிவு

**வினா எண் 38479—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்குத் தட்டச்சுப் பயிலும் பிரிவு தொடங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தட்டச்சுப் பாடப் பிரிவு பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

**64—**

## புதிய பாடப் பிரிவுகள்

**வினா எண் 44793—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் முதுகலை வணிகவியல், முதுகலை வரலாறு மற்றும் இளங்கலை தமிழ் இலக்கியப் பாடப் பிரிவுகளைத் துவக்கிட அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பாடப் பிரிவுகளைத் துவக்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**65—**

## மகளிர் கல்லூரி

**வினா எண் 70152—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கரூர் பகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



**66—**

## குடிமைப் பணி கல்வி மையம்

**வினா எண் 70209—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் குடிமைப் பணி கல்வி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் குடிமைப் பணி கல்வி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

**67—**

## நூல் வலை தொழிற்சாலை

**வினா எண் 84115—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசலில் செயற்கை இழைப் பருத்தி நூல் வலை தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மீமிசலில் செயற்கை இழைப் பருத்தி நூல் வலை தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

68—

[2006 ஜனவரி 27

## பேருந்து வசதி

**வினா எண் 13897—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பேருந்துகள வசதி செய்துதர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பேருந்து வசதி செய்துதர தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் எவ்விதச் செயற்குறிப்பும் இல்லை.

69—

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 53719—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மடவாமேடு, பழையாறு கடற்கரை ஓரங்களிலுள்ள சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாத்து, சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மடவாமேடு, பழையாறு கடற்கரை ஓரங்களிலுள்ள சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாத்து, சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இலலை.



2006 ஜனவரி 27]

70—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 4363—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி யூனியனில் பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) அப்பணியினை விரைந்து முடிப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி யூனியனில் பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 12/2002-ல் முழுமையாக முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

71—

## சுரங்கப் பாதை

**வினா எண் 7556—திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர் தொகுதி, ரங்கராஜபுரம் சின்னகேட் ரயில்வே சுரங்கப் பாதை திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தியாகராய நகர் தொகுதி, ரங்கராஜபுரம் இரயில்வே சின்னகடவில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்காக திட்ட மதிப்பீடு தயார் செய்து தென்னக இரயிலவேக்கு அனுப்பப்பட்டு, நடப்பு நிதியாண்டிலேயே (2005-2006) பணிகள் மேற்கொள்ள வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[2006 ஜனவரி 27

**72—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 8779—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி, கூனியூர் கிராமத்தில் புலவன் குடியிருப்பு ஆகிய கிராமங்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கூனியூர் ஊராட்சி, கூனியூர் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் முடிக்கப்பட்டு, 27-8-2002 முதல் பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலகன்குளம் ஊராட்சியைச் சார்ந்த புலவன் குடியிருப்பில் 2001-2002 நிதியாண்டில் ஒரு சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**73—**

## குடிநீர் வசதி

**வினா எண் 17795—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை பேரூராட்சிக்கு உட்பட்ட ஹைபாரஸ்ட் தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதியில் நிர்வாகம் பணம் கட்டாததால், தொழிலாளர்களுக்கு அரசே குடிநீர் வழங்க முன்வருமா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறை மூன்றாம் நிலை நகராட்சிக்கு உட்பட்ட ஹைபாரஸ்ட் தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதியில் நிர்வாகம் பணம் கட்டாததால் தொழிலாளர்களுக்கு அரசே குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

**74—**

## சமூக நலக் கூடம்

**வினா எண் 30204—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், மூக்கம்பட்டி ஊராட்சி, மூக்கம்பட்டியில் சமூக நலக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மூக்கம்பட்டி ஊராட்சி, மூக்கம்பட்டியில் சமூக நலக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

**75—**

## நிபுணர் குழு

**வினா எண் 33201—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்து ஆராய நிபுணர் குழு அமைக்க கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*கருத்துரு தற்போது ஏதும் இல்லை.*

**76—**

## தூர் வாரும் பணி

**வினா எண் 39480—திரு. டி.பி. பொன்னம்பலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், கருப்பாயி ஊருணி தூர் வார அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கருப்பாயி ஊருணி ஊராட்சியிலுள்ள கருப்பாயி ஊருணியைத் தூர் வாரும் பணி, 2005-06 ஆம் ஆண்டிற்கான எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

**77—**

## சந்தை மேம்பாடு

**வினா எண் 33938—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் வாரச் சந்தையை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் சிறப்புச் சிற்றூராட்சியில், வாரச் சந்தையை மேம்படுத்தும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**78—**

## அடிப்படை வசதி

**வினா எண் 34756—திரு. எஸ்.எம். பாலன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) லால்குடி சந்தைப்பேட்டையில் வாரச் சந்தை வியாபாரிகளுக்கு சிமெண்ட் மேடை, மேற்கூரை, மின் விளக்குகள் மற்றும் நுழைவுவாயில் வசதியும் செய்து தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) லால்குடி சந்தைப்பேட்டையில் 2 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டு சந்தைப் பகுதி முழுமைக்கும் வெளிச்சம் தரும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நுழைவுவாயில் அமைக்க திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிவடையும். இந்தச் சிறப்புச் சிற்றூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால், சிமெண்ட் மேடை மற்றும் மேற்கூரை அமைக்கும் திட்டம் எதுவும் சிறப்புச் சிற்றூராட்சியில் மேற்கொள்ளவில்லை.*

*(ஆ) சிறப்புச் சிற்றூராட்சியில் போதிய நிதி வசதி கிடைக்கும்பொழுது சிமெண்ட் மேடை மற்றும் மேற்கூரை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.*

[2006 ஜனவரி 27

79—

### கலையரங்கம் கட்டுதல்

**வினா எண் 35461—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், முள்ளூர் ஊராட்சியில் ஒரு கலையரங்கம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், முள்ளூர் ஊராட்சியில் கலையரங்கம் தற்போது கட்டித் தர இயலாது.

80—

### குடிநீர் வசதி

**வினா எண் 35694—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரில் அடிக்கடி நிறுத்தப்படும் குடிதண்ணீர் தினமும் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகரில் உள்ள உடைப்பு காரணமாகவும், மின் தடையின் காரணமாகவும், குடிநீர் நீரேற்றம் இல்லாத நாட்களில் மட்டுமே 5 நகராட்சி குடிநீர் டேங்கர் லாரிகள்மூலம் குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது புதுக்கோட்டை நகராட்சியில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதுமின்றி பொதுமக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



2006 ஜனவரி 27]

81—

### புதிய ஊராட்சி

**வினா எண் 36038—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, கோமல் ஊராட்சியை மூன்றாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) குத்தாலம் தொகுதி, கோமல் ஊராட்சியை மூன்றாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

82—

### வகுப்பறை வசதி

**வினா எண் 36709—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளமபரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12-வது வட்டம், காரனேஷன் நகர் பள்ளியில் போதிய வகுப்பறைகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை.—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12-வது வட்டம் காரனேஷன் நகர் பள்ளியை ஆய்வு செய்ததில், அவ்விடத்தில் போதிய வகுப்பறைகள் கட்டுவதற்குப் போதுமான இட வசதி இல்லை.

**83—**

### தெரு விளக்குகள்

**வினா எண் 37509—திரு. து. நெப்போலியன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வில்லிவாக்கம் தொகுதி, கோயம்பேடு, வள்ளுவர் தெருவில், தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

***விடை—***

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதி, கோயம்பேடு, வள்ளுவர் தெரு தனியார் சாலையானதால், இங்கு தெரு விளக்கு அமைக்க இயலாது.

**84—**

### தார் வாரும் பணி

**வினா எண் 37851—திரு. கே. மகேந்திரன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி இணைப்புக் கால்வாயைத் தூர் வாரி கரைகள் கட்டும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

***விடை—***

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வியாசர்பாடி கால்வாயில் தூர் வாரும் பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. கரைகள் கட்டும் பணி தொடங்கப்படும்.



**85—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 38065—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து, குப்பணம்பட்டி பகுதி மக்களுக்குச் சமுதாயக் கூடக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?*

***விடை—***

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2005-2006 ஆம் ஆண்டில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டால், இப்பணி செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**86—**

### மதிப்பீடு படிவம்

**வினா எண் 38311—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியில் பணிகள் மேற்கொள்ளும் மதிப்பீடு படிவம் ஆங்கிலத்தில் உள்ளதை, தமிழில் அச்சடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

***விடை—***

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் மேற்கொள்ளும் மதிப்பீடு படிவம் பொதுப் பணித் துறையின் வழிகாட்டுதலின்படிதான்

(specification) தயாரிக்கப்படுகிறது. பொதுப் பணித் துறை போன்ற இதர அரசுத் துறையில் தமிழில் தயார் செய்யப்பட்டபின், மாநகராட்சியிலும் நடைமுறைப்படுத்த இயலும்.

**87—**

### ஊராட்சியைப் பிரித்தல்

**வினா எண் 38786—திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சித்தரேவு ஊராட்சியை மூன்றாகப் பிரிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சித்தரேவு ஊராட்சியை மூன்றாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**88—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 39136—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், பாண்டவர்மங்கலம் பஞ்சாயத்துப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி ஒன்றியம், பாண்டவர்மங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த அனைத்துக் குடியிருப்புகளும், அயத்தாறு-கழுகுமலை ஊராட்சியைச் சேர்ந்த 10 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளன.

**89—**

### கலை அரங்கம்

**வினா எண் 40891—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகரத்தில் சிறுவர் சிறுமியர்கள் பயனடையும்வகையில் கலை அரங்கம் ஒன்றினைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலேயே அதனைத் துவக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**90—**

### பாலத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 42429—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், சீதேவிமங்கலம்-பெரகம்பி சாலையில் அமைந்துள்ள ஏரியின் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தைப் புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், சீதேவிமங்கலம்-பெரகம்பி சாலையில் அமைந்துள்ள ஏரியின் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தைப் புதிதாகக் கட்டித் தர, வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமை பொறுத்தும், தேவையைக் கருத்தில் கொண்டும் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்கப் பரிசீலிக்கப்படும்.

**91—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 43100— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

**92—**

### புதிய கிணறு

**வினா எண் 44421—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை தொகுதி, மேல்பாடி, மேல்பாடி காலனி, வீரந்தாங்கல் ஆகிய கிராமங்களுக்குப் புதிய கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை தொகுதியில் உள்ள மேல்பாடி மற்றும் மேல்பாடி காலனி மற்றும் வீரந்தாங்கல் குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டம் வழங்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

**93—**

### குடிநீர் வசதி

**வினா எண் 48488—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பிலிக்கல்பாளையம் ஊராட்சி, மல்லிகாபுரம், ஊர் பொது கிணற்றில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

**(அ)** கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், பிலிக்கல்பாளையம் ஊராட்சி, மல்லிகாபுரம் கிராமத்தில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 50 லிட்டர் வீதம் குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. எனவே, ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

[2006 ஜனவரி 27

94—

### வணிக வளாகம்

**வினா எண் 49874—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், கருப்பாயூரணி ஊராட்சியில் வணிக வளாகம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

95—

### பசுமை நகரம்

**வினா எண் 50023—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரைப் பசுமையான மாநகரமாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகரைப் பசுமையாக்கும்பொருட்டு, சென்னை மாநகராட்சி அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சென்னை மாநகரைப் பசுமையாக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து, மாநகராட்சிப் பூங்காக்கள், சாலையோரப் பூங்காக்கள், சாலை தீவுத் திடல்கள், மையத் தடுப்புகள் ஆகியவற்றை மேம்படுத்தி நல்லமுறையில் பராமரிக்கும்பொருட்டு, இப்பணியை பன்முகப்படுத்தி அனைத்து மண்டல அலுவலர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2006 ஜனவரி 27]

96—

### சாலை வசதி

**வினா எண் 50943—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெரும்பேடு ஊராட்சியிலுள்ள பழைய காலனியிலிருந்து குன்னவாக்கம் செல்லும் இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெரும்பேடு ஊராட்சியிலுள்ள பழைய காலனியிலிருந்து குன்னவாக்கம் செல்லும் இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அவ்வூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

97—

### வ.உ.சி. பூங்கா

**வினா எண் 63256—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு, வ.உ.சி. பூங்காவில் நிறுத்தப்படும் லாரிகளை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு நகராட்சி, வ.உ.சி. பூங்காவில் லாரிகளை வேறு இடத்திற்கு மாற்றும் முன்மொழிவுகள் ஏதும் நகராட்சியில் மேற்கொள்ளப்படவில்லை.

98—

## ஓவியத் தொழில்

**வினா எண் 64708—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஓவியத் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருக்கும் விளம்பர வரியால் ஓவியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சிப் பகுதிகளிலுள்ள தனியார் கட்டடம், தனியார் இடங்களிலும், பொதுக் கட்டடம் மற்றும் பொது இடங்களிலும் பொது மக்கள் கூடுகின்ற மற்றும் பொது மக்களின் பார்வைக்கு நன்றாகவும், தெளிவாகவும் தெரியக்கூடிய இடங்களில் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் வியாபார நோக்கத்துடனும் தங்களது நிறுவனங்களின் தயாரிப்புகளை விளம்பரப்படுத்தியுள்ள விளம்பரம், அதன் பரப்பளவைப் பொறுத்தே விளம்பர வரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள்மூலம் வசூல செய்யப்பட்டு வருகிறது. இதில் விளம்பரத் தொழில் செய்யும் (ஓவியர்கள்) தொழிலாளர்களுக்கு எவ்வித விளம்பர வரியும் விதிப்பது கிடையாது. விளம்பரம் செய்துள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டுமே விளம்பர வரி விதிக்கப்படுகிறது. ஆகையினால் விளம்பர வரி விதிக்கப்பட்டதில் ஓவியர்களுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை.

99—

## பாலத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 64949—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



*வால்பாறையிலுள்ள கருமலைப் பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறையிலுள்ள கருமலைப் பாலம் வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமான பாலம் இல்லையாதலால் இப்பாலத்தை நகராட்சிமூலம் அகலப்படுத்த வழிவகை ஏதுமில்லை.

100—

## பேருந்து நிலையம்

**வினா எண் 65508—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் 2-வது தொகுதி, குரங்கு சாவடி பகுதியில புறநகர் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

101—

## விளம்பரக் கட்டுப்பாடு

**வினா எண் 67469—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பள்ளிகள், கல்லூரிகள் முன்பு ஆபாச சுவரொட்டிகள் மற்றும் ஆபாச விளம்பரங்கள் வைத்திருப்பதை அரசு தடை செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளிகள், கல்லூரிகள் முன்பு ஆபாச சுவரொட்டிகள் மற்றும் ஆபாச விளம்பரங்கள் வைப்பவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**102—**

## புறநகர் பேருந்து நிலையம்

**வினா எண் 69397—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு பெரியசேமூர் மூன்றாம் நிலை நகராட்சி கனிராவுத்தர் குளத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு பெரியசேமூர் மூன்றாம் நிலை நகராட்சி கனிராவுத்தர் குளத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

**103—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 69621—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் மணிமுத்தாற்றில் நகரின் சாக்கடை கழிவுகள் கலக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். விருத்தாசலம் நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் சென்று அடைய உரிய இடம் ஏதும் இல்லை. எனினும், விருத்தாசலம் நகரின் சாக்கடை கழிவுகள் மணிமுத்தாறு நதிக் கரையின் ஓரமாக பொதுப் பணித் துறையினரால் வாய்க்கால் வெட்டப்பட்டு அதன் வழியாகக் கழிவுநீர் செல்கிறது.

**104—**

## தமிழில் பெயர்

**வினா எண் 70202—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் திரைப்படங்களுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டப்படுவதனால் ஏற்பட்டுள்ள பதற்றமான நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டப்படுவதைப் பொறுத்தளவில் சம்பந்தப்பட்ட திரைப்படங்களின் தயாரிப்பாளர்களே தங்களுடைய விருப்பப்படி/ கருத்துப்படி தாங்கள் விரும்பும் பெயர் வைப்பதற்கு உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். இது தொடர்பாக ஆலோசனை வழங்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ துறைக்கு அதிகாரம் ஏதும் இல்லை.

**105—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 72282—திரு. டி.பி. பொன்னம்பலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*சமயநல்லூர் தொகுதி, ஆனையூர், விளாங்குடி பகுதிக்கு வைகை குடிநீர்த் திட்டத்தின்கீழ் மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மதுரை மாவட்டம், சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த விளாங்குடி சிறப்பு ஊராட்சியின் தற்போதைய மக்கள் தொகையான (2001) 21,073 நபர்களுக்கு, தினசரி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் வீதமும், சமயநல்லூர் ஊராட்சியில் தற்போதைய மக்கள் தொகையான (2001) 9,197 நபர்களுக்கு, தினசரி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 10 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்க, வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு திட்ட மதிப்பீடு ரூ.355.12 இலட்சத்திற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 116, நாள் 23-12-2003 மூலம் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு அனைத்துப் பணிகளும் 10/2005-ல் முடிக்க திட்டமிடப்பட்டு, திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.*

**106—**

### குடிநீர் வசதி

**வினா எண் 72283—திரு. கோ. இரவிராஜ்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*திருத்தணி நகர மக்களுககு 10 நாட்களுக்கு ஒரு முறை மட்டும் வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை இனி இரண்டு நாட்களுக்கு ஒரு முறை என வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மத்திய வறட்சி நிவாரண ஆய்வுக் குழு, திருத்தணி நகராட்சியின் குடிநீர்ப் பற்றாக்குறை நிலைமையைக் கடந்த 29-9-2001 அன்று ஆய்வு செய்தது. அதனடிப்படையில் குடிநீர்ப் பற்றாக்குறைக்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது திருத்தணி நகராட்சிக்கு 3 நாளைக்கு ஒருமுறை போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

**107—**

### சுகாதாரக் கட்டுப்பாடு

**வினா எண் 72285—திரு. து. நெப்போலியன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வில்லிவாக்கம் தொகுதி, பாடிகுப்பம் கிராமத்திலுள்ள அனைத்துக் கழிவுநீர்களும் அண்ணா தெருவிலுள்ள திறந்தவெளி கழிவுநீர் கால்வாய்க்கு வருவதால் ஏற்படும் துர்நாற்றத்தையும், அதனால் மக்கள் மலேரியா போன்ற வியாதியினால் அவதிப்படுவதையும் அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் தொகுதி, பாடிகுப்பம் கிராமத்திலுள்ள அனைத்துக் கழிவுநீர்களும் அண்ணா தெருவிலுள்ள திறந்தவெளிக் கழிவுநீர்க் கால்வாய்க்கு வருவதால் ஏற்படும் துர்நாற்றத்தையும், அதனால் மக்கள் மலேரியா போன்ற வியாதியால் அவதிப்படுவதைத் தடுக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான கொசு புகை மருந்தும், கொசுப்புழு ஒழிப்பு மருந்தும், தெளிப்புப் பணி செய்யப்பட்டு வருகிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாத பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க கன்சல்டன்ட் நியமனம் செய்து மதிப்பீடு தயாா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.*

[2006 ஜனவரி 27

இன்னும் இரண்டு மாதங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**108—**

**மணி மண்டபம்**

**வினா எண் 72498—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேவநேயப் பாவாணர் நினைவு மணி மண்டபம், அவர் பிறந்த ஊராகிய கோமதி முத்துபுரத்தில் இந்த ஆண்டு அமைக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தேவநேயப் பாவாணர் நினைவு மணி மண்டபம் அவர் பிறந்த ஊராகிய கோமதி முத்துபுரத்தில் இந்த ஆணடு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**109—**

**ஓவியம்**

**வினா எண் 72825—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசாணை எண் 141, நாள் 5-8-1998, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்படி தனியார் வீட்டுச் சுவர்களில் எழுதப்படும் விளம்பரங்களுக்கும் துணி banner மற்றும் விளம்பரப் பலகைக்கும் விளம்பர வரி விதிக்கப்படுவதால் சுமார் மூன்றரை இலட்சம் ஓவியக் குடும்பங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விளம்பர வரி விகிதங்கள் நியாயமானவை, எனவே, இவ்வரியினால் ஓவியக் குடும்பங்கள் பாதிக்கப்படவில்லை.



2006 ஜனவரி 27]

**110—**

**சுரங்கப்பாதை பாலம் கட்டுதல்**

**வினா எண் 73160—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், காக்ரின்பேசின் சாலை இருப்புப் பாதையின் மேல் மேம்பாலமும், கண்ணன் தெரு, கொருக்குப்பேட்டை இருப்புப் பாதையில் சுரங்கப்பாதை பாலமும் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், காக்ரின்பேசின் சாலை இருப்புப் பாதையின் மேல் மேம்பாலம் அமைக்க ரூ.10.80 கோடிக்கு (சென்னை மாநகராட்சிப் பகுதிக்கு மட்டும்) மதிப்பீடுகள் மற்றும் வரைப்படம் தயார் செய்து இரயில்வே துறையினர் ஒப்புதலுக்காகவும், இத்திட்டத்தினை 2004-2005 ஆம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்தில் இடம்பெறச் செய்வதற்காகவும், இரயில்வே துறையினருக்கு 27-8-2004 அன்று அரசு (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக) கடிதம் அனுப்பியுள்ளது. இரயில்வே துறையினர் இரயில்வே பகுதிக்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்து சென்னை மாநகராட்சியின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளனர். அவர்களின் ஒப்புதல் பெற்றபின், இத்திட்டத்திற்கான மேல் நடவடிக்கை அனைத்தும், மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு 2005-2006 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கண்ணன் சாலை கொருக்குப்பேட்டை இருப்புப் பாதையில் சுரங்கப்பாதை கட்ட ரூ.4.30 கோடியில் (சென்னை மாநகராட்சிப் பகுதிக்கு மட்டும்) மதிப்பீடுகள் மற்றும் வரைபடம் தயார் செய்து, இரயில்வே

துறையினர் ஒப்புதலுக்காகவும், இத்திட்டத்தினை 2004-2005 ஆம் ஆண்டு இரயில்வே திட்டத்தில் இடம்பெறச் செய்வதற்காகவும், இரயில்வே துறையினருக்கு 27-8-2004 அன்று அரசு (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக) கடிதம் அனுப்பியுள்ளது. இரயில்வே துறையினர் இரயில்வே பகுதிக்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்து சென்னை மாநகராட்சியின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளனர். அவ்வரைபடத்தில் அங்கு அமைந்துள்ள சாலைகளின் அளவுகளுக்கேற்ப இரயில்வே வரைபடத்தில் திருத்தங்கள் செய்து இத்திட்டத்தினை ஏற்கக் கோரி, இரயில்வே துறையினருக்கு 16-3-2005 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் ஒப்புதல் பெறறபின் இத்திட்டத்திற்கான மேல் நடவடிக்கை அனைத்தும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு 2005-2006 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**111—**

## நினைவிடம்

**வினா எண் 73166—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினா கடற்கரை சாலையில் பிரசிடென்சி கலைக் கல்லூரி எதிரில் மீன் காட்சியகம் அருகே 1919, 1920 ஆம் ஆண்டுகளில் தேசப் பிதா காந்தியடிகள் பொதுக் கூட்ட மேடை அமைத்து உரையாற்றிய "திலகர் திடல்" இடத்தில் கல்வெட்டு வைத்து, நினைவிடம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை, மெரினா கடற்கரை பகுதியில், பிரசிடென்சி கல்லூரி எதிரில் திலகர் கட்டம் அமைப்பதற்கு கோரிக்கை பெறப்பட்டது. மெரினா கடற்கரையை அழகுபடுத்தும்பொருட்டு, மாண்புமிகு



பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், குழுவின் கூட்டம் (Chennai Metropolitan Beach Committee) 22-2-2005 அன்று நடைபெற்றபொழுது கீழ்க்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சென்னை, மெரினா கடற்கரைப் பகுதியை எந்தவிதமான கட்டடங்களும் இல்லாது பராமரிக்க அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. அதன் அடிப்படையில் கடற்கரைப் பகுதியில் ஏற்கெனவே இருந்த சீரணி அரங்கம் போன்ற கட்டுமானங்களும் அகற்றப்பட்டன. மேலும், மெரினா கடற்கரை சர்வதேச அளவில் பண்டைய பொலிவுடன் அழகுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கைச் சூழலுடன், பொதுமக்கள் கண்டுகளிக்கும் வண்ணம் கடற்கரை மணல்பகுதி திறந்தவெளியாக பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களால் சென்னை மெரினா கடற்கரை சாலையில் பிரசிடென்சி கலைக் கல்லூரி எதிரில் மீன் காட்சியகம் அருகே 1919, 1920 ஆம் ஆண்டுகளில் தேசப் பிதா காந்தியடிகள் பொதுக் கூட்ட மேடை அமைத்து உரையாற்றிய "திலகர் திடல்" இடத்தில் கல்வெட்டு வைத்து நினைவிடம் உருவாக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**112—**

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 85233—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 10-வது வட்டம், பாரதி நகர் திட்டப்பகுதியில் பூங்கா, விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், கொருக்குப்பேட்டை, பாரதி நகர் திட்டப்பகுதி சென்னை மாநகராட்சி 11-வது வட்டப்பகுதியில் அமைந்துள்ளது. இத்திட்டப்பகுதியில் சுமார் 6½ ஏக்கர் நிலம் திறந்தவெளியாக உள்ளது. இப்பகுதியில் பூங்கா மற்றும் விளையாட்டுத்

திடல், ரூபாய் நூற்று இருபது இலட்சம் செலவில் அமைப்பதற்கு மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சுற்றுச் சுவர் அமைத்தல், நடைபாதைகள் அமைத்தல், கவின்மிகு பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைத்தல், மின் விளக்குகள் பொருத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இப்பணி நடைபெறும் இடம் பக்கிங்காம் கால்வாய்க்கு அருகில் உள்ளதாலும், தாழ்வான நிலப்பரப்பாக உள்ளதாலும் இதனை உயர்த்தி அமைக்கும் பொருட்டு கட்டட இடிபாடுகள் மற்றும் மண் கற்களை மாநகராட்சி வாகனங்களைக் கொண்டு சேகரித்து கொட்டப்பட்டு, உயர்த்தி அமைக்கும் பணி தற்பொழுது நடைபெற்றுவருகிறது. இப்பணி நான்கு மாதங்களில் செயல்படுத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**113—**

## விளையாட்டு அரங்கை நவீனப்படுத்துதல்

**வினா எண் 16380—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை நகரிலுள்ள விளையாட்டு அரங்கை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகரில் உள்ள திறந்தவெளி விளையாட்டரங்கம் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**114—**

## பயிற்சிக் கூடம்

**வினா எண் 68149—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, குன்னிப்பாளையத்தில் இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, குன்னிப்பாளையத்தில் இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**115—**

## விளையாட்டு மேம்பாடு

**வினா எண் 68150—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பள்ளியில் படிக்கும்பொழுதே, மாணவர்கள் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

பள்ளியில் படிக்கும்பொழுதே, மாணவர்கள் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கு உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டம், விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள் ஆகிய திட்டங்களின்மூலம் அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

116—

### விளையாட்டு அரங்கம்

**வினா எண் 71425—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியத்தில், பாஞ்சாலம் ஊராட்சியில் விளையாட்டு அரங்கம் கட்டும் பணி துவங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியத்தில், பாஞ்சாலம் ஊராட்சியில் விளையாட்டு அரங்கம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.



## இணைப்பு - II

*(1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள்

### பட்டியல்-7*

1—

### கள் இறக்குவதற்கு உரிமம் வழங்குதல்

**வினா எண் 69841—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனை மரத் தொழிலாளர்கள் கள் இறக்குவதற்கு உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசு கொள்கையின்படி கள் விற்பனைக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. முந்தைய ஆண்டுகளில் கள் விற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு அதில் குளோரல் ஹைட்ரேடு போன்ற பொருட்களின் கலப்படத்தால், உபயோகித்தவர்களின் உடல் நலத்திற்குக் கேடு விளைவித்ததால் கள் இறக்க கொடுக்கப்பட்டிருந்த உரிமம் திரும்பப் பெறப்பட்டது. பனை மரத் தொழிலாளர்களுக்கு கள் இறக்குவதற்கு உரிமம் வழங்குவது குறித்து செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

2—

### கண்காணிப்புக் குழு

**வினா எண் 76077—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைளிப்பாரா—

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் [illegible]ப்புகல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதி, அரசு மதுபானக் கடைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதைத் தடுக்க, கண்காணிப்புக் குழு ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதி, டாஸ்மாக் மதுபானக் கடைகளில் மதுவகைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வது அல்லது வேறு மாநில மதுபானங்களை விற்பனை செய்வது போன்ற செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. டாஸ்மாக் தலைமை அலுவலக அளவில் பறக்கும் படையும், சென்னை முதுநிலை மண்டல மேலாளர் அலுவலக அளவிலும் மற்றும் மாவட்ட மேலாளர் அளவிலும் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு, மதுபானக் கடைகளின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதால், இதற்கென, தனியாகக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

**3—**

## கருவூலத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 39798—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி அரசுக் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) சீர்காழி சார்நிலைக் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்ட சுமாராக 2400 சதுர அடி நிலம் தேவைப்படுகிறது. நில மதிப்பைத்



தவிர்த்து கட்டடம் கட்ட தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.15.20 இலட்சம் ஆகும். மேற்படி சார்நிலைக் கருவூலத்தை தனியே புதிதாக நிர்மாணிக்க நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை. மேலும், சீர்காழி நகராட்சி எல்லைக்குள் புதிய சார்நிலைக் கருவூலம் கட்டுவதற்கேற்ற அரசுப் புறம்போக்கு நிலம் ஏதுமில்லாத காரணத்தால், வட்டாட்சியர் அலுவலகத்தை வேறு கட்டடத்திற்கு மாற்றும்போது மேற்படி கருவூலத்தையும் சேர்த்து மாற்றிக் கொள்ளலாம். அதுவரை தற்காலிகமாக தற்போது இயங்கிவரும் கட்டடத்திலேயே இயங்கலாம் என்பதால் சீர்காழி சார்நிலைக் கருவூலத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டத் தேவையில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**4—**

## ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்தல்

**வினா எண் 65664—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி நகரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி நகாத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் நிதிநிலைக்கேற்ப தக்க சமயத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**5—**

## நீதிபதிகளுக்கு வாகனங்கள் வழங்குதல்

**வினா எண் 75484—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட உரிமையியல் நீதிபதிகளுக்கு வாகனங்கள் (கார்) வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

மாவட்ட உரிமையியல் நீதிபதிகளுக்கு என்று தனியாக வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால், ஒரு பகுதியில் 5 நீதிபதிகளுக்கு மேல இருந்தால், அவர்கள் இல்லத்திலிருந்து நீதிமன்றம் சென்று திரும்புவதற்கு வசதியாக பொதுவான வாகனம் ஒன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6—**

## ஆலோசனைக் குழுக்கள் நியமித்தல்

**வினா எண் 60763—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நஷ்டத்தில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த அப்பகுதி சட்டமன்ற உறுப்பினரைத் தலைவராகக் கொண்டு ஆலோசனைக் குழு நியமிக்கும் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**7—**

## பாதுகாப்புக் கதவு அமைத்தல்

**வினா எண் 66208—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாமக்கல் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதுபோன்று மற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்;**

(அ) நாமக்கல் மாவட்டத்திலுள்ள 168 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 111 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்புக் கதவுடன்கூடிய பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மீதமுள்ள 27 வங்கிகளில் (168-111 = 27), இவ்வங்கிகளின் நிதிநிலை மேம்படும்போது, பாதுகாப்புக் கதவுகளுடன்கூடிய பாதுகாப்பு அறை கட்டப்படும்.

**8—**

## பாதுகாப்பு ஒலிப்பான்

**வினா எண் 67646—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் இயங்கிவரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அனைத்திலும் பாதுகாப்பு ஒலிப்பான் பொருத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) அவை உரிய காலங்களில் 'சீர்காப்பு' மேற்கொள்ளப்படுகின்றனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மண்டலத்தில் செயல்படும் 161 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 120 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மட்டும் 'பாதுகாப்பு ஒலிப்பான்' பொருத்தப்பட்டுள்ளன.

(ஆ) பாதுகாப்பு ஒலிப்பான் பொருத்தப்பட்டுள்ள 120 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், 119 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், 'சீர்காப்பு' (Annual Servicing) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**9—**

## கல்வித் திட்ட முகாம்கள்

**வினா எண் 67650—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் உறுப்பினர் கல்வித் திட்ட முகாம்கள் எத்தனை நடத்தப்பெற்றன?

(ஆ) இவ்வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவினம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2002-2003, 2003-2004, 2004-2005 ஆம் ஆண்டுகளில் பின்வரும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களுக்குக் கல்வித் திட்ட முகாம்கள் நடைபெற்றுள்ளன. துணைப் பதிவாளர்களின் சரக வாரியான விவரம் கீழே தரப்பட்டுள்ளது:



| | | 2002-03 | | 2003-04 | | 2004-05 | |
|---|---|---|---|---|---|---|---|
| எண் | சரகத்தின் பெயர் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை |
| 1 | காஞ்சிபுரம் | 59 | 6,535 | 52 | 5,185 | 11 | 5,075 |
| 2 | செங்கல்பட்டு | 19 | 2,240 | 9 | 1,060 | 11 | 1,010 |
| 3 | மதுராந்தகம் | 15 | 1,605 | 7 | 725 | 6 | 470 |
| | கூடுதல் | 93 | 10,380 | 68 | 6,970 | 58 | 6,555 |

(ஆ) உறுப்பினர் கல்வித் திட்ட முகாம்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் மாவட்டந்தோறும் அந்தந்த மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த, அரசு நிதியுதவி ஏதும் வழங்குவதில்லை. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இதற்கான செலவுகளை மேற்கொண்டு வருகிறது.

**10—**

## எண்ணெய், மாவு மற்றும் பருப்பு ஆலைகள்

**வினா எண் 67680—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் எண்ணெய் ஆலைகள், மாவு ஆலைகள் மற்றும் பருப்பு ஆலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

[2006 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் எண்ணெய் ஆலைகள், மாவு ஆலைகள் மற்றும் பருப்பு ஆலைகள் ஏதும் செயற்படவில்லை.

**11—**

## வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துதல்

**வினா எண் 69108—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி வேட்டைக்காரன்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேட்டைக்காரன்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் 111 நபர்கள் ஆவர்.

**12—**

## சீர்திருத்தப் பள்ளிகள்

**வினா எண் 80400—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப்பள்ளிகள் உள்ளன?

(ஆ) அதில் மொத்தம் எவ்வளவு பேர் உள்ளனர்?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தவறிழைத்த சிறுவர்களுக்கான (Juveniles in conflict with law) சிறப்பில்லம் வேலூரிலும், சிறுமியருக்குச் சிறப்பு இல்லம் சென்னையிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தவறிழைத்த சிறுவர் சிறுமிகளை இவ்வில்லங்களில் சேர்க்க விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (ஆ) சிறுவருக்கான சிறப்பு இல்லம், வேலூர் | - | 60 |
| அரசினர் சிறுமியருக்கான சிறப்பு இல்லம், சென்னை-10 | - | 6 |

**13—**

## குழந்தைகள் நலக் குழுமங்கள்

**வினா எண் 84492—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் குழந்தைகள் நலக் குழுமங்கள் மற்றும் நீதிக் குழுமங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மாநிலம் முழுவதும் 18 குழந்தைகள் நலக் குழுக்களும் 8 இளைஞர் நீதிக் குழுமங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை தேவையின் அடிப்படையிலும் நிறுவனங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அமைந்துள்ளனவோ, அதன் அடிப்படையிலும், மேலும் குழுக்கள்/குழுமங்களின் முன்னர் ஆஜர்படுத்தப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சில மாவட்டங்களிலிருந்து இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தைகள நலக் குழுக்களின் முன்னர் ஆஜர்படுத்தப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழந்தைகள் நலக் குழுவும் இளைஞர் நீதிக் குழுமமும் அமைக்கும் தேவை தற்போது ஏற்படவில்லை.

[2006 ஜனவரி 27

14—

குடும்ப நல மருத்துவ முகாம்

**வினா எண் 56199—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 2003-2004 ஆம் நிதியாண்டில் 'குடும்ப நல மருத்துவ முகாம்' எத்தனை நடத்தப்பட்டது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 2003-2004 ஆம் நிதியாண்டில், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 17-10-2003 அன்று மருத்துவ முகாம் ஒன்று மட்டும் நடத்தப்பட்டது.

(ஆ) அன்று நடைபெற்ற மருத்துவ முகாமில் 9 குடும்ப நலப் பெண் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

15—

போலியோ மற்றும் மலேரியா நோய்களை ஒழித்தல்

**வினா எண் 59013—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள வால்பாறை மலைப் பகுதிகளில் போலியோ மற்றும் மலேரியா நோய்களைக் கட்டுப்படுத்தவும், ஒழிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1995 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு முழுவதும் போலியோ ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திலும், வால்பாறை பகுதி உட்பட எல்லா நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் இந்த நடவடிக்கை அமல்படுத்தப்பட்டு வருகிறது. போலியோ நோயினால் வால்பாறை பகுதியில் கடந்த 5 ஆண்டுகளில் எந்தக் குழந்தையும் பாதிக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் சுமார் 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இதன் பயனாக தமிழ்நாட்டில் போலியோ நோய் முற்றிலுமாக கட்டுப்படுத்தப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் ஒரு சில ஆண்டுகள் முகாம் நடத்தப்படுவதன்மூலம் போலியோ நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிடும்.

மேலும், மலேரியா நோய்க்கு இப்பகுதியில் காய்ச்சல் உள்ளவர்களுக்கு இரத்தத் தடவல்கள் சேகரித்து ஆய்வகத்திற்கு அனுப்பி அங்கு மலேரியா நோய் உள்ளதா எனப பரிசோதனை செய்யப்படுகிறது. காய்ச்சல் கண்டவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும்போதும் இரத்தத் தடவல்கள் சேகரிக்கப்பட்டு மலேரியா நோய் உள்ளதா என ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்படுகிறது. தற்போது வால்பாறை பகுதியில் யாருக்கும் மலேரியா நோய் இல்லை. இரத்தத் தடவல் சேகரிப்புப் பணி இப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும், இப்பகுதியில் மலேரியா நோய் வராமல் இருக்க, அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

16—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 59228—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, பாண்டியன் நகரம், தெற்கோட்டு வாய்க்கால் பகுதியில் குடியிருக்கும் பழங்குடியினர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி தென்கோட்டு வாய்க்கால் பகுதி கோட்டூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். இப்பகுதி க.ச.1319 வண்டிப் பாதை, புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி இடம் போக்குவரத்துக்கு இடையூறான பகுதியாக உள்ளதால், அரசு விதிகளின்படி. பட்டா வழங்க இயலாது. எனவே, கோட்டூர் கிராமம் க.ச. 1368/ஏ1 சி1 நிலமாற்றம் செய்து மேற்படி வாய்க்கால் பகுதியில் குடியிருக்கும் பழங்குடியினருக்குத் தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுளளார்.

**17—**

### வணிக வளாகம் கட்டுதல்

**வினா எண் 61960—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தாட்கோ மூலமாக வணிக வளாகம் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை எண் 32, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 15-3-1995 மற்றும் அரசு ஆணை எண் 91, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறை, நாள் 20-4-1995-ன்படி மொத்தம் 810 கடைகள் ரூ.405 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கி, இதில்



மொத்தம் 713 கடைகள் கட்டப்பட்டன. பணித் தளங்கள் இல்லாததால் 97 கடைகள் கட்டப்படாமல கைவிடப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட 713 கடைகளில் 467 கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. 49 கடைகள் பேரூராட்சிக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**18—**

### விட்டுமனைப் பட்டா

**வினா எண் 63402—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், கொடுங்கியம் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் இடம் வேண்டி விண்ணப்பித்துள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இடம் வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், கொடிங்கியம் கிராமத்தில் க.ச. 222/3பி காலையில் 89 பட்டாக்களும், க.ச. 198/2ஏ காலையில் 87 பட்டாக்களும், க.ச. 221/சி2 காலையில் 144 பட்டாக்களும், ஆகமொத்தம் 320 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது கொடுங்கியம் கிராமத்தில் வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி மனுக்கள ஏதும் நிலுவையில் இல்லை. வீட்டுமனைப் பட்டா கோரி மனுக்கள் வரப்பெற்றால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**19—**

### சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல்

**வினா எண் 63775—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) சீர்காழி தொகுதி வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள மாணவர் மற்றும் மாணவியர் ஆதிதிராவிடர் விடுதிக்குச் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸவரன் கோயிலில் உள்ள மாணவர் மற்றும மாணவியர் ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு அரசாணை (நிலை) எண் 135, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 18-8-2005-ல் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**20—**

**கான்க்ரீட் விடுகள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 66031—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் காலனி கான்க்ரீட் வீடுகளைப பழுதுபார்த்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் உள்ள சீர்காழி ஒன்றியத்தில் 2004-2005 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய் I திட்டத்தின்கீழ் ரூ.3.15 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் காலனியில் 21 கான்க்ரீட் வீடுகளுக்குப் பழுதுநீக்கம் செய்யப்பட்டுள்ளது. கொள்ளிடம் ஒன்றியத்தில் 2005-2006 ஆம் ஆண்டிற்கு எஸ்.ஜி.ஆர்.ஒய் I திட்டத்தின்கீழ் ரூ.11.40 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் காலனியில் 114 கான்க்ரீட் வீடுகளுக்குப் பழுதுநீக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.



2006 ஜனவரி 27]

**21—**

**தொகுப்பு விடுகள் வழங்குதல்**

**வினா எண் 67592—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் 2003-2004 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் மொத்தம் 113 தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**22—**

**சிறு பேருந்து (Mini Bus) இயக்குதல்**

**வினா எண் 46081—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் சிறு பேருந்துகளை (Mini Bus) இயக்க பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில் மினி பேருந்துகள் இயக்கிட அனுமதி கோரி எந்தவிதமான விண்ணப்பங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இதுவரை பெறப்படவில்லை. வால்பாறை

[2006 ஜனவரி 27

மலைப் பகுதியில் மினி பேருந்து அனுமதி கேட்டு மனுக்கள் பெறப்படின், ஏற்கெனவே ஒதுக்கீடுகள் முடிவுற்றதால், கூடுதல் ஒதுக்கீடுகள் வழங்கும்பட்சத்தில் அம்மனுக்கள் பரிசீலிக்கப்படும்.

**23—**

## பேருந்து வழித்தடத்தை நீட்டித்தல்

**வினா எண் 51991—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியிலிருந்து கொண்டல் வரை செல்கின்ற சிறு பேருந்தை ஆதமங்கலம் வரை (1 கி.மீ.) நீட்டித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி முதல் கொண்டல் வரை செல்லும் மினிப் பேருந்தை மேலும் 1 கி.மீ. தூரத்தில் உள்ள ஆதமங்கலம் வரை தடம் நீட்டித்து இயக்க அனுமதி வழங்குவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள நாட்டுடைமை பகுதி திட்டத்தில் (Area Scheme of Nationalisation) வழிகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

**24—**

## சோடியம் விளக்கு அமைத்தல்

**வினா எண் 52051—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள நீராறு அணைப் பகுதியில் சோடியம் தெருவிளக்கு போட அரசு ஆவன செய்யுமா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வால்பாறையில் உள்ள நீராறு அணைப் பகுதியில் தற்போது 19 (1 x 40 வாட்ஸ்) குழாய் விளக்குகள் உபயோகத்தில் உள்ளன. நீராறு அணைப் பகுதியில் புதிய சோடியம் தெருவிளக்குகள் வேண்டியோ அல்லது உபயோகத்தில் உள்ள குழல் விளக்குகளை சோடியம் விளக்குகளாக மாற்றம் செய்ய வேண்டியோ சம்பந்தப்பட்ட நகராட்சியிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. வால்பாறை நகராட்சி செலுத்த வேண்டிய மின் கட்டண நிலுவை ஏதும் இல்லை. ஆகையால், நீராறு அணைப் பகுதிக்கு சோடியம் விளக்குகள் அமைக்க வேண்டி, அப்பணிக்கான செலவைச் செலுத்தும் சம்மதத்துடன் விண்ணப்பம் பெறப்பட்டால் ஆவன செய்யப்படும்.

**25—**

## இலவசப் பேருந்துப் பயணச் சீட்டு

**வினா எண் 52096—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள இருதய மேல்நிலைப் பள்ளி +1, +2 மாணவிகளுக்கு இலவசப் பேருந்து பயணச் சீட்டு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 135, போக்குவரத்துத் துறை, நாள் 20-5-2004-இன்படி அரசு அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் விடுமுறை நாட்கள் உட்பட, அனைத்து நாட்களுக்கும் இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

26—

## மின் வசதி

**வினா எண் 53024—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி, பெரம்பூர் நடுநிலைப் பள்ளிக்கு மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மறறும் (ஆ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி, பெரம்பூர் நடுநிலைப் பள்ளிக்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் வாரிய விதிகளின்படி உடன் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

## துணை மின் நிலையம் துவங்குதல்

**வினா எண் 53486—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாககளுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் நடப்பு நிதியாண்டில் எத்தனை துணை மின் நிலையங்கள் துவங்கப்பட உள்ளன?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நடப்பு நிதியாண்டில், (2004-2005) ஈரோடு மாவட்டத்தில் இரண்டு துணை மின் நிலையங்களும், நாமக்கல் மாவட்டத்தில் ஒரு





துணை மின் நிலையமும் மற்றும் சேலம் மாவட்டத்தில் நான்கு துணை மின் நிலையங்களும் நிறுவிட ஏற்பாடு செய்யப்பட்டது. அவற்றில் ஈரோடு மாவட்டத்தில் மேட்டுக்கடை 110/22 கி.வோ. துணை மின் நிலையம் 3-6-2004 அன்று இயக்கி வைககப்பட்டது.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (2004-2005-ல்) நிறுவப்பட உள்ள துணை மின் நிலையங்களின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் (1) | மாவட்டத்தின் பெயர் (2) | துணை மின் நிலையத்தின் பெயர் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) (4) | தற்போதைய நிலை (5) |
|---|---|---|---|---|
| அ. | ஈரோடு | நடுப்பாளையம் 110/11 கி.வோ. | 375.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| ஆ. | நாமக்கல் | புதன் சந்தை 230/110 கி.வோ. | 2610.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| இ. | சேலம் | (1) அஸ்தம்பட்டி 110/22 கி.வோ. | 1073.12 | நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | | (2) கந்தம்பட்டி 110/22 கி.வோ. | 785.79 | நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | | (3) பூலாம்பட்டி 110/22 கி.வோ. | 425.45 | பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. |
| | | (4) மேட்டூர் டவுன் 110/33-11 கி.வோ. | 597.24 | பணிகள் துவங்கப்பட உள்ளன. |

[2006 ஜனவரி 27

**28—**

## பேருந்து கட்டுமானப் பிரிவு

**வினா எண் 53868—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் பேருந்து கட்டுமானப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையினை மையமாகக் கொண்டு இயங்கும் பேருந்துகளின் கட்டுமானப் பணிகள் சங்ககிரி பணிமனையில் மேற்கொள்ளப்பட்டு வருவதால், எடப்பாடி பணிமனையில் பேருந்து கட்டுமானப் பிரிவு ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

**29—**

## மின் திட்டங்களுக்கு மானியம்

**வினா எண் 54804—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரபுசாரா மின் திட்டங்களில் மின்சாரம் உற்பத்திச் செய்ய முன்வரும் தனியார் துறை மின் திட்டங்களுக்கு அரசு மானியம் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சகம் மரபுசாரா எரிசக்தியின் பயன்பாட்டை மேம்படுத்த தனியார் தொழில் முனைவோருக்கு பின்வரும் மானிய உதவிகளைச் செய்து வருகிறது:



2006 ஜனவரி 27]

| வரிசை எண் | மின் உற்பத்தி வகை | மொத்த முதலீடு (ரூ. இலட்சத்தில்) | அரசு மானியம் |
|---|---|---|---|
| 1. | தாவர எரிசக்தி இயந்திரங்கள் வழி | | |
| (அ) | டீசல் மற்றும் புரொடியூசர் கேஸ் பயன்படுத்தி 1.00 கி.வா. திறன். | 24.00 | ரூ. 1.50 இலட்சம் |
| (ஆ) | 100% புரொடியூசர் கேஸ் பயன்படுத்தி 1.00 கி.வா. திறன். | 30.00 | ரூ. 15.0 இலட்சம் |
| 2. | தாவர திடப் பொருட்கள்மூலம் | நீராவியின் அழுத்தம் வாரியாக | |
| (அ) | நேரடியாக கொதிகலன்களில் எரித்து மற்றும் கோ-ஜெனரேஷன் முறை (சொந்த மானியத்தையும் சேர்த்து) | 60 பாருக்கு மேல்<br>80 பாருக்கு மேல் | வட்டி 2% மானியம்<br>வட்டி 3% மானியம் |
| (ஆ) | அட்மாஸ்பியர் கேஸிபிகேஷன் முறை | — | வட்டி 2% மானியம் |
| (இ) | 100 சதவீதம் புரொடியூசர் கேஸ் என்ஜினை பயன்படுத்தி மெகாவாட் அளவு | 1 மெகாவாட் திறன் | ரூ. 1.00 கோடி |
| (ஈ) | முன்னேறிய பயோமாஸ் கேஸிபிகேஷன் முறை | 1 மெகாவாட் திறன் | ரூ. 1.00 கோடி |
| 3. | கழிவு மற்றும் குப்பைகள் மூலம் தொழிற்சாலை கழிவுகளிலிருந்து | — | கடனின் வட்டி விகிதம் 6% ஆக குறைத்து செலுத்துவதற்கு தேவையான வட்டி மானியம் |

மேலும், மத்திய அரசு, காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு முதல் வருடத்தில் 80 சதவீதம் தேய்மானத்திற்காகச் சலுகை, சுங்கவரிச் சலுகை, மற்றும் 5 வருட வருமான வரிவிலக்கு, 75 சதவீதம் 'இரடா' (IREDA) மூலம் கடன் வசதி போன்ற சலுகைகளை வழங்கி வருகின்றது.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், உயர் அழுத்த சக்தி தொழிற்சாலை உபயோகிப்பாளருக்கு மின்சக்தியை அனுப்புவதற்கும் மற்றும் சேமித்து, தேவையான நேரத்தில் பயன்படுத்துவதற்கும் வசதி செய்து கொடுக்கிறது.

[2006 ஜனவரி 27

மத்திய அரசு மானியம் வழங்காத கீழ்க்காணும் திட்டங்களுக்கு மட்டும், மாநில அரசு மானியம் வழங்கி வருகிறது:

(அ) மனிதக் கழிவிலிருந்து பயோகேஸ் தயாரிக்கும் கலன அமைத்தல்

(ஆ) சூரிய சக்தி கொண்டு நீர் சூடேற்றும் சாதனம் அமைத்தல்

(இ) சூரிய சக்தி கொண்டு பொருட்களை (சூடான காற்று) மிதமாக சூடேற்றும் சாதனம் அமைத்தல்.

**30—**

**மின் வினியோகம்**

**வினா எண் 55085—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம ஊராட்சி, பெருமங்கலம் ரெட்டை போஸடிலிருந்து, வடக்குவெளி வரையில் மின்கம்பம் நட்டு, மின் வினியோகம செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, பெருமங்கலம் ரெட்டை போஸ்டிலிருந்து, வடக்குவெளி வரையில் புதிய தெரு விளக்குகள் கோரி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிலிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. ஊரக வளர்ச்சி (பி3) துறை, அரசாணை எண் 8, நாள் 12-1-2004-ன்படி புதிய தெரு விளக்கு அமைக்கும் திட்டத்திலும் மேற்குறிப்பிட்ட பகுதிகள் இடம் பெறவில்லை. மின் கட்டண பாக்கி மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளைச் செலுத்தி, புதிய தெரு விளக்குகள் அமைக்க ஆகும் செலவைச் செலுத்த இசைவு தெரிவித்து பெருமங்கலம் ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால், அதற்கான செலவைச் செலுத்தியபின், விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது சீர்காழி தொகுதியில் 10,161 தெருவிளக்குகளும், பெருமங்கலம் ஊராட்சியில் 74 தெருவிளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன.



2006 ஜனவரி 27]

**31—**

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா எண் 55086—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து, மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, பெரிய மதகிலிருந்து வழுதலைக்குடி வரை மின் கம்பம் நட்டு, தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, பெரிய மதகிலிருந்து வழுதலைக்குடி வரை, புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும பெறப்படவில்லை. மேலும், இவ்வாண்டு அரசு தெரு விளக்குகள் திட்டத்திலும் மேற்கண்ட ஊராட்சி இடம் பெறவில்லை. புதிய தெரு விளக்குகள் வேண்டி திருமுல்லைவாசல் ஊராட்சியிடமிருந்து மின் பாக்கியில்லா சான்றிதழ் மற்றும் மின் நீட்டிப்புப் பணிக்கு ஆகும் முழுச் செலவினைச் செலுத்தும் சம்மதத்துடன் விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**32—**

**மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 55087—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புத்தூர் வாய்க்கால்கரை தெருவில் மின் கம்பம் நட்டு, மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட இடத்தில தெரு விளக்குகள் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. கீழக்கண்ட அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தெருவிளக்கு அமைக்கும் திட்டங்களிலும், மேற்குறிப்பிட்ட இடத்தில் தெரு விளக்கு அமைக்கும்பணி சேர்க்கப்படவில்லை.*

*(i) ஊரக வளர்ச்சி (பி3) துறை, அரசாணை எண் 8, நாள் 12-1-2004 மற்றும்*

*(ii) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, அரசாணை (2டி), எண். 13, நாள் 20-2-2004.*

*(2) அரசின் தெரு விளக்கு அமைக்கும் திட்டங்களில் மேற்படி இடம் உட்படாததால், அவ்விடத்தில் தெரு விளக்குகள் அமைக்க ஆகும் மொத்தச் செலவையும் தொடர்புடைய ஊராட்சி அமைப்பே ஏற்க வேண்டும்.*

*(3) மின் கட்டண பாக்கி மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளைச் செலுத்தி, இந்தப் பணிக்கான செலவையும் செலுத்த இசைவு தெரிவித்து, உள்ளாட்சியிலிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால், பணிக்கான செலவைச் செலுத்தியபின், விளக்குகள் அமைத்துத் தர ஆவன செய்யப்படும்.*

**33—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 55089—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கூத்தியம்பேட்டை ஊராட்சி, கீழத் தெருவிலிருந்து மேலத் தெரு வரை, மின் விளககுக் கம்பம் நட்டு, மின் விளக்கு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கூத்தியம்பேட்டை ஊராட்சி, கீழத் தெருவிலிருந்து மேலத் தெரு வரை, தெரு மின் விளக்குகள் வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், இவ்வாண்டு அரசு தெரு விளக்குகள் திட்டத்திலும் மேற்கண்ட பகுதி இடம்பெறவில்லை. புதிய தெரு விளக்குகள் வேண்டி கூத்தியம்பேட்டை ஊராட்சியிடமிருந்து விதிகளின்படி தேவையான கட்டணங்களைச் செலுத்தும் சம்மதத்துடன் விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் தமிழ்நாடு மின்வாரியததால் எடுக்கப்படும்.*

**34—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 55326—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம் ஊராட்சியில் உள்ள கொடக்காரமூலை பாலக்காட்டு தெருவில் மின் கமபங்கள் நட்டு தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம் ஊராட்சியில் உள்ள கொடக்காரமூலை பாலக்காட்டுத் தெருவிற்கு தெரு விளக்குகள் வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், இவ்வாண்டு அரசுத் தெரு விளக்குகள் திட்டத்திலும் மேற்கண்ட ஊராட்சி இடம் பெறவில்லை. புதிய தெரு விளக்குகள் வேண்டி பழையப் பாளையம்*

[2006 ஜனவரி 27

ஊராட்சியிடமிருந்து மின் பாக்கியில்லா சான்றிதழ் மற்றும் நீட்டிப்புப் பணிக்கு ஆகும் முழு செலவினைச் செலுத்தும் இசைவுடன் விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 55414— திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சி, கீழநிம்மேலியிலிருந்து மேலநிம்மேலி வரை, அகணி ஊராட்சி, நந்தியநல்லூர் ஆதிதிராவிடர் தெருவில் இருந்து பெரியார் திடல் வரை, விளந்திடசமுத்திரம் ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகர் ஆகிய இடங்களில் சாலையில் மின் கம்பங்கள் அமைத்து தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சி, கீழநிம்மேலியிலிருந்து மேலநிம்மேலி வரை, அகணி ஊராட்சி, நந்தியநல்லூர் ஆதிதிராவிடர் தெருவில் இருந்து பெரியார் திடல் வரை மற்றும் விளந்திடசமுத்திரம் ஊராட்சி, எம்.ஜி.ஆர் நகர் ஆகிய இடங்களில் புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் இவ்வாண்டு அரசுத் தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்திலும் மேற்கண்ட பகுதிகள் இடம் பெறவில்லை. புதிய தெரு விளக்குகள் வேண்டி சம்பந்தப்பட்ட ஊராட்சியிடமிருந்து மின் நீட்டிப்புப் பணிக்கு ஆகும் முழு செலவினைச் செலுத்தும் சம்மதக் கடிதம் மற்றும் மின் கட்டண பாக்கி ஏதும் நிலுவையில் இல்லாத நிலையில் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2006 ஜனவரி 27]

36—

## துணை மின் நிலையம் தொடங்குதல்

**வினா எண் 55634—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பில்லுக்குறிச்சியில் அமைக்கப்படவிருந்த துணை மின் நிலையம் எப்போது செயல்படத் தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி கிராமத்தின் அருகில் உள்ள பில்லுக்குறிச்சியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் நடப்பு நிதியாண்டில் (2004-2005) தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த நிதியாண்டிற்குள் (2005-2006) பணிகள் பூர்த்தியடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

37—

## குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 55920—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகை மாவட்டம், சீர்காழி தொகுதியில் பிரதம மந்திரியின் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (PMGY) பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கவும் மின்சார கட்டமைப்பை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதியில் பிரதம மந்திரியின் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (PMGY) பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி ஏற்படுத்தும் திட்டம் மற்றும் மின்சாரக் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை. மேலும், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்க விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். மின் கட்டமைப்பை மேம்படுத்துவது தொடர்பாக தேவைக்கேற்ப அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**38—**

### மின்மாற்றி

**வினா எண் 57003—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் துணை மின் பிரிவில் பெருவிளாவயல், கீழச்சேரி, போர்குடி, மங்களநாடு கிழககு மற்றும் திருவங்கூரில் புதிய மின்மாற்றிகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, பெருவிளாவயல், போர்குடி மற்றும் கீழச்சேரி கிராமங்களில் மின்சார வாரிய அதிகாரிகள் 15-10-2004 மற்றும் 19-7-2004 அன்று ஆய்வு செய்தபோது, மின்னழுத்தம் முறையே 220 வோல்ட், 225 வோல்ட், 220 வோல்ட் என்ற நிலையில் இருந்தது. திருவங்கூர் கிராமத்தில் 26-7-2004-ல் மின்னழுத்தம் அளவீடு செய்தபோது மும்முனை மின்னழுத்தம் 400 வோல்ட் என்ற நிலையில்



இருந்தது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் புதிய மின்மாற்றி அமைக்கப்பட அவசியம் எழவில்லை.

மங்களநாடு கிழக்கு இறுதிப் பகுதியில் 28-7-2004 அன்று ஆய்வு செய்தபோது ஒருமுனை மின்னழுத்தம் 187 வோல்ட் மற்றும் மும்முனை மின்னழுத்தம் 315 வோல்ட் என்று கண்டறியப்பட்டது. இதை மேம்படுத்த ரூ.1,90,400/- திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய மின்மாற்றி நிறுவி 31-3-2005-க்குள் இயக்கி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்புதிய மின்மாற்றி நிறுவிய பிறகு மங்களநாடு கிழக்கு இறுதிப் பகுதியில் மின்னழுத்தம் சீராகும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**39—**

### புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 57008—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் துணை மின் நிலையப பிரிவில் கண்ணமங்கலம் மற்றும் தீயத்தூரில் புதிய மின்மாற்றி அமைக்கும திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கண்ணமங்கலம் பகுதியில் புது மின்விநியோக மின்மாற்றி நிறுவப்பட்டு 7-5-2004 தேதியில் மின்னூட்டம் செய்யப்பட்டது. மேலும் 28-7-2004 அன்று ஆய்வு செய்தபொழுது ஒருமுனை மின்னழுத்தம் 225 வோல்ட் மற்றும் மும்முனை மின்னழுத்தம் 410 வோல்ட் என நல்ல நிலையில் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தீயத்தூர் பகுதியை 28-7-2004 அன்று 10-00 மணியளவில் ஆய்வு செய்தபொழுது ஒருமுனை மின்னழுத்தம் 230 வோல்ட் என்று அளவீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது மின்னழுத்தம் நல்ல நிலையில் உள்ளதால் புதிய மின்மாற்றி கண்ணமங்கலம் மற்றும் தீயத்தூர் பகுதிகளில் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**40—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 57012—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி. எடமணல் ஊராட்சியில் மேலப்பாளையம் முதல் கோட்டயமேடு வரையில் மற்றும் ஆமப்பள்ளம் தெருவில் தெரு விளக்கு ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, எடமணல் ஊராட்சியில் மேலப்பாளையம முதல் கோட்டயமேடு வரையில் தெரு விளக்குகள் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. ஊரக வளர்ச்சித் (பி3) துறை அரசாணை எண் 8, நாள் 12-1-2004 படி தெரு விளக்கு அமைகக்கும் திட்டத்திலும் மேற்படி பகுதி இடம் பெறவில்லை. ஆமப்பள்ளம் பகுதியைப் பொறுத்தமட்டில் 4 தெரு விளக்குகளும் 4-8-2004 அன்று அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி எடமணல் ஊராட்சியில் மின் கட்டண நிலுவை தற்போது ஏதும் இல்லை. ஆகையால், புதிய தெரு விளக்குகள் வேண்டி, அதற்காகும் செலவைச் செலுத்தும் சம்மதத்துடன் மேற்படி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு அதற்கான செலவைச் செலுத்தியபின் விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது சீர்காழி தொகுதியில் 10,161 தெரு விளக்குகளும், எடமணல் ஊராட்சியில் 195 தெரு விளக்குகளும் உபயோகத்தில் உள்ளன.*

**41—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 57016—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சி, குரவலூர் ஆதிதிராவிடர் கீழத் தெருவிற்கும் மற்றும் மேலநெப்பத்தூர் மேட்டுத் தெருவிற்கும் மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சி, குரவலூர ஆதிதிராவிடர் கீழத் தெருவிற்கும் மற்றும் மேலநெப்பத்தூர் மேட்டுத் தெருவிற்கும் நுகர்வோரே முழு செலவுத் தொகையையம் ஏறறுக் கொளளும் திட்டத்தின்கீழ் (DCW) 8 தெரு விளக்குகள் அமைககும பணிகள் முடிக்கப்பட்டு, 30-11-2004 அன்று ஒளிரவிடப்பட்டன. ஏற்கெனவே சீர்காழி தொகுதியில் 10,161 தெரு விளக்குகளும், நெப்பத்தூர் ஊராட்சியில் 108 தெரு விளக்குகளும் ஆதிதிராவிடர் கீழத்தெரு மற்றும் மேலநெப்பத்தூர் மேட்டுத் தெருவில் 18 தெரு விளக்குகளும் உபயோகத்தில் உள்ளன.*

**42—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 57030—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சி, தீவு கிராமத்தில் தெரு மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சி, தீவு கிராமத்தில் நுகர்வோர் முழு செலவுத் தொகையையும் ஏற்கும் (DCW) திட்டத்தின்கீழ் 9 தெரு விளக்குகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, 30-11-2004 அன்று ஒளிரவிடப்பட்டன. சீர்காழி தொகுதியில்*

10,161 தெரு விளக்குகளும், நெப்பத்தூர் ஊராட்சியில் 108 தெரு விளக்குகளும், தீவு கிராமத்தில் 20 தெரு விளக்குகளும் ஏற்கெனவே உபயோகத்தில் உள்ளன.

43—

## இலவச பஸ் பாஸ் வழங்குதல்

**வினா எண் 57323—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மாணவ/மாணவியர் எவ்வளவு பேருக்கு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டது?

(ஆ) இதற்கு அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 17,40,571 (பதினேழு இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று எழுபத்து ஒன்று) மாணவ/மாணவியருக்கு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்காக ரூ.109.34 கோடி அரசு நிதி, போக்குவரததுக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

44—

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 58694—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கோதண்டபுரத்திலிருந்து புளியங்கரை வரையுள்ள சாலையில் மின் கம்பம் நட்டு மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கோதண்டபுரத்திலிருந்து புளியங்கரை வரையுள்ள சாலையில் தெரு விளக்குகள் கோரி இந்த உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. ஊரக வளர்ச்சித் (பி3) துறை, அரசாணை எண் 8, நாள் 12-1-2001-ல் குறிப்பிடப்பட்டுள்ள தெரு விளக்கு அமைக்கும் திட்டத்திலும் மேற்குறிப்பிட்ட பகுதிகள் சேர்க்கப்படவில்லை. இந்த ஊராட்சியில் மின் கட்டண பாக்கி ஏதும் நிலுவையில் இல்லை. ஆகையால், புதிய தெரு விளக்குகள் அமைக்க ஆகும் செலவைச் செலுத்தும் இசைவுடன் விண்ணப்பம் பெறப்பட்டால் அதற்கான செலவைச் செலுத்தியபின் விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது சீர்காழி தொகுதியில் 10,161 தெரு விளக்குகளும், கொள்ளிடம் ஒன்றியத்தில் 5,493 தெரு விளக்குகளும், கோதண்டபுரத்திலிருந்து புளியங்கரை வரையிலுள்ள சாலையில் 21 தெரு விளக்குகளும் உபயோகத்தில் உள்ளன.

45—

## இலவச மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 59549—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, துண்டுக்கடவு பகுதி, காளியாபுரம் ஊராட்சி மலை ஜாதி மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, துண்டுக்கடவு பகுதி, காளியாபுரம் ஊராட்சி மலை ஜாதி மக்களுககு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் இல்லை.

[2006 ஜனவரி 27

46—

மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 50164—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வாயலூர் ஊராட்சியில் மின் கம்பம் நட்டு மின்விளக்கு அமைக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வாயலூர் ஊராட்சியில் தெரு விளக்குகள் கோரி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. அரசு ஆணைகளில் குறிப்பிட்ட தெரு விளக்குத் திட்டங்களிலும் மேற்குறிப்பிட்ட பகுதியில் தெரு விளக்கு அமைக்கும் பணி சேர்க்கப்படவில்லை. மின் கட்டண பாக்கி மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளை (ரூ.2,10,082/- இன்றைய தேதி வரை) செலுத்தி இந்தப் பணிக்கான செலவையும் செலுத்தச் சம்மதம் தெரிவித்து வாயலூர் ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது வாயலூர் ஊராட்சியில் 22 சோடியம் ஆவி விளக்குகளும் 10 குழல் விளக்குகளும் (1 x 10 வாட்ஸ்) உபயோகத்தில் உள்ளன.

47—

சீரான மின் விநியோகம் செய்தல்

**வினா எண் 61649—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணல்மேல்குடி இடையாத்திமங்கலம், மும்பாலை, பட்டங்காடு மற்றும் நிலையூரில் குறைந்த மின்னழுத்தத்தை மாற்றி சீரான மின் விநியோகம் அளித்திட அரசு ஆவன செய்யுமா?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மும்பாலை மற்றும் பட்டங்காடு பகுதிகளில் 6-10-2004 அன்று மின்னழுத்தத்தை அளவீடு செய்தபொழுது ஒரு முனை மின்னழுத்தம் முறையே 232 வோல்ட் மற்றும் 230 வோல்ட் என நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் புதிய மின் மாற்றி அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

மணல்மேல்குடி, இடையாத்திமங்கலம் மற்றும் நிலையூரில் முறையே 6-10-2004 மற்றும் 7-10-2004இல் அளவீடு செய்தபோது ஒரு முனை மின் அழுத்தம் முறையே 170 வோல்ட் மற்றும் 160 வோல்ட் என இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மின்னழுத்தத்தை மேம்படுத்த மேற்கண்ட இரு கிராமங்களிலும் தலா ஒரு புதிய மின் மாற்றி முறையே ரூ.1,49,740/- மற்றும் ரூ.98,000/- செலவில் நிறுவி 31-3-2005-க்குள் இயக்கி வைக்கப்பட உள்ளது. புதிய மின் மாற்றிகள் நிறுவிய பிறகு மேற்கண்ட பகுதிகளில் மின் விநியோகம் மேலும் சீரடையும்.

48—

புதிய மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 62401—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சி, அக்ரஹாரம் மற்றும் மேலத் தெருவிற்கு புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சி, அக்ரஹாரம் மற்றும் மேலத் தெருவில் 100 கே.வி.ஏ. மற்றும் 63 கே.வி.ஏ. அளவுள்ள

[2006 ஜனவரி 27

இரண்டு பகிர்வு மின் மாற்றிகள் மூலம் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு தற்போது மின்னழுத்தம் 240 வோல்ட் ஆக உள்ளது. எனவே, அங்கு புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**49—**

**தெரு விளக்கு வசதி**

**வினா எண் 62403—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாதிரிவேளூர் ஊராட்சி, கீழவாடியில் தெரு விளக்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதிரிவேளூர் ஊராட்சி, கீழவாடியில் புதிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. ஊரக வளர்ச்சி (பி3) துறை அரசாணை எண் 8 நாள் 12-1-2004-ன்படி தெரு விளக்கு அமைக்கும் திட்டத்திலும் மேற்குறிப்பிட்ட பகுதி சேர்க்கப்படவில்லை. மின் கட்டண பாக்கி மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளைச் செலுத்தி, புதிய தெரு விளக்குகள் அமைக்க ஆகும் செலவைச் செலுத்த சம்மதம் தெரிவித்து மேற்படி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு அதற்கான செலவையும் செலுத்தும்பட்சத்தில் விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது சீர்காழி தொகுதியில் 10,161 தெரு விளக்குகளும், மாதிரிவேளூர் ஊராட்சியில் 126 தெரு விளக்குகளும், கீழவாடியில் 22 தெரு விளக்குகளும் உபயோகத்தில் உள்ளன.



2006 ஜனவரி 27]

**50—**

**காவலர்கள் நியமித்தல்**

**வினா எண் 62465—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மின்சார மண்டலத்திலுள்ள கோபி மின் விநியோக வட்டத்திலுள்ள 230 கி.வோ. துணை மின் நிலையத்தில் தனியார் பாதுகாப்புக் காவலர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மண்டலத்தில், கோபி மின் பகிர்மான வட்டத்திலுள்ள 230 கி.வோ. துணை மின் நிலையத்தில் பாதுகாப்புக் காவலர்களை நியமிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது ஆய்வில் இல்லை.

**51—**

**மின்சார உபகரணங்களை நவீனப்படுத்துதல்**

**வினா எண் 62539—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி 110 கி.வோ. துணை மின் நிலையத்திலுள்ள மின்சார உபகரணங்களை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1. எடப்பாடி 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் தற்போது 2 x 15 எம்.வி.ஏ. பவர் டிரான்ஸ்பார்மர்கள் இயக்கத்தில் உள்ளன.

2. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் (APDRP) மூலம் கீழ்க்காணும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன:

(அ) எடப்பாடி நகர் மின்னூட்டியை இரண்டு மின்னூட்டிகளாக, அதாவது, எடப்பாடி நகர் 1 மற்றும் 2 ஆகப் பிரித்து புதிய பிரேக்கர் மற்றும் எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்தப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஏகாபுரம் 22 கி.வோ. மின்னூட்டிக்கு பழைய பிரேக்கரை மாற்றி, புதிய (VCP) பிரேக்கர் நிறுவப்பட்டுள்ளது.

(இ) வாட்டர் ஒர்க்ஸ் மின்னூட்டியில் எஸ்.எப். 6 பிரேக்கர் நிறுவப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் பூலாம்பட்டி பிரேக்கர் மற்றும் பவர் டிரான்ஸ்பார்மர் எல்.வி. 1 மற்றும் 2-ல் உள்ள பழைய பிரேக்கர்களை மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

**52—**

### மின் நிலையம் தொடங்குதல்

**வினா எண் 62903—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, விஜயபுரியில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் 110 கி.வோ. மின் நிலையம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, விஜயபுரியில் (தூத்துக்குடி மாவட்டம்) துணை மின் நிலையக் கட்டடங்கள் சம்பந்தமான சிவில் மற்றும் எலக்ட்ரிக்கல் பணிகளுக்கு ஒப்பந்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன





**53—**

### மின் இழப்பு

**வினா எண் 62906—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் உற்பத்தி செய்து மின்சாரம் விநியோகிக்கப்படுவதில் மொத்த மின் இழப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மின் செலுத்துதல் மற்றும் மின் விநியோகத்தில் ஏற்படும் மொத்த மின் இழப்பு தமிழகத்தில் தற்போது 18 சதவீதமாகவுள்ளது.

**54—**

### வாகன ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 63084—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் வாகன ஆய்வாளர் அலுவலகம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) புதிதாகப் பகுதி அலுவலகம் திறக்கும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

[2006 ஜனவரி 27

55—

### புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 63515—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், சாத்தனூர் ஊராட்சி, இலுப்பையூரில் புதிய மின் மாற்றி அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இலுப்பையூருக்கு மின்னிணைப்பு வழங்கும், இலுப்பையூர் மின் மாற்றி I-இல் (100 கே.வி.ஏ.) மும்முனை மின்னழுத்தம் 440 வோல்ட்-ஆக உள்ளது. மேலும் மின் மாற்றியின் கடைசியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் இணைப்பில் 410 வோல்ட் மின்னழுத்தம் உள்ளது. எனவே, மேற்படி கிராமத்திற்கு மேலும் ஒரு மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இருப்பினும், வீட்டு மின்னிணைப்புகளில் மின்னழுத்தத்தை அதிகப்படுத்துவதற்காக, குறைந்த திறன்கொண்ட கம்பிகளை அதிகத் திறன்கொண்ட கம்பிகளாக மாற்றிடவும், ஒரு முனை மின் பாதையை மும்முனை மின் பாதையாக மாற்றிடவும் ரூ.36,000/- செலவில் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிந்தவுடன் மின்னழுத்தம் மேலும் மேம்பாடு அடையும்.

56—

### வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

**வினா எண் 63642—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது மயிலாடுதுறை பகுதி அலுவலகம் சீர்காழியிலிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்திலும், நாகப்பட்டினத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளதால், இவ்விரு இடங்களில் உள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் இது வசதியாக உள்ளது. மேலும், சீர்காழியில் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 1,060 மட்டுமே. எனவே, சீர்காழியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

### சூரிய அடுப்புகள்

**வினா எண் 65441—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு மானிய விலையில் சூரிய அடுப்புகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மரபுசாரா அமைச்சகத்தின் மானியத் திட்டத்தின்கீழ் நான்கு வகையான சூரிய அடுப்புகள் விநியோகிக்கப்படுகின்றன.

(i) பெட்டி வடிவ சூரிய அடுப்பு (5 நபர்கள் வரை பயன்படுத்தலாம்)

(ii) வட்டில் வடிவ சூரிய அடுப்பு (15 நபர்கள் வரை பயன்படுத்தலாம்)

(iii) ஷெப்லர் அமைப்பு

(iv) சூரிய நீராவி அடுப்பு

இதில் பெட்டி வடிவ சூரிய அடுப்புகள் தவிர்த்து பிற வகை அடுப்புகளுக்கு மொத்த விலையில் 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்பட்டு கிறது. மீதித் தொகையை பயனாளிகள் ஏற்க முன்வந்தால், மைய அரசிடமிருந்து மானியம் பெற்றுத் தர ஏற்பாடு செய்யப்படும்.

பெட்டி வடிவ அடுப்பு மட்டும் தனி நபர்களுக்குப் பயன்படுகிறது. பிற வகை அடுப்புகள் பெரிய நிறுவனங்கள், தொண்டு அமைப்புகளுக்கு அதிக நபர்களுக்குச் சமைப்பதற்குப் பயனபடும். தமிழ்நாட்டில் சூரிய சக்தி அடுப்புகளைத் தயாரிப்போர் அதிக அளவில் இல்லாததால், இத்தகைய அடுப்புகளை பெருமளவில் விநியோகிக்க முடியவில்லை.

(ஆ) தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த அடுப்புகளைப் பயன்படுத்தவும் மீதிச் செலவை ஏற்கவும் முன்வந்தால் தகுதியான மானியம் பெற்றுத தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**58—**

**மின் விசைப் பம்பு செட்டு வழங்குதல்**

**வினா எண் 65777—திரு. சி. சண்முகவேலு:** மாணபுமிகு போக்குவரத்து மறறும் மினசாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் வறட்சிப் பகுதியில் தாழ்த்தப்பட்ட பழங்குடி விவசாயக குழுக்களுக்கு மத்திய, மாநில அரசு மானியத்தில் மின் விசைப் பம்புசெட்டு வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது? எத்தனை நபர்களுக்கு வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் வறட்சிப் பகுதியில் தாழ்த்தப்பட்ட பழங்குடி விவசாயக் குழுக்களுக்கு மத்திய, மாநில அரசு மானியத்தில் மின் விசைப் பம்புசெட்டு வழங்கும் திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்குப் பொருந்தாது.

(ஆ) வினா எழவில்லை.

**59—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 66645—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில 33/11 கே.வி. புதிய துணை மின் நிலையம் அமைக்க பூஞ்சேரியில் இடம் கிடைக்கப்பெற்றவுடன் அதனை அடுத்துள்ள வடகடும்பாடி போன்ற பகுதியில் நிலம் கையகப்படுத்தத் தேவையான நடவடிக்கை அரசு எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வடகடும்பாடியை விட, பூஞ்சேரி என்ற இடமே தொழில்நுட்ப ரீதியாக உகந்த இடமாதலால் பூஞ்சேரியில் துணை மின் நிலையம் அமைப்பதே உகந்ததாகும். மேலும், பூஞ்சேரியில் துணை மின் நிலையம் அமைத்தால் மட்டுமே, அதனைச் சுற்றியுள்ள மாமல்லபுரம் மற்றும் திருப்போரூர் புறநகர்ப் பகுதிகளுக்கு, திறனுள்ள சீரான மின் விநியோகம் வழங்க இயலும்.

பூஞ்சேரியில் துணை மின் நிலையம் அமைக்க, 5 ஏக்கர் மேய்ககால் புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவா ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்மீது மேல் நடவடிக்கை எடுத்து, விரைவில் பூஞ்சேரியில் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

**60—**

**துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 71555—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

(அ) தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் துணை மின நிலையத்தை 110 கிலோ வோல்ட் சக்தியுள்ளதாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் துணை மின் நிலையத்தை 110 கி.வோ. சக்தி உள்ளதாகத் தரம உயர்த்தும் திட்டம் தற்போது இல்லை.

**61—**

## போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 71917—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் வாகனப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் புதிதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்து கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் இது குறித்து அவசியமும் தற்போது எழவில்லை.

**62—**

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 77058—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி, பில்லுக்குறிச்சியில் 110 கே.வி./22 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் பணி எப்பொழுது தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் பில்லுக்குறிச்சி என்ற கிராமத்தில் ரூ.125 இலட்சம் செலவில் புதிய 110/22 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு, 8-5-2005 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

**63—**

## மின்சாரம் உற்பத்தி செய்தல்

**வினா எண் 81269—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி கீழ்க்கண்ட இடங்களில் புனல் மின் திட்டங்கள் அமைக்க தமிழக மின் வாரியம் உத்தேசித்துள்ளது:

(1) பவானி கதவணை புனல் மின் திட்டங்கள்/கோயம்புத்தூர் மாவட்டம்.

(2) பெரியார் வைகை புனல் மின் திட்டங்கள்/தேனி மாவட்டம்.

(3) பவானிசாகர் கொடுவேரி புனல் மின் திட்டங்கள்/ஈரோடு மாவட்டம்.

[2006 ஜனவரி 27

***1. பவானி கதவணை புனல் மின் திட்டங்கள்/கோயம்புத்தூர் மாவட்டம்***

இத்திட்டத்தின்கீழ் பவானி ஆற்றில் நெல்லித்துறை கிராமத்திறகும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கீழ்பவானி அணைக்கும் இடையிலுள்ள ஆற்றுப்படுகை வீழ்ச்சியையும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பில்லூர் புனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரையும் பயன்படுததி மூன்று கதவணை மின் திட்டங்கள் நிறுவி மின் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மொத்த மின் நிறுவு திறன் 28 மெகாவாட் ஆகும். இத்திட்டங்களில் முதல் திட்டமான பவானி கதவணை 1 புனல் மின் திட்டத்தைச் செயல்படுத்துவதறகான நில அளவை மற்றும் கட்டுமான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

***(2) பெரியாறு, வைகை புனல் மின் திட்டங்கள்/தேனி மாவட்டம்***

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பெரியார் புனல் மின் நிலையத்திற்கும், வைகை அணைக்கும் இடைப்பட்ட பகுதியில் கிடைக்கும் 196 மீட்டர் ஆற்றுப்படுகை வீழ்ச்சியையும், பெரியாறு புனல் மின் நிலையத்திலிருந்து விடப்படும் நீரையும் பயன்படுத்தி 16 சிறு புனல் மின் திட்டங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சிறு புனல் மின் திட்டங்கள் 50 மெகாவாட் மின் நிறுவு திறனுடையவையாக இருக்கும். இச்சிறு புனல் மின் திட்டங்களில் முதல் திட்டமான பெரியாறு வைகை 1 சிறு புனல் திட்டத்தில் (2X2 மெகாவாட்) கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

***(3) பவானிசாகர் கொடுவேரி புனல் மின் திட்டங்கள்/ஈரோடு மாவட்டம்***

இத்திட்டத்தின்கீழ் பவானி ஆற்றில் பவானிசாகர் புனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரையும் பவானிசாகர் அணைக்கும், கொடுவேரி அணைக்கட்டுக்கும் இடைப்பட்ட ஆற்றுப்படுகை வீழ்ச்சியையும் பயன்படுத்தி மூன்று தடுப்பணைகளும், அதையொட்டி மின் நிலையங்களும் அமைத்து மின் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சிறு புனல் மின திட்டங்கள் மொத்தம் 12 மெகாவாட் மின் நிறுவு திறனுடையவையாக இருக்கும். இத்திட்டங்களுக்கான நில ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



2006 ஜனவரி 27]

**64—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 81296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி, பில்லுக்குறிச்சியில் 110 கே.வி. துணை மின் நிலையம் இந்நிதியாண்டிலேயே செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி, பில்லுக்குறிச்சி என்ற கிராமத்தில் ரூ.425 இலட்சம் செலவில் புதிய 110/22 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு 8-5-2005 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

**65—**

**உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 22192—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நல்லுத்தேவன்பட்டி அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, நல்லுத்தேவன்பட்டி அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 104, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 03-11-2005-இல் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**66—**

## இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

**வினா எண் 84000—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பிறபடுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் இனத்தவர்களுககாக இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் இனத்தவருக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*தற்போது தேனி மாவட்டத்திலுள்ள உத்தமபாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள குமுளூர் ஆகிய இரு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையங்கள் ஒவ்வொன்றிலும் 50 பிரமலைக் கள்ளர் மாணவியருக்கென இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு 2003-04 ஆம் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.*

**67—**

## கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 47171—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு நபார்டு பகுதி I (Phasc I) திட்டத்தின் கீழ் இப்பணி சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 147, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (காப2) துறை, நாள் 1-9-2005-ல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**68—**

## புதிய கால்நடை மருத்துவமனை

**வினா எண் 64760—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி நகரில் கால்நடை மருத்துவமனை இடிந்து விடும் நிலையில் உள்ளதால் புதிய கால்நடை மருத்துவமனை கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட நபார்டு திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு அரசாணை எண் 117, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத்(காப2) துறை நாள் 1-9-2005-ல் வெளியிடப்பட்ட அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2006 ஜனவரி 27

**69—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 71431—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பெருமாப்பட்டு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பெருமாப்பட்டு ஊராட்சியில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை. கால்நடை நிலையம் ஏதும் இல்லாத நிலையில், அங்கு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**70—**

### கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர்

**வினா எண் 73447—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சமயநல்லூர் தொகுதி, மேற்கு ஒன்றியம், ஊமச்சிக்குளம், வீரபாண்டியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் கட்டித்தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கால்நடை மருந்தகங்களில் பழுது நீக்கப் பணி மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பொருட்டு, ராஷ்ட்ரிய சாம்விகாஸ் யோஜனா (ஆர்.எஸ்.வி.ஓய்.) திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டும் பணி சேர்க்கப்பட்டு, மதுரை மேற்கு ஒன்றியம், ஊமச்சிக்குளம், வீரபாண்டி கால்நடை மருந்தகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட ரூ.1.50 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து மதுரை மாவட்ட ஆட்சியருக்கு சம்பந்தப்பட்ட மண்டல இணை இயக்குநரால் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**71—**

### வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்

**வினா எண் 75699—திரு. கே. ஆறுமுகம்:** மாணபுமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2003-04 ஆம் ஆண்டில் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்திற்காக காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவு?*

*(ஆ) அதனால் ஏற்பட்ட பலன் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) 2003-04 ஆம் ஆண்டில் வெக்கை நோய் ஒழிபபுத் திட்டத்திற்காக காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.75,611 ஆகும்.*

*(ஆ) 1997 ஆம் ஆண்டு முதல் இந்தியா வெக்கை நோயிலிருந்து விடுபட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொலைதூரக் கிராமங்களில் வெக்கை நோய் சம்பந்தமாக கால்நடைகளிலிருந்து மாதிரிகள் சேகரித்தல், நெடுஞ்சாலைகளில் உள்ள கிராமங்களில் தேடுதல் மற்றும் இதர*

[2006 ஜனவரி 27

கிராமங்களில் தேடுதல், கால்நடை நிலையங்களில் வெக்கை நோயை அறிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 7 ஆண்டுகளில் இப்பகுதியில் வெக்கை நோய் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் ஏதும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

மேலும் இத்தகைய பணிகள்மூலம் தொலைதூரக் கிராமங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர் மற்றும் உழவர்களிடையே இந்நோய் குறித்த விழிப்புணர்வும், அறிகுறிகள் ஏற்பட்டால் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், கூடுதல் விழிப்புணர்வு உருவாக்கப்பட்டுள்ளது.

**72—**

### கால்நடை மருத்துவமனையைச் சீர்செய்தல்

**வினா எண் 78097—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சி, இருப்பாளி காட்டுவளவிலுள்ள கால்நடை மருத்துவமனையைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி காட்டுவளவிலுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை இடித்துவிட்டு, நபார்டு திட்டத்தின்மூலம் பகுதி-2-ன்கீழ் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொளளப்பட்டு வருகிறது.

**73—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 83021—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) பண்ருட்டி தொகுதி, மணம்தவழ்ந்தபுத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மணம்தவழ்ந்தபுத்தூர் கிராமத்தின் அருகில் 4 கி.மீ. துரத்தில் கருப்பூர் கால்நடை மருந்தகமும், பணம்பாக்கம் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மணம்தவழ்ந்தபுத்தூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமான சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அரசு தற்போது துன்றயின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆதலால், மணம்தவழ்ந்தபுத்தூர் கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கத் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**74—**

### கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 84122—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கரகத்திக்கோட்டை கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கரகத்திக்கோட்டையில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகத்திற்குக் கட்டடம் கட்ட 2005-2006-ல் நபார்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

75—

## கால்நடை மருந்தகக் கட்டடம்

**வினா எண் 84490—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நெடும்பூர் ஊராட்சியில் புதியதாகக் கால்நடை மருந்தகக் கட்டடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நெடும்பூர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்கிளை நிலையம் தற்போது பஞ்சாயத்து யூனியன் கட்டடத்தில் வாடகை இல்லாமல் இயங்கி வருகிறது. இதற்குப் புதியதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

## உற்பத்தி செய்யப்பட்ட மரச் செடிகள்

**வினா எண் 42071—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு வனத் துறைமூலம் உற்பத்தி செய்யப்பட்ட மரச்செடிகள் எத்தனை?

(ஆ) எவ்வளவு செலவானது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு வனத் துறைமூலம் உற்பத்தி செய்யப்பட்ட மரச்செடிகள்:



| | |
|---|---|
| தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் | - 7,39,000 செடிகள் |
| சிறு வன மகசூல் தோட்டம் | - 3,200 செடிகள் |
| பசுமைக் காடுகள் திட்டம் | - 40,000 செடிகள் |
| மொத்தம் | - 7,82,200 செடிகள் |

(ஆ) அதற்கான செலவினம்:

| | |
|---|---|
| தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் | - ரூ.179.77 இலட்சம் |
| சிறு வன மகசூல் தோட்டம் | - ரூ.0.64 இலட்சம் |
| பசுமைக் காடுகள் திட்டம் | - ரூ.2.56 இலட்சம் |
| மொத்தம் | - ரூ.182.97 இலட்சம் |

77—

## கழிப்பிட வசதி

**வினா எண் 58705—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, லாசன் சின்கோனா 2-வது டிவிசனில் உள்ள குடியிருப்புப பகுதிகளுக்கு மகளிர் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, லாசன் தேயிலைக் கோட்டப் பகுதி முன்னாள் சின்கோனா துறை, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் 1990 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டபொழுது அக்கழகத்துடன் சேர்க்கப்பட்டு, அது முதல் அக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. தோட்டத்

தொழிலாளர் சட்டத்தின்படி, இப்பகுதியிலுள்ள கழகத் தொழிலாளர் குடும்பங்களுக்கு கழிப்பிட வசதியுடன்கூடிய இலவசக் குடியிருப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் கழிப்பறைகள் தனியே இல்லாத அந்தப் பழைய குடியிருப்புகளுக்கு நடப்பாண்டில் கழிப்பறைகள் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியே கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளதால், மகளிருக்காகத் தனியே கழிப்பிட வசதி செய்து தரும் அவசியம் எழவில்லை.

**78—**

## ஆரம்ப சுகாதார நிலையத்தைச் செயல்படுத்துதல்

**வினா எண் 59801—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சின்கோனாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, சின்கோனா கிராம மக்கள் தொகை 4,564 ஆகும். இங்குள்ள இரண்டு துணை சுகாதார நிலையங்கள்மூலம் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இங்கு முன்பு செயல்பட்டு வந்த அரசு மருத்துவமனை 30-8-1996 முதல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டு, அம் மருத்துவமனையின்மூலம் தொழிலாளர்களுக்கும் பொது மக்களுககும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஒரே கிராமத்தில் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இரண்டும் செயல்பட விதிமுறைகள் இல்லாத காரணத்தினால், சின்கோனாவில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**79—**

## கூட்டமைப்பு வசதிகள்

**வினா எண் 62659—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள அன்னை இந்திரா காந்தி வனச் சரணாலயத்தோடு வனத் துறை இணைந்து கூட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தியதை அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அன்னை இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலயம் வனத் துறையில் கோவை மண்டலத்தைச் சேர்ந்த ஒரு கோட்டம் ஆகும். இங்கு வனத் துறை மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகள் யாவும் இப்பகுதியில் உள்ள மக்களுக்கும், வன உயிரினங்களுக்கும் பயனுள்ளதாக உள்ளன. இதற்கென கூட்டமைப்பு வசதிகள் ஏதும் கிடையாது.

**80—**

## முள் செடிகளை அகற்றுதல்

**வினா எண் 70158—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், வடகரையாத்தூர் பகுதியில் காவிரி ஆற்றுப்படுகையில் அதிகப்படியாக வளர்ந்துள்ள வேலி விதை முள் செடிகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், வடகரையாத்தூர் பகுதியில் காவிரி ஆற்றுப்படுகையில் அதிகப்படியாக வளர்ந்துள்ள வேலி விதை முள் செடிகளை அகற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2006 ஜனவரி 27

**81—**

**மூங்கில் குறைந்த விலைக்கு வழங்குதல்**

**வினா எண் 70518—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்திற்கு கேரள மாநிலம்போல ஓடை மூங்கிலைக் குறைந்த விலைக்கு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள வனங்களில் ஈத்தைகள் கிடைக்கக்கூடிய பகுதிகள் அனைத்தும் சரணாலயங்களாக மாற்றப்பட்டு, அங்கிருந்து கிடைக்கும் ஈத்தைகளை எடுக்கத் தடை செய்யப்பட்டுள்ளது. சமவெளிப் பகுதிகளில் ஈத்தை உற்பத்தியாவதில்லை. 2,000 மி.மீட்டர் மழையளவுள்ள பகுதிகளிலும், குளிர்ச்சியான பகுதிகளிலும்தான் ஈத்தை இயற்கையாக வளர்கிறது. எனவே, ஓடை மூங்கிலை வனங்களிலிருந்து வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை. இயற்கையாக வளர்ந்துள்ள ஈத்தைகளை வெட்டுவதற்கு உச்ச நீதிமன்றத் தடையுள்ளது.

**82—**

**ஓடை மூங்கில் வளர்த்தல்**

**வினா எண் 70526—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் முனைவோர் வேண்டுகோளை ஏற்று வால்பாறையில் மிக அதிக அளவில் ஓடை மூங்கிலை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) உச்ச நீதிமன்ற ஆணை ஐ.ஏ.எண் 202/95-ன்படியும், அதனைச் சார்ந்த இதர மனுக்களின்படியும், பாதுகாக்கப்பட்ட இடங்களான சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்கா ஆகியவற்றில் வருவாய் தரக்கூடிய நடவடிக்கைகளையோ மற்றும் வளர்ச்சிப் பணிகளையோ நடைமுறைப்படுத்தத் தடை செய்யப்பட்டுள்ளதால், வால்பாறையில் ஓடை மூங்கில் வளர்ப்பதற்குப் பிரேரணை ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**83—**

**நீர்க்குட்டை கட்டுதல்**

**வினா எண் 72051—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள ஹைபாரஸ்ட் மற்றும் கஜமுடி வனப் பகுதிகளில் நீர்க்குட்டை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலுள்ள ஹைபாரஸ்ட் மற்றும் கஜமுடி வனப் பகுதிகளில் கசிவு நீர்க்குட்டை கட்டுவது தொடர்பான பிரேரணை, பொள்ளாச்சி வன உயிரினக் காப்பாளரால் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து நிதி கிடைக்கப்பெற்றதும் கசிவு நீர்க்குட்டை கட்டப்படும்.

84—

## தேக்கு மரங்கள் பாதுகாப்பு

**வினா எண் 84090—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதியிலுள்ள கல்லணைக் கால்வாய் ஆற்றங்கரையில் தேக்கு மரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியிலுள்ள கல்லணைக் கால்வாய் ஆற்றங்கரையில் தேக்கு மரங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

85—

## கூரை வீடுகள் அமைத்தல்

**வினா எண் 31726—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டத்தில் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் பயன் அடைந்தோர் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 1,920 குடும்பங்கள் ரூ.260.44 இலட்சங்கள் செலவில் பயன் பெற்றுள்ளன.



86—

## நூலகங்கள் அமைத்தல்

**வினா எண் 10131—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரூர் தொகுதி, குறிச்சி, குனியமுத்தூர் பேரூராட்சிகளிலும் மற்றும் சில இடங்களிலும் நூலகங்கள் அமைக்க ஏதாவது திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சியில், போத்தனூரிலும், குனியமுத்தூர் பேரூராட்சியில் குனியமுத்தூர் மற்றும் கோவைப்புதூரிலும், பேரூர் பேரூராட்சியிலும், வேடப்பட்டி பேரூராட்சியிலும், மதுக்கரை பேரூராட்சியிலும், எட்டிமடை பேரூராட்சியிலும் மற்றும் ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சியிலும், மலுமிச்சம்பட்டி ஊராட்சியிலும் ஏற்கெனவே நூலகங்கள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி கிராமத்தில் 02-07-2005 முதலும், ஈச்சனாரி கிராமத்தில் 05-08-2005 முதலும் பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

87—

## நூல் நிலையம் தொடங்குதல்

**வினா எண் 36734—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செங்கற்பட்டு தொகுதியில் குன்னவாக்கம் கிராமத்தில் கட்டடம் கட்டி, நூல் நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், குன்னவாக்கம் கிராமத்தில் செயல்பட்டு வந்த பகுதிநேர நூலகம் 28-11-2003 முதல் தரம் உயர்த்தப்பட்டு, ஊர்பபுற நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஊர்ப்புற நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாவட்ட நூலக அலுவலரால் கேட்டுக்கொள்ளப்பட்ட காலி மனை மாவட்ட ஆட்சியரால் நூலக ஆணைக் குழுவிற்கு நில மாற்றம் செய்யப்படாததால் சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை.

**88—**

## புத்தகங்களை வழங்குதல்

**வினா எண் 39123—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் கிராமப்புறங்களில் 122 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டதற்கு அரசு எவ்வளவு மதிப்புள்ள புத்தகங்களை வழங்கியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் கிராமப்புறங்களில் 122 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டதற்கு ரூ. 52,30,120/- மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்பட்டன.

**89—**

## கிளை நூலகம்

**வினா எண் 41513—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, செவ்வாத்தூர்புதூர், ஜம்புநதி வட்டம் கிராமத்திற்குக் கிளை நூலகம் அமைத்துத்தா அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, செவ்வாத்தூர்புதூர், ஜம்புநதி ஆகிய கிராமங்களில் இதுவரை கீழ்க்காணும் நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படாததால் நூலகம் திறக்க இயலவில்லை.

1. நூலகம் இயங்க வாடகையில்லா இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலி மனையை இலவசமாக நூலக ஆணைக் குழுவின் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்துதர வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**90—**

## ஆசிரியர்களை நியமித்தல்

**வினா எண் 41514—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கெஜல்நாயக்கன்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட 13 பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. காலியாக ஏதுமில்லை.

**91—**

## நூலகங்களை இணைக்கும் திட்டம்

**வினா எண் 47367—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியிலுள்ள ரஷ்மானியா உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி, வைத்தீஸ்வரன்கோவிலில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி, கொள்ளிடத்திலுள்ள அரசினர் மேலநிலைப் பள்ளி, சீர்காழியிலுள்ள சபாநாயகர் முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றுடன் நூலகங்களை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியிலுள்ள ரஷ்மானியா உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி 08-06-2004 முதல் சீர்காழி கிளை நூலகத்துடனும், வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி 02-08-2004 முதல்





வைத்தீஸ்வரன்கோவில் கிளை நூலகத்துடனும், கொள்ளிடத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி 22-10-2002 முதல் ஆணைக்காரன் சத்திரம் கிளை நூலகத்துடனும், சீர்காழியிலுள்ள சபாநாயகர் முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளி 20-06-2004 முதல் சீர்காழி கிளை நூலகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன.

**92—**

## கிளை நூலகம் தொடங்குதல்

**வினா எண் 47368—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் கிளை நூலகம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்காணும் ஊரில் பகுதிநேர நூலகம் அமைக்க கீழ்க்காணும் நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவேற்றாததால், அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க இயலவில்லை.

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்குப் பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாக சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

93—

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 52553—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம ஊராட்சி, கீழத் தெருவிற்கு நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி, கீழத் தெருவிற்கு நூலகம் அமைக்க அரசு விதித்துள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்குப் பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

94—

## நூல் நிலையம் கட்டுதல்

**வினா எண் 56193—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம், பச்சைப்பெருமாள்நல்லூர் ஊராட்சி, பச்சைப்பெருமாள்நல்லூரில் நூல் நிலையம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம், பச்சைப்பெருமாள்நல்லூர் ஊராட்சி, பச்சைப்பெருமாள்நல்லூரில் பகுதிநேர நூலகம் அமைக்கக் கீழ்க்காணும் நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவேற்றாததால், அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க இயலவில்லை:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்குப் பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ. 20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

95—

## தொழிற்சார்ந்த பாடப் பிரிவு

**வினா எண் 62450—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் தொழில் சார்ந்த பாடப் பிரிவு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை அரசு கலைக் கல்லூரியில் கீழ்க்கண்ட தொழிற்சார்ந்த பாடப் பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் கல்வியாண்டுகளில் தொடங்கப்பட்டுள்ளன:

| வ.எண். | பாடப் பிரிவு | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1. | P.G. Diploma in Web designing | 2003-2004 |
| 2. | B.A. Tourism & Travel Management | 2004-2005 |
| 3. | P.G Diploma in Banking Management | 2004-2005 |
| 4. | P.G Diploma in Bio-Informatics | 2004-2005 |
| 5. | Diploma in Clinical Lab Techniques | 2004-2005 |

**96—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 64604—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ரெத்தினக்கோட்டை மற்றும் தொண்டைமானேந்தல் ஆகிய இடங்களில் நூலகம் அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ரெத்தினக்கோட்டை மற்றும் தொண்டைமானேந்தல் ஆகிய இடங்களில் நூலகம் அமைத்துத் தரும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.



**97—**

## கிளை நூலகங்கள்

**வினா எண் 65452—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 60 கோட்டங்களிலும் படித்த இளைஞர்கள், மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் கிளை நூலகங்களை அரசு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 60 கோட்டங்களிலும் படித்த இளைஞர்கள், மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் கிளை நூலகங்கள் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(2) சேலம் மாநகராட்சியில் தற்போது கீழ்க்காணும் பத்து பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

| வ.எண் | நூலகப் பெயர் | |
|---|---|---|
| 1. | சேலம் மத்திய சிறைச்சாலை | பகுதிநேர நூலகம் |
| 2. | மாவட்ட மைய நூலகம் | |
| 3. | சொர்ணபுரி | கிளை நூலகம் |
| 4. | சூரமங்கலம் | கிளை நூலகம் |
| 5. | சிவதாபுரம் | ஊர்ப்புற நூலகம் |
| 6. | அரிசிப்பாளையம் | கிளை நூலகம் |
| 7. | திருமால் மாநகர் | கிளை நூலகம் |
| 8. | அம்மாப்பேட்டை | கிளை நூலகம் |
| 9. | குகை | கிளை நூலகம் |
| 10. | தாசநாயக்கன்பட்டி | கிளை நூலகம் |

(3) மேலும் சேலம் மாநகராட்சிக்குள் புதிய நூலகம் திறக்க பொது நூலகத் துறையின் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்து அளிக்கும்பட்சத்தில் அங்கு பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 செண்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப்பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

**98—**

## ஆசிரியர் பணியிடங்கள்

**வினா எண் 65457—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரி மற்றும் அரசு மகளிர் கலைக் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களைக் கணக்கில் கொண்டு, முதலில் 500 இளநிலை விரிவுரையாளர்களை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாறு விரிவுரையாளர்கள் தேர்வு செய்யப்படும்போது சேலம்-2 தொகுதியிலுள்ள அரசுக் கலைக் கல்லூரி மற்றும் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு வேண்டிய ஆசிரியர் தேவைகளும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் நலனை முன்னிட்டு தற்போது காலியாகவுள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



**99-**

## ஊர்ப்புற நூலகம் அமைத்தல்

**வினா எண் 65801—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, அரங்கல் துருகம், உமராபத் மற்றும் கரும்பூர் ஊராட்சிகளில் ஊர்ப்புற நூலகம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, அரங்கல் துருகம், உமராபத் மற்றும் கரும்பூர் ஊராட்சிகளில் கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால், ஊர்ப்புற நூலகம் திறக்கப்படவில்லை:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 செண்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப்பதிவுச் செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

[2006 ஜனவரி 27

100—

## பகுதிநேர நூலகம் திறத்தல்

**வினா எண் 66120—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், திருவனப்பட்டி ஊராட்சி, மேட்டுக்காலனியில் நூலகம் திறக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், திருவனப்பட்டி ஊராட்சிப் பகுதியில் மேட்டுக் காலனியில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்து தரும் பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 செண்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்குப் பத்திரப்பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

101—

## புதியதாக நூலகம் திறத்தல்

**வினா எண் 66340—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வி, நாள் 14-02-2003-ன்படி 5,000 மக்கள் தொகை உள்ள கிராமங்களில் நூலகம் திறக்கப்படாமல் உள்ள கிராமங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் புதிதாக நூலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வி, நாள் 11-01-2003-ல், 5,000 மக்கள்தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த 867 கிராமங்களுக்கு ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 5,000 மக்கள்தொகை இருந்தும் நூலகம் திறக்கப்படாமல் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை 14 ஆகும்.

(ஆ) புதிதாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

102—

## கல்லூரி மாணவர்களுக்குத் தங்கும் விடுதி

**வினா எண் 69903—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் இயங்கும் இராஜேஸ்வரி வேதாசலம் அரசுக் கலைக் கல்லூரி மற்றும் சட்டக் கல்வி மாணவிகளுக்கென தனியாக தங்கும் விடுதி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகரில் ஆதிதிராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் விடுதியில் இராஜேஸ்வரி வேதாசலம் அரசுக் கலைக் கல்லூரி

மாணவிகள் தங்கிப பயிலுகின்றனர். கூடுதலாக இக்கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கென தனியாக தங்கும் விடுதி அமைக்க கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

2. செங்கற்பட்டில் செயல்பட்டு வரும் சட்டக் கல்லூரி தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகும். (Constituent Law College of the Tamil Nadu Dr. Ambedkar Law University) இக்கல்லூரியானது சட்டப பல்கலைக்கழகத்தின் சொந்த நிதியில் செயல்பட்டு வருகிறது. நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, இக்கல்லூரியில் கட்டடங்கள் இரண்டு நிலைகளில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு கட்டடங்களும், பின்பு மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டுவதாகவும் உள்ளது. தற்சமயம் வகுப்பறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**103—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 69926—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரணாம்பட்டு தொகுதி, சி.வி. பட்டறையில்* **ஊர்ப்புற நூலகம்** *அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 66, பள்ளிக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நாள் 30-01-1996 இன்படி, 625 ஊர்ப்புற நூலகங்களும், அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-04-2003 இன்படி 867 ஊர்ப்புற நூலகங்களும் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. எனவே, பேரணாம்பட்டு தொகுதி, சி.வி. பட்டறையில் ஊர்ப்புற நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2. இருப்பினும் சி.வி. பட்டறையில் உள்ள பொதுமக்கள் ஒத்துழைத்து கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றி வழங்கினால், அப்பகுதியில் பகுதிநேர நூலகம திறக்க இயலும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம வழங்கபபட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலிமனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்குப் பத்திரபபதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

**104—**

## கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 70323—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம்-2 தொகுதியிலுள்ள நரசோதிப்பட்டி பகுதியில் மாவட்ட மைய நூலகத் துறையின் சார்பாகக் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-2 தொகுதியில் உள்ள நரசோதிப்பட்டி பகுதியில் மாவட்ட நூலக ஆணைக் குழுவின் சார்பாகக் கிளை நூலகம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2006 ஜனவரி 27

**105—**

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 70324—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதியிலுள்ள பள்ளப்பட்டி பகுதியில் மாணவ மாணவிகளுக்கென நூலகம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-2 தொகுதியிலுள்ள பள்ளப்பட்டி பகுதியில் மாணவ, மாணவிகளுக்கென நூலகம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**106—**

### நூல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 70331—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதியில் உள்ள ஜாகிர் அம்மாபாளையத்தில் நூல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம்-2 தொகுதியில் உள்ள ஜாகிர் அம்மாபாளையத்தில் நூலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 27]

**107—**

### கலைக் கல்லூரிக்குத் தேர்வு எழுதும் அரங்கம்

**வினா எண் 70345—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, ஏற்காடு மெயின் ரோட்டிலுள்ள அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்குத் தேர்வு எழுதும் அரங்கம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**108—**

### நூலகக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 70922—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரம், 2-வது வார்டு, பூந்தோட்டம் ஊழியக்காரன் தோப்புத் தெருவில் நூலகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரம், 2-வது வார்டு, பூந்தோட்டம் ஊழியக்காரன் தோப்பு தெருவில் நூலகம் இல்லை. ஆதலால், கட்டடம் கட்டித்தர கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2006 ஜனவரி 27

109—

### நூலகக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 70929—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் நூலகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் பொது நூலகத் துறை சார்ந்த நூலகம் ஏதும் செயல்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

110—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 70952—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் நூலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் நூலகம் அமைத்திட கருத்துரு ஏதும் தற்போது



2006 ஜனவரி 27]

அரசின் பரிசீலனையில் இல்லை. மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தின் மக்கள் தொகை 3,211. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் முறையே 1,613, 1,598 ஆகும். எனினும், மக்கள்தொகையின் அடிப்படையில் அரசு நிர்ணயித்துள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றி அளிக்கும் பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15/-ம், ஆண்டு சந்தா ரூ. 5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2000/- மதிப்புள்ள தளவாடங்களை இலவசமாக வழங்க வேண்டும்.

111—

### கிளை நூலகம்

**வினா எண் 71466—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வகுரணி ஊராட்சி, வகுரணி பகுதிக்குக் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, வகுரணி ஊராட்சி, வகுரணி பகுதிக்குக் கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

112—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 73445—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்ணேந்தல் ஊராட்சியில் ஒரு நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், கண்ணேந்தல் ஊராட்சியில் ஒரு பகுதிநேர நூலகம் செயல்பட்டு வந்தது. தற்போது மேற்படி பகுதிநேர நூலகம் 01-12-2003 முதல் ஊர்ப்புற நூலகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

113—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 74267—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர், காந்தி நகரில் நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர், காந்தி நகரில் நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



114—

### பெரியார் பல்கலைக்கழகத்திற்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 74494—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் அமைந்துள்ள பெரியார் பல்கலைக்கழகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியார் தொலைதூரக் கல்வி நிலையத்திற்கென ரூ. 105.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கட்டடமும், ரூ. 95 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மாணவியர் விடுதியில் தரைத் தளமும், ரூ.95 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மாணவர் விடுதியில் தரைத் தளமும் கட்டப்பட்டு வருகின்றன.

115—

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 76873—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிக்கு வார்டு 23-இல் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிக்கு வார்டு எண் 23-இல் கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**116—**

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 76945—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்குட்பட்ட பக்கநாடு ஊராட்சியில் பொது கிளை நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்குட்பட்ட பக்கநாடு ஊராட்சியில் பொது கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**117—**

### கிளை நூலகம்

**வினா எண் 77176—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, முனியம்பட்டி மற்றும் விமேட்டுப்பாளையம் பகுதிக்குக் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, முனியம்பட்டி மற்றும் வி. மேட்டுப்பாளையம் பகுதிக்குக் கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



**118—**

### புத்தகங்கள் வழங்குதல்

**வினா எண் 77306—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2004 ஆம் ஆண்டில் எடப்பாடியில் உள்ள நூலகத்திற்கு எவ்வளவு மதிப்புள்ள புத்தகங்களை அரசு வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

2004 ஆம் ஆண்டில் எடப்பாடி கிளை நூலகத்திற்கு 1,322 எண்ணிக்கை கொண்ட ரூ. 58,642.18 மதிப்புள்ள நூல்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**119—**

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 80032—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, சின்னப்பம்பட்டி பகுதிக்குக் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, சின்னப்பம்பட்டி பகுதிக்குக் கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

120—

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 80124—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, கச்சுப்பள்ளி கஸ்பா மற்றும் எட்டிக்குட்டைமேடு ஆகிய இடங்களில் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, கச்சுப்பள்ளி கஸ்பா மற்றும் எட்டிக்குட்டைமேடு ஆகிய ஊராட்சிகளில் நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

121—

### கல்வியியல் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 81051—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூரில் அரசுக் கல்வியியல் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



122—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 81083—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம் மற்றும் ஜல்லிப்பட்டி முதலிய ஊராட்சிகளில் நூலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம் மற்றும் ஜல்லிப்பட்டி முதலிய ஊராட்சிகளில் நூலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

### நூலகத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 81086—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள நூலகத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் செயல்பட்டு வரும் வால்பாறை கிளை நூலகக் கட்டடம் அவ்வூர் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் 2000 ச. அடியில் போதுமான இடவசதியுடன் செயல்பட்டு வருகிறது. ஆதலால் தற்போது மேற்படி நூலகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதுமில்லை.

[2006 ஜனவரி 27

124—

## நடமாடும் நூலகம் அமைத்தல்

**வினா எண் 81480—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கிராமங்களுக்கு நடமாடும் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கிராமங்களுக்கு நடமாடும் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

125—

## நூலகம் கட்டுதல்

**வினா எண் 81712—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள சோமந்துறை, தென்சித்தூர், முருகாளி பஜார், கருமலை பஜார், முடிஸ், அட்டகட்டி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி, வேட்டைக்காரன்புதூர், பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, கரியஞ்செட்டிபாளையம் முதலிய ஊராட்சிகளுக்கு இந்நிதியாண்டின் ஒதுக்கீட்டில் ஒரு நூலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள தென்சித்தூர், கோட்டூர் சிறப்பு ஊராட்சி, வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊர்களில் கிளை நூலகங்களும் மற்றும் அங்கலக்குறிச்சி ஊராட்சியில் 1-1-2005 முதல் பகுதிநேர நூலகமும் செயல்படுகின்றன. சோமந்துறை, முருகாளி பஜார், கருமலை பஜார், முடிஸ், அட்டகட்டி, பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் இந்நிதியாண்டின் ஒதுக்கீட்டில் நூலகம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

126—

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 81773—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் முதலிய ஊராட்சிகளில் நூலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் ஒரு பகுதிநேர நூலகமும், காளியாபுரம் ஊராட்சியில் ஒரு ஊர்ப்புற நூலகமும் செயல்பட்டு வருகின்றன. ரமணமுதலிபுத்தூர் ஊராட்சியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் கோட்டூர் மற்றும் தென்சித்தூர் ஆகிய இரண்டு கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2006 ஜனவரி 27

127—

## நீரூற்று விளையாட்டு மையம் அமைத்தல்

**வினா எண் 71959—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நீரூற்று விளையாட்டு மையங்களை அரசே உருவாக்கி வருவாய் பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நீரூற்று விளையாட்டு மையம் (Water Sports Centre) முட்டுக்காடு படகுக் குழாமில் முதன்முதலாக தனியார் ஒத்துழைப்புடன் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கியது. பின்பு, இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த திறந்தவெளி ஒப்பந்தம் கோரி, நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டது. அதற்குப் போதுமான வரவேற்பு இல்லை. எனவே, நீரூற்று விளையாட்டு மையத்தினை அரசு மூலம் தற்போது நடத்த வாய்ப்பில்லை.

(ஆ) வினா எழவில்லை.

128—

## மருத்துவ வசதி

**வினா எண் 83444—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கும் இஎஸ்ஐ. மருத்துவ வசதி அளிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அமைப்பு சாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி அளிக்க



2006 ஜனவரி 27]

வேண்டுமானால் வேலையளிப்பவர்களும் பங்கீட்டுத் தொகை செலுத்த வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பெரும்பாலோர் சுயதொழில் புரிபவராக உள்ளனர். பெரும்பாலான அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு நிரந்த வேலையளிப்பவர்கள் கிடையாது. மேலும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இடம் விட்டு இடம் பெயரும் நிலை உள்ளது. வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்களுக்கு வாரியத்திலிருந்து வேலையளிப்பவரின் பங்கீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டுமெனில், ஒரு தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.700/- செலுத்த வேண்டும். இதன்படி தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள 7,31,479 தொழிலாளர்களுக்குப் பங்குத் தொகை செலுத்த ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.51 கோடியும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 7,13,647 தொழிலாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.50 கோடியும் வாரியத்திலிருந்து செலவு செய்ய வேண்டும். எனவே, வாரியங்களின நிதிநிலைமையைக் கருத்தில்கொள்ளும்போது அனைத்து அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி அளிக்க சாத்தியம் இல்லை.

129—

## காலி நிலம் எண்ணிக்கை

**வினா எண் 31153—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமாக காலி நிலம் எவ்வளவு உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமாக 155 எண்ணிக்கையிலான காலி நிலங்கள் உள்ளன.

[2006 ஜனவரி 27

**130—**

**சாலை வசதி**

**வினா எண் 43171—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரிலுள்ள 8-வது பகுதி வாரப்ஷா தர்கா தெருவில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரிலுள்ள 8வது வார்டு பகுதி வாரப்ஷா தாகா தெருவிற்கு 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தள சாலை அமைத்து நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**131—**

**விளையாட்டு தளம்**

**வினா எண் 43183—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலுள்ள சாமியார் தர்காவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் செப்பனிட்டு கூடுதலாகக் குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரத்தில் உள்ள சாமியார் தர்காவில் உள்ள மேல்நிலைத் தொட்டி 1997-1998 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 8 அங்குல பி.வி.சி. பைப் கொண்டு ஆழ்துளைக் கிணறு அமைத்து 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சமநிலை நீர்த்தேக்கத் தொட்டி (ஜி.எல்.ஆர்.) அமைத்து 5 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் பொருத்தியும், தெருக்களில் குழாய்கள் பொருத்தப்பட்டும் தினசரி இரு வேளை குடிநீர் தடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**132—**

**பாசித் தெருவினை செப்பனிடுதல்**

**வினா எண் 68067—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகராட்சி 4-வது வட்டத்தில் உள்ள பாசித் தெருவினைச் செப்பனிட்டுத் தர அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகராட்சி 4-வது வட்டத்தில் உள்ள பாசித் தெருவினைச் செப்பனிட்டுத் தர ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரசு ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில், ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் இப்பணி முடிவடையும்.

[2006 ஜனவரி 27

130—

## சாலை வசதி

**வினா எண் 43171—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரிலுள்ள 8-வது பகுதி வாரப்ஷா தர்கா தெருவில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரிலுள்ள 8வது வார்டு பகுதி வாரப்ஷா தர்கா தெருவிற்கு 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தள சாலை அமைத்து நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

131—

## விளையாட்டு தளம்

**வினா எண் 43183—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலுள்ள சாமியார் தர்காவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் செப்பனிட்டு கூடுதலாகக் குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரத்தில் உள்ள சாமியார் தர்காவில் உள்ள மேல்நிலைத் தொட்டி 1997-1998 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 8 அங்குல பி.வி.சி. பைப் கொண்டு ஆழ்துளைக் கிணறு அமைத்து 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சமநிலை நீர்த்தேக்கத் தொட்டி (ஜி.எல்.ஆர்.) அமைத்து 5 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் பொருத்தியும், தெருக்களில் குழாய்கள் பொருத்தப்பட்டும் தினசரி இரு வேளை குடிநீர் தடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

132—

## பாசித் தெருவினை செப்பனிடுதல்

**வினா எண் 68067—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகராட்சி 4-வது வட்டத்தில் உள்ள பாசித் தெருவினைச் செப்பனிட்டுத் தர அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகராட்சி 4-வது வட்டத்தில் உள்ள பாசித் தெருவினைச் செப்பனிட்டுத் தர ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரசு ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில், ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் இப்பணி முடிவடையும்.

[2006 ஜனவரி 27

**133—**

### சுகாதார அலுவலரை நியமித்தல்

**வினா எண் 72098—திரு. பு. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகராட்சியில் சுகாதார அலுவலரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகராட்சியில் உள்ள சுகாதார அலுவலர் பணியிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது.

**134—**

### செயற்கை விளையாட்டுத் தளம்

**வினா எண் 70169—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியில் உலகத் தரம் வாய்ந்த செயற்கை விளையாட்டுத் தளம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியில் உலகத் தரம் வாய்ந்த செயற்கை விளையாட்டுத் தளம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2006 ஜனவரி 27]

**135—**

### கோடைக்கால பயிற்சி முகாம்

**வினா எண் 70176—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியில் விளையாட்டு கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியில் விளையாட்டு கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்த அரசிடம் திட்டம் உள்ளது. அதன்படி ஒவ்வொரு வருடமும் கல்வி மாவட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் மாவட்டந்தோறும் கோடைக்கால பயிற்சி முகாம்கள் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, ஹாக்கி மற்றும் வாலிபால் ஆகிய விளையாட்டுக்களில் 16 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் கோடைக்கால பயிற்சி முகாம், கல்வி மாவட்ட பயிற்சி முகாம் மற்றும் கோடைக்கால இருப்பிட பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. கோடைக்கால பயிற்சி முகாம் 21 நாட்கள் நடத்தப்பட்டது. இதில் 135 மாணவ, மாணவிகள் பங்கு கொண்டனர். கல்வி மாவட்ட பயிற்சி முகாமில் 180 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். மேலும் கோடைக்கால இருப்பிட பயிற்சி முகாம் 15 நாட்கள் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு வல்லுநர்கள் விளையாட்டு நுணுக்கங்களில் பயிற்சி அளித்தனர். தருமபுரி மாவட்டத்திற்கு பலவகை பயிற்சி முகாம் நடத்திட கீழ்க்கண்டவாறு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| (1) | கோடைக்கால பயிற்சி முகாம் | ரூ.8,000 |
| (2) | கல்வி மாவட்ட பயிற்சி முகாம் | ரூ.8,500 |
| (3) | மாவட்ட இருப்பிட பயிற்சி முகாம் | ரூ.70,000 |

136—

## உடற்பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா எண் 70334—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு கோட்டங்களிலும் உடற்பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு கோட்டத்திலும் உடற்பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

137—

## விளையாட்டுப் பூங்கா

**வினா எண் 70932—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, வழுதலைக்குடி மேலத் தெருவில் உடற்பயிற்சி சாதனங்களுடன்கூடிய விளையாட்டுப் பூங்கா அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, வழுதலைக்குடி மேலத் தெருவில் உடற்பயிற்சி சாதனங்களுடன் கூடிய விளையாட்டுப் பூங்கா அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

138—

## விளையாட்டுத் திடல் அமைத்தல்

**வினா எண் 70953—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மணம்தவழ்ந்தபுத்தூர் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, மணம்தவழ்ந்தபுத்தூர் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

139—

## விளையாட்டு மையம் தொடங்குதல்

**வினா எண் 72348—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 27

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானனேந்தல் மற்றும் மணமேல்குடியில் விளையாட்டுக் கருவிகளுடன் கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானனேந்தல் மற்றும் மணமேல்குடியில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**140—**

## விளையாட்டு மையம்

**வினா எண் 72353—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அம்மாப்பட்டினம், கட்டுமாவடி மற்றும் பூவை மாநகரில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அம்மாப்பட்டினம், கட்டுமாவடி மற்றும் பூவை மாநகரில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**141—**

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 73532—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 27]

அறந்தாங்கி தொகுதி, நாகுடி சுப்பிரமணியபுரம் மற்றும் அரசர் குளத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, நாகுடி சுப்பிரமணியபுரம் மற்றும் அரசர் குளத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**142—**

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 73535—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில், மீமிசல், ஆளப்பிறந்தான் மற்றும் கரூரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் மீமிசல், ஆளப்பிறந்தான் மற்றும கரூரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**143—**

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 73538—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில், கோட்டைப்பட்டினத்தில் மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவிலில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில், கோட்டைப்பட்டினத்தில் மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவிலில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**144—**

**விளையாட்டுத் திடல் அமைத்தல்**

**வினா எண் 74216—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், பு.தோட்டக்குறிச்சி சிறப்பு ஊராட்சி, அய்யம்பாளையம கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கரூர் மாவட்டம், பு.தோட்டக்குறிச்சி சிறப்பு ஊராட்சி, அய்யம்பாளையம் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



**145—**

**விளையாட்டுத் திடல் அமைத்தல்**

**வினா எண் 74218—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், சின்னாக்கவுண்டம்பாளையம் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம், சின்னாக்கவுண்டம்பாளையம் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**146—**

**விளையாட்டுத் திடல் அமைத்தல்**

**வினா எண் 74219—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியம், மணப்பள்ளி ஊராட்சி, குன்னிப்பாளையம் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியம், மணப்பள்ளி ஊராட்சி, குன்னிப்பாளையம் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**147—**

### உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

**வினா எண் 74220—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கரூர் ஒன்றியம், வேடிச்சிபாளையம், ஒத்தக்கடை, ஒத்தையூர், ராசாக்கவுண்டன் புதூர் கிராமங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கரூர் மாவட்டம், கரூர் ஒன்றியம், வேடிச்சிபாளையம், ஒத்தக்கடை, ஒத்தையூர், ராசாக்கவுண்டன் புதூர் கிராமங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



**148—**

### உடற்பயிற்சிக் கருவிகள் வழங்குதல்

**வினா எண் 74247—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணுமம் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை கிராமத்தில் ஒரு விளையாட்டுத் திடலும் உடற்பயிறசிக் கருவிகளையும் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை கிராமத்தில் ஒரு விளையாட்டுத் திடலும் உடற்பயிற்சிக் கருவிகளும் வழங்கிட கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**149—**

### விளையாட்டு மைதானம் அமைத்தல்

**வினா எண் 78421—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க, கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**150—**

**விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி**

**வினா எண் 82081—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி மற்றும் உதவி மானியங்கள் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வாலபாறை தொகுதியில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி மற்றும் உதவி மானியங்கள் அளிக்கும் திட்டம் அரசிடம ஏதும் இல்லை

(ஆ) நிலை எழவில்லை.

**151—**

**வீர விளையாட்டுத் திட்டம்**

**வினா எண் 82219—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிபபாரா—



(அ) வால்பாறை தொகுதியில் வீர விளையாட்டு சிலம்பம் - களரி ஆகிய விளையாட்டுகளைக் கற்றுக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் வீர விளையாட்டு சிலம்பம் - களரி ஆகிய விளையாட்டுகளைக் கற்றுக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இலலை.

(ஆ) நிலை எழவில்லை.

**152—**

**இளைஞர் நலக் குழு அமைத்தல்**

**வினா எண் 82228—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் இளைஞர் நலக் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் இளைஞர் நலக் குழு ஒன்றை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழ்வில்லை.

153— [2006 ஜனவரி 27

## உடற்பயிற்சி சாதனங்களை வழங்குதல்

**வினா எண் 83020—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில, திருவதிகையில் சிவ. கோவில் தெருவில் உடற்பயிற்சி மையம் அமைத்து உடற்பயிற்சி சாதனங்கள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி நகரில், திருவதிகையில் சிவன் கோவில் தெருவில் உடற்பயிற்சி மையம் அமைத்து, உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

154—

## விளையாட்டு அரங்கம் கட்டுதல்

**வினா எண் 83110—திரு. ப. மோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் விளையாட்டு அரங்கம் கட்டும திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிசசியில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.